

# கலாலக்ஷ்மி

## எனும் ஆளுமை

அவரிடம் எல்லாவற்றையும்
அறியவும் கேள்விக்குட்படுத்தவும்
தயங்காமல் தனது எண்ணங்களைக்
கூறவும் இருந்த ஆற்றல் வியப்பூட்டியது.

"எந்தையும் தாயும்' நாடகத்தில்
அவர் ஒரு இளம் மாணவியாக
நடித்ததைக் கண்டபோதுதான்
அவரிடம் மறைந்திருந்த
ஆற்றல்கள் மெல்லமெல்ல
விளங்கின,
அவருடைய எழுத்தாற்றலைத்
தாயகத்தில் அவர் கதைகளை எழுதிய
பின்னரே அறிந்தேன்.

அவர் எவ்வளவு எழுதினார்
என்பதை இன்றுதான் அறிந்தேன்.

சி. சிவசேகரம்

# கலாலக்ஷ்மி எனும் ஆளுமை

**கலாலக்ஷ்மி தேவராஜா**

10.07.1957–28.03.2019

**இரண்டாவதாண்டு நினைவுகள்**

28.03.2021

**கலாலயம் பதிப்பகம்**

இல.68, நீதிமன்ற வீதி, மல்லாகம்

# கலாலக்ஷ்மி எனும் ஆளுமை
கட்டுரைகளும் நினைவுக் கட்டுரைகளும் குறிப்புகளும்

தொகுப்பு :
அபிலாஷா தேவராஜா
ஜனமகன் தேவராஜா
அழ. பகீரதன்

**நினைவில் வாழும் கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஈராண்டு நினைவாக**

முதல் பதிப்பு : 28, மார்ச் 2021
பக்கம் : 152
பிரதி : 500
விலை : அன்பளிப்பு

**வெளியீடு:**
கலாலயம் பதிப்பகம்
இல. 68, நீதிமன்ற வீதி,
மல்லாகம்,
இலங்கை.

E.Mail: sothevarajah@gmail.com

**அட்டை, படங்கள் வடிவமைப்பு:**
எஸ். ரி. அனுஜன்

**பக்க வடிவமைப்பு:**
சிவ பரதன்
செருக்கற்புலம், சுழிபுரம்

**அச்சு:**
ஜே.எஸ். பிறின்டேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

# பதிப்புரை

மறைந்த ஆளுமையான கலாலக்ஷ்மி தேவராஜாவின் முதலாவது ஆண்டு நினைவு குறித்து நூல் வெளியிடும் முயல்வில் மார்ச் 2020 இல் நாம் எடுத்த முயற்சி கொரோனா தாக்கத்தினால் நாடுபூராவும் ஊரடங்கு அமல்படுத்தியமையால் நின்று போயிற்று.

முதலாவது ஆண்டு நினைவுகூர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளை அப்படியே தொகுத்து இரண்டாவது ஆண்டு நிறைவில் இன்று வெளியிடுகின்றோம். கலாலக்ஷ்மியின் ஆளுமை பற்றிய கட்டுரைகளோடு முகநூலிலும் மடல்களிலும் அனுதாபக் குறிப்பேடுகளிலும் அவரது மறைவுச் செய்தி அறிந்ததும் தெரிவித்த அனுதாபக் குறிப்புகளையும் இணைத்துள்ளோம்.

அவரது ஆளுமை குறித்த சிந்தனை எழும்போது முந்தைய பெண் ஆளுமைகள் குறித்த பொதுவான பிற பெண் ஆளுமைகள் பற்றியும் அன்னையர் முன்னணி பற்றியும் பல்வேறு மரணம் பற்றிய விசாரணையும் எனக் கட்டுரைகளும் கல்வி குறித்த கட்டுரைகளும் பிறசில கவிதைகளும் கலாலக்ஷ்மி தேவராஜாவின் ஆளுமை சம்பந்தப்பட்ட மையக் கருத்துக்கு இயைபாக இந்நூலுக்காக எழுதப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூல் வெளியிடும் இரண்டாவது நினைவு நாளில் பெண் ஆளுமைகள் நால்வருக்கு கலாலய விருது வழங்குவதும் பல்கலைக்கழகம் செல்லும் மாணவி ஒருவருக்குப் புலமைப் பரிசில் வழங்குவதும் எமது இலக்கை நோக்கிய நகர்வாக அமைந்துள்ளன.

இந்நூலின் வரவிற்கு உறுதுணையாக இருந்த அனைவருக்கும் கட்டுரைகள் அனுதாபக் குறிப்புகள் எழுதிய அனைவருக்கும் இத்தருணம் எமது நன்றியைப் பகிர்கிறோம்.

கலாலயம் பதிப்பகம்

# வாழ்வின் பெறுமதி

சிவசேகரம்

பிறந்தோர் யாவரும் இறப்போமாதலால்
இறப்பு பிறப்பினும் உறுதியானது.
எனவே
உறுதியான ஒரு நிகழ்வையிட்டு அஞ்ச எதுமில்லை.
நமக்குள்ளது
பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட
வாழ்வு எனும் இடைவெளி.
அதற்கு முன்னோ பின்னோ
பிறிதொரு வாழ்வு நமக்கில்லை.
வாழ்வின் நிரந்தரமின்மையை ஏற்க இயலாதும்
வாழ்வின் வினாக்கட்கு விடை தெரியாதும்
ஊழென்றும் முற்பிறப்பென்றும் மறுபிறப்பென்றும்
நம்மை நாமே ஏய்க்கலாம்
ஏய்த்தலால் நம்மைச் சூழும் நிசங்கள் மாறா.
வாழ்வதை விட வாழ்க்கைக்குப் பொருள் ஏதுமில்லை.
எனவே
வாழ்தல் வாழ்வின் பொருளைத் தீர்மானிக்கிறது.
வாழ்வின் பயனும் பெறுமதியும் அதன் நீளத்திலில்லை.
தேடும் பொருளிலோ பெறும் புகழிலோ
அறிவிலோ ஆற்றலிலோ அதிகாரத்திலோ இல்லை.
நம்மிடம் உள்ள எதன் பெறுமதியும்
அது விளைக்கும் பயனால் முடிவாகிறது.
அவ்வாறு
நமது வாழ்வின் பெறுமதியை நாமே ஆக்குகிறோம்.
நமது உலகம் நம்மை விட எவ்வளவு விரியுமோ
அவ்வளவுக்கு அதன் பயனும் நன்றாயோ தீதாயோ விரியும்.
அதற்கு மேற் பெறுமதி கோர நமக்கும் இயலாது,
அதை வழங்கப் பிறர்க்கும் இயலாது.

# பன்முகப் போராளி

அழ. பகீரதன்

அந்தக் காலம் முதல் இந்தக்காலம் வரை திருமணவீடு, அந்தியெட்டி, பூப்புனித நீராட்டு என்று சொல்லப்படுகின்ற வீட்டு நிகழ்வுகளில் அந்தந்த சடங்குகள் நிறைவுக்கு வந்தபின் சாப்பாட்டுக்கான பந்தி வைக்கும் போது முதல் பந்தி ஆண்களுக்குரியதாக இருக்கிறது. பெண்கள் எல்லோரும் முத்தத்துக்கு வந்து குந்துவார்கள். ஆண்கள் சாப்பிட்டு முடிந்தபின் தான் பெண்கள் சாப்பிடலாம். இந்த வழக்கத்தை முறியடிக்கும் வகையில் அது ஏன் அப்படி என்ற கேள்வியுடன் ஆண்களுடன் இணையாக இருந்து பந்தியில் உணவு உண்ண முன்னுக்குச் செல்லுவார்.

70களில் பள்ளிக்கூடத்தில் கற்கும் போது பெண்களுக்கு தனியொரு வரிசை வாங்குகளும் ஆண்களுக்கு தனியொரு வரிசை வாங்குகளும் ஒதுக்கப்பட்டிருக்கும். பெண்பிள்ளைகள் ஆண்களுடன் சேர்ந்து நட்புக் கொள்வது என்பது நினைத்துப் பார்க்கவும் முடியாது. ஆடவன் ஒருவர் பெண் பிள்ளையைப் பார்த்து சிரித்தாலே போதும். உடனே கதை கட்டி விடுவார்கள். பள்ளிகூடச் சுவர்களில் சித்திரம் வரையத் தொடங்கி விடுவார்கள். ஊர் எங்கும் கதை பரவும். இந்த அலர் தூற்றலுக்கு ஈடுகொடுக்கமுடியாத பெண்கள் சிலர் தற்கொலையும் செய்திருக் கின்றார்கள். இந்த பண்படாத சூழலில்தான் கலாலக்ஷ்மி ஆண்களுடன் சமத்துவமாக பழகும் பாங்கினை வளர்த்துக் கொண்டவர். நாலு பெண் சகோதரர்களுக்கு பின் ஐந்தாவதாக பிறந்த அந்தப் பெண்மணிக்கு இந்த இயல்பு வருவதற்கு அவரது குடும்பச் சூழலும் காரணமாக இருந்திருக்கமுடியும். இவரது இளமைக் காலத்தில் இவர் ஒரு நட்சத்திரம் என்று அவரது துணைவர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். உண்மைதான்.

முதலில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் பின்னர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் உயர் கல்லூரியிலும் கல்வி கற்ற காலத்திலேயே மேடைகளில் தனது அரங்க ஆற்றுகைகளை வெளிப்படுத் தியவர். ஓட்டுமடத்தில் அவரது சகோதரி குடும்பம் இருந்தமையால் யாழ்ப்பாணத்தில் படிக்கின்ற பாக்கியம் அந்தக் காலத்திலேயே அவருக்கு கிடைத்திருக்கின்றது. அவரது பேரனார் நகைக்கார நாகமுத்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்பதால் பட்டணத்தார் என்ற பட்டப் பெயரும் ஊரவரால் கொடுக்கபட்டது.

அந்தக் காலத்தில் எங்கள் ஊரில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான ஒரே ஒரு பெண் ஆக கலாலக்ஷ்மி திகழ்ந்தார். மூத்த தலைமுறையினரில் பெண்கள் ஆசிரியர்களாக இருந்திருக் கின்றார்கள். ஆயினும் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்கள் அல்லர். இவரது வயதை ஒத்தவர்கள் ஓரிருவர் அவ்வாறான தகைமையைப் பெற்றிருக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருந்தாலும் அவர்களது வீட்டுச் சூழல் அவர்களுக்குத் திருமணம் பேசிச் செய்து வைத்து அவர்களது படிக்கும் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையே காணப்பட்டது. இந்தக் கிராமச் சூழலுக்கு மாறாக பட்டணத்தார் என்ற பண்பு இவரது ஒவ்வொரு உயர்வுக்கும் காரணமாக இருந்திருக்கும் என்றே எனக்குத் தோன்றுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலையியல் பட்டதாரிப் படிப்பில் 1978இல் இணைந்துகொண்டார். அந்தச் சூழல் மேலும் அவருக்கு ஆண்களுடன் சமத்துவமாக பழகும் வாய்ப்பைத் தந்தது. எங்கும் எதற்கும் ஏன் என்ற கேள்வியை எழுப்புவதன் ஊடாக தனது கற்கையைத் தொடர்ந்த இவரது ஆளுமையை வெளிப்படுத்தும் விதத்தில் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின் சார்பில் இயக்குநர் க. பாலேந்திராவின் 'ஒரு பாலை வீடு' நாடகத்தில் நடிக்கின்ற வாய்ப்பு அப்போது கிடைத்தது. பெண்கள் நடிப்பதற்கு முன்வராத காலத்தில் அதுவும் ஓர் அழகான பெண் ஒரு பைத்தியகாரியாக ஒட்டைப் பற்களுடன் தலைவிரிகோலமாக நடிப்பதற்கு முனைந்தமை வியப்பிலும் வியப்பானது. அவரது ஆற்றல் அந்நாடகத்தினூடாக யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி கொழும்பிலும் பேராதனையிலும் வெளிப்பட்டது.

பேராசியர் சி. மௌனகுரு நாடக அரங்கக் கல்லூரிக்காகச் 'சங்காரம்' நாடகத்தினை நெறிப்படுத்தியபோது அந்நாடகத்தில் 'சமுதாயம்' பாத்திரத்தில் நடிப்பதற்கு பெண் ஒருவரைத் தேடிய போது கலாலக்ஷ்மி ஒப்புக்கொண்டு நடித்தார். முற்றிலும் ஆண்களே நடித்த இந்த நாடகத்தில் தனியொரு பெண்ணாக நாடகப் பயிற்சி ஒத்திகைகளில் கலந்து கொண்டமை அக் காலத்தில் அந்நாடகத்தில் நடித்தவர்களாலும் நெறியாளராலும் இன்றும் நினைவு கூர்ந்து பாராட்டப்படுகின்றது.

1978ல் திருநெல்வேலியில் வாராந்தம் நடைபெற்ற நாடக அரங்க கல்லூரியில் நாடகப் பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டார். இவர் நடித்த நாடகங்களில் முக்கியமானது நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை ம. சண்முக லிங்கத்தின் 'உறவுகள்' நாடகம். இந்த நாடகத்தில் தாயாக நடித்திருக்கின்றார். இந்நாடகத்தில் குழந்தை ம. சண்முகலிங்கம், அரசையா, சிசு நாகேந்திரா, சோ.தேவராஜா, ஜி. பேர்மினஸ், கௌரி வரதராஜப்பெருமாள் போன்ற கலைஞர்களுடன் நடித்தார். பண்பட்ட நாடக அரங்கப் பயிற்சியினைப் பெற்றவர் என்பதை நிரூபிக்கும் இவரது நடிப்பு அன்று வியக்கும் வகையில் இருந்தது. இன்றும் இந்த நாடகம் நாடக அரங்க கல்லூரியினரால் ஆற்றுகை செய்யப்பட்டபோது தனது அன்றைய நாடக அனுபவங்களை இரைமீட்டு உணர்ச்சி பூர்வமாக நாடகத்தை இரசித்தமையை பார்க்கக்கூடியதாக இருந்தது. நாடகம் முடிந்த பின் நடிகர்களுடன் அளவளாவி நடிகர்களை உற்சாகப்படுத்தினார்.

இவரது நடிப்பு பற்றி வீ.எம். குகராஜா ஆசிரியராகவும் எஸ். ஜே. குமார் துணையாசிரியராகவும் இருந்து 1981இல் வெளிவந்த 'அரங்கம்' என்ற நாடக சஞ்சிகையின் முதல் இதழில் எஸ்.. சிவதாசன் இவ்வாறு குறிப்பிடுகின்றார் :

தரமான நாடகப் பிரதிகளை எழுதவும் முடியாமல், எழுதியவற்றை மேடையேற்றவும் முடியாமல் தவிக்கும் நாடகக் கலைஞர்கள் பலர். இந்த நிலையில் விரல்விட்டு எண்ணத்தக்க பெண்மணிகளே மேடை நாடகங்களில் தமது பங்கை வழங்கி, நாடகத்திற்கூடாக நல்ல புகழையும் பெருமையையும் பெற்றவர்கள். இங்கு நாம் நினைவு கூரத்தக்க, தாக்கத்தை ஏற்படுத்திய நடிகைகள் பலர் இருக்கிறார்கள் என்ற போதும்; மிகப்பிந்தி மேடைக்கு நடிக்க வந்து, 'முந்தி' வந்த பலரையே முந்தி நிற்கிறார் கலாலக்ஷ்மி என்பதைக் கூறுவதில் தவறிருக்கமுடியாது.

பட்டணத்தார் என்ற ஊரவர் கணிப்பிலிருந்து கீழிறங்கி எல்லோருடனும் சமத்துவமாகப் பழகும் குணவியல்பை உடைய அவர் வறுமைச்சூழலில் வளர்ந்த

மேடைநாடக நடிப்பில் சிறந்த சட்டத்தரணி தேவராஜா அவர்களைக் காதல் திருமணம் புரிந்தார். தாலி கட்டும் பாரம்பரிய சடங்கை கைவிட்டுப் பதிவுத் திருமணமாக இவர்களது திருமணம் அமைந்தது. கடைசிவரை தாலிக்கொடி அணியாமல் வெறும் சங்கிலி ஒன்றே அணிந்து படாடோபமற்ற எளிமையான உடைகளை அணிபவர். பெண்ணிய, சமூக போராளியான இவரது நடிப்புக்கும் வாழ்வுக்கும் முற்போக்கு எண்ணம் கொண்ட துணைவர் துணைநின்றார். சேர்ந்து நடித்தனர்.

கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் நாடகம் பற்றி பத்தி எழுத்துக்களை ஈழநாடு பத்திரிகையில் எழுதிய போது 'முற்போக்கு கலைஞர் தேவராஜா' என்று எழுதினார். எனது மாக்ஸிய கருத்துகள் குறித்து மதித்து எழுதினாரென நினைத்தேன். அதுவல்ல, 'தனது மனைவியையே நாடகம் நடிக்க அனுமதித்தவர்' என்பதை 'செயற்கரிய செயல்' எனக் கலைப்பேரரசர் கண்டறிந்தார் என்பதே எனது வியப்பாகியது என்று அன்றைய காலத்தை நினைவு கூர்ந்து இவரது துணைவர் தாயகம் 93 ஆவது இதழில் பிரான்ஸிஸ் ஜெனம் பற்றிய தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

பட்டதாரிப்படிப்பை முடித்துக்கொண்ட கலாலக்ஷ்மி பட்டதாரி நியமனம் பெற்று பேராதனை தமிழ் மகாவித்தியாலயத்திலும் தலாத்துஓயா தமிழ் மகாவித்தியாலயத்திலும் ஆசிரியையாக கடமையாற்றி தனது பதவியை தாய் எனும் பதவியில் சிறப்புறும் நோக்கில் துறந்தார். ஜனமகன், அபிலாஷா என்ற இரு பிள்ளைகளையும் அறிவு, ஆற்றல், ஆளுமை என்ற மூன்று தளங்களிலும் முன்னிற்பவர்களாக வளர்த்தார். தமது முற்போக்குச் சிந்தனைகளையும் பெண் விடுதலைச் சிந்தனைகளையும் அவர்களிடம் விதைத்தார்.

நாடக நடிகையாக மட்டுமல்லாது வி. எம். குகராஜாவின் கதைவசனம், நெறியாள்கையிலும் கே. எம். வாசகரின் மேற்பார்வையிலும் 'கதை இதுதான்' எனும் 2½ மணிநேர வீடியோ திரைப் படத்திலும் கதாநாயகியாக தமது இயல்பான நடிப்பின் மூலம் அனைவரையும் கவர்ந்தவர். 'சிலந்தி வலை' என்ற வீடியோ திரைப்படத்திலும் சிறு பாத்திரமேற்று நடித்தார். பின் கொழும்பில் ரூபவாகினியில் அருணா செல்லத் துரையின் 'வீடு' என்ற தொலைக்காட்சித் தொடரில் பிரதான பாத்திரத்தில் நடித்தார்.

1989இல் காலையடி மறுமலர்ச்சி மன்றத்திலும் சாந்தை சிற்றம்பல வித்தியாலயத்திலும் சுகாதார விழா நடாத்தப்பட்டபோது தனது துணைவர் சோ. தேவராஜாவுடன் இணைந்து குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'மாதொருபாகம்', 'தாயுமானார் நாயுமானார்' நாடகங்களினை நெறியாள்கை செய்து அன்று இளம் பெண்களை மேடையேறச் செய்தார்.

பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி தயாரிப்பான குரும்ப சிட்டி நடராஜாவின் 'மேலும் கீழும்' நாடகத்தின் ஒரு மேடையேற்றத்தின் போது புலவர் கா. வேல்முருகனுடனும் தனது கணவருடன் இணைந்து நடித்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 'புதுவரலாறும் நாமே படைப்போம்' என்ற இசைப்பா அரங்கின் பாடகர் குழுவில் நான்கு மேடைகளில் பங்கெடுத்துள்ளார். கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் கலாமணியின் 'பாடலே அரங்காகி' இசைப்பா அரங்கில் பாரம்பரிய கூத்து நாடகப் பாடல்கள் நிகழ்வில் பாடியுள்ளார்.

90களில் கொழும்புக்கு இடம்பெயர்ந்து வாழும் நிலையேற்பட்டது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் யுத்தகால இடம்பெயர்வில் இலங்கையின் பலபாகத்திலிருந்து பங்குபெறும் கலை, இலக்கிய, அறிஞர்களுடன் பழகியும் நூல் நயம், திருக்குறள் ஆய்வுகளிலும் சிறப்புடன் கலந்து விவாதித்துக்கொள்வார்.

அரங்காடிகள் தயாரிப்பில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'முயலார் முயலுகிறார்' நாடகத்தில் மயில் பாத்திர மேற்று நடித்தார்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் அரங்கப் பண்பாட்டுப் பேரவையின் நாடகங்கள் பலவற்றில் நடித்தார். சோக்கல்லோ சண்முகம், பிரான்சிஸ் ஜெனம், அரசையா போன்றோருடன் கொழும்பு, மட்டக்களப்பில் 'எந்தையும் தாயும்' நாடறிந்த அரசைய்யா நெறிப்படுத்தலில் அம்மேடையேற்றங்களில் நடித்தார்.

பிரான்சிஸ் ஜெனம் சுகவீனமுற்ற பின்னர் நாடக நெறியாளராக 'எந்தையும் தாயும்' நாடகத்தை நெறிப்படுத்தினார். துணைவர் தேவராஜா சங்கரப்பிள்ளை பாத்திரம் ஏற்று நடிக்க இவர் நெறிப்படுத்தினார். தனது மிகை நடிப்பை கண்டு இயல்பாக நடிக்க நெறிப்படுத்தியதாக தேவர் நினைவு கூருகின்றார்.

கம்பஹாவைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணியும் நாடகக் கலைஞருமான 'விஜித் சிங்'கின் 'கொள்கரி', 'தூ—1', 'தூத் தூ..' ஆகிய மேடை நாடகங்களிலும் 'மண்டையன்' என்ற தொலைக் காட்சி நாடகத்திலும் நடித்தார்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் மகளிர் தினத்தை முன்னிட்டு சோ. தேவராஜா எழுதி இயக்கிய 'தாலியம்' நாடகத்தில் பிள்ளைகளுடன் இணைந்து நடித்தார்.

இலங்கை நாடக அரங்கக் கல்லூரி, தாசீசியசின் இலண்டன் களரி அமைப்பு, சென்னை கலைக்குழு ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து சென்னைப் பல்கலைக்கழகத்தின் வழிப்படுத்தலில் தமிழகத்தில் மேற்கொண்ட 'நாராய்.. நாராய்..' நாடகப் பயணத்தில் தாசீசியஸ், பிரான்சிஸ் ஜெனம், எஸ்.ரி. அரசு, சிதம்பரநாதன், சென்னையில் பேராசிரியர் அரசு, மங்கை அரசு மற்றும் பலருடனும் துணைவர், பிள்ளைகளுடனும் இணைந்து பயணித்த அவர் 'எந்தையும் தாயும்' 'புதியதொருவீடு' நாடகங்களில் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் 13 மேடைகளில் நடித்து பாராட்டுகள் பெற்றார்.

அதன் தொடர்ச்சியாக மிகவும் நெருக்கடியான இலங்கையின் உள்நாட்டு யுத்த காலத்தில் லண்டன் தாசீசியஸ் உருவாக்கிய IBC ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பில் கொழும்பு செய்தி ஒருங்கிணைப்பாளராக இருந்து நெல்லை நடேசன், கனகரவி, யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் ஆகிய செய்தியாளர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட்டார். அக் காலங்களில் அவரது வீடே அலுவலகமாக, கலையரங்கமாக இயங்கியது. செய்திகள், ஓடியோ நாடகங்கள் போன்றவை ஒலிப்பதிவு செய்து ஒலி பரப்புக்காக அனுப்பப்பட்டன.

கொழும்பில் புதிய ஜனநாயகக் கட்சியினரின் ஏற்பாட்டில் 1994ல் முதன்முதலாக வலிகாமம் வடக்கு பாதுகாப்பு வலயத்தை நீக்கி மக்களை மீளக்குடியேற அனுமதியுங்கள் என்ற வெள்ளவத்தைப் போராட்டத்தில் க. தேவதாசனின்

குடும்பத்தினருடனும் கலாலக்ஷ்மி தனது பிள்ளைகளுடன் வெள்ளவத்தையில் வீதிப் போராட்டத்தில் பங்குபற்றினார். இவரது போராட்டப் படம் அன்றைய வீரகேசரி பத்திரிகையின் முதற்பக்கத்தில் வெளிவந்தது.

கொழும்பில் தேசிய ஜனநாயக இயக்கம் மூலம் யுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், வலிகாமம் வடக்கு மக்களின் போராட்டங்களில் பங்கெடுத்ததுடன் புதிய இடதுசாரி முன்னணியின் மூலம் மாகாணசபைத் தேர்தலில் பெண் வேட்பாளராக போட்டியிட்டார். அம்முன்னணியில் 22000 வாக்குகளைப் பெற்றுக்கொண்டு கலாநிதி விக்கிரமபாகு உறுப்பினரானார். சொற்ப வாக்கு வித்தியாசத்தில் இவருக்கு அந்த இடம் கிட்டாமல் போனது. அதன் பின்னர் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் வேட்பாளராக கொழும்பில் தேர்தல் களத்தில் நின்றார்.

நாடகத் துறையுடன் மட்டும் நின்றுவிடாது நாற்பது வயதுக்குப்பின் சிறுகதை எழுத்தாளராகத் தோற்றம் பெற்றார். தாயகம் இதழில் அயிராமி, சிவகாமி என்ற புனை பெயர்களில் சிறுகதைகள் எழுதிப் பாராட்டைப் பெற்றார். மாவை வரோத யனின் நோய் காரணமாக இந்தியாவில் அவருடன் சென்று அவருக்கு உதவிபுரிந்து பணியாற்றி அவ்வனுபவத்தையும் சிறுகதையாக எழுதியிருந்தார்.

காலையடி மறுமலர்ச்சி மன்றம் இவரது வெளிவந்த, வராத சிறந்த கதைகளைத் தொகுத்து 'மதுர காவியம்', 'றோசாப்பூ', 'பூமராங்' எனும் தலைப்புக்களில் 2017 ஒக்ரோபரில் செம்மனச் செல்வி எனும் புனைபெயரில் வெளியிட்டனர். இத்தொகுப் பானது அவரது பெண்ணியல் பார்வை, சமூகப்பார்வை, அரசியல் பார்வையை பறைசாற்றுவதாக அமைந்துள்ளன.

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஆரம்ப கால மகளிர் அவை நிர்வாகங்களில் தலைமைப் பொறுப்புகள் வகித்த இவர் கொழும்பிலிருந்து மீண்டு வந்து மன்றத்தின் செயற்பாடுகளில் ஈடுபட்டு சிறுமியர்களதும் சிறுவர்களதும் கலை விளையாட்டுச் செயற்பாடுகளை ஊக்குவித்து கருத்துரைத்து நெறிப்படுத்துவார். மன்றத்தின் தென்புலத்தார் தொழுதேற்றல் நிகழ்வுகளில் ஆர்வமுடன் கலந்துகொள்பவர். விழாக்களில் கலந்துகொண்டு நாடக நடிக நடிகையரை மெச்சிப் புகழ்ந்து பாராட்டுபவர். இறுதியாக நடந்த 2019களில் மகளிர் நிகழ்வில் மங்கல விளக்கேற்றி வைத்ததோடு நிறைவில் எல்லோருடனும் இணைந்து நடனமும் ஆடினார். இதுவே இவரது இறுதி நிகழ்வாகும்.

சாதிய, இன, மத வேறுபாடுகளைக் கடந்து, அவற்றைக் கேள்விக்குள்ளாக்கி, மேவி சமூகப் போராளியாக கடைசி வரை வாழ்ந்த அவர் மனநலம் குன்றியவர்களுக்கும், உடல் நலம் குன்றியவர்களுக்கும் ஒத்தாசையாய் கடைசிவரை செயற்பட்டதோடு தனது பேத்தியின் உயர்வை மூச்சாக கொண்டு மறைந்தார்.

# பன்முக ஆளுமை கலாலக்ஷ்மி

இணுவையூர் கலாபூஷணம்

ஆ. இரகுபதி பாலஸ்ரீதரன்

பன்முக ஆளுமை கொண்ட திருமதி கலாலக்ஷ்மி மறைந்து ஒரு ஆண்டு உருண்டோடிவிட்டது. இவ்வுலகை விட்டு நீங்கும் போது அவருக்கு வயது ஆக அறுபத்தி இரண்டு மட்டுமே!

கலாவை முதன்முதல் சந்தித்தது ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதுகளின் இறுதியில் அதுவும் எனது உற்ற நண்பர், அவரது கணவர் சட்டத்தரணி சோ. தேவராஜாவுடன், கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில்.

அந்தக் காலகட்டத்தில் தேவராஜாவும் நானும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்களாக தீவிரமாக இயங்கிக் கொண்டிருந்தோம். தமிழ்ச் சங்கத்திற்கு ஆட்சிக்குழு உறுப்பினர்களாக தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தோம். தமிழ்ச்சங்கத்திற்கு இள ரத்தம் புதிய உணர்வு புகுத்தப்படவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தோம். இதற்கு தி. கணேசராஜா. சி. பாஸ்க்கரா, அமரர் சி. சிவலோகநாதன் போன்றோரும் தலைவர் கலாசூரி இ. சிவகுருநாதனும் உறுதுணையாக இருந்தார்கள். எம்முடன் அன்று ஆயுட்கால உறுப்பினராக இருந்த திருமதி கலாலக்ஷ்மி தேவராஜாவும் இணைந்துகொணாடார்.

சங்கத்தில் 1998ம் ஆண்டு கலாசூரி இ. சிவகுருநாதன் தலைவராகவும், கலாவின் கணவர் சோ. தேவராஜா பொதுச் செயலாளராகவும், தி. கணேசராஜா நிதிச்செயலாளராகவும், நான் துணைச் செயலாளராகவும் இருந்தபோது பிரதி புதன் கிழமை தோறும் 'அறிவோர்' ஒன்றுகூடல் என்ற நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் 'படித்ததும் பிடித்ததும்' என்ற நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற்றது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலாவின் பங்களிப்பு அளப்பரியது.

தொடர்ந்து தேவராஜா சங்கத் தலைவராகவும், நான் பொதுச் செயலாளராகவும், தி. கணேசராஜா நிதிச் செயலாளராகவும் பதவியேற்றபோதும் கலாவின் பங்களிப்பு தொடர்ந்தது. இதே காலகட்டத்தில் இடதுசாரி முற்போக்கு எண்ணங்கள் கொண்ட கலாலக்ஷ்மி தமது கணவருடன் சேர்ந்து கொழும்பில் மாகாணசபைத் தேர்தலிலும் போட்டியிட்டார். அந்த தேர்தல் பிரசாரத்தில் எனது இரண்டாவது மகன் திருச்செந்தூரனும் தீவிரமாகப் பங்கேற்றார் என்பது வரலாறு.

திருமதி கலாலக்ஷ்மி அவர்கள் ஒரு நாடக நடிகையாக ஒரு பாலைவீடு, உறவுகள், எந்தையும் தாயும், சங்காரம் போன்ற நாடகங்களில் சிறப்பாக நடித்தார்.

பெண்கள் நாடகங்களில் நடிக்க முன்வராத அந்தக் காலகட்டத்தில் மேற்கூறப்பட்ட நாடகங்களுடன் மட்டும் நின்றுவிடாமல் வீடியோவில் ஒலி நாடாவில் முழுநேரத் திரைப்படமாக வந்த வீ. எம். குகராஜாவின் 'கதை இதுதான்' திரைப்படத்தில் சிறப்பாக நடித்தார்.

மேலும், அன்னார் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளராக 'செம்மனச்செல்வி' என்ற புனைபெயரில் பூமராங், ரோசாப்பூ, மகர காவியம் என்று மூன்று சிறுகதைத் தொகுப்பு நூல்களை வெளியிட்டுள்ளார்.

'பட்டணத்தார்' என்று கிராம மக்களால் அழைக்கப்பட்ட குடும்பத்தில் பிறந்த அமரர் கலாலக்ஷ்மி அதனை மேவி, சாதி மதம் பார்க்காமல் அடித்தட்டு மக்களுடன் ஒன்றாக சமமாகப் பழகியவர். துணைவர் சட்டத்தரணி தேவராஜாவின் அத்தனை முற்போக்குச் செயற்பாடுகளிலும் உறுதுணையாக தோளோடு தோள் கொடுத்து துணையாகி நின்றவர்.

முன்பே கூறியபடி கொழும்புத் தமிழ்ச்சங்கத்துடன் மட்டும் நின்றுவிடாது தேசிய கலை இலக்கியப் பேரவை, மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி, புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிச கட்சி போன்ற அமைப்புகளிலும் இணைந்து அர்ப்பணிப்புடன் சேவை புரிந்தவர்.

இவற்றிற்கெல்லாம் மேலாக நல்ல குடும்பத் தலைவியாக, தோழர் தேவராஜாவின் உற்ற துணைவியாக ஜனமகன், அபிலாஷா ஆகியோரின் அருமைத் தாயாராக வாழ்வாங்கு வாழ்ந்து திடீரென 28.03.2019 அன்று காலமானார்.

அவரது பாரிய எதிர்பாராத இழப்பு அன்னாரது குடும்பத்திற்கு மட்டுமல்லாது உற்றார், உறவினர் அடிமட்ட மக்களுக்கும் பேரிழப்பாகும்!

# என் மனதை விட்டு அகலாத லக்ஷ்மி அம்மா...

கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்

(கலாலக்ஷ்மி தேவராஜா அம்மாவின் மறைவை ஒட்டி, கவலையுடன் இந்நினைவுக் குறிப்பு......)

கலாசார அமைச்சு, அரச ஊழியர்களுக்கான நாடக போட்டி நடத்தும்போது (2019.12.07), அந்த நடுவர் குழுவை தீர்மானிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப் பட்டபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு நடுவரை தேர்ந்தெடுக்க வேண்டி வந்தது. அப்போது தேவராஜா ஐயாவுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது. அப்போது 15 வருடத்திற்கு முந்திய எனக்கும் அவருக்கும் இருந்த உறவு நிலை என் மனதில் தோன்றியது. 'அங்கிள்' என்றுதான் நான் அவரை அழைப்பேன். அவருடைய மனைவியாரான கலாலக்ஷ்மி அம்மாவை 'ஆன்ரி' என்று தான் அழைப்பேன். அந்த உறவு நிலையிலே இந்தத்தடவையும் 'ஆன்ரி எப்படி இருக்கிறா?' என்று கேட்டுவிட்டேன். அப்போது அவர் எனக்கு அளித்த பதிலில் இருந்துதான் அவர் எம்மிடத்தில் இல்லை என்பது எனக்குத் தெரியவந்தது. அவருடைய உறவு நிலையை மீட்டெடுத்து பார்க்கும் போது அவர் எங்களுடன் எவ்வாறான தொடர்பில் இருந்தார் என்பது நினைக்கும் போது கவலையை ஏற்படுத்துகின்றது.

நானும் ஜனமகனும் பள்ளித்தோழர்கள். 2002 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் கலைத்துறையில் உயர்தரம் கல்வி கற்று வந்தோம். இருவருமே சகோதரர் போலத்தான் தோற்றத்தில். அப்போது தேவராஜா ஐயாவும் அம்மாவும் எங்களுடைய குடும்பத்தினருக்கு நன்கு பரிட்சயமானவர்கள். அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது மிக நெருங்கிய பழக்கமுடையவர்கள். குழந்தை ம. சண்முகலிங்கம் ஐயா அவர்களுடைய நாடக அரங்கக் கல்லூரியிலே எங்களுடைய அம்மாவும் தேவராஜா ஐயாவும் வளர்ந்தவர்கள். அந்தத் தொடர்பு இன்று வரையும் எங்கள் குடும்பத்தை அவர்களுடைய குடும்பத்துடன் இணைத்து வைத்துள்ளது. நாடக அரங்கக் கல்லூரி இன்று வரைக்கும் உறவுப்பாலமாகவே இருக்கின்றது.

அந்தத் தொடர்பு எனக்கும் ஜனமகனுக்கும் தொடர்ந்தது. உயர்தரத்தின் பின்னர் எங்கள் உறவில் மிக முக்கிய விடயமாக 'மனத்தவம்' என்னும் குழந்தை சேருடைய நாடகத்தின் மூலம் கிடைத்த அந்தப் பழக்கம், மறக்கவும் மறைக்கவும் முடியாத ஒரு நினைவாகும். நான் இராமனாக நடிக்கவும் பின்னனி இசை ஜனமகனுடைய பொறுப்பில் இருந்தது என்பதும், முக்கிய விடயம்.

அந்நாடகத்தின் பயிற்சிக்கு தேவராஜா ஐயாவின் வீட்டிற்கு செல்வோம். அப்போது அவருடைய வீடு தெஹிவளையில் வைத்தியா வீதியில் இருந்தது. 2003 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளில் எங்கள் உயர்தர தோழர்கள் ஜனமகன் வீட்டில் இணைந்துகொள்வோம், இந்நாடக பயிற்சி பெற, அப்போது எங்களை ஒரு அன்னை போல அணைத்து அந்நாடகம் மேடையேறி வெற்றி பெற பக்க பலமாகவே இருந்தார்.

ஒரு முறை ஜனமகனுக்கு கையில் கண்ணாடி வெட்டுப் பட்டு நிற்கும் போது தாயின் அந்த பதகளிப்பு அரவணைப்பு இதைக்கண்டு பயந்த நான் அதேவேளை

தேவராஜா ஐயா வின் கோபத்தையும் கண்டு பயந்ததும் உண்டு. அந்த சம்பவத்தை அம்மா சமாளித்த முறை இப்பவும் என் மனக் கண்ணில் இருந்தவாறே உள்ளது. அவருடைய பொறுமைக் குணத்தை என்னவென்று சொல்வது.

இதனை விட 2008 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 'எந்தையும் தாயும்' என்ற நாடகத்தை கொழும்பு இராம கிருஸ்னமிஷன் மேடையில் மேடை ஏற்ற வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது அந் நாடகத்தை நெறிப்படுத்தியவர் அன்ரிதான். அப்போது பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் ஒரு நாடக ஆசிரியராக இருந்தேன்.

ஒரு நெறியாளர் எவ்வாறு அன்பாகவும் நடிகர்களுடைய மனம் நோகாதவாறு, அந்நாடகம் சொல்லவந்த கருத்தை அப்படியே மேடையில் கொண்டு வர பாடுபட்டா... என்பது எனக்குத் தெரியும். இந்த வேளையில்தான் எனக்கு வைத்திய கலாநிதி அனுஷ்யந்தன் மற்றும் எங்கள் அம்மாவின் பழைய நண்பர்களான சட்டத்தரணி இராஜகுலேந்திரா குடும்பத்தினரை தெரிய வந்தது. இந்நாடக பயிற்சிக்கான களமாக தமிழ்ச்சங்கமே பெரிதும் உதவியாக இருந்தது. அந்நாடகத்தில் 'கண்ணன்' என்னும் பாத்திரம் ஏற்று நடித்திருந்தேன்.

அப்போது எனக்குத் தெரியாது அந்நாடகத்தின் முக்கியத்துவம் என்னவென்று. ஆனால் அந்நாடகம் நடித்த பிறகுதான் எனக்கு தெரிந்தது, என்னுடைய அம்மாவின் மனநிலையும் சங்கரப்பிள்ளை ஐயாவின் மனநிலையும் இப்படித்தான் இருக்கும் என்று. ஏன் என்றால் என்னுடைய அண்ணா இங்கிலாந்தில். இந்தப் பிரிவுத் துயர் தான் அதற்கு காரணம்.

இப்போது ஜனமகன் அவுஸ்திரேலியாவில். தேவராஜா ஐயா யாழ்ப்பாணத்தில்... அம்மா... இது ஒரு எந்தையும் தாயும் தான்.

அதனை விட நான் நாடக பாடம்தான் உயர்தரத்திற்கும் மேற்படிப்புக்காகவும் கற்றிருந்தேன் என்றாலும் இக்குடும்பந்தான் என்னை நாடக பயிற்சிக்குள் ஈடுபடுத்தியது. இன்று நடிக்கின்றேன் நாடகங்களில் என்றால் அந்தக் குடும்பம் எனக்கு காட்டிய வழிகாட்டல் தான் என்பதை நான் எப்போதும் மறக்க மாட்டேன்.

இந்தப் பிரிவுத் துயரை நினைக்கும்போது இறைவா.... இந்தக் கணங்கள் என்னை விட்டு எப்போதும் பிரியாது. ஜனமகன் மீது அம்மா வைத்திருந்த பாசம், அன்பு, நம்பிக்கை, விஸ்வாசம் எல்லாம் என்கண்முன்னே இப்பவும் என்னைச் சுற்றி இருந்துகொண்டே இருக்கின்றது என்றால்....

தேவராஜா ஐயாவை நடுவர் குழுவில் இணைப்பதற்கு அவருடன் தொடர்பு -கொள்ளும்போது, அவர் சொன்ன பதிலில் இருந்து நான் வெட்கிப் போய் விட்டேன். கடைசி நேரத்தில் அன்னையைப் பார்க்கும் வாய்ப்பினை இறைவன் எனக்குத் தரவில்லை...

நானும் ஒரு மனிதனா? என்று வெட்கப்படுகின்றேன். மகன் போல் என்னைப் பார்த்த அந்தத் தாய்க்கு நான் செய்யும் மரியாதைதான் என்ன? இதுதானா...

கலாலக்ஷ்மி அம்மாவின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி...

# சொல்லாமல் போகலாமா?

சத்தியமலர் இரவீந்திரன்

அம்மாவின் இடமாற்றம் பல ஊர்களையும் உறவுகளையும் எமது என்று எண்ண வைத்தது. சிறுவயது ஞாபகங்களின் தொடக்கம் காலையடி கிராமத்தில் இருந்தே ஆரம்பமாகும். எனக்கு அண்ணா, தம்பி இருந்தார்கள். அக்கா என்று அம்மா காட்டியது கலா அக்காவையே! அவர் பற்றிய முதல் ஞாபகம், அவரது விளையாட்டுப் போட்டிக்கு, எம் மூவரையும், தன் உறவுகளையும் அழைத்துச் சென்றதே. பின் ஊர் மாறி வந்த போதும் அவ்வூருடனும், கலா அக்கா குடும்பத்துடனும் உறவு தொடர்ந்தது.

பின் இரவி, தேவர், இராசன், கிருட்டி, சந்திரன் என பல அண்ணைமார் அப்பாவுடனான மார்க்சிய உறவுடன் நானும் வளர்ந்தேன். பின் தேவரண்ணையின் காதலி கலா அக்கா என்பதை அண்ணா கண்டு பிடித்து எமக்கு எல்லாருக்கும் சொன்னார். எங்கள் எல்லாருக்கும் பெரும் சந்தோசம். கலா அக்கா எங்கள் வீட்டிற்கே வரப் போகிறார் என்று. பல சுவாரசியங்களும், சிக்கல்களின் நடுவில் சத்தியமனையில் திருமணப் பேச்சு நிச்சயமானது.

பின் ஜனமகன், நான் ஆசையாய் வியந்து ரசித்து வளர்ந்த குழந்தை அவர். இடையில் என் கல்யாணம். நீண்ட நாட்கள் பார்க்கவில்லை என்னைப் பார்க்கவில்லை என கட்டிப்பிடித்து அவர் அழுததும், என் ஒப்பனை கலைந்து விடப் போவதாக என் நண்பி திட்டியதும் பல தடவைகள் மீட்டிப் பார்த்த ஞாபகங்கள் அவை. 1984இல் யாழ். மாவட்டத்தில் இடது சாரிகள், முற்போக்கு சக்திகள், சமூக அக்கறையுடைய தனிமனிதர்கள் இணைந்து 'மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம்' உருவாக்கப்பட்டது. அதன் செயலாளர் தேவரண்ணை. ரெலோ என்ற இயக்கத்தின் எதேச்சாதிகாரம் அதில் இயங்கியவர்களை கடத்தியும், கொலையும் செய்தனர். தேவரண்ணைக்கும் ஏற்பட்ட ஆபத்தின் காரணமாக சத்தியமனையிலும் தலைமறைவாக சில நாட்கள் இருந்தார். அப்போது கலா அக்காவும் எம்முடன் இருந்தார். பேசக் கூடிய பெரிய பெண் ஆகியிருந்தேன். அவரது கஷ்டங்கள், பிரச்சினைகளை பகிர்ந்தார். அபி பிறந்தார்.

வேலை கிடைத்து அவர் கண்டி செல்ல எமது பஸ் தரிப்பிடம் வந்தபோது அப்பாவுடன் நானும் சென்று வழி அனுப்பினோம். அவர் இருந்த கண்டி வீட்டில் தங்கியிருந்தே என் ஆசிரிய போட்டிப்பரீட்சைக்கு தோற்றி தெரிவானதும் கண்டிக்கே. அவருடனான பல பல நினைவுகள் வந்தோடுகின்றன...

அப்பாவின் இறுதிக்காலமான தலைமறைவு காலப் பகுதியில் அவரைக் கவனித்ததும் ,தன் குழதைகளுக்கு 'மஞ்சள் பூ அப்பப்பா' என்று நெருக்கத்துடன் வளர்த்தார். இப்படி பல இருந்தும், 1988இன் கடைசி காலப் பகுதியில் – இந்திய மேலாதிக்க வல்லரசின் அத்து மீறிய நுழைவும், மேலிருந்து உணவுப் பொதிகளை

வீசியதையும் கண்டித்தது மட்டுமின்றி அவர்களின் வெளியேற்றத்தை வலியுறுத்தி பல நடவடிக்கைகளை தேவரண்ணாவும் முன்னின்று நடத்தி வந்தார். ஜனாதிபதி தேர்தலில் யு என் பி சார்பில் மீண்டும் பிரேமதாசா அவர்களும், அவரை எதிர்த்து சிறீமாவோவும் கேட்டார்கள். இந்திய இராணுவத்தை வெளியேற்றுவேன் என்பது சிறீமா தரப்பின் முக்கிய உறுதி மொழியாக இருந்தது. குமார் பொன்னம்பலம், மோதிலால் நேரு, வினோதன் எனப் பலரும் சேர்ந்து புதிய ஜனநாயக் கட்சி தலைமையின் கீழ் சிறீமாவை யாழ் மாவட்டத்திற்கு அழைப்பதற்கு முடி வெடுத்தனர். அதற்கான ஆயத்தங்களை முதல் நாளிரவு தோழர்கள் அனைவரும் சத்தியமனையில் தங்கியிருந்து செய்து கொண்டிருந்தபோது, திடீரென கைகளில் துப்பாக்கியுடன் இருவர் நுழைந்து கூட்டத்தை ரத்து செய்யுமாறு வலியுறுத்தினர்.

அவசரகால இரவு நேரம். அப்பா அவர்களிடம் "இது பற்றிய கலந்துரையாடல் நீண்ட காலமாக நடந்தது. நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஐபிகேஎவ் இன் வெளியேற்றம் இன்றைய சூழலில் முக்கியமானது. என்னைச் சுட்டால்... சில வேளைகளில் கூட்டம் நடக்காது போகலாம். மற்றும்படி இது நடக்கும்" என்று சொல்ல அவர்கள் அத்துப்பாக்கியினை மீண்டும் சுமந்து மறைந்தார்கள்.

அடுத்த நாள் அதிகாலை நானும் அப்பாவும் தனித் தனி மிதி வண்டிகளில் கூட்டம் நடத்துவதற்கான அனுமதியை பெறச் சென்றோம். அது தாமதம் ஆனதால் வீட்டிற்கு வராமல் நேராகவே சிறீமாவோ வந்திறங்கும் பண்டத்தரிப்பு பெண்கள் கல்லூரி மைதானத்திற்குச் சென்றோம். முதல் நாள் நடந்த பயமுறுத்தலால் தீர்மானத்துக்கமைய சில தோழர்கள் பங்கு பெறவில்லை. ஆனால் அழகான, மிக இளமையான எங்கள் கலா அக்கா தன் ஆசையான மூத்த மகன் ஜனமகனை ஒரு கையிலும், மறு கையில் தன் சகோதரி மகளையும் பிடித்தபடி சிறீமாவோவை கம்பீரமாக அழைத்து வந்தார்.

இதில் தேவரண்ணையின்– கொள்கை, கோட்பாடு, கட்சியின் கூட்டுமுடிவை ஏற்றல், சொன்ன சொல்லை காப்பாற்றல் இப்படிப் பலதைச் சொல்லி பெருமைப்படலாம். அவர் ஒரு கட்சி மத்திய குழு உறுப்பினர். ஆனால், கலா அக்கா அரச ஆசிரியர். இரு சிறு குழந்தைகளின் தாய். உயிருக்கு உத்தர வாதமற்ற நிகழ்வு. ஆனால் அவர் முகத்தில் சலனம் இல்லை. அக்கூட்டத்தின் எழுச்சி அவருக்கும், அப்பாவிற்கும், எல்லாத் தோழர்களுக்கும் நம்பிக்கையையும், அஞ்சாமையையும் வளர்த்தது.

இந் நிகழ்வின் பின் அக்கா பற்றிய பிரமிப்பு அதிகரித்துக் கொண்டே போனது. செங்கொடி பிடித்து நடந்தவைகளும், அரசியல், இலக்கியம் எனப் பேசிக் கழித்த நாட்களும், இறுதியில் குட்டி நாயை காவி வந்து சத்தியமனையில் பூமரம் வாங்கிச் சென்றவரை நினைவாக நீளுது. பல கதை கேட்கவும், சமைத்த உணவை ருசித்து, சிலாகித்துப் பகிரவும், முரண்பாடுளை மனம்விட்டுபேசி மீளவும், கை பிடித்து ஆறுதல் சொல்லி, சிரிக்க வைத்து நகர்ந்து போகும் என் அக்கா..... என்ன அவசரம்? சொல்லாமல் போகலாமா? என் கண்ணீர் மட்டுமே அறியும் கவலையின் பாரம் பற்றி!

# உள்நிலைத் தேடல்

தெ.மதுசூதனன்

அன்று நாம் ஊரிலிருந்து கொழும்பு வரவேண்டிய நிரப்பந்தம் ஏற்பட்டது. அன்று முதல் கொழும்பை வதிவிடமாக மாற்றி வாழ்வதற்கு நம்மை தயார்படுத்திக் கொண்டிருந்த தருணம்.

எப்படியோ தேவர், கலா, அவர்தம் பிள்ளைகளுடன் மிகவும் நெருக்கமாக பழக ஆரம்பித்தேன். அக்காலம் தேவர் குடும்பத்துடன் ஏற்பட்ட உறவு, நாம் தொடர்ந்து வாழ்வதற் கான நம்பிக்கையை உளப்பாங்கை, ஆத்மதிருப்தியை உறுதிப் படுத்தி வந்தது.

சமூகம், அரசியல், கலை, இலக்கியம்.... தொடர்பான உரையாடல்கள், பங்கேற்புகள் நமக்கிடையே வளர்ந்து வந்த உறவை, தோழமையை இன்னும் ஆளப்படுத்தி வந்தது. ஆனால் இந்த உறவாடலுக்கும், உரையாடலுக்கும் அப்பால் நான் அவர்களின் குடும்பத்தில் ஒருவனாக இருந்து வந்தது தான் பெரும் ஆச்சரியம். இந்த ஆச்சரியத் தருணங்கள் நம்முடைய ஆளுமை உருவாக்கத்தில் புதிய விசையாக இருந்ததை இன்று உணர்கிறேன். கலாவின் இழப்பு மீண்டும் நம்மைப்பற்றி நமக்கிடையிலான தோழமை பற்றி மீண்டும் உணர்ந்து சிந்திப்பதற்கான தருணங்களை உருவாக்கியுள்ளது.

குறிப்பாக கலா நம்மில் காட்டிய அக்கறை, அன்பு, தோழமை, உரிமை... மற்றும் இருப்பு அடையாளம் நம்பிக்கை.... யாவும் தனித்து நிற்பவை இவற்றை சொல்லில் அடக்கிவிட முடியாது. இதற்கான வார்த்தைகளும் நம்மிடம் இல்லை.

கலா துணிச்சல் மிக்கவர். தமக்கு சரி பிழை எனப்படுவதை வெளிப்படையாக தாம் விரும்புபவர்களிடம் பேசக்கூடியவர். இது இவரது இயல்பான நடத்தையாக இருந்து வந்தது. நான் இதனை அனுபவித்திருக்கிறேன். நமக்கிடையிலான உரை யாடலில் இதனை கண்டு வந்திருக்கின்றேன்.

இவர் பொய்மை, பசப்பு, பாசாங்கு நிறைந்த தோழமையை அடியோடு வெறுத்தவர். தான் நம்பும் மனிதர்களிடம் இதனை துளியளவும் விரும்பமாட்டார். அத்தருணங்களில் கோபப்படுவார்...., ஏசுவார்....., கதைக்காமல் விடுவார்.... மீண்டும் அடுத்த கணம் இதனைச் சுட்டிக்காட்டி தனது ஏமாற்றத்தை, எதிர்ப்பை தெளிவாக, கச்சிதமாக, இறுக்கமாக, வெளிப்படுத்துபவர்.

கலா தான் நம்பிக்கை வைத்தவர்கள் மீது உரிமையெடுத்துப் பழகுவார். இதற்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் இருக்க வேண்டும் என்பார். இதனை தமது நடத்தையிலும் மனப் பாங்கிலும் காட்டுவார். நாமும் அப்படியே இருக்க வேண்டும் என்பதனை அறமாக்கி விடுவார். தனக்கு பிடிக்கவில்லை என்றால் மிகவும் நேர்ப்பட பேசுவார். இதனை நாம் உணரும் வகையில் கண்டிப்புத் தொனியுடன் வெளிப்படுத்தவார்.

கலா எல்லோரையும் நம்புவார். ஆனால் தம்மளவில் எச்சரிக்கையுடனும் இருப்பார். சிலர் குறித்து தமது கவலையை ஏமாற்றத்தை பகிர்ந்து கொள்வார். ஆனால் எல்லோரிடமும் அல்ல. ஆனால் இந்த அனுபவப் பகிர்வு நமக்கு சாத்தியப் பட்டிருக்கிறது. இந்த விடயங்கள் எப்போதும் பகிரங்கப் பேசு பொருளாக வந்து விடக்கூடாது என்று தனது உடல்மொழி மூலம் தொடர்பாடல் செய்யும் ஆற்றல் கொண்டவர். இவ்வாறான தருணங்கள் பல நமக்கு கிடைத்திருக்கின்றது. என்னை பல்வேறு சந்தர்ப்பங்களில் செதுக்கி புடம் போட்டு வளர்த்து வந்துள்ளார்.

இன்று திரும்பிப் பார்க்கிறேன். பல்வேறு உணர்வுகளின், சிந்தனைகளின் மோதுகைக்கு ஆட்பட்டு நிற்கின்றேன். குடும்ப அரசியல் பற்றி, கட்சி அரசியல் பற்றி, ஆண் திமிர்த்தனம் பற்றி எனக்குள் நீண்ட விவாதங்களை நிகழ்த்தியுள்ளார். அவை சார்ந்து பல்வேறு அறம் சார் கேள்விகளை விழுமியங்களை முன்வைத்திருக்கின்றார். நமது வாழ்க்கைக்கு இவை படிப்பினையாக, பாடமாக இருக்கவேண்டும் என்பார். இந்தத் தவறுகளை நீர் விடக்கூடாது என்பதனை எச்சரிக்கையுடன் வழிநடத்தியுள்ளார்.

கலாவிடம் இருந்த துணிச்சல் என்னிடம் இல்லை. தேவர் என்னிடம் எதிர் பாரத்ததைக் கூட நான் கூறமுடியாது. அப்படிக் கூறிவிட்டால் அவர் என்னிடம் கண்ட பண்புக்கு எதிராக இயங்கும் நபராக மாறிவிடுவேன். அந்தத் தைரியம் எனக் கில்லை.

சிறிது காலம் நமக்கிடையே தூரம் வந்துவிட்டது. நான் தமிழகம் சென்றுவிட்டேன். இந்த இடைவெளி நம்மை மீளக் கண்டுபிடிக்க உதவியிருக்கும் என நம்புகின்றேன். பின்னர் கொழும்பு வந்துவிட்டேன். முன்பு போல் அதிகம் பேச முடியவில்லை ஆனால் கோபம் எதுவும் இல்லை. நாம் சற்று தூரப்பட்டது போல் உணர்ந்தோம். அவ்வப்போது சாத்தியமான தருணங்களில் பேசிக்கொண்டோம்.

ஒரு சமயம் என்னைப் பற்றி குடும்பம் பிள்ளை குறித்து அதிகம் விசாரித்துக் கொண்டார். தனக்குள் ஏற்பட்ட சுக துக்கங்களை, உளநெருக்கீடுகளை வெளிப்படுத்திக் கொண்டார். கண்கள் கலங்க குரல் கம்மிக்கொண்டிருந்தது... மீண்டும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு இன்னும் பல விடயங்களைப் பேசினார். கடந்த காலப் பொழுதுகளை நினைவுபடுத்தினார். திடீரென எழுந்த நான் உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன் என்றார். ஏன், எதற்கு என்று மட்டும் கேட்காதேயும் என்றார். நீர் வாரும் யாழ்ப்பாணம். அடிக்கடி வருகிறீர். வீட்ட வாரும் நிறையப் பேசுவோம். இங்கு கதைப்பதற்கு நல்ல மனிதர்கள் இல்லை. இனி புதிதாக ஆக்களைக் கண்டுபிடிக்கவும் முடியாது. நானும் பிள்ளை, பேத்தி என்று வேறொரு உலகம் நோக்கிப் பயணிக்கத் தொடங்கி விட்டேன். என்னப்பா வாழ்கை..... இப்படி ஏதேதோ கூறிக்கொண்டு போய்க்கொண்டிருந்தார்.

இப்பவும் அந்தத் தருணம் எனக்குள் முடிவில்லாத உரையாடலை நிகழ்த்தக் கொண்டிருக்கின்றது. எவ்வளவோ விடயங்கள் எத்தனை மனிதர்கள் இவற்றையெல்லாம் தத்துவ விசாரணையாக்கி நிகழ்த்துவதற்கான களத்தைத் திறந்து நம்மைக் கூடவே அழைத்துச் செல்கிறார். அந்த நினைவுகள், சிந்தனைகள் உணர்வுக்கும் அப்பாற்பட்ட புதிய தரிசனமாகவே உள்ளீர்க்கப்படுகிறது.

# ஆளுமை கொண்ட பெண்மணி

டொன் பொஸ்கோ – வவுனியா

மழை பெய்யும் காலமல்ல அது. மின்னாமல் முழங்காமல் பெருமழை பெய்தது. தோட்டம், துரவு, வயல் வெளியின் பயிர்களை எல்லாம் அடித்துச்சென்றது. நம்பமுடியுமா? ஆம், கலாவின் மறைவுச்செய்தி நம்பக் கூடியதாக இல்லை. அங்கு இங்கு என விசாரித்து உறுதிப்படுத்திக் கொண்டோம்.

நேற்றுப் பார்த்தது போல, நேற்றுப் பேசியது போல, நேற்றுப் பழகியது போல இருக்கின்றது. தனியாளாக இருக்கும்போது எதிர்பாராத வேளையில் நடந்தது. அவஸ்தைப்பட்டாளா? இயல்பாய் வந்ததா? கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளை விட்டு உற்றார், உறவினரை விட்டு, தோழர்களை விட்டுப் பிரிக்க சொல்லாமல் கொள்ளாமல் வந்தது மரணம். இது பெரிய அவலம்.

தோழர் தேவராஜாவை திருமணம் செய்த காலம்தொட்டு அவரின் மறைவுவரை சுமார் நாற்பது வருடங்களாக நான் அறிவேன். அவர் ஒரு சகோதரியாய், சக நடிகையாய், அரசியற் தோழியாய், எழுத்தாளராய் பல்வேறுபட்ட பாத்திரங்களை ஏற்று வாழ்ந்திருக்கின்றார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து புரட்சிகர அரசியலில் ஈடுபட்டு வந்த தோழர் தேவராஜா 1983இன் இனக் கலவரத்துடன் தீவிரமாக்கப்பட்ட அரசின் இன ஒடுக்கல் செயற்பாடுகளுக்கு எதிராக செயற்பட்டு வந்தார். அக்காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அரசு ஏற்படுத்திய பொருளாதாரத் தடை, மனித உரிமைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது. இவற்றிற்கெதிராக கட்சியால் வழிநடத்தப்பட்ட மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் செயலாளராக செயற்பட்டு வநதார். அரசுக் கெதிராக செயற்பட்டு வந்த வேளையில் தமிழர் விடுதலையை குத்தகை எடுத்த போராட்ட இயக்கத்தினரின் அடாவடித் தனத்துக்கும் முகங்கொடுக்கவேண்டியிருந்தது.

வெகுஜன இயக்கத்தின் தலைவராக செயற்பட்டு வந்த இராஜசுந்தரம் மாஸ்டர் ரெலோ இயக்த்தினரால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். கடத்தப்பட்ட இரவு தோழர் இல்லாத நேரம் வந்த இயக்கத்தினர் அவரின் துணைவி கலாவை நோக்கி, “நீ வெள்ளை புடைவை கட்டுவாய்” என எச்சரித்து சென்றனர். கலா அஞ்சவில்லை. வெள்ளைக்காரனுடன் சண்டைக்குச் சென்ற வீரபாண்டிய கட்டபொம்மனை மனைவி தடுத்ததாக கதை. ஆனால் கலா தடுக்கவில்லை. தோழர்களையும் வரவேற்று உபசரித்து நடக்க கலாவால் முடிந்தது.

இந்திய சமாதானப்படை வந்து ஆட்சி நடாத்தியபோது அடிக்கடி இடத்துக்கிடம் மக்கள் நடமாட்டத்தைத் தடுக்க ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும். அரசியல் செயற்பாடுகளுக்காக பல தடவை ஊரடங்குச் சட்ட நேரத்திலும் கூட தோழரும் நானும் சென்றிருக்கின்றோம். கலா தடுத்ததுமில்லை முகம் சுழித்ததுமில்லை.

தொண்ணூறுகளில் அவர்கள் கொழும்பில் குடியிருந்த காலம். யுத்த காலம். கைதுகளும், சிறைகளும் மலிந்த காலம். அதனால் யுத்தத்திற்கெதிராக தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் கட்சி ஐக்கிய முன்னணி அமைத்துச் செயற்பட்டது. அப்போது தீவிரமாக அரசியற் செயற்பாடுகளில் பங்கெடுத்துக்கொண்டார். மேல்மாகாண சபைத் தேர்தலில் புதிய இடதுசாரி முன்னணி வேட்பாளராக போட்டியிட்டு அமோக வாக்குகளைப் பெற்று முன்னணியின் வெற்றிக்கு பணியாற்றியுள்ளார்.

கலையுலகில் பெண்கள் நடிப்பதற்கு பின்னின்ற காலம். இன்னும் அது சீராகவில்லை. எண்பதுகளிலேயே ஒரு நடிகையாக முன்வந்துள்ளார். மேடை நாடகங்களிலும் வீடியோ தொலைக்காட்சி நாடகங்களிலும் அவர் தடம் பதித்துள்ளார். முயலார் முயல்கிறார் எனும் மேடை நாடகத்தில் அவருடன் நடிக்கும் சந்தர்ப்பம் எனக்குக்கிட்டியது. அவர் மானாக, மகள் மான் கன்றாக, மகன் முயலாக நான் பன்றியாக நடித்திருந்தோம். கலா மானாக துள்ளி வருவது இப்போதும் கண்முன் வருகின்றது. "சிங்கம் வருகிறது, எல்லோரும் சிதறி ஓடுங்கோ" என்று எல்லா மிருகங்களையும் 'அலேட்' ஆக்கி தானும் தன் கன்றுடன் மிரண்டு ஒழிப்பது எல்லாம் அலாதியானது.

நடிகையாக மாத்திரமின்றி நல்ல நாடக விமர்சகராகவும் இருந்தார். பார்த்துச் சுவைத்து நடிகர்களைப்பாராட்டும் பண்பு போற்றற்குரியது.

அதுமட்டுமின்றி ஒரு பாடகியாகவும் காண முடியும். தேசிய கலை இலக்கியப் பேரவையின் "புது வரலாறும் நாமே படைப்போம்" எனும் இசைப்பா மேடையிலும், ஒலி நாடாவிலும், ரூபவாகினி தொலைக்காட்சியிலும் வெளிவந்த போது ஒரு பாடகியாக மிளிர்கின்றார்.

அவர் ஒரு பத்திரிகையாளர். I.B.C வானொலியின் ஆரம்பகாலத்தில் இலங்கை நிருபராக செயற்பட்டார். நாட்டின் நிலவரத்தை வெளியுலகிற்கு கொண்டுவர உழைத்தார். பத்திரிகையில் செய்திகளை நறுக்கி கோப்பிடுவதிலும் பாடுபட்டுழைத்ததைக் கண்டேன்.

ஒரு சிறுகதை எழுத்தாளராகவும் அவர் வாழ்ந்துள்ளார். பல வேறு புனைப் பெயர்களில் எழுதியுள்ளார். சமூகத்தில் நிகழும் வேறுபட்ட வகையான அவலங்களை மற்றவர் நோக்காத கோணத்தில் கூர்ந்து அவதானித்து வெளிப்படுத்தியுள்ளார். ஒவ்வொரு பாத்திரத்தை படிக்கும்போதும் வாசிக்கும் ஒவ்வொருவரும் அது நானா? நானா? என எண்ணத் தோன்றும். அவரது மூன்று சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன என்பது கவனத்திற்குரியது.

இறுதியாக, என்னை ஒரு சகோதரனாக எண்ணி என் குடும்ப வாழ்விலும் பல்வேறு வழிகளில் உதவி செய்திருக்கின்றார். நான் சட்டமாணித் தேர்வு எழுதியபோது கொழும்பில் பல்வேறு மூலாதாரங்களைத் தேடித்தந்து சித்தியடைய உதவியதை மறக்கமுடியாது.

நான் மனைவியோடு கொழும்பில் குடியேறியபோது பாஸ் நடைமுறை, பொலிஸ் பதிவு என நெருக்கடிகள் இருந்தன. ஒவ்வொரு தமிழரையும் புலியெனப் பார்த்த

காலம். வீட்டுக்கு சிபாரிசு செய்ய பயந்த காலம். அக்காலத்தில் வீடு தேடித்தந்த தோடு மாத்திரமின்றி தளபாடங்களையும் தந்துதவினார். என் மனைவியோடு நெருக்கமான உறவு வைத்திருந்தார். குடும்ப விவகாரங்களை பரஸ்பரம் உரையாடிக்கொள்வார்கள். பொது நிகழ்வுகளுக்கும் ஒன்றாகச் செல்வோம்.

இவ்வாறு பல்வேறுபட்ட ஆளுமைகொண்ட ஒரு பெண்மணியைக் காண்பது அரிது. அவர் உரிய காலத்தின் முன் எம்மை விட்டு மறைந்தமை ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவர் ஈடுபட்டுழைத்த துறைகளில் பணியாற்றும்போது அவரின் நினைவுகள் மறையாது நிலைத்து நிற்கும்.

# இறப்பின் வலிகள்

கா. செல்வம் கதிர்காமநாதன்
கலைமதி, புத்தூர்

இறப்பு என்பது இயற்கையின் நியதி. ஆனால் காலத்திற்கு முந்திய இறப்பு வேதனையும் வலிகளும் கொண்டவை. அதிலும் பொது நலனிலும் பொது வாழ்விலும் இருந்து வரும் ஒரு குடும்பத்தில் காலத்திற்கு முந்திய இறப்பு வருவது குடும்பத்தினரையும் உறவுகளையும் உலுக்கிக் கொள்வதைக் காண்கின்றோம். அத்தகைய ஒன்றையே கலாலக்ஷ்மியின் இறப்பிலும் கண்டோம். தோழர் தேவராஜாவிற்கு ஏற்ற மனைவியாக அவர் வாழ்ந்து வந்தவர். இரண்டு பிள்ளைகளின் தாயாகப் பாச அரவணைப்புடன் அவர்களை ஆளாக்குவதில் தன் பங்கினை வழங்கிவந்தவர். அதே வேளை பொதுநல வாழ்வில் தனக்குரிய பங்கினை ஆற்றியவர்.

அவரது குடும்பம் மிக்க சாதாரண நிலையிலிருந்து கணவரின் சட்டத்தரணித் தொழிலால் ஓரளவு வசதியான நிலைக்கு வந்த போதும் மேல்தட்டு நிலைக்கு மாறாது உழைக்கும் மக்களோடும் அவர்களது பிரச்சினைகளோடும் தம்மைப் பிணைத்துக கொண்ட கொள்கை நடைமுறைகளுடன் செயல்படும் குடும்பமாக இருந்து வந்ததில் கலாலக்ஷ்மியின் பாத்திரம் முக்கியமானதாகும்.

எமது கிராமம் முற்றிலும் உழைக்கும் மக்களைக் கொண்ட கிராமம். அங்கு பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. சுமார் 40 ஆண்டுகாலத்தில் அரசியல் நிலைப்பாட்டினாலும் சட்டத் தொழிலாலும் தோழர் தேவராஜா எமது மக்களுக்கு நன்கு அறிமுமானவரும் மக்கள் நலன்கள் மீது அக்கறை கொண்டவருமாவார். அத்தகைய நிலைக்கு அவரது துணைவியார் கலாலக்ஷ்மியும் முழு ஒத்துழைப்பையும் வழங்கிவந்தார். அத்தகைய குடும்ப ஒத்துழைப்பு இன்றி இரு தளங்களினும் தேவராஜா அவர்களால் செயற்பட்டிருக்கமுடியாது.

அத்தகைய செயற்பாடுகளின் போது தோழர் தேவராஜா எதிர்கொண்ட நெருக்கடிகள் உயிராபத்துக்கள் கொண்டவையாக இருந்த சந்தர்ப்பங்களில் அவற்றுக்கு முகம் கொடுத்து நிற்பதில் உறுதியாக இருந்து வந்த சந்தர்ப்பங்களை நாமறிவோம்.

உழைக்கும் மக்களின் பக்கத்தில் நிற்பதையும் அநீதிகளைத் தட்டிக்கேட்டு அம் மக்களுக்கு பக்கபலமாக நிற்பதை வாழ்வியல் கடமையாகக் கொண்டவர் கலாலக்ஷ்மி. எமது கிராமத்தின் மக்கள் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்து வரும் மயானத்தை அகற்றும் போராட்டத்திற்கு முழு ஆதரவை வழங்கி அங்கு இடம்பெற்ற சத்தியாகிரகப் போராட்டத்தில் தனது நோயுற்ற உடல் நிலையையும் பாராது கலந்து கொண்டவர் கலா அவர்கள்.

எத்தகைய உறுதி படைத்த மனிதரையும் அவரது இணைபிரியா வாழ்க்கைத்துணை மீளா இழப்பிற்கு உள்ளாகும் போது அதன் வலிகள் வேதனைகளைத் தாங்குவது கடினத்தின்மேல் கடினமாகும். அத்தகைய பாதிப்பின் பிரதிபலிப்புகளைத் தோழர் தேவராஜாவின் கடந்த ஒரு வருட அசைவுகளில் காணமுடிந்தது. எனவே அவரும் பிள்ளைகளும் அவ் இழப்பினை பலமான நினைவுகளாக்கி மேலும் முன்னோக்கிச் செல்வதில் திடம் பெறவேண்டும் என ஓராண்டு நினைவின்போது உறுதிகொள்ளல் வேண்டும். எம் அனைவருடனும் அவரது நினைவும் என்றும் வாழும்.

# இனிய கலாமயிலே

வள்ளியம்மை சுப்பிரமணியம்
சத்தியமனை, சுழிபுரம்

காலையடி மண்ணிலே மாணிக்க வாசகர் தந்தையாய்
தாயாகி மிளிர்ந்த தங்கம்மா தம்பதியின்
சாலச் சிறந்த அக்காமார் நால்வருக்கும்
மேலை நாடுகளில் வாழும் தம்பிமார் இருவருக்கும்
பேணும் அருமைச் சகோதரியாய் பெருமைத் தாய்நாட்டில்
'கலா' என்ற பெயருடன் கார்த்திகைத் தீபமாய்
காணும் உறவுகள், தோழர்கள், நட்புகள்
வாழுங் காலத்தில் வலம்வந்த சுடரொளியே.....!

'தேவர்' என்று தோழர்கள் தேடி மதிக்கின்ற
நேசக் கரம்நீட்டும் சட்டத் தரணியாய்
பாசத்துடன் பழகும் பண்பாளன். பதில் நீதவான்
பேசும் மார்க்ஸிஸ கொள்கைப் பிடிப்பாளன்
பாசி படர்ந்த பழமை அழுக்குகளை
பூசி மழுப்பாமல், முழுமையாய் அகற்றிட
'ஆசு ' கவியான நாடக நெறியாளனை, முன்னோடியை.
வாழ்க்கைத் துணைவனாய் வரித்திட்ட மங்கைநீ.....!

ஜனமகன்' என்ற மூத்த குழந்தையுடன்
சனங்கள் மதிக்கும் ஆசிரியை அபிலாஷாவின்
அன்னையாய், அன்பின் பிறப்பிடமாய், அரவணைப்பில்
பண்பின் சிகரமாய், பட்டொளி வீசி
துன்பமே அணுகாமல் தூய அன்பினால்.
இன்பமாய் இல்லறத்தை இனிதே நடாத்த
தன்தொழிலான ஆசிரியப் பணியைத் துறந்து
தாயாக வாழ்ந்திட்ட தரமான அன்னைநீ.....!

சமூகத்தை, மறுமலர்ச்சி மன்றத்தை மதித்து
சுமுகமாக ஒத்து வழிநடந்து, சுபீட்சமான
விழுமிய விருந்தோம்பல், வீழ்ந்தோரில் அனுதாபம்
பழகிய மனிதர்களின் பக்குவத் தொடர்பாடல்
செழுமையான பேரக் குஞ்சுகளின் பாசப்பிடிப்பு
பழுத்த பாட்டிபோல் 'அம்மம்மா' அப்பம்மா'
அழகிய இல்லமதை அமைத்து அமைதியாய்.
இன்னுயிர் நீத்த இனிய கலாமயிலே

தேற்றம்

நட்பு வட்டத்தை அதன்நல உரிமைகளை
செப்பும் செயல்வடிவில் செய்து பொட்புடனே
மானிட நேயத்தை மனதில் பொதிந்த....
மாதரசி கலாவென்று செப்பு.

# இறப்பவர்கள் ஒழியார்

சோ. பத்மநாதன்

மகாபாரதத்தில் வரும் ஓர் உபகதை: நச்சுப் பொய்கைச் சருக்கம். பாண்டவர் வனவாசம் செய்தகாலம். ஒரு நாள் ஐவரும் காட்டில் நெடுநேரம் அலைந்து, தாகத்தால் தவித்துப் போனார்கள். எங்காவது நீர்நிலை இருக்கிறதா என்று ஒரு மரத்தில் ஏறிநின்று பார்த்தபொழுது, தூரத்தில் ஒரு குளம் தெரிந்தது. "போய் நீர் கொண்டுவா!" என்று இளையவனான சகாதேவனை ஏவினான் தருமன். அவன் குளத்துக்குப் போய், நீர் அருந்த முயன்றான். மரத்திலிருந்து ஓர் அசரீரி பேசியது: "நில், நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு நீரைப் பருகு!" என்றது. தாகத்தால் துவண்டுபோன சகாதேவன், குரலுக்குச் செவிசாய்க்காமல் நீரைப் பருகினான். சிறிது நேரத்தில் விழுந்து இறந்தான்.

சகாதேவனைக் காணோமே என்று நகுலனை அனுப்பினான் தருமன். நகுலன் போய்ச் சேர்ந்ததும் அசரீரி அவனை எச்சரித்தது. அவனும் அதற்குச் செவிசாய்க்காது நீரைப் பருகி இறந்துபோனான். தம்பியர் இருவரும் மீளாதது கண்டு கலவரமைந்த தருமன் அர்ச்சுனனை ஏவினான். அவனும் பொய்கையை அடைந்தான். அசரீரி அவனை எச்சரித்தது. அதைப் பொருட்படுத்தாத அர்ச்சுனன் நீரைப் பருகி உயிர் நீத்தான். தம்பியர் மூவருக்கும் என்ன நடந்ததோ என்று அஞ்சிய தருமன் பீமனை அனுப்பினான். அவன் பொய்கையைச் சென்றடைந்தான். தம்பியர் மூவர் மாண்டு கிடப்பது கண்டு கலங்கினான். முன்போலவே, தன்கேள்விகளுக்கு விடையளிக்குமாறு அசரீரி கட்டளையிட்டது. தாகம் வாட்டுகின்றது. தம்பியர் சாவு நெஞ்சை வருத்துகிறது. .எதற்கும் செவிசாய்க்காது பீமன் பொய்கை நீரைக் குடித்து செத்து வீழ்ந்தான்.

நான்கு தம்பியருக்கும் என்ன நேர்ந்தது என்று அறிய முடியாத நிலையில், தருமன் தேடிப்போய், நச்சுப் பொய்கையை அடைந்தான். தம்பியர் நால்வரும் மாண்டு கிடப்பது கண்டு மனம் கலங்கினான். நீருள் இறங்கப்போன அவனை, அசரீரி தடுத்தது. "என் கேள்விகளுக்கு விடையளித்த பிறகு, நீ நீர் அருந்தலாம்!" என்றது.

தருமன் முதலில் விடையளிக்க இசைந்தான். அசரீரியாக நின்ற யக்ஷன் வினாக்களைத் தொடுத்தான். தருமன் விடையளிக்கலானான்:

"பூமியை விடப்பெரியவர் யார்?"

"தாய்"

"வானத்தைவிட உயர்ந்தவர் யார்?"

"தந்தை"

"அந்நிய தேசத்தில் ஒருவற்கு உதவுவது எது?"

"கல்வி"

இந்தவிதமாக வினாவும் விடையுமாகத் தொடர்ந்தன.

ஈற்றில் யக்ஷன் கேட்ட கேள்விதான் முக்கியமானது.

"உலகத்திலே பெரிய அதிசயம் எது?"

உலக அதிசயங்கள் ஏழனுள் எதையும் சொல்லவில்லை தருமன்.

"அகன்யாநி பூதானி கச்சந்திஹா யமாலயம்
சேஷா ஸ்தாவரம் இச்சந்தி
கிம் ஆச்சர்யம் இதா பரம்?"

"ஒவ்வொரு நாளும் எண்ணிறந்த உயிர்கள் யமனுலகு போவதைக் கண்டும், எஞ்சியிருப்போர் நிலையாக வாழ ஆசைப்படுகிறார்களே, இதைவிடப் பெரிய அதிசயம் என்ன?"

தருமன் அளித்த விடைகளால் மனமகிழ்ந்த யக்ஷன் சொன்னான். "உனக்கு ஒரு வரம் தருகிறேன். உன் தம்பியர் நால்வருள் ஒருவனை எழுப்பித் தருகிறேன். நீ யார் பிழைக்கவேண்டும் என்று சொல்!"

எந்தத் தயக்கமுமின்றித் தருமன் சொன்னான்: "நான் நகுலனைத் தேர்தெடுக்கிறேன்!"

"வீராதி வீரனாகிய வீமனையோ, இணையில்லாத வில்லாளியாகிய விஜயனையோ நீ தெரிவு செய்யாததேன்?"

"என் தந்தைக்கு மனைவியர் இருவர். மூத்தவளாகிய குந்திதேவிக்கு நான் இருக்கிறேன். என் சிற்றன்னையின் பிள்ளைகளுள் ஒருவன் வாழ வேண்டியதே நீதி. எனவேதான் நகுலனைத் தெரிவு செய்தேன்!"

கதையின் திருப்பம் இந்தக் கட்டத்தில் வருகிறது. யக்ஷன் சொல்கிறான்:

"இத்தகைய தர்மாத்மாவாகிய உனக்குத் துன்பம் நேரக் கூடாது. ஆகவே உன் தம்பியர் நால்வரையும் எழுப்பித் தருகிறேன்!" என்று சொல்லி அறக்கடவுள் வெளிப்பட்டுக் காட்சி தந்தான் என்று இவ்வுபகதையை முடிக்கிறார் வியாஸர்.

கடோபநிடத்தில் வரும் நசிகேசன் கதை ஆத்மா பற்றியும், மரணத்தின் பின் அதற்கு என்ன நேர்கிறது என்பது பற்றியும் சலியாத தேடலில் ஈடுபடும் ஒரு சிறுவனைப் பற்றி சுவாரஸியமாகச் சொல்கிறது.

வாஜாஸ்ரவஸ் என்பவர் ஆசையால் அலைப்புண்ணும் ஓர் இல்வாழ்வார். உலகியல் நன்மைகளை வேண்டி அவர் ஓர் யாகம் செய்கிறார். யாகத்தின் போது பிராமணர்களுக்குத் தானம் கொடுக்கவேண்டும். ஆனால் அவரிடம் நலிந்த மலட்டுப் பசுக்களைவிட ஏதுமில்லை. தந்தையின் அருகிலிருந்து கிரியைகளைப் பார்த்துக் கொண்டிருந்த நஸிகேதன் கேட்டான்: "அப்பா, இந்த யாகத்தில் என்னை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?" அவனுடைய கேள்வியைப் பொருட்படுத்தாது, வாஜஸ்ரவஸ் தொடர்ந்து கிரியைகளைச் செய்துகொண்டிருந்தார். சிறுவனோ விடுவதாயில்லை. திரும்பத் திரும்ப அந்தக் கேள்வியைக் கேட்டு நச்சரித்துக் கொண்டிருந்தான். பொறுமையிழந்த தந்தை, கோப மிகுதியால், "உன்னை யமனுக்குக் கொடுக்கிறேன். போய்ச் சேர்!" என்றார்.

யாகச் சடங்குளை ஆற்றுபவன் சொல்வது தப்பாது பலிக்கும். நஸிகேதன் யமாலயம் போனான். யமன் அவ்வேளை அங்கில்லை. சிறுவன் மூன்றுநாள் வாசலில் காத்திருந்தான். மூன்று நாள் கழித்து, திரும்பிய யமன், தன்வாசலில், ஒரு பிராமணச் சிறுவன் பட்டினியால் வாடிப்போய் இருப்பது கண்டு கவலையடைந்தான். ஒரு விருந்தின்னுக்கு செய்ய வேண்டிய உபசாரங்களைச் செய்தான். நடந்த தவறுக்கு ஈடாக மூன்று வரங்கள் தரமுன்வந்தான்.

"என் தந்தை கோபமாய் இருக்கிறார். அவர் சினம் தணிந்து என்னை வரவேற்க வேண்டும்!"

"மரணத்தில் வாயிலிருந்து மீளும் உன்னை உன் தந்தை மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்பார்! அடுத்த வரத்தைக் கேள்!"

"வானுலகில் அச்சமில்லை, பசியில்லை, தாகமில்லை, மூப்பில்லை என கேள்விப்பட்டேன். அவ்வுலகை நான் அறிய விரும்புகிறேன்!"

மனம் மகிழ்ந்த யமன், வானுலகை அடைவதற்காகச் செய்ய வேண்டிய யாகம் பற்றிய ரகசியத்தை நஸிகேதனுக்கு உபதேசித்ததுமன்றி, "இந்த யாகம் உன்பேரால் இனி அறியப்படும்!" என்று வரமளித்தான்.

மூன்றாவது வரத்தைக் கேள் என்றான் யமன்.

"ஒருவன் இறந்த பின்னும் அவன் உயிர் வாழ்கிறான் என்கின்றனர் சிலர். வேறு சிலர் மரணத்தின் பின் வாழ்வில்லை என்கின்றனர். இது பற்றிய உண்மையை எனக்கு அருளவேண்டும்!"

விடையளிப்பதைத் தவிர்த்தான் யமன். "இளைஞனே வேறு ஒரு வரம் கேள்! இந்த ரகசியம் தேவர்கள்கூட அறியாதது. இதை உன்னால் புரிந்து கொள்ளமுடியாது!"

"பிறப்பு, இறப்பு இரண்டுடனும் தொடர்புள்ள உங்களால் புரிந்துகொள்ளமுடியாது"

"நூறாண்டு வாழக்கேள், மக்கட்செல்வத்தைக் கேள், மாடு, குதிரை, யானைகளைக் கேள், நிலபுலன் கேள், பொன்னை மணியைக் கேள்! அழகிகளைக் கேள்! ஆனால் மரணத்தின்பின் நடப்பது என்னென்று மட்டும் கேளாதே!"

"அழித்தற்கடவுளாகிய நீயே நிலையிலாதவற்றைக் காட்டி என்னைச் சலனப்பட வைக்கலாமா? என் புலன்களைக் கலைக்கும் இவை எனக்கு வேண்டியதில்லை. மூப்பு, சாக்காடு ஆகியவற்றை அறியாத உன்னைத் தரிசித்தபின், அந்த ஞானத்தையன்றி வேறேதும் வேண்டேன்!" என்றான் நசிகேதன்.

"தான் பெறக்கூடிய அனைத்தையும் பணயம் வைத்து மேலான ஞானத்தைத் தேடும் இவனல்லவா சீடன்!' என்று வியந்த யமன் நகிகேதனுக்கு அவன் கோரிய ஞானத்தை உபதேசித்தான்.

ஒரு தாய்க்கு ஒரேமகன். சோலையில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் அங்கு ஊர்ந்து வந்த பாம்பை விளையாட்டுப் பொருளென்று கருதி, அதன் தலையையும் வாலையும் தடவிப் பார்த்தான். பாம்பு சிறுவனைத் தீண்ட அவன் உயிர் பிரிந்தது. தாய் புத்த பெருமானிடம் வந்தாள்.

"பெற்ற வயிறு துடிக்குதையா– ஒரு
பிள்ளையும் வேறெனக்கில்லை ஐயா!
உற்ற உறவினர் இல்லைஐயா– என்மீது
உள்ளம் இரங்கிட வேணுமையா!"

என்று இரந்தான். தன் பிள்ளையின் உயிரை மீட்டுத் தரும்படி போதி மாதவனைக் கோரினாள்.

“தாயே, உன் மனக்கவலையைப் போக்க ஒரு மருந்தளிப்பேன். சாவே நிகழாத வீட்டிலிருந்து ஒரு நாழி கடுகு பெற்றுவா. உன் மகனை எழுப்பித் தருவேன்!” என்றார் புத்தர்.

தாய் பல வீடுகளின் வாசற்படிகளில் ஏறி இறங்கினாள்.

அவளுக்கிரங்கிக் கடுகு தரப்பலர் முன்வந்த போதும், மரணம் சம்பவிக்காத வீடென்று ஏதுமில்லை என உணர்ந்த அந்தத் தாய்,

“ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்
　　அறியாத மனையேதும் இல்லை யில்லை
வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு
　　மாற்றரிய விதியிது வென் றுணர்ந்து கோண்டேன்!”
என்ற தெளிவு பெற்றவளாய்ப் புத்தரிடம் வந்தாள்.

மகாகவி ஷேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீசர் நாடகத்தில் ஒரு கட்டம். சீஸர் அன்று காலை செனற் கூட்டத்துக்குப் புறப்படுகிறார். சீசரின் மனைவி கல்பூர்ணியா, தான் முதல் நாள் இரவு தீய கனவு கண்டதாகவும், அவருக்கு ஏதோ பேராபத்து ஏற்படப் போவதாகத் தான் அஞ்சுவதாக அவரைக் கூட்டத்துக்குப் போகவேண்டாம் என்று தடுக்கிறாள். சீசர் சொல்வான்:

“அஞ்சினர்க்குத் சத மரணம்; அஞ்சாத நெஞ்சத்(து)
ஆடவருகொரு மரணம் அவனிமிசை பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்கும்
துன்மதி மூடரைக் கண்டால் புன்னகை செய்பவன்யான்!”

அஞ்சுவோருக்கு நூறு மரணம். அஞ்சாத ஆண்மையாளருக்கு ஒரு மரணந்தான். சாவு வருமென்று அறிந்தும், அதற்காகப் பயந்து நடுங்குபவரைக் காண எனக்குச் சிரிப்பு வருகிறது எனகிறான் சீசர்.

ஷேக்ஸ்பியர் காலத்தில் வாழ்ந்த மீபௌதிகக் கவிதை இயக்க முன்னோடி ஜோண்டன். அவர் மரணத்தை ஒரு புதுமையான கோணத்தில் அணுகுகிறார். “எல்லோரும் நீ பயங்கரமானவன், சக்திமிக்கவன் என்று அஞ்சுவதால் உனக்குத் தலை வீங்கிவிட்டது. உண்மையில் உன்னால் வீழ்த்தப்படுவோர் சாவதில்லை; உன்னால் என்னையும் கொல்லமுடியாது!

சாவு என்பது உறக்கத்தைப் போன்றது. உறங்கும்போது நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறோம்! மரணத்தினால் அதைவிட அதிக மகிழ்ச்சியல்லவா ஏற்படவேண்டும்!

நீ சர்வ வல்லமை படைத்தவன் என்பது பொய்! நீ விதி, போரை நடத்தும் மன்னர்கள், வாழ்க்கையை வெறுப்போர், – எல்லோருக்கும் அடிமை– கருவி’.

மரணம் என்பது சிறு தூக்கமே. அதுமுடிந்தால் நாம் நித்திய வாழ்வில் நுழைவோம்! எமக்குச் சாவில்லை. நீ தான் செத்துப்போவாய்” என்று வாதிடுகிறார் கவிஞர்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை!" என்னும் பெருமைதான் எஞ்சி நிற்பது என்ற வள்ளுவர் குரல் "இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென்று என்றெண்ணவோ திடமில்லையே!" என்ற தாயுமானார் கூற்றுவரை எதிரொலிக்கக் கேட்கிறோம்.

மரணம் பற்றிய இந்த உசாவல் நம்பிக்கையீனமாக வாழ்க்கை நிராகரிப்பாக முடியத் தேவையில்லை என்பதற்கு நல்லதோர் உதாரணத்தைத் தந்து நிறைவு செய்யலாம்.

காங்கேயன்துறையிலிருந்து கீரிமலை நோக்கி ஒருவர் நடந்துகொண்டிருக்கிறார். எதிரே அழகான– சூடிகையான– எட்டுவயதுச்சிறுமி வருகிறாள், "தங்கச்சி, உன் பேரென்ன? உன் தாய் தந்தையர் யாவர்? உனக்குச் சகோதரர்கள் உளரா?" என்று இம்மனிதர் கேட்க, அவள் சொல்வாள்: "என்பேர் சுந்தரி. எனக்குப் பெற்றோர் இருக்கின்றனர். நாங்கள்– சகோதரர் ஐவர். அண்ணர் சம்பந்தர் கொழும்பில் இருக்கிறார். அக்கா சிவகாமி றங்கூனில் உள்ளார். எனக்கு இளையவள் கற்பகம் அண்மையில் இறைவன் திருவடிவை அடைந்துவிட்டாள். கடைக்குட்டி சிதம்பரநாதன் தவழும் குழந்தை. "எங்களுக்கு நீங்கள் ஐவீரும் ஐந்து பிள்ளைகள்!" என்று ஆச்சி– அப்பு சொல்வார்கள்!"

"ஐவரிலே ஒருத்தி இறைவனடி சேர்ந்தால், எஞ்சியிருப்போர் நான்குபேர்தானே? சுந்தரி! ஏன் ஐவர் என்று சொல்கிறாய்?"

"ஐயா, நீங்கள் சொல்வது விந்தையிலும் விந்தை! அண்ணர் கொழும்புக்குப் போனால், நாம் மூவர் என்பீரா? அக்கா றங்கூன் போனதால், நாம் இருவர் என்பீர்களா?"

"சுந்தரி, நான் சொல்வதைக்கேள். கொழும்புக்குச் சென்ற அண்ணர் திரும்பிவருவார். றங்கூன்போன அக்கா இங்கு மீண்டுவருவார். உன் தங்கை கற்பகம் திரும்பிவர மாட்டாளே. ஆதலினால், நீங்கள் நால்வர் என்பதே சரி பிள்ளை!"

"கொழும்புக்குச் சென்ற அண்ணர் திரும்பி வந்தால்தான் உளரோ? அக்கை சிவகாமி இங்கு வந்தால்தான் உளரோ?" கொழும்பில் உள்ளவர் வராவிட்டால் நான் அங்கு செல்வேன். அக்கை வராவிட்டால் நான் றங்கூன் செல்வேன். அதுபோலவே தங்கை கற்பகம் இங்கு வராவிட்டால், நான் அங்கு செல்வேன். ஆக, நாம் ஐவோர் ஐயம் வேண்டா!"

எட்டு வயதுப் பிள்ளைக்கிருந்த அறிவைக் கண்டு வியந்த பெரியவருக்கு ஒரு தெளிவு உண்டாகிறது:

"சாவுக்கும் இறப்புக்கும் பேதமின்று கண்டேன்
சாவனவெல்லாமொழிந்து சூனியமாய்ப் போகும்
சாவனவெல்லாம் ஒழியும் இறப்பவர்கள் ஒழியார்
'இற' என்ற சொல்லுக்குக் 'கட' என்ற பொருளே!

இந்தத் தெளிவு நமக்கும் உண்டானால், இறப்பு தவிர்க்க முடியாதது என்பதை ஏற்று ஆறுதல் அடையலாம்.

ஆங்கில மகாகவி wordsworth எழுதிய we are seven என்ற கவிதையைத் தழுவி இதை எழுதியவர் இலங்கைப் பல்கலைக்கழகக் கலாசாலையிலே தமிழ்ப் பேராசிரியாக இருந்தவரும் சி. வை. தாமோதரம்பிள்ளையின் மைந்தருமாகிய வண. பிரான்ஸிஸ் கிங்ஸ்பெரி அவர்கள்.

# நினைவுகளாக மீண்டெழும் சந்திப்புகள்

ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
முன்னைனாள் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச்சங்கம்

1977 களில் ஒரு நாள் மாதகல் வ.கந்தசாமியுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது தேவராசாவும் கலாவும் அவ்விடத்திற்கு வந்த போது மாதகல் அவர்களை அரவணைத்து இவர்களும் எங்களுடைய பிள்ளைகள். இவர்களு டனும் நீர் உறவினை வைக்க வேண்டும் எனக் கூறினார். அன்று ஆரம்பித்த நமக்கிடையிலான உறவு சகோதர உணர்வுடன் வளர ஆரம்பித்தது. வீட்டிலும், நிகழ்வுகளிலும் ஒன்றுகூடி சந்திப்போம். நான் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்களும் சில காலங்களின் பின்பு கொழும்புக்கு வந்து விட்டனர்.

கொழும்புக்கு வந்த பின்னர் நிகழ்வுகளில் மீண்டும் அடிக்கடி சந்திப்போம். கலா நாடக நிகழ்வுகள், நாடக மேடைப் பாடல்கள் போன்ற நிகழ்வுகளில் ஆர்வமாக பங்குபற்றினார். ஒரு சமயம் ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை "வீடு" என்று ஒரு நாடகத்தை ரூபவாகினி தொலைக்காட்சியில் ஒலிபரப்ப, பெண்ணாக நடிக்க ஒருவர் தேவையென என்னிடம் கூறினார். நான் கலாவோடு கதைத்த போது அவரின் பிள்ளைகளும் அதிகம் ஆர்வப்பட்டதனால் நாடகத்தில் பங்குபற்றினார்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலை பெண்கள் பாதிப்பு அதிகம். ஒரு பெண் என்பவள் பெண்ணாக இருக்க வேண்டும். அவள் தன் பெண் தன்மையை பேணியவாறு அவரவருக்குரிய சகல கௌரவங்களோடும் இருக்க வேண்டும். பெண்ணை அடிமையாய், உரிமையாய், கீழ்ப்பட்டவளாய் செய்யும் சமூக அமைப்பை நாம் உடைக்க வேண்டும் என்று வீதிப் போராட்டங்களிலும் இறங்கினார். பெண் விடுதலை, தேசிய விடுதலை, சாதியவிடுதலை போன்ற விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவான மனநிலையைக் கொண்டவராகத் திகழ்ந்தார். அவரது மன உறுதியும் செயற்பாடுகளும் ஏனையவர்களுக்கு வழிகாட்டுவதாக இருந்தது எனலாம். ஒரு ஆசிரியராக இருந்தவர் தமது பிள்ளைச் செல்வங்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்பதற்காக தமது பதவியை விட்டு நீங்கினார்.

எனது பலனோ பலாபலனோ தெரியவில்லை என் தனிப்பட்ட வாழ்க்கையிலும் கலா கவனம் செலுத்தத் தொடங்கினார். எனக்குத் திருமணம் நடைபெற பல முயற்சிகளிலும் ஈடுபட்டார். அது நிறைவேறும் தருணத்தில் பல உதவிகளைச் செய்தார். அண்ணை நீங்கள் அலையக் கூடாது எனப் பல முறை புத்திமதிகளையும் கூறுவார்.

யாராக இருந்தாலும் தமது வீட்டிற்கு வருபவர்களை அன்பாக உபசரித்து அனுப்புவதில் இவருக்கு யாரும் நிகராக முடியாது. ஒருநாள் வீட்டிற்குச் சென்றபோது இன்றைக்கு மத்தியானச் சாப்பாடு மரவள்ளிக் கிழங்கு அவியலும், சம்பலும் என்று சந்தோசமாகப் பரிமாறினார். நாமும் சந்தோசமாக உண்டு மகிழ்ந்தோம்.

சாதாரண பாமர மக்களோடு சேர்ந்து பழகி சாதாரண வாழ்க்கையை விரும்புபவர். மீண்டும் யாழ் சென்று தமது சொந்த ஊரில் தமது செயற்பாடுகளைத் தொடர்ந்தார். இளம்வயதில் எம்மை விட்டு பிரிந்துள்ளார். கலாவுடனான நினைவுகள் ஒரு சகோதரியை இழந்த உணர்வைத் தருகின்றது. மீண்டும் நினைவுகள் மீண்டெழுகின்றன.

# பெண் ஆளுமை

ஹம்சகௌரி சிவஜோதி

கலா அக்கா ஒரு பெண்ணியம் பேசாத பெண்ணிலைவாதி, புகழ் விரும்பாத ஒரு அரசியல்வாதி. நேர்மையும் கருணையும் அன்பும் நிறைந்தவளாக மிக எளிமையான உடையில் எப்பொழுதும் சமூக சிந்தனையுடன் சமூகத்தை பார்க்கும் முற்போக்கான சிந்தனை உள்ள பெண் இவள். எனக்கு இவரை 17 வயதில் இருந்து தெரிந்தாலும் எனது கணவனால்தான் இவருடன் நெருங்கிப் பழகக்கூடியதாக இருந்தது. வயது வித்தியாசமின்றி கலா அக்கா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவர். எனது கணவனை தனது பிள்ளைபோல் என்பதை அடிக்கடி சொல்லுவார். என்றாலும் நான் நெருங்கிப் பழகியது இவருடன் கடந்த பத்து வருடங்களாகும் (2009–2019).

எனது அம்மாவின் வயதை ஒத்த இவர் எப்போதும் வயது வித்தியாசம் பாராமல் நண்பர்களைப்போல் மிகவும் அன்புடனும் நண்பர்களுடன் கதைப்பது போலவே இடைவெளி இல்லாமல் அனைத்து சமூகம் சார்ந்த பிரச்சினைகளையும் கதைப்பார். தெகிவளையில் இவரின் வீடும் எனது வீடும் அருகருகே இருந்தபடியால் நாளாந்தம் பின்னேரங்களில் இவருடன் ஜெயசிங்க மைதானத்திற்கு இவரின் பேத்தியான சாதனா வையும் அழைத்துக்கொண்டு செல்வது வழக்கம்.

தெகிவளையில் நாம் இருக்கும் இடத்தில் உள்ள ஒழுங்கையை அவரே முழுமையாக கூட்டி சுத்தமாக வைத்திருப்பார். எந்தவித ஏற்றத்தாழ்வுகளையும் பார்க்கமாட்டார். சாதாரணமான பருத்தி சாரியை அதிகமாக அணிய விரும்பும் இவர் அதனை நேர்த்தியாகவும் கட்டியிருப்பார். இவரின் உறவுகள் அனைவரும் மேல்தட்டு வர்க்கமாக இருந்தாலும் இவர் தன்னை ஒரு சாதாரண பெண்ணாகவும் முற்போக்கு சிந்தனை உள்ளவராகவும் வெளிப்படுத்திக் கொள்வார்.

இவரின் பலமும் பலவீனமும் உள்ளொன்று வைத்து வெளியொன்று பேசத் தெரியாத குணம். நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்ட பெண். பலர் தாம் செய்யும் உதவிகளை வெளியில் சொல்வார்கள். இவர் பலருக்கு தான் செய்த உதவிகள் பற்றி யாருடனும் சொல்லும் பழக்கம் இல்லாதவர். இன்று சமூகசேவையாளர்களாகவும்; சமூக சிந்தனையாளர்களாகவும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள முனையும் இக்காலத்தில் சத்தமில்லாமல் பலருக்கு பல உதவிகளை செய்துள்ளார்.

பெண் ஆளுமைகள் தொடர்பான ஆவணப்படுத்தலுக்காக இவரிடம் தகவல்கள் கேட்ட போதும் இவர் தனது தகவலை தரவில்லை. அபியின் ஊடாகவே தகவல்களை பெற்றுக்கொண்டேன். அரசியல், சிறுகதை, கவிதை எழுதுதல், நாடகம் நடித்தல், பாடல்கள் பாடுவதென பன்முகத் திறமைகளைக் கொண்டவராகவும் இருந்தார். தனது ஆளுமை தொடர்பில் யாருடனும் வெளிப்படையாக கதைப்பதே இல்லை. இவர் ஒரு பட்டதாரி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இறப்பதற்கு இரண்டு வாரத்திற்கு முன் நானும் இவரின் மகளும் பேத்தியுமாக கசூரினா கடற்கரைக்குச் சென்று வந்தோம். என்னால் மறக்க முடியாத நாள் என்றால் அதுதான். ஒரு மணித்தியாலயம் வரை அங்கு இருந்து புகைப்படங்கள் எடுத்து கதைத்து ஆறுதலாக இருந்து வந்தோம். அங்கு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எனது கைப்பேசியிலேயே எடுக்கப்பட்டவை. அவை அனைத்தையும் கலா அக்காவே எடுத்தார். அனைத்தும் அழகாக பதிவு செய்யப்பட்டுள்ளன. சில புகைப் படங்களை எடுக்கும் போது எவ்வாறு நின்று எடுத்தால் காட்சிகள் நன்றாக இருக்கும் என்று ஆலோசனை தெரிவித்து அவர் அப் புகைப்படங்களை எடுத்தார்.

பின் மீண்டும் அவரின் வீட்டுக்கு ஒரு கிழமைக்கு பின்னர் சாதனாவுக்கு காயம் என்று கேள்விப்பட்டு நானும் எனது கணவரும் போனோம். அப்போது திரு. தேவராஜா அவர்களும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பி இருந்தார். நாம் சென்ற அன்று திரு. தேவராஜா அவர்கள் கொழும்புக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்தார். வழமையாக எப்போதும் இன்முகத்துடனேயே இருக்கும் கலா அக்கா அன்று கொஞ்சம் சோகமாகவே காணப்பட்டார். திரு. தேவராஜா அவர்களின் சுகவீனம் காரணமாக.

மீண்டும் ஒரு கிழமையால் கொழும்பில் உள்ள எனது அண்ணி தொலைபேசியின் ஊடாக அபியின் அம்மா இறந்து விட்டதாகத் தெரிவித்தார். இது என்னால் நம்ப முடியவில்லை. இது உண்மையில்லை. நீங்கள் தவறாக சொல்கிறீர்கள். வேறு யாரையோ நினைத்துக் கொண்டு கலா அக்கா இறந்துவிட்டதாகத் தெரிவிக்கின்றீர்கள் என்று சொல்லிவிட்டு தொலைபேசியை நிறுத்தினேன். மீண்டும் எனது அண்ணி அவர்களின் உறவினர் ஊடாக என் காதால் கேட்கக்கூடாத கேட்க விரும்பாத அந்த துயரச் சம்பவத்தை உறுதிப்படுத்தித் தெரிவித்தார். யாருக்காகவும் அழாத என்னை அழவைத்தவர் கலா அக்கா. என் கண்களில் இலகுவில் கண்ணீர் வராது. வர வைத்து கதறி அழச் செய்துவிட்டார். இனம்புரியாத அவருக்கும் எனக்குமான அன்பை உணரச் செய்துவிட்டார். சுயநலமற்ற ஒரு ஜீவன் கலா அக்கா. அவரின் நினைவுகள் என்றும் என் மனதில் நீங்காததாக இருக்கும். அவரின் ஆத்மா சாந்தியடைவதாக.

# செம்மனச்செல்வி

அன்புத் தம்பிகள் கேதீஸ், கோணேஸ், சகோதரிகள்

எப்படியும் 1970கள் ஆகத்தான் இருக்கவேண்டும். எங்கள் வீட்டின் பின்பக்கம் ஐயாவின் உரத்த அதட்டும் குரலும், பிறகு.. கலா அக்காவின் மறு எதிர்ப்புக் குரலும் ஒரு நாள் என் மனதை தொட்டது. ஏதோ கலாக்கா ஐயாவை எதிர்த்துப் பேசுகிறார் என்பது மட்டும் தான் எனக்கு விளங்கியது. எங்கள் வீட்டு ஐந்து இலட்சுமிகளில் கலாக்கா ஐந்தாவது இலட்சுமி. "இந்தக் கடைசி இலட்சுமி ஏன் ஐயாவோட மட்டும் சண்டை பிடிக்கிறா?" என்ற கேள்வியும் மனதில் கூடவே வந்து போனது.

சிறுவயதிலேயே தனது அறிவுக்கு பிழையாக பட்டவைகளை மட்டும் எதிர்த்து நின்று கேள்வி கேட்கும் நெஞ்சுரம் வாய்த்தவா கலா அக்கா என்பதை, எமது குடும்பத்தினர் அனைவரும் பின்னர் அனுபவபூர்வமாக பல தருணங்களில் உணரக் கூடியதாக இருந்தது

1973– ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்துக்கு நாம் நமது அக்கா சந்தானலட்சுமி வீட்டுக்கு பஸ்ஸில் போய் வருவது உண்டு. அப்போதைய காலங்களில் அரசடி சந்தியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் ஏறவேண்டும்.

ஒரு தடவை சித்தங்கேணி சந்தியிலிருந்து புறப்பட்ட பஸ்சின் உள்ளே ஏற்பட்ட பெரும் அமளிதுமளிகளால், இடையில் நிறுத்தப்பட்டது பஸ்.

பஸ்ஸின் நடுவே பிரயாணிகளின் கால்களுக்குள் அகப்பட்டிருந்த எனக்கு பஸ்ஸின் பின்புறமாக யாரோ கடுமையான வாக்குவாதங்களில் ஈடுபட்டு இருப்பதும் பிரயாணிகளின் சலசலப்புகளும் கேட்டன.

யாரோ வாலிபர்களுடன் கலாக்கா அவர்களை கடுமையாக திட்டி சண்டை பிடித்தது என் மனக்கண்ணில் இப்போதும் பசுமையாக உள்ளது. கொஞ்சநேரங்களிலேயே "நீர் என்ன சேட்டை விடுகிறீர்" என்று கலாக்கா பேசிய பேச்செல்லாம் ஒருமைக்கு மாறி... "நீ டேய்... பிடேய்" என்ற வாக்கில் மாறிவிட்டது.

பஸ்சின் உள்ளே தமது மானம் பறிபோவதை உணர்ந்த வாலிபர்கள் இருவர் பஸ்சை விட்டு இறங்கி மெதுவாக நழுவினர்.

இருந்தும் வெளியே தலையை நீட்டி வெளியேறிய வாலிபர்களை நோக்கி மிக மிகக் கடுமையாக அவர்களை எதிர்த்துக் கலா அக்கா பேசியது இன்றும் பசுமையாக எனது மனத்திரையில் உள்ளது.

பிறகு "தம்பி அவர்கள் பெரிய ரவுடிகள், பெண்களுடன் சேட்டை விடுவது தான் அவர்கள் வேலை. அதுதான் இன்றைக்கு 'இரண்டு குடுவை' குடுத்தனான்' என்று எனக்கு ஒரு விளக்கம் சொன்னா.

இப்படி.. கலா அக்கா யாருக்கேனும் ஏதாவது அநியாயம் நடந்தால் பொறுத்துக்கொண்டு இருக்க மாட்டா.

துணிந்து முன் நிற்பதும் அவர்களிடம் விளக்கம் கேட்பதுமே அவருடைய ஒரு தனித் துணிச்சல்.

ஆனால் கலாக்கா மிகவும் பாசமானவா...

அவரோடு பழகிய அனைவருக்கும் அது விளங்கி இருக்கும்.

தனது மனதில் பட்டதை எல்லாம் அன்போடு தெளிவாக எடுத்துச் சொல்லுவா.

அதனைக் கேட்கும் எமது மனம் கோணக்கூடாது அல்லது நோகக் கூடாது என்பதனால் தனது கருத்துக்கள் சொற்களில் மிகுந்த கவனத்தை அவா செலுத்துவா.

இலங்கையின் போர்க் காலம் அவாவை கொழும்புக்கு குடும்பத்தோடு இடம்பெயர வைத்தது. வீடு வசதிகள் குறைவாக இருந்தாலும் எமது ஊர் உறவுகள் நண்பர்கள் எல்லோரையும் தனது வீட்டில் மனம் கோணாது பாதுகாத்து வெளிநாடுகளுக்கு பத்திரமாக விமானம் ஏற்றி அனுப்பி வைத்தா.

ஊரும் உறவுகளும், ஒரு மாதம் இல்லை, இரு மாதம் இல்லை. பல வருடங்கள் தங்கியதும் 'கதையாக' இருக்கிறது.

எங்கள் அம்மா மாணிக்கவாசகர் தங்கம்மா அவர்கள் மிகுந்த தெய்வ பக்தியும், சகல உயிர்களிடத்தும் பிறவிகள் இடத்தும் மிகுந்த அன்பை செலுத்தி வருபவர்.

எங்கள் ஐயா மாணிக்கவாசகர் அவர்கள் 1974ஆம் ஆண்டு இறைபதம் அடைந்த பின்பு எங்கள் அம்மாவுக்கு கலாக்கா பற்றிய கரிசனையும் 'கூடவே' இருந்தது. கலாக்கா யாழ் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலங்களில் அவரது மதிய உணவை ஓட்டுமடத்திலிருந்து தானே நடந்து சென்று கொடுத்துவருவதும் வழக்கமாக இருந்தது.

கலாக்கா படித்து பட்டம் பெற்று ஒரு தொழிலில் ஈடுபடவேண்டும் என்று எங்கள் அம்மா அதிகமாகவே விரும்பினார்.

கலா அக்காவின் அனைத்து முற்போக்கான செயற்பாடுகளுக்கு எங்கள் அம்மாவின் அனுசரணையும் இருந்தது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் யாழ் திறந்தவெளி அரங்கிலும் நடித்த நாடகங்களையும் அம்மாவோடு சேர்ந்து நாமும் பார்த்திருக்கிறோம்.

1970களின் காலகட்டத்தில் காலையடிக் கிராமத்தில் வெற்றி மடம் என்னும் விளையாட்டுத்திடல், மறுமலர்ச்சி மன்றமாக உருவாக்கம் பெற்றபோது இடம்பெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும் கலை விழாக்களும் எமது ஊரில் புதியதொரு எழுச்சியையும் உத்வேகத்தையும் மக்கள் மத்தியில் உருவாக்கின.

அங்கே இடம்பெற்ற கலை விழாக்களில் அறிவிப்புகள் எல்லாம் தொடங்கும் போது "கலா இரசிக பெருமக்களே" என்று தான் தொடங்கின.

ஊர் மக்கள் மத்தியில் "கலா இரசனை" என்பது புதியதொரு வடிவம் பெற்றிருக்கிறது என்பதனை நாம் அப்பொழுது அறிந்திருக்கவில்லை. எமது குடும்பம் கால ஓட்டத்தில் கலா அக்காவின் மன உணர்வுகளுக்கு மிகுந்த மதிப்பைக் கொடுத்தோம்.

கலாக்கா ஒருவருடன் பழகும்போது மிகுந்த நேசத்துடனும் இரக்க சிந்தனையுடனும் உள்ளன்போடும் பழகுவா. போரின் வடுக்களால் பாதிப்படைந்து மனம் வெதும்பி வாழும் உறவுகள் நண்பர்கள் அனைவரது மனங்களையும் ஆற்றுப்படுத்துதலையே தனது துணைவரோடு சேர்ந்து தமது தலையாய பணியாக கலா அக்கா ஆற்றி வந்தா.

இறுதிவரை கலாக்கா அந்த நேசம் விசாரிக்கும் பண்பை கைவிடவே இல்லை. கலா அக்காவால் மனம் ஆறுதல் அடைந்த சொந்தங்கள், நண்பர்கள், உறவுகள், ஊரார் எண்ணிக்கை ஏராளம், ஏராளம்.

அதற்கு அவர் வாழும் ஊர் சாட்சி

கலாக்கா எப்பொழுதும் மிகவும் எளிமையாகவே உடைகள் அணிவார். நாம் சகோதரர்கள் அவருக்கு எப்படி எடுத்துச் சொன்னாலும் அவர் மக்களின் மனமறிந்து செயற்படுவதால்தானோ என்னவோ மிகவும் எளிமையாகவே இருந்தார். கலா அக்கா பட்டதாரியாக இருந்தாலும் அவர் பணத்துக்கு புகழுக்கு பதவிகளுக்கு என்றுமே ஆசைப்பட்டதில்லை. அவர் மனிதத்தை விரும்பினார். மனிதர்களைத் தேடினார். "துன்பப்பட்டார் துயரங்களை" தானும் சேர்ந்தே சுமந்தார். எந்த விதமான இழப்புகளுக்கும் கவலைப்படாது வாழ்க்கையை நேர்வழியில் எதிர்கொண்டார்.

கலாக்கா ஒருவரைப் பற்றியும் எப்பொழுதுமே தவறான கருத்துக்களை மற்றையவர்களிடம் கூறியதே இல்லை.

மாறாக மாற்றுக்கருத்துடைய அம்மக்கள் மீது மிகுந்த கருணையும் கரிசனையுமே அவருக்கு இருக்கும்.

கலா அக்கா தன் பிள்ளைகளை உரிய முறையில் பாசத்தை ஊட்டி வளர்ப்பதற்கு தனது ஆசிரியத் தொழில் தடையாக இருப்பதை உணர்ந்து அத்தொழிலை விடுத்தார்.

உறவுகள் எத்தனையோ புத்திமதிகள் சொல்லியும், யுத்தம் இலங்கையில் கோரத்தாண்டவம் ஆடிய காலங்களில் வீட்டில் பணத்தட்டுப்பாடு இருந்தகாலம் தனது பிள்ளைகளையும் உறவுகளையும் கவனிக்கவேண்டும் என்பதே அவரது முதல் வேலை என்று அறிந்து, அதன்படி அந்த முடிவை எடுத்தார். அதன்படியும் நடந்தார்.

கொழும்பில் வாழ்ந்த காலங்களில் தன்னுடைய வாழ்க்கை அனுபவங்களை எல்லாம் திரட்டி ஒன்றுபடுத்தி உண்மையான பாத்திரங்களையே கருவாக வைத்து சிறுகதைகளாக எழுதினார் கலாக்கா.

வெளிநாடுகளுக்குச் சென்ற எமது உறவுகளின் வாழ்வியல் துயரங்களை எல்லாம் தானே அனுபவித்தது போன்று சிறுகதைகளில் வடித்துள்ளார். இதனால்தானோ என்னவோ வெளிநாட்டு வாழ்க்கை என்பது மிகவும் சோகமானது

என்ற முடிவை கலாக்கா எடுத்துவிட்டபடியால் அவருக்கு வெளிநாட்டு ஆசை என்றுமே இருந்ததில்லை.

'செம்மனச்செல்வி' என்ற புனைபெயரில் கலாக்காவின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு 'மகரகாவியம், 'பூமராங்', 'ரோசாப்பூ' என மூன்று சிறுகதைகள் அடங்கிய தொகுப்புகள் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் வெளியீடுகளாக அண்மையில் வெளிவந்துள்ளன.

இக்கதைகளின் பாத்திரங்களும், கதை சொல்லும் விதமும் எங்கள் மனங்களை மிகவும் உணர்ச்சி வசப்பட வைக்கின்றன. 'கதாபாத்திரங்களின் ஊடே வாழ்வை அமைத்துக்கொண்டு, அக்கதாபாத்திரங்களையே தனது கதை மாந்தர்களாக பாவித்து 'கதை சொல்லும் பாங்கு" எந்த ஒரு மனிதருக்கும் மிகவும் இலகுவானதல்ல. ஆனாலும் கலாக்கா துணிந்து தன்னுடைய சமூகம் பற்றிய பார்வையை, அக்கறையை தனது சிறுகதைகளின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

கலாக்கா சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை சீர்படுத்துவதற்கான தீர்வுகளை வெளியே தேடாது, தன் வீட்டுக்குள்ளே இருந்தே தனது தேடுதலுக்கான போராட்டத்தை ஆரம்பித்தார்.

இதற்கு உற்சாகம் கொடுத்து அவரை ஊக்குவித்த பெருமை, கலாக்காவின் மதிப்புக்குரிய கணவர் திரு. சோ. தேவராஜா அவர்களையே சாரும்.

கலா அக்கா மிகவும் எளிமையான மனிதராகவே இருந்தார். அனைவரிடமும் மிகவும் இயல்பாகவே பழகுவார். "அவரது பிள்ளைகளுக்கும் அன்பை ஊட்டியே வளர்த்தார். சமூகத்தின் உச்சங்கள்" அவரை ஒருபோதும் சலனப்படுத்தியதில்லை. அவரது அரசியல், சமூக, கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் அவரது விருந்தோம்பல் மிகவும் இரசித்துப் பேசப்படும் சொற்சுவை, பொருட்சுவை மிக்கது. இதற்கு உதாரணமாக கனடாவில் கலா அக்காவின் அஞ்சலி நிகழ்வில் திரு சோக்கல்லோ சண்முகம் அவர்களது அனுபவப் பகிர்வு சாட்சி ஆகிறது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்ற பின் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளின் உச்சமாக மேற்கொள்ளப்பட்ட விதம் கலா அக்காவை பெண் என்ற முறையில் மிகவும் பாதித்திருந்தது. ஒரு பெண் ஒரு நாட்டின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்... கோணேஸ்வரி என்ற ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமையின் அகோரம், கலா அக்காவை வேதனைகளின் உச்சத்துக்கே கொண்டு சென்று விட்டிருந்தது.

நான் கொழும்பு வந்திருந்த காலத்தில் அக்காவின் 'நண்பரான ஒரு கவிஞர் எழுதிய கவிதை' என்று சொல்லி, கலா அக்கா எனக்கு தனது உணர்வின் நினைவாக எனக்கு அதனை பரிசாக அளித்தா.

அந்தக் கவிதையின் பக்கத்தை நான் இன்றும் எனது புத்தகத் தொகுப்புகளின் இடையே மிகவும் பத்திரமாக வைத்துள்ளேன். அது ஒரு காலத்தின் பதிவு. இக்கவிதை அக்கால கட்டத்தில் கலா அக்காவின் உணர்வுகளுக்கும் மன ஓட்டங் களும் ஒருவகையில் சிறு ஆறுதலை அளித்து இருக்கலாம் என நம்புகிறேன்.

கலா அக்காவின் பன்முகப்பட்ட ஆளுமைகளுக்கு ஒரு உதாரணமாக இலங்கையின் போர் உக்கிரத்தின் மத்தியிலே 'ஐ..பி.சி தமிழ்' எனும் இலண்டனிலிருந்து இயங்கும் தமிழ் வானொலி ஒன்றுக்கு செய்தி வழங்கும் இலங்கையின் பொறுப்பை மிகுந்த உயிராபத்துக்களின் மத்தியில் பொறுப்பேற்று செயற்படுத்தினார். கொழும்பில் இவருக்குச் செய்திகள் வழங்கிய நிமல்ராஜன், நெல்லைநடேசன் ஆகிய ஊடகவி யலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டும் மனம் தளராது செயலாற்றினார்.

கலா அக்காவின் இவ்வுலக பிரிவுக்குப் பின்னரும் "உலகத் தமிழரை ஒன்றிணைக்கும் பாலம்" எனத் தனக்குப் பெயர் சூடிக்கொள்ளும் 'ஐ.பி.சி தமிழ்' வானொலி, இன்று வரையும் கலா அக்காவின் மறைவுக்கு ஒரு சிறிய நினைவுக் குறிப்பையோ அல்லது இரங்கல் செய்தியையோ வெளியிடவில்லை என்பது ஒரு காலத்தின் துயரம்.

கலா அக்காவின் இறுதிக் காலங்கள் அவரது அன்பின் வெளிப்பாடுகளாக அமைந்தன. அவர் என்னோடு தொலை பேசியில் உரையாடும் பொழுது "அன்பும் இறையும்" பொருளில் மிகவும் விலாவாரியான கருத்துக்களை வைப்பார். அவர் சகல மதங்கள் பற்றியதான தேடலிலும் மிகவும் நாட்டம் காட்டி இருந்தார்.

மனிதர்கள் சகல ஜீவராசிகளிடமும் எதிர்பார்ப்புகள் ஏதும் அற்ற தூய அன்பை வெளிப்படுத்துதல் ஒன்றே இறைவனை காணும் வழியாகும் என்பதனை கலாக்கா தனது இறுதிக் காலங்களில் உணர்ந்து கொண்டதாகவே நான் காணுகிறேன்.

எவ்வழியே சென்றாலும் அன்பு மார்க்கம் ஒன்றே இறைவன் வழி என்பதை கலா அக்கா, திரு சோ. தேவராஜா அவர்களை தனது வாழ்க்கைத் துணைவராக ஏற்றதன் மூலம், அவரோடு இணைந்து அவரது கொள்கைகளின் ஊடே பயணித்ததன் மூலம் உணர்ந்துகொண்டதாகவே நாம் காணுகிறோம். பெருமை கொள்கிறோம்.

கலா அக்காவின் பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களும் கலா அக்காவின் அன்பை உரமாக வைத்து, துணிந்து மகிழ்வோடு வருங்காலங்களில் பயணிக்க வேண்டுகிறோம்.

கலா அக்கா ஒரு சமூக விடுதலையை அவாவி அதனுடன் பயணித்த ஒரு போராளி! நாங்களும் கலாக்காவின் காலத்தின் கலா இரசிகப் பெருமக்கள் என்பதில் மனநிறைவு கொள்வோம்.

அன்பே கலாக்கா... அன்பே கட உள்!

அன்புத் தம்பிகள் கேதீஸ், கோணேஸ், சகோதரிகள்

# கலாலக்ஷ்மியின் மனித நேயம்

மாவை நித்தியானந்தன்

சீலா தேவராஜா ஒரு சாதாரண பெண்ணாக வாழ்ந்து மறையப் பிறந்தவரல்ல. பாரதியார் போதிய காலம் வாழவில்லை என்ற மனக் குறை எமக்கு இருப்பது போலவே, கலாலக்ஷ்மியின் வாழ்க்கை பற்றியும் உண்டு. ஆனால் தமது வாழ்க்கைக் காலத்தில் மற்றவர்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு, பெறுமதி சேர்க்கவேண்டுமென்ற துடிப்பு அவருக்கு இருந்ததை நாம் அறிவோம்.

போர்க் காலத்திலும், போருக்குப் பிந்திய காலத்திலும் பெண்களின் பங்களிப்பு வடபகுதியில் எழுச்சி கண்டதை அவதானித்தோம். அலுவலகங்களைப் பெண்கள் நிரப்பியிருப்பது மட்டுமன்றி, பெண்களின் அமைப்புகளும் எங்கும் உருவாகிச் செயற்பட்டு வருகின்றன. என்றாலும் கூட, தம்மைப் பாதிப்புக்குள்ளாக்கும் பலவித சமூகக் காரணிகளிலிருந்தும் பெண்கள் இன்னும் விடுபடவில்லை.

குடும்பங்களில் நிகழும் வன்முறை தொடக்கம், பஸ் வண்டிகளிலும் பொது இடங்களிலும் பெண்கள் இம்சிக்கப்படுவது வரை அநீதி நடக்கிறது. மோட்டார்ச் சைக்கிள்களில் ஓடித் திரிவதற்குச் சம உரிமை வழங்கப்பட்டாலும் கூட, சீதனப் பேயானது பெண் பிள்ளைகளைப் பெற்ற குடும்பங்களைச் சித்திரவதை செய்வதோடு, முது கன்னியரைப் பெருந்தொகையில் உருவாக்கிக் கொண்டும் இருக்கிறது. கணவனைப் பிரிந்த அல்லது இழந்த பெண்கள் பாதுகாப்பாக வாழமுடியாத நிலையும், பெண்கள் இருட்டியபின் தனியே போக முடியாத நிலையும் உள்ளது. வன்புணர்ச்சி உட்பட, பாலியல் ரீதியான வன்முறைகள் பெண்கள் மீது பிரயோகிக்கப்படுகின்றன. இளைய தலைமுறையினரிடையே கூட, பெண்களுடன் சேட்டை விடுதலும், அவர்களை அவதூறு செய்தலும் பரவலாகக் காணப்படுகிறது. பெண்கள் மீதான பாலியல் ரீதியான தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பல்கலைக்கழகங்கள் கூடப் பலியாகியுள்ளன. மாணவர்கள் மீது மட்டுமன்றி, அவர்களின் ஆசிரியர்கள் மீதும் கூடக் குற்றங்கள் சுமத்தப்படும் அளவுக்கு நிலைமை தாழ்ந்துள்ளது. பெண்களை வேலைக்கு அனுப்பிவிட்டுத் தாம் ஊர்சுற்றும் அதேவேளை, அப் பெண்களே வேலை முடிந்து வந்து வீட்டைக் கவனிப்பதோடு, சாப்பாடும் சமைத்துப் போடவேண்டுமென எதிர்பார்க்கும் இளைஞர்கள் எமது சமூகத்தில் உளர்.

இவ்வாறு விரியும் இந்தப் படமானது, மக்கள் மீது உண்மையான அக்கறையும், சமூகத்துடன் நெருங்கிப் பழகும் தன்மையும் கொண்ட கலாலக்ஷ்மியின் மனத்திரையில் துல்லியமாக வீழ்ந்தமையை அவரது நண்பர்கள் அறிவர். வெறும் கோஷங்களை எழுப்பும் 'அதி தீவிரத்தை' அவரிடம் நான் காணவில்லை. பதிலாக, நிலத்தில் கால்பதிக்கும் யதார்த்தப் போக்கும், அநீதியைக் கண்டு கோபப்படுவதும், நீதிக்காகக் குரல் கொடுப்பதும் அவரது இயல்புகளாக அமைந்தன.

பொது விடயங்கள் பற்றியும், தனது மனதைப் பாதிக்கும் விடயங்கள் பற்றியும் என்னுடன் மனம் திறந்து பேசும் ஒரு நண்பியாக அவர் இருந்தார். எனது வேண்டுகோளுக்கு இணங்கி, தற்கொலைத் தடுப்புப் பணியிலும் பயிற்சி பெற்றார். ஒரு தொண்டராக இணைந்து, தனது நேரத்தையும் சக்தியையும் மற்றவர்களுக்காக அர்ப்பணித்துள்ளார்.

பிந்திய காலத்தில், தனது எண்ணங்களை ஆக்கபூர்வமாக எழுத்தில் தரவேண்டுமென்ற உந்துதலும் அவர் மனதில் ஏற்பட்டிருந்தது. பேரப்பிள்ளையின் வருகையும் அவரது வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது.

கலாலக்ஷ்மியின் இழப்பு எமக்கு எதிர்பாராமல் வந்தது. அவரது மறைவினால் வறுமையுற்றது சமூகமேயாகும்.

# கலையும் கனலும் கருணையும் கலந்த கலவை கலா

வி. திவ்வியராஜன்

தேவரின் காதலியாய்த், துணைவியாய்,
ஜனமகன், அபிலாஷாவின் தாயாய்
தழைத்த சந்ததிக்கோர் பேத்தியாய்
கலாவைக் கண்டோம்

எழுத்தில் வல்லவர்
நடிப்பில் சூரி
புதுவரலாறு படைப்போம் என்று
இசைப்பா அரங்கில் (எம்மோடு)
இணைந்து இசைத்தவர்.
புதுவரலாறு படைக்கும்- புதுமைப்
பெண்ணாய் நடந்தவர்

பிற்போக்கினைப் புறந்தள்ளும்
புரட்சிப் பெண் இவர்
பெண்மையைப் பின்னிறுத்தும்
பேயர்க்கு இவர் சமர்

கலகல சிரிப்பு- கள்ளமில்லை
படபட பொழிவு- கபடமில்லை
சுடுசுடு விமர்சனம்- காழ்ப்புமில்லை
சமூக நீதிக்காய் எழுந்த இவர் குரல்
அங்கதமும் சேர்ந்திருக்கும்
அதில் ஓர் அழகிருக்கும்
நெருப்பில் நீர் நின்றாடும் பாங்கிருக்கும்

மனித நடத்தைகளின்
மௌனத் திரைகளை
விலக்கின உந்தன் எழுத்துக்கள்
சமூக நடத்தைகளின்
சஞ்சலக் கோலங்களை
விளக்குது உந்தன் கலைத்துவம்

ஏழ்மை கண்டு வெதும்பி இரங்கும்
தாய்மை நெஞ்சம் உந்தன் நெஞ்சம்
நட்பை உறவை நயமாய் போற்றும்
நல்ல நெஞ்சம் உந்தன் நெஞ்சம்

பாரதிப் புலவன் பாடியது போல்
காதல் ஒருவனைக் கைப்பிடித்து- அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து
வாழ்ந்த காரிகை

ஒருவேளை ஞானியாய்
ஒருவேளை போகியாய்
ஒருவேளை யோகியாய்
ஒருவேளை மாகாளியுமாய்
தோற்றங்கள் பல பல

கலையும்
கனலும்
கருணையும்
கலந்த கலாவின்
பெருமையைப் போற்றுவோம்!
வாழ்வை நினைப்போம்!

# கூட்டுமுயற்சியில் தனிமையின் தவிப்பு

ந. இரவீந்திரன்

காலையில் காணொளிகளைப் பார்ப்பதோ பகிர்வதோ அனேகமாக செய்ததில்லை; அன்று மார்ச் 28 காலை, நண்பர் குழாம் ஒன்றின் காணொளி குழந்தைகளின் உணர்வுகளைப் பெற்றோர் புரிந்து கொள்வது தொடர்பில் அற்புதமான புரிதலுக்கு உரியதாக அமைந்திருந்ததால் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சிலருக்கான குழுக்களுக்கு அதனைப் பகிர்ந்து விட்டு வேறு விடயங்களை சமூக வலைத்தளத்தில் நோட்டமிட்டேன்.

செய்திக் களத்தில் எனது தங்கையிடம் இருந்து “கலா இறந்து விட்டார்” எனப் புதிய தகவலின் வரவு நிகழ்ந்துள்ளமை தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய பக்கத்தில் நான் அனுப்பிய காணொளிக்கு மேலே ஏற்கனவே தங்கை அனுப்பியிருந்த “தேவரின் கலா இறந்துவிட்டார்” என்ற செய்தி இருந்தது. முதலில் தனியே கலா என்ற போது யாராக இருக்கும் என்ற குழப்பம். இதனைப் பார்த்ததும் தீர்ந்ததோடு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. தேவராஜா கலாலக்ஷ்மி இவ்வகையில் இறப்பை தழுவ எந்த ஒரு அசுமாத்தமும் இல்லாத நிலை காரணமாக நம்ப இயல வில்லை. அக்கணமே முகநூல் செய்தி அதனை உறுதிப்படுத்திய போது எனது குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தினேன். அதனை வாசித்துக் காட்டிய போது அழுகையை கட்டுப்படுத்த இயலவில்லை.

.ஒரு பெரிய வட்டத்தில் வெற்றிகரமாக ஓடி முடித்து பேத்தியை வளர்ப்பதற்கான அடுத்த தள ஓட்டத்தை தொடங்கும் புதிய வாழ்வொன்றுக்கான அடித்தளம் ஒன்றினை காத்திரமாக ஏற்படுத்திக் கொண்டிருந்தபோது இது நிகழ்ந்துள்ளது. இந்தச் செய்தி அவரை அறிந்த அனைவருக்குமே அதிர்ச்சியையும் தாங்கவியலாத துயரையும் ஏற்படுத்தியிருந்தது. பலரது பதிவுகள் மட்டுமன்றி ஞாயிறு (31 ஆம் திகதி) இடம்பெற்ற இறுதி மரியாதையின் போதான உரைகளும் மலர்க் காணிக்கைகளும் சமூக அக்கறை மிக்க மக்களது உணர்வலைகளின் வெளிப்பாட்டை காட்டுவனவாக அமைந்திருந்தன.

மனித வாழ்வின் போலித் தனங்களுக்கு எதிராக கடுமையாக போராடியதுடன் அத்தகைய விடயங்களில் ஊரோடு ஒத்தோட இயலாதெனத் தனது நடையுடை வாழ்முறைகள் அனைத்தின் வாயிலாகவும் வெளிப்படுத்தும் வகையில் தனித்துவ செயல் ஒழுங்குகளைப் பேணி வந்ததன் காரணமாகப் பலரதும் கண்டனங்களை எதிர்கொண்டவர் கலா. பிறர் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றிய எந்த அலட்டலும் அவரிடம் இருந்ததில்லை. அவசியமற்றது என்று தெரிந்தவற்றையும் மற்றவர் பிழையாகக் கருதிவிடக் கூடாது என்பதற்காகவே பின்பற்றியொழுகும் நடத்தைக் கோலம் அவருக்கு உடன்பாடற்றது. இத்தகைய தனித்த போக்கு என்பதற்காக அனைத்தையும் நிராகரித்த துறவு மனப்பாங்கையோ விட்டேற்றித் தனத்தையோ வெளிப்படுத்துகிற வகையினதாக அவரது வாழ்வு அமைந்துவிடவுமில்லை.

பலரோடும் உள்ளுணர்வு கலந்த அன்போடு உறவாடி சமூக ஊடாட்டத்தை பேணி வளர்த்து வந்தார் என்பதாலேயே அனைவரையும் துயரத்தில் ஆழ்த்துவதாக அவரது மறைவுச் செய்தி அமையலாயிற்று. தனி மனித தவறுகள், சீர்கேடுகள் என்பன சமூக அமைப்பின் வெளிப்பாடுகள் - சமூக மாற்றத்தைச் சாதிப்பதன் வாயிலாக உன்னத மனிதத்துவத்தை ஏற்படுத்த இயலும் எனும் புரிதல் காரணமாகவே இன்றைய சமூக இருப்பை நிராகரிக்கும் நடத்தைக் கோலத்தை வெளிப்படுத்தும் அதேவேளை உயிர்ப்பான சமூக ஊடாட்டத்தையும் சமநிலையோடு பேண வல்லமை பெற்றிருந்தார். சமூக மாற்ற செயற்பாட்டுக்கான இயங்காற்றலுக்கு தேசிய கலை இலக்கியப் பேரவை, புதிய ஜனநாயக மாக்சிய - லெனினியக் கட்சி என்பன களம் அமைத்துக் கொடுத் திருந்தன. பேரவையின் சஞ்சிகையான “தாயகம்” இதழ்களில் அபிராமி, சிவகாமி, செம்மனச்செல்வி என்னும் புனை பெயர்களில் சிறுகதைகளை எழுதி வந்துள்ளார். அவற்றில் ஒன்று தகவம் பரிசினைப் பெற்றதென்ற வகையில் அவரது கலைத்துவச் செய்நேர்த்தியைக் கண்டு கொள்ள இயலும். அக்கதைகளோடு பிரசுரமாகாதவற்றையும் உள்ளடக்கியதாக மூன்று சிறுகதைத் தொகுதிகளை மறுமலர்ச்சி மன்றம் 2017இல் வெளியிட்டிருந்தது.

பூமராங், மகரகாவியம், ரோசாப்பூ எனும் சிறுகதைத் தொகுப்பு நூல்கள் செம்மனச்செல்வி என்ற புனைபெயர் தாங்கியே வெளிவந்தன. ஒரு பாலை வீடு, சங்காரம், கோடை, உறவுகள், எந்தையும் தாயும், மாதொரு பாகம், தாயுமாய் நாயுமானார் என்பன அவர் நடிகையாகவும் நெறியாளராகவும் பங்கேற்ற நாடகங்கள். தமிழகத்திற்கான நாடகச் சுற்றுப் பயணத்தில் கணவரோடும் பிள்ளைகளோடும் கலந்து கொண்டு சென்று 17 மேடைகளில் புதியதொரு வீடு, எந்தையும் தாயும் நாடகங்களில் கலா நடித்திருந்தமை தொடர்பில் சிதம்பரநாதன் பதிவு செய்திருந்தார்; “நாராய் நாராய்” எனும் மகுடம் தாங்கிய அந்நாடக பயணத்தில் தாசீசியஸ், பிரான்சிஸ் ஜெனம், எஸ். ரி. அரசு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர் என்பது கவனிப்புக்குரியது. வி. எம். குகராஜாவின் “கதை இதுதான்” திரைப்படம், அருணா செல்லத்துரையின் “வீடு” தொலைக்காட்சி நாடகம் என்பவற்றில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியுள்ள கலாலக்ஷ்மி நெறியாளராக நாடகங்களை இயக்கும் பணியையும் மேற்கொண்டு உள்ளார்.

இத்தனை விசாலித்த அரசியல் - கலை - இலக்கிய செயற்பாடுகள் என்பன கிராமம் முதல் கொழும்பு வரை பல்வேறு போராட்டங்களிலும் பங்கேற்று முன்னணிப் பாத்திரம் வகித்து பெற்ற அனுபவங்களின் பேறானவை. பொதுவாகப் பலரோடு இணைந்து சமூகக் களங்களில் போராடுவது என்பது மட்டுமன்றி தனி மனுசியாக ஒவ்வொரு விடயத்தின் அதிகாரத்துவத் தொனிகளுக்கு எதிராகவும் போராடுபவராக வாழ்வை வழிநடத்திச் செல்கிறவர் என்ற வகையில் அவரது எழுத்திலும் அரங்கச் செயற்பாடுகளிலும் உயிர்ப்பான போர்க்குண எழுச்சிகளை கொண்டுவர முடிந்தது. அதிகாரத்துவத்தை எந்த வடிவத்திலும் நிராகரிப்பது எனும் அவரது நடத்தை கோலத்தின் அரிச்சுவடி வீட்டிலிருந்தே தொடங்குவது. நாங்கள் எல்லோரும் “தேவர்” என்று அழைக்கிற பெயரை எங்களோடு உரையாடும் போதும் கலா “தேவன்” என்றே விளிப்பார். அதற்காக கணவருக்கோ குடும்பத்துக்கோ கொடுத்தாக வேண்டிய தனது பங்களிப்பையும் கவனிப்பையும் எந்த வகையிலும் குறைத்துக்கொண்டவரும் அல்ல.

எமது கிராமத்தின் முதல் பெண் பட்டதாரி கலாலக்ஷ்மி. மாணிக்கவாசகர் – தங்கம்மா தம்பதியரின் ஐந்தாவது மகளாக 1957 ஜூலை 10ஆம் திகதி பிறந்தவர். மூத்தவர்கள் பெண்கள்; இவருக்குப் பின் இரு தம்பிகள். பட்டணத்தார் என்ற அடைமொழியோடு ஊரவரால் பார்க்கப்பட்ட இவர்களுக்கு சோதனையாக சிறுமியாக இருந்தபோதே தந்தையை இழந்து வாழ்க்கை கஷ்டங்களை அனுபவிக்கும் நெருக்கடியும் ஏற்பட்டது. அக்காக்களின் குடும்பங்களோடு பல ஊர்களை வாழிடங்களாக்கி அலைப்புற்று கல்வியை தொடர்ந்திருந்தபோதிலும் முதல் பெண் பட்டதாரி என்கிற சிறப்பை அவரால் எட்ட இயலுமாயிற்று. அந்தத் தகைமையோடு ஆசிரியைத் தொழிலேற்று கண்டியில் பணியாற்றச் சென்றார்; ஒரு சில மாதங்களிலேயே தனது ஆளுமையை விருத்தி செய்வதற்கு வேலையைத் தொடர்வதைவிடவும் தன்னுடைய இரு பிள்ளைகளையும் சமூகத்திற்குப் பயனுள்ளவர்களாகவும் 'அனைவரையும் மதித்து நடப்பவர்களாகவும்' வளர்ப்பது கூடுதல் முக்கியத்துவம் உடையது எனத் தேர்ந்து தெளிவான முடிவோடு 'குடும்பப் பெண்ணாக' மாறி இருந்தவர் 'கலா அக்கா' (நேற்றைய இறுதி மரியாதை நிகழ்வில் மகளும் பட்டதாரி ஆசிரியையுமான அபிலாஷா இவற்றை வலியுறுத்தி இருந்தார்). சரியாக சமைக்கத் தெரியாது இருந்தவர் சமையல் கலை வகுப்புக்களையும் புத்தகங்களையும் உதவியாகக் கொண்டு குடும்ப கலையிலும் செய்நேர்த்தியை வெளிப்படுத்திக் கொண்டவர்.

.பூவும் பொட்டும் தாலியும் பட்டும் சூடிக் குடும்பப் பெண் தோற்றம் காட்டுவதை மறுத்துத் திருமண வீடுகளுக்கும் மிக எளிமையோடு சமூகமளிக்கும் அவரிடம் இத்தகைய 'அவசியமான பணியை' நிறைவு செய்கிற பக்கமும் இருந்தது. எங்களுடைய கிராமத்தில் முதலில் சைக்கிள் ஓடியவர்களில் ஒருவர் என்பதிலிருந்து மறுமலர்ச்சி மன்றத்தின் உருவாக்க காலத்தில் (1972ல்) பெண்ணிய போராளிகளுக்கான பல அம்சங்களை 'தொட்டிற் பழக்கமாக' பெற்றவர் இறுதிவரை தனது போர்க்குண மனப்பாங்கில் தளர்ச்சி காணாது வாழ்ந்தவர். ஒரு முன்னோடி ஆளுமை என்கிற வகையில் அவரை புரிந்து கொள்ளாதவர்களால் தனிமைப்படுத்தப்படும் கடும் விமரிசனங்களை முகங் கொண்ட போதிலும் சமூக மாற்றத்தின் அவசியம் கருதி சமூக ஊடாட்டத்தில் தளர்ச்சி ஏற்பட இடமளிக்காதவர் கலாலக்ஷ்மி! அவர்களது குடும்ப நட்பாக இயங்கிய தேசிய கலை இலக்கியப் பேரவை செயற்பாட்டாளர் மாவை வரோதயனின் வைத்திய பராமரிப்புக்காக, தனது குடும்ப – சமூகப் பொறுப்புகளின் மத்தியிலும் சென்னையில் கொண்டு சென்று பராமரித்தவர் என்பது வரை நீட்சிபெறத்தக்க அவரது பங்களிப்புகள் என்றென்றும் நினைவு கூரப்படும் பெயர்களில் ஒன்றாக அவரைப் பேணி வரும்!

நன்றி தாய்வீடு – கனடா

# கலா... என் தோழி

வசந்தி தயாபரன்

கலா எங்களுடன் இப்போது இல்லை. எம்முடன் மட்டுமல்ல, கலை இலக்கியம் பேசப்படுகின்ற, அளிக்கை செய்யப்படுகின்ற, கருத்தாடல்கள் நடைபெறுகின்ற இடங் களிலும் கலா இல்லை. நாடகத்தின் நடுவே காட்சி மாற்றத் தின்போது மூடித்திறக்கப்படும் திரையைப் போலன்றி... நிரந்தரமான பிரிவுத்திரை.

உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ள, மனதைத் திறந்து உரையாட கடிதம் எழுதுகின்ற பழக்கம் உடைய, சென்ற தலைமுறை சீவன்கள் நாம். கலா நான் உம்முடன் கதைக்கப் போகின்றேன்.

கடைசியாக சில வருடங்களின் முன்பு மழைநாள் ஒன்றின் மாலைப்பொழுதில் நாம் சந்தித்துக்கொண்டோம். நீர் எம் வீட்டுக்கு வந்திருந்தீர். உமது சுகவீனம் பற்றியும், தற்போது குணமடைந்து வருவது பற்றியும் பேசிக்கொண்டோம். நாமிரு வரும் கொழுக்கட்டை சாப்பிட்டோம். எமது பாரம்பரிய உணவுப் பழக்கங்கள் படிப்படியாக விடை பெறுவதைப் பற்றி நீர் விசனப்பட்டீர். சமூகம், அதன்மீதான அக்கறை, இவையே பெரும்பாலும் உமது உரையாடலில் மையப்பொருளாக இருப்பதுண்டு.

ஆனால், தொண்ணூறுகளில், நானும் நீரும் றோயல் கல்லூரியில் பெற்றோருக்கான கூட்டங்களில் கலந்து கொண்டோமே.. அப்போதெல்லாம் பிள்ளைகள் பற்றி அங்கலாய்த்துக் கொள்ளும் இளவயது அம்மாக்களாகவும் நாம் இருந்தோம். எமது அறிமுகமும் நட்பும் பூத்த நாட்கள் அவை.

கலையும் இலக்கியமும் வாசிப்பும் எமது பொது விருப்புக் களாக, மெள்ள மெள்ள, எமது நட்புக்கு வலுச்சேர்த்தன. தமிழ்ச்சங்க மேடையில் தோள்மேல் கை போட்டுக்கொண்டு, 'பாட்டனார் நட்டுவைத்த...' என்று ஜெயபாலனின் கவிதையை குழுவாக இசைத்த அந்த நாட்கள் நெஞ்சில் புரள்கின்றன.

நாடகம், கவிதை என்பவற்றால் வனையப்பட்ட அழகிய உலகம் உம்முடையது! கலை என்பதே ஆன்மாவின் அழகின் வெளிப்பாடு என்று எங்கோ வாசித்தேன். உண்மைதான், உமது அரங்க ஆற்றுகைகளை நாம் பார்த்து உமது ஆன்மாவை இரசித்தோம், அவற்றின் நேர்த்தியில் உமது அர்ப்பணிப்பைக் கண்டோம். எமது நிகழ்ச்சிகளில் நீர் பார்வையாளராக இருப்பீர். என்னைக் கண்டதும் தலையை ஒருபுறம் சாய்த்துக் கொண்டு விழிகளில் நட்பைப் படரவிட்டு மென்முறுவல் புரிவீர்.

நீர் புனைபெயரில் எழுதியவை என அறியாமலே, உமது சிறுகதைகளைப் பற்றி நான் கருத்துரைக்கையில், புன்னகை யுடன் கேட்டுக்கொண்டிருப்பீர். அந்த ஆழமும் தெளிவும் உமது அருங்குணங்கள்.

கலா... காலம் எப்படித்தான் ஓடியது! வாழ்க்கையின் ஏடுகளை, தான் நினைத்தபடியெல்லாம் அடுக்கியும் குலைத்தும் போட்டது. இறுதியில் உம்மையும் வாரிச் சுருட்டிக் கொண்டு போய்விட்டதே!

ஒரு தோழியாக உமது பிரச்சினைகளை என்முன் நீர் திறந்து வைத்த தருணங்கள் நினைவில் எழுகின்றன. பூசல் மெழுகல் இல்லாது விடயங்களை உள்ளது உள்ளபடி பேசுகின்ற ஒளிவுமறைவு இன்றி மனதைத் திறந்துவைக்கின்ற உமது இயல்பு.... என் மனதுக்கு இதம் தந்தது.

அம்மாவின் நாடகத்தில் தானும் விரும்பி நடிக்கின்ற அன்பு மகன், ஏதோ பேச்சின் இடையே... 'அது அம்மாவின் விருப்பம், என்னம்மா..' என்று அம்மாவுக்காகப் பரிவு காட்டிய மகள், உமது அருமை உணர்ந்த கணவர். கலா, உமது வாழ்வில் கூடவந்தவர்கள் உன்னைப் புரிந்துகொண்டவர்கள்.

உமக்கு என்ன குறை! பார்த்தவரை மீண்டும் பார்க்கத் தூண்டும் களையான முகம், நளினமான நடை உடை பாவனைகள். ஆனால் செயற்கை கலவாத – படாடோபம் இல்லாத அழகு. எதையும் சலனமின்றிக் கடந்துபோகின்ற நிதானம் உமது பெரிய அணிகலனாகத் துலங்கியது.

நீர் ஒரு பட்டதாரி. ஆனால், அதற்கும் மேலாக சுயமாகச் சிந்திக்கின்ற ஒரு பெண் என்பதே எனக்கு உம்மைத் தனியாகக் காட்டியது. குரலை உயர்த்தி மற்றவரது கருத்தை மூழ்கடிக்காத பாங்கு. அதிராமல் ஆனால் உறுதியாக, தனது கருத்தை முன்வைக்கும் ஆற்றல். எல்லாவற்றுக்கும் மேலாக, நுண்ணிய இரசனையுணர்வு! கலையும் இரசனை உணர்வும் வாழ்க்கையோடு இணைகின்ற தளம் உம்முடையது.

பெண்ணின் ஆளுமையைக் கொச்சைப்படுத்தி, அவளை ஒரு நுகர்வுப் பண்டமாகக் காட்டி, அவளை முடக்கிப் போடுவதே முழுநேர வேலையாகக் கொண்ட இச்சமூகத்தில் உம்மைப் போன்ற உறுதிகொண்ட நெஞ்சினரைக் காண்பதே அரிது. மென்னுணர்வும் திடநெஞ்சும் கொண்ட பெண்மை! அவற்றின் கலவையால் விளைந்த உமது கம்பீரம்! கலா, நீர் இன்னும் சிறிது காலம் இருந்திருக்கலாம்.

முரண்பாடுகளால் நிறைந்து குப்பையாகிக் கிடக்கும் சமூகவெளியில், தன்னைத்தானே மூன்றாம் ஆளாக நின்று எடைபோடுகின்ற நுட்பத்தை எமது அடுத்த தலைமுறைப் பெண்களுக்கு நீர் சொல்லிக் கொடுத்திருக்கக் கூடும்.

கலா, குடும்பத்தலைவியாக, அம்மாவாக, அன்புத் துணைவியாக, அலுவலகம் சென்று வேலை செய்பவளாக, பல நிலைகளில் இயங்கும் பெண் ஒருத்தி, தனது 'சுயம்' இழக்காமல் எவ்வித நெருடல்களுமில்லாமல், சமூகப் பொறுப்புள்ள மனிதப்பிறவியாகவும் வாழ்ந்துகாட்ட முடியும் என்பதற்கு நீர் உதாரணமாகத் திகழ்ந்தீர். உமது வாழ்க்கையை, அதன் ஏற்ற இறக்கங்களுடன், பிறருக்குப் பயன்படுமாறு நீர் வாழ்ந்து சென்றீர்.

புதுமை – நாகரிகம் என்ற சொற்களின் பொருள் புரியாது, பொதுவெளியில் தம்மை முன்னிலைப்படுத்த முண்டியடிக்கின்ற எமது சகோதரிகள், வலைத்தளங்களின் 'அடிப் பொடி'களாக புத்துருப் பெற்றிருக்கும் புதல்விகள் என இன்று எத்தனை பேர்! சுயசிந்தனையை வளர்த்தெடுக்காது, எதை யுமே சீர்தூக்கிப் பாராது, பொதுவான கருத்து ஒன்றின் பின்னால் மந்தைக்கூட்டமாகச் செல்வது எமது சமூகத்தின் புதிய தொற்றுநோய். அந்நோய்க்கான அறிகுறிகளுடன் இன்று உலாவரும் பெண்கள் பலரைக் காண்கையில், ஒரு பெண்ணாக என் மனம் கவலைகொள்கின்றது.

முன்னரைப் போன்ற இறுகிவிட்ட ஒரு சமூகக் கட்டமைப்பினை நோக்கி மீண்டும் நாம் பயணிக்கின்றோமா என்ற கேள்வி மனதில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

தொழில்நுட்பத்தின் ஆதிக்கத்தில், மனித உறவுகளின் மதிப்பு, மனங்களிடையேயான புரிதல், அன்பின் வெளிப்பாடு எல்லாமே மேலோட்டமானவையாக – சுயநலமிக்கவையாக மாறி, ஈற்றில் எமது பெண்களுக்கு எதிரான குற்றங்களாக அல்லவா வடிவெடுக்கின்றன! சிறுபெண்ணையும் அச்சுறுத்தும் அளவுக்கு வக்கரித்துவிட்ட சமூகக் கட்டமைப்பு, பெண்ணுக்கான அளவுகோல்களையும் தானே தயாரித்து வைத்துள்ளமை, ஒரு நகைமுரண். அது, பெண்ணையும் அவளது ஆளுமையையும் முடக்கிப்போடுதற்கான ஆவணம்! அதனை அடையாளம் கண்டு, திடமாக அதனைத் தாண்டிச் செல்கின்ற ஆளுமை பெண்ணிடம் மலர்ச்சியுற வேண்டும் என்பது உமக்கும் எனக்கும் பேரவாவாக உள்ளது.

சமூக வலைத்தளங்கள் குற்றச் செயல்களை மிக மிகச் சுலபமாக ஆக்கிவிட்டன. அவற்றின் கிடுக்கிப் பிடிகளுக்குள் அகப்பட்டு விடாது, பெண், தனது ஆற்றலை வளப்படுத்தி மேன்மையுற வேண்டும் என்ற தவிப்பும் ஏக்கமும் எம்மை அலைக்கழிக்கின்றன. அதற்கான உந்துதலை ஏற்படுத்தாதவரை பெண்ணினத்திற்கு எதிரான – நிறுவனமயப்படுத்தப்பட்ட குற்றங்களுக்கு நாமும் ஏதோ ஒருவகையில் காரணமாகி விடுகின்றோம் அல்லவா!

நோயுற்ற சமூகத்திற்கு, நாம் எம்மை நியாயப்படுத்த, எவ்விதத் தேவையுமில்லை. பெண்ணானவள், தன்னுடன் தான் முரண்படுவதை நிறுத்த வேண்டும். சமூகத்தைப் புரிந்து கொண்டு, தன்னைத்தானே திடப்படுத்திக்கொண்டு மனவுறுதி யுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளுங்கள் என்பதையே உமது வாழ்க்கையின் செய்தியாக நான் ஏற்றுக் கொண்டுள்ளேன். அதையே எமது பெண்ணினமும் வழி மொழியும் காலம் விரைவில் கனியும்.

# பெண்ணுரிமைப் பண்பாட்டுப் புரட்சி

சி. சிவசேகரம்

பெண்ணுரிமைக் கோரிக்கைகள் அனைத்தினதும் அடிப்படை பால் அசமத்துவ.ம், பெண்ணுரிமைக் கோரிக்கைகள் அந்த அசமத்துவத்தை நீக்குவது பற்றியனவாயினும் அவற்றின் தன்மையும் உள்ளடக்கமும் சமூகத்துக்குச் சமூகம் மட்டுமன்றி வர்க்க அடிப்படையிலும் கோரிக்கைகளை முன்வைப்போரின் சமூக நோக்கிலும் வேறுபடுவன.

பெண்கள் எதையெல்லாம் ஒடுக்குமுறையாகக் கொள்கின்றனர் என்பதும் கவனிக்கவேண்டியன. சில ஒடுக்கு முறைகளைத் தமது உரிமைகளாகக் கொள்ளவும் அவை பற்றிப் பெருமைப்படவும் பெண்களுக்கு இயலுகிறது. இவை பெரும்பாலும் பண்பாட்டின் அடிப்படையில் உள்வாங்கப்படுகின்றன.

குழந்தைப் பருவந் தொட்டு எவையெவை பெண்களுக்கிரியன எவையெவை ஆண்களுக்குரியன என்று நேரடியாயும் மறைமுகமாயும் உணர்த்தப்படுகிறது. இவற்றை மரபின் பெயராலும் பண்பாட்டின் பெயராலும் பேண இயன்றாலும், சமூகம் தனது வளர்ச்சிப் போக்கிலும் பிற சமூகங்களுடன் ஏற்படும் தொடர்புகளாலும் சூழலின் தாக்கங்களாலும் மாறுவதால், பண்பாடு மாறுகிறது. அதற்கமைய மரபும் வரையறுக்கப்படுகிறது.

எனினும் மரபில் ஏற்படும் மாற்றங்கள் சில சமூக ஏற்றத்தாழ்வுகளின் அடிப்படைகளைத் தொடுவதில்லை. அந்த அடிப்படைகளில் மாற்றம் வேண்டின், சமூகமும் அடிப்படை மாற்றங்கட்கு உட்படவேண்டும். எனினும் சமூக அடிப்படை மாறும் வரை சமூக அநீதிகள் தொடர வேண்டுமா?

பெண் கல்வியை ஏற்று ஒரு நூற்றாண்டாகிறது. எனினும் அதிற் பாரபட்சங்கள் உள்ளன. பெண்கள் கற்க உகந்த துறைகள் எவை, கற்கப் பொருந்தாதவை எவையெனச் சமூகத்துள் வலுவான சிந்தனைகள் வேரூன்றியுள்ளன. பெண்கள் தொழில் பார்ப்பது பற்றியும் பலவாறான மனத்தடைகள் உள்ளன. பெண்களின் உடைகள் பற்றிய கட்டுப்பாடுகள் வலுவானவை. எனினும் இடப்பெயர்வும் நெருக்கடிச் சூழலும் அதிற் சிறிது நெகிழ்வை ஏற்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும் இன்னொரு தென்னாசியச் சூழலின் பண்பாட்டையொட்டி உடைகளில் மாற்றங்கள் ஏற்பட்டளவுக்கு அது நவீனத்துவம் பற்றிய நகர்வாக இல்லை. இவ்வாறான விடயங்களில் நவீன சிந்தனையின் தாக்கத்தை விடச் சூழலின் கட்டாயங்களின் பங்கு பெரிது. எனினும் இம் மாற்றங்களைப் பண்பாட்டின் பெயரால் மீளப் பெற இயலாது.

நவீன வசதிகளும் நகரமாதலும் பெண்களின் வீட்டுச் சுமைகளைக் கணிசமாக இலகுவாக்கிய போதும், தொழில் பார்க்கும் பெண்கள் தொடர்ந்தும் வீட்டுப்

பொறுப்பை முற்றாகச் சுமக்கும் சூழலே பெரிதுங் காணப்படுகிறது. இதனால் பெண்களின் வேலைச் சுமை மொத்தத்திற் கூடியுள்ளதே ஒழியக் குறையவில்லை.

பெண்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை அவர்களுடைய சிந்தனை வளர்ச்சிக்கும் சமூக ஈடுபாட்டுக்கும் உதவுமாறு பண்படுத்த இயலாத ஒரு நிலையைத் தொலைக் காட்சியில் வரும் சின்னத்திரைத் தொடர்கள் உருவாக்கு கின்றன. பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் வரும் பெண்கள் பகுதிகளில் சமையலும் அழகுபடுத்தலும் அலங்கார வேலைகளும் பெறும் முக்கியத்தைச் சமூகத்திற் பெண்களின் நிலை பற்றிய விசாரணைகள் பெறுவதில்லை.

பெண்கள் தம்மை ஆண்களின் நுகர்வுக்காக அழகுறப் பொதி செய்வதையே ஊடகங்கள் ஊக்குவிக்கின்றன. அதன் விளைவாக அழகுபடுத்தும் நிலையங்கள் இப்போது சிறு நகரங்களிலும் பரவியுள்ளன. ஒரு பெண்ணைத் திருமண நாளுக்கு அலங்காரஞ்செய்ய ஆகும் செலவு திருமணச் செலவின் ஒரு கணிசமான அளவுக்கு வளர்ந்துள்ளது. அதைவிட முன்பில்லாதபடி இளம் பெண்களை மையப்படுத்தும் பூப்பெய்தற் சடங்கு இசை நடன அரங்கேற்றங்கள் போன்ற பலவும் பெண்களைப் பழைமைவாதச் சிந்தனைகளுடன் இறுகப் பிணிக்கின்றன. கலைகள், சடங்குகள் எனப் பலவும் மரபின் பெயரால் மீள உருவாக்கப்படுகின்றன அல்லது புதிதாகப் புனையப்படுகின்றன. அனைத்திலும் பெண்ணின் சமூக நிலை ஆணினும் தாழ்வாக இருத்தப்படுகிறது.

பண்பாட்டைப் பேணுபவள் பெண்ணே என்றும் பெண்களின் கற்பின் வலிமை என்றும் சிலசமயம் பெண்ணே உயர்ந்தவள் என்றும் பேசுவன பழமைவாதத்தின் சுமையைப் பெண் மீது ஏற்றுவதையே நோக்காக உடையன. எனவே பெண் விடுதலை வெறுமனே சமூக உரிமைகளை ஆணுக்குச் சமமாகச் சட்டத்தில் உறுதி செய்வதைப் பற்றியதல்ல. அனைத்துச் சமூக ஏற்றத்தாழ்வுகட்கும் அடிப்படையாயுள்ள சமூகச் சிந்தனை முறையைத் திருத்துவதைப் பற்றியது.

ஆணுக்குப் பெண் சமமென்பதைக் குழந்தைப் பராயத்திலிருந்தே அனைவரும் உணர வேண்டும். இது சட்டமியற்றி இயலுவதல்ல. ஒரு சமுதாயம் ஆண்– பெண் சமத்துவத்தை முழுதாக விளங்காவிடின் சமமின்மை தனக்குக் கிடைக்கக் கூடிய ஒவ்வொரு இடைவெளி மூலமும் தன்னை நிலை நாட்டும்.

சட்டத்தின் மூலம் பல துறைகளிற் பால் சமத்துவம் வெல்லப்பட்டுள்ளது. ஆனால் சமூக நடைமுறை பண்பாட்டின் பெயரிலும் மரபின் பெயரிலும் சமத்துவத்துக்குக் குழிபறிக்கும். அதைத் தவிர்க்க வேண்டின் நமது பண்பாட்டுக் கூறுகள் ஒவ்வொன்றிலும் பொதிந்து உள்ள ஏற்றத்தாழ்வுகளின் நடுவே உறுதிசெய்ய இயலாது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். எனவே பெண்விடுதலைச் சிந்தனை முழுமையான ஒரு பண்பாட்டுப் புரட்சியின் முக்கிய அம்சமாக அமைவது தவிர்க்கக் கூடாதது.

# கலாலக்ஷ்மி எனும் ஆளுமை

சி. கா. செந்திவேல்
பொதுச்செயலாளர்.
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் தோழர் கலாலக்ஷ்மி தேவராஜா தன்னுள் இருந்து வந்த நோயின் அதிகரிப்பினால் திடீர் இறப்பிற்கு உள்ளானார். தோழர் தேவராஜாவின் மனமொத்த வாழ்க்கைத்துணைவியாக, இரண்டு பிள்ளைகளின் பாசமிகு தாயாக, சகோதர சகோதரிகளின் உறவுப் பாலமாக இருந்து குடும்பத் தூண்களில் ஒன்றாகவும் வாழ்ந்து வந்தவர். இவற்றுடன் கூடவே எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சிக் குடும்பத்தின் உறுப்பினராகவும் மிகுந்த தோழமை உணர்வு கொண்டவராகவும் வாழ்ந்து வந்தவர்.

அவர் யாழ். பல்கலைக்கழகப் பட்டப் படிப்பின் காலத்திலிருந்தே பலதுறை ஆற்றல் மிக்கவராக வளர்ந்துவந்தவர் அக்காலத்திலேயே அவர் மாக்சிசத்தின் மீதான கற்றலுடனும் ஈர்ப்புடனும் ஒரு ஆளுமைமிக்கப் பெண்ணாக வாழ்ந்து வந்தவர். அவரது ஆளுமையானது தோழர் தேவராஜாவை வாழ்க்கைத் துணைவராக விரும்பித் தெரிவு செய்ததுடன் பலம் பெற்றுக் கொண்டது. அவரது அறிவுத் தேடலும் அவற்றின் போது விடயங்களை விவாதப் பரப்பிற்குள் கொண்டு வந்து விவாதிப்பதன் மூலமாகவும் சமூக விஞ்ஞானமான மாக்சிச அறிவினைத் தேடிக்கொண்டார். அதன்வழியாகவே பெண்கள் எதிர்நோக்கி வந்த நெருக்கடிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாயின் பெண் விடுதலை என்பது சாத்தியமாக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தி வந்தவர். அவர் அதிகம் பேசுபவரல்லர். ஆனால் அவர் பங்குகொண்ட நாடகங்கள், கலை அரங்குகள், கலை நிகழ்ச்சிகளில் தனது கருத்துக்களைத் தெளிவாக முன்வைத்து வந்திருக்கிறார். அதன் மூலம் தனக்குள் இருந்து வந்த ஆளுமையை அவ்வப்போது வெளிப்படுத்தியும் கொண்டவர்.

கலாவின் வாழ்வும் சிந்தனையும் தமிழ்ச் சூழலில் மாற்றுக் கருத்து நிலை கொண்டதாக இருந்து வந்தது. சமூக முரண்பாடுகளைக் கூர்ந்து அவதானிப்பவராகவும் அவற்றின் சமூக அரசியல் பின்புலங்களைக் கண்டறிபவராகவும் இருந்து வந்தார். அதன்மூலம், உழைக்கும் மக்களின் குறிப்பாக உழைக்கும் பெண்கள் அனுபவிக்கும் வாழ்வியல் துன்ப துயரங்களைக் கண்டு கொண்டதுடன் மக்கள் சார்புநிலை எடுத்து நிற்பதில் உறுதியானவராகவும் இருந்துவந்தார். குறிப்பாகப் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் வாழவேண்டும் என இருந்துவரும் பழைமைவாதப் பெண்ணடிமைத்தனப் போக்கினை வன்மையாக நிராகரித்தும் எதிர்த்தும் வந்தார். அதன் காரணமாகப் பெண்கள் இரண்டாம் தர நிலையில் வைத்து ஆணாதிக்கத்தாலும் சமூக நடைமுறைகளாலும் நடாத்தப்படும் நிலை தகர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்ததில் அவர் தெளிவான பெண்விடுதலைச் சிந்தனையைக் கொண்டிருந்தார்.

உலகின் சரிபாதி பெண்கள் என்றே கூறப்படுவது வழமை. ஆனால் அத்தகைய பெண்கள் எவ்வாறு வைக்கப்பட்டுள்ளார்கள். வாழ நிர்ப்பந்திக்கப்பட்டருக்கிறார்கள்

என்பது ஆழ்ந்து நோக்கப்பட வேண்டும். இலங்கையில் பெண்கள் சரிபாதிக்கு மேல் 52 வீதமாக உள்ளனர். ஆனால் பெண்களின் வாழ்நிலை எல்லாத் தளங்களிலும் இரண்டாம் தரமானவைகளாகவே இருந்து வருகின்றன. பொருளாதாரச் சூழலில் உழைப்புச் சுரண்டலுக்கு ஆட்படுதலில் பெண் என்னும் வகைப்பாட்டினால் சுரண்டப்படுவது நேரடியாகவும் மறைமுகமாகவும் இடம்பெற்று வருகின்றன. உதாரணம் கூறுவதாயின் நமது சூழலில் கூலி விவசாயிகளாகத் தோட்டங்களில் வயல்களில் மற்றும் விவசாய உற்பத்திச் செயற்பாடுகளில் கடற்தொழில்களில் ஈடுபடும் பெண்கள் சுரண்டலில் கோரப்பிடிக்குள் வைக்கப்படுள்ளனர். மலையகப் பெருந்தோட்டத் தொழிலிலும், ஆயத்த ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளிலும், ஏனைய தொழிற்சாலைகளிலும் பெண்களின் உழைப்பு பெண் என்னும் அடையாள அடிப்படையில் கோரச் சுரண்டலுக்கு உள்ளாகி நிற்கிறது. இவற்றுக்கும் அப்பால் அரசாங்க தனியார் துறைகளில் வியாபார நிலையங்கள் உள்ளிட்ட தொழில்சார் தொழிலகங்களில் பெண்களின் உழைப்பு மலிவான கொடுப்பனவுகளால் உறிஞ்சி எடுக்கப்படுகிறது. அதேபோன்று நவீன தொழில் நுட்பமான கணனித் துறையில் பகட்டான பெயரில் உழைப்புச் சுரண்டல் தாராளமாகப் பெண்களிடத்தில் இருந்து பெறப்படுகிறது. ஒரு ஆணிடம் வேலை வாங்குவதைவிடப் பெண்களிடமிருந்து மலிவான சம்பளத்தில் வேலை வாங்கலாம் என்னும் பொதுப் புத்தி மனநிலை சமூக மயமாக்கப்பட்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. அதுவே இன்றைய யதார்த்தமாகவும் காணப்படுகிறது.

உழைப்புச் சுரண்டல் பெண்கள் மீதுள்ள பெரும்சுமையாக இருந்துவரும் அதே வேளை மதப்பண்பாட்டுச் சுமையானது பெண்கள் மீதான மற்றொரு பாரிய சுமையாகி நிற்கிறது. இவ்வாறு பெண்கள் மீதான இரட்டைச் சுமை உலகம் பூராவும் வியாபித்து நிற்கிறது. அதனாலேயே உலகம் பூராவும் பெண் விடுதலை என்பது அழுத்தம் பெற்று நிற்பதுடன் பெண்கள் பலநிலைப் போராட்டங்களிலும் செயலூக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதனைக் காணமுடிகிறது.

இவற்றின் ஊடே நோக்கும் போது நமது தமிழ்ச்சூழலில் நீடித்து வரும் பழைமைவாதப் பண்பாடானது பெண்கள் மீதான அழுத்தம் தரும் ஒன்றாகவே காணப்படுகிறது. இத்தகைய பண்பாட்டு மேலாதிக்கத்தைக் கேள்விகளுக்கு உட்படுத்த முடியாத மீற முடியாத நிலையின் நீடிப்பானது பெண்களையே அதிகம் பாதித்து வருவதைக் காணமுடிகிறது. மதத்திலும் புராணங்கள் இதிகாசங்கள் இலக்கியங்களில் பெண்கள் பெருமைப்படுத்தப்படுவதாக வியாக்கியானங்கள் கொடுப்பதன் ஊடே அடிப்படையில் ஆணாதிக்கம் கொண்ட பண்பாட்டு மேலாதிக்கமே மேலோங்கி நின்று வருகிறது. நாள்கோள் நல்ல நேரம் கெட்ட நேரம் பார்த்து நிற்கும் இரண்டு பஞ்சாங்கங்கள் மேலே குறித்த பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு வலுச் சேர்த்து நிற்கிறது. அதனடியாகவே பெண்கள் பிறப்பு முதல் இறப்புவரை பண்பாட்டு அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். திருமணம் என்பது சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படும் ஒரு விடயம் என்பது இன்னும் தமிழ்ச் சூழலில் நிலவிவரும் நம்பிக்கையாகும். அதே வேளை திருமணத்திற்கு சோடி தேடும் போது முதலில் கேட்பது சாதி, இரண்டாவது ஜாதகப் பொருத்தம், மூன்றாவது சீதனம், நான்காவது பெண்ணின் நிறம் அழகு போன்ற முன்வைப்புகளே திருமணங்களைத் தீர்மானிப்பவையாக இருந்து வருகின்றன. தமிழ்ச் சூழலில் சாதி, ஜாதகம் சீதனம்,

நிறம் போன்ற பழைமைவாதப் பண்பாட்டுக் காரணங்களால் முப்பது வீதமான தமிழ்ப் பெண்கள் முது கன்னியர்களாக இருந்து வருவதை ஒரு சமூக நல வைத்திய ஆய்வு எடுத்துக் கூறியுள்ளமை கவனத்திற்குரியதாகும். மேலே குறிப்பிட்ட சாதி, ஜாதகம், சீதனம் ஆகியவையே தமிழ்ச் சூழலில் ஆண் பெண் காதலித்துக் கலியாணம் செய்வதைத் தடைசெய்யும் இரும்புச் சட்டங்களாக இருந்து வருகின்றன.

இவற்றை நோக்கும் போது பழைமைவாதப் பண்பாட்டுக் கூறுகளே பெண்கள் பற்றிய மதிப்பீட்டிற்கான அளவு கோல்களாக இன்றும் வலிமையுடன் இருந்து வருகின்றன. இதனாலேயே புது யுகக் கவிஞனான பாரதி அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கினையும் நாய்களுக்குரியதாக எள்ளி நகைத்து நிராகரித்தார். பெண்களை வீட்டினுள் பூட்டி வைக்கும் வேடிக்கை மனிதர் என விசனம் தெரிவித்தார் பாரதி. எனவேதான் பாரதி கண்ட புதுமைப் பெண்கள் தோன்ற வேண்டும் எனக் கூறி பெண்விடுதலைக் கவிதைகளை யாத்துச் சென்றார். ஆனால் அத்தகைய புதுமைப் பெண்கள் தமிழ்ச் சூழலில் தோன்றுவதை இன்றுவரை ஆணாதிக்கம் கொண்ட மத பண்பாட்டு மேலாக்கம் தடுப்பதில் வலிமையுடையதாக இருந்து வருவதைக் காணமுடிகிறது. இப்பண்பாட்டு மேலாதிக்கத்தில் பாரிய உடைப்பு ஏற்படுத்தப்படாதவரை பெண் விடுதலை என்பது ஏட்டுக் கனியாகவே இருந்து வரும்.

பெண்ணடிமைத்தனத்தின் வேர்கள் நிலவுடைமைக்காலக் கருத்தியல் சிந்தனைகளில் வேர்கொண்டிருக்கின்றன. அவற்றில் இலகுவான வழிகளில் மாற்றங்களைக் கொண்டுவர இயலாது. அவற்றின் மீதான பலமுனைத் தாக்கங்கள் அறிவியல் சார்ந்த நடைமுறைகள் மூலம் நிகழ்த்தப்படல்வேண்டும். அவ்வாறு விடயங்கள் பல தளங்களிலும் முன்னெடுக்கப்படும் போது அங்கே மதப்பண்பாட்டின் வழியிலான சடங்குகள், கிரிகைகள் என்பன பழைமை, வழமை வழிகளால் மூடநம்பிக்கைகளாக மக்களின் மனங்களில் பதிய வைக்கப்படுகின்றன. அவற்றின் உயிர்ப்பு நீடிப்புக்கு சமகால கலைகளும் இலக்கியங்களும் திருவிழாக்களும் கேளிக்கைகளும் புரிகின்றன, பெண்ணானவள் இப்பிடத்தான் வாழவேண்டும் என்பதைச் சினிமா, சின்னத்திரை என்பன இலக்கணப்படுத்தி வருவது இன்றைய வலுவான போக்காகி நிற்கிறது.

அன்றைய கொலனிய காலத்தில் முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்துடன் கைகோர்த்து தன்நிலையை இரும்பாக்கிக் கொண்டது. இன்றைய நவ கொலனியக் காலகட்டத்தில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாகி உலகமயமாதல் மூலமான தனது இருப்பை நிலை நிறுத்தி நிற்கிறது. அத்தகைய உலகமயமாதல் மிக இலகுவான வழிகளில் மதப் பண்பாட்டு மேலாதிக்கத்துடன் இணங்கிப் பிணங்கி நிற்கிறது. ஏகாதிபத்தியத்திற்கு அடிப்படையான தேவை பணம்! பணம்! பணம்!! என்பதாகும். யார் எக்கேடு கெட்டாலும் தனது இலாப வெறியைத் தீர்ப்பதும் உலகினை தமது ஆதிக்கத்தினுள் கொண்டு வருவதும் அடிப்படை நோக்காகும். அதற்காக வர்க்க, இன, சாதிய, பால்நிலை முரண்பாடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது அவர்களது இயல்பாகும்.

அந்த வகையில் பெண்கள் மீதான பண்பாட்டு மேலாதிக்கம் நீடிப்பதையும் பெண்கள் அவற்றின் மீதான மூட நம்பிக்கைகளைப் பற்றிப் பிடித்து நிற்பதனையும்

வெவ்வேறு நிலைகளில் ஊக்கப்படுத்தவே அனைத்து சமூக அரசியல் பழமைவாத சக்திகளும் முனைந்து நின்று வருகின்றன. பஞ்சாங்கம், ஜாதகம், நாள்கோள் என்பனவற்றின் மீதான நம்பிக்கைகளுக்கு அடிப்படைக்காரணம் அச்சமாகும். அச்சத் தில் இருந்து மீண்டால் அதற்கு விஞ்ஞானத்தை அறிவு ரீதியாகச் சேகரித்தால் மூட நம்பிக்கைகளில் இருந்து படிப்படியாக விடுபட முடியும். அந்த வகையில் நமது தமிழ்ச் சூழலில் பெரும் பாறாங்கல்லாகவும் பெண்கள் மீதான சுமையாகவும் நீடித்து வரும் பண்பாட்டு மேலாதிக்கத்தின் ஆணாதிக்கக் கூறு உட்பட ஒவ்வொன்றையும் கேள்விக்கு உட்படுத்தி பெண்களையும் ஆண்களையும் அறிவியல் பூர்வமான விழிப்புணர்வுக்கும் நடைமுறைச் செயல்பூர்வ செயற்பாடுகளுக்கும் ஒன்றிணைக்க முடியும். அதற்கான கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

அந்த வகையில் தோழர் கலாலக்ஷ்மி முடிந்தளவிற்கும் தன்னளவிலும் பழைமைவாதப் பண்பாட்டு நடைமுறைகளை மீறல்களுக்கு உள்ளாக்கி வந்தார். பெண் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் ‘அப்படியே இரு’ என்பதனை தன் வாழ்வியலில் மீறியது மட்டுமன்றி தன்பிள்ளைகளுக்கும் அதனை வாழ்வுமுறையாகவும் வழிகாட்டி வளர்த்தார் என்பது குறிப்பிட வேண்டியதாகும். இவ்வாறு மாற்றுப் பண்பாட்டையும் அதனையொட்டிய விடயங்களை முன்னெடுக்கும் போது எழுந்த கேள்விகள் நடைமுறைகளில் குடும்ப கலந்தாலோசனை, ஜனநாயக உரையாடல், சமத்துவக் கருத்துக்கள் மேலோங்கி நின்றமை கவனத்திற்குரியதாகும். 2000ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தோழர் கலா ஒரு பெண் வேட்பாளராகக் கொழும்பில் எமது தரப்பால் முன்மொழியப்பட்டபோது அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு கொழும்பின் தமிழ் மக்கள் மத்தியில் கடுமையாகச்செயற்பட்டு கட்சியினதும் மக்களுக்குமான கொள்கையயைப் பரப்பியதுடன் கணிசமான வாக்குகளையும் பெற்றிருந்தார். அதற்குரிய துணிவும் தன்நம்பிக்கையும் எதிர்க்கருத்துகளுக்கு சரியான கருத்துக்களை முன்வைத்துப் பரப்புரைகளில் முன்னின்ற பாங்கினை அவ்வேளைகளில் காணமுடிந்தது. அத்தேர்தலில் அவரும் அவரது குடும்பம் முழுவதுமே முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டிருந்த மறக்கமுடியாத அரசியல் வரலாற்று நினைவுப் பதிவுகளாகும்.

நமது மாக்சிச லெனினிச அரசியல் பாரம்பரியத்தில் எதனையும் நூற்றுக்கு நூறாகக் கொள்வதில்லை. நிறைவுகளையும் குறைபாடுகளையும் எழுபது முப்பது என்பதாகவே கொள்வோம். எழுபது வீத நல்லம்சத்தை மேலும் அதன் எண்ணிக்கையை உயர்த்த விமர்சனம் சுய விமர்சனத்தை உள்ளக நிலையில் முன்னெடுக்கவேண்டும். அந்த வகையில் தோழர் கலாலக்ஷ்மி எழுபதுக்கு மேலான இலக்கங்களையே கொண்டிருந்தார். அதுவே அவரது நினைவுகளையும் இழப்பின் சோகத்தையும் நம் அனைவருக்கும் உணர்த்துகின்றது. அவரது நினைவுகளில் இருந்து கற்போம். அவரின் நினைவாகப் பெண்விடுதலைச் சிந்தனை மென்மேலும் விரிவு பெற்று முன்செல்ல வேண்டும்.

# பாரதி புகழ் பரப்பிய முதற் பெண்மணி பண்டிதை பத்மாசனி அம்மையார்

பேராசிரியர் செ. யோகராசா

இருபதாம் நூற்றாண்டு கண்டு கொண்ட முக்கியமான தமிழ் ஆளுமைகளுள் பாரதியார் முதன்மையானவர். அவரது மேதா விலாசம் அவர் வாழ்ந்த காலத்தில் உணரப்படவில்லை என்பதும் அது பற்றி முதன்முதலாக உணர்ந்து எழுதிய இருவருள் ஒருவர் ஈழத்தவரான விபுலானந்த அடிகளென்பதும் மற்றொருவர் சோமசுந்தர பாரதியார் என்பதும் பாரதியியல் ஆய்வாளர்கள் (உம்: பெ.சு.மணி, பேராசிரியர் கா. சிவத்தம்பி) தரும் செய்தி. எனினும், பாரதி புகழ் பரப்பிய முன்னோடிப் பெண்கள் பற்றி எவரும் குறிப்பிட்டாரல்லர்.

ஆக, அவ்விதத்தில் பண்டிதை பத்மாசனி அம்மையார் ஒருவரென்பதும், அவர் ஈழத்தவரென்பதும் இன்றுவரையான தேடலின்படி தமிழகம் உள்ளிட்ட தமிழ் ஆய்வாளர்களுள் அவரே முன்னோடி என்பதும் விதந்துரைக்கப்பட வேண்டியன வாம். இவை பற்றி சுருக்கமாக எடுத்துரைப்பது இன்றைய ஆய்வுச் சூழலுக்கு அவசியமாகின்றது.

முன்பதாக, பண்டிதை பத்மாசனி அம்மையார் பற்றிச் சில கூறவேண்டும். மதுரைத் தமிழ்ச் சங்கத்து பண்டிதர் தேர்வில் முப்பதுகளில் தேறிய ஈழத்தவர் ஐவருள் ஒருவரிவர். புலோலி ஊர் சார்ந்தவர். புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்தந்தாதி இயற்றியதனூடாக ஈழத்தில் மரபுவழிக் கவிதை எழுதிய முதற் பெண்ணாக விளங்கியவர். தோமஸ் கிரேயின் பாடல் மொழி பெயர்ப்பினூடாக ஈழத்தின் முதல் பெண் மொழிபெயர்ப்புக் கவிஞரானார் (இவரைப் பற்றி ஏலவே பேராசிரியர் சண் முகதாஸ் விரிவாக எழுதியுள்ளார்).

மேற்குறிப்பிட்ட பன்முக ஆளுமை கொண்டவரான பண்டிதை எழுதிய பாரதி கவிநயம் (பாரதி, உத்தம பாளையம், 1929 மார்ச்) என்ற கட்டுரையே எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது! அவரது கட்டுரைகளில் காண முடியாத சிறப்புக்களையும் அது கொண்டுள்ளமை முதலில் வற்புறுத்தப்பட வேண்டியதொன்று!

பாரதியாரின் கவிதையுலக சாதனைகளுள் முதன்மையானது அவர் தமிழின் முதல் அரசியல் கவிஞராகியமையாகும். அதனைச் சரியாக இனம் கண்டு தமது கட்டுரையில் பண்டிதை அது பற்றியே முதலில் குறிப்பிடுகின்றார். பின்வரும் பகுதி அதற்குச் சான்றாகும்:

இக்கவிஞர் பெருமான் தமது தாய்நாட்டின் நிலைமையையுற்று நோக்கினார். நோக்கும்போது, தேசமக்கள் அந்நியருக்கடிமையாயிருத்தலையும் தேசத்தின் பண்டைய பெருமையையும் தற்காலமிருக்கும் கேவலநிலைமையையும் பெருமை யடைதற்கேற்ற சாதனங்கள் நாட்டில் மலிந்திருத்தலையும் இன்ன பிறவற்றையும் நன்குணர்ந்தார். இவ்வுணர்ச்சியானது பாரதியாருள்ளத்திற் சுதந்திர தாகத்தை எழுப்பியது. அச்சுதந்திர தாகமானது பாரதியார் நாவினின்றும் கவியெனும் அமிர்தமாகச் சொரிய ஆரம்பித்தது....

பாரதியாரின் அரசியல் சார்ந்த கவிதைகளுள் வந்தேமாதரம் முக்கியமானது. பண்டிதை தொடர்ந்து அக்கவிதை பற்றியும் குறிப்பிடுவது கவனத்திற்குரியது.

பாரதியாரின் தமிழ்நாடு, தமிழ்மொழிப் பற்றினைப் பற்றி அடுத்ததாக பண்டிதை எடுத்துரைப்பதும் மனங்கொள்ளப்பட வேண்டியதே. ஏனெனில், பாரதியாரிடம் இந்திய தேசியத்திற்குச் சமமாக தமிழ்த் தேசிய உணர்ச்சியும் காணப்பட்டது என்பது பாரதி பற்றிய பார்வையில் முக்கியமானதொரு விடயமென்பது இலக்கிய ஆர்வலர் பலரும் அது பற்றிக் கவனிப்பதில்லை யென்பதும் மனங்கொள்ளத்தக்கது (பாரதியாரின் அத்தகைய ஆளுமையின் ஒடுக்கமே பாரதிதாசனின் ஆளுமையின் ஆரம்பமாகின்றமை யாமறிந்ததே).

இயற்கை மீதான பாரதியாரின் தீராமோகம் பற்றி எடுத்துரைப்போரும் அரிதே. பண்டிதை அது பற்றியும் விபரித்துள்ளார்.

இறுதியாகப் பண்டிதை குறிப்பிடும் விடயமானது அதாவது தோட்டக் கூலிகளைக் குறித்து "கரும்புத் தோட்டத்திலே" என்னும் அடியை முதலாகக் கொண்டு இவர் பாடிய பாடல் எவருள்ளத்தையும் உருகச் செய்யாது. எவர் கண்ணிலும் நீரைப் பெருக்காது. எவருள்ளத்தையும் கவராது? கல்லையுமுருக்கிக் கடுநெருப்பையும் குளிர்விக்குமன்றோ என்றவாறாமையாது பண்டிதையின் இரசனைப் பாங்கினை மட்டுமன்றி அவரது பெண் நிலை நின்ற பார்வையின் வெளிப்பாட்டினையும் உணர்த்துகிறது என்று கூறுவதில் தவறில்லை.

பண்டிதை பாரதியார் கவிதைகளின் பொருட் சிறப்புக்களை மட்டுமன்றி எடுத்துரைப்புத் திறன் பற்றியும் எடுத்துரைக்க தவறவில்லை. சந்தம், மெட்டு, இசை, சுவை முதலியன பற்றிக் குறிப்பிடுவதும் "இவர் மோனைக்கும் எதுகைக்கும் முரண்படாதிருக்க வேண்டுமென்பதும் நோக்கொடு கவிபாடினாரல்லர்" என்று கூறுவதும் கவனத்திற்குரியவை.

பாரதியாரின் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தை இவர் கண்டுள்ளமையும் பின்வரும் பகுதிகளினூடே வெளிப்படுகின்றது:

.... இவர் சந்திரன், சூரியன், சோலை முதலியவற்றின் இயற்கை வனப்பினை உற்று நோக்கி அதனாலுண்டாகிய இன்பத்தில் திளைத்தவராய்ப் பாடிய கவிகள் வாசிக்கும்போது இயற்கையோடிணைந்த இன்பத்தைப் பெருக்குகின்றன....

இவரைச் சூழந்துள்ள தோற்றங்களே இவருள்ளத்திற் புகுந்து கவியெனுமமிர்தமாகப் பெருக ஆரம்பித்தமையால் இவர் பாடல்களைப் படிக்கும்போது அவ்வத் தோற்றங்களை நேரில் கண்டடைவது போலிருக்கிறது.

இறுதியாகக் கூறவேண்டியதொன்றுள்ளது. பாரதியார் பற்றிய பண்டிதையின் பார்வை விரிந்ததும் ஆழமானதுமென்பதில் ஐயமில்லை என்பதே அது. சான்றாக பின்வரும் பகுதியை அவதானிக்கலாம்:

பாரத நாட்டிலமைந்துள்ள ஒவ்வொன்றையும் கவனிக்கும் போது இவர் நாவினின்றும் புதிய புதிய கவிகள் - புதிய புதிய துறைகள் - புதிய புதிய மெட்டுக்கள் - புதிய புதிய இசைகள் தேனாறு போன்று இனிமையுடன் வழிக் கொள்ளுகின்றன.

மேற்குறிப்பிட்டவாறமைகின்ற பண்டிதையின் தெளிவான குரலை அவரது சமகால முன்னோடிகளிடம் காணமுடியவில்லை என்பதே நமது கவனத்திற்குரியது.

# ‘0’ கலை ‘○’ அளிக்கும் சீன்கள் (பூஜ்ஜியம் கலை வட்டம்)

விஜித் சிங்

தொலைக்காட்சியுடனும் அளிக்கையையும் ஒரே மேடையில் பரீட்சார்த்த முயற்சி. நோலாலில் கப்பலில் ஏறும் மிருகங்கள், பறவைகள், நீரில் விடப்பட்ட மனிதன், ஒரு பூச்சி, ஏறமுடியாமல் போக தன் கையில் ஏற்ற அது தலையில் ஏறுகிறது. பூச்சியுடன் வாழ முயற்சிக்கிறான். பூச்சி அவனைச் சுற்றி கூடுகட்டுகிறது. உடல் முழுவதும் பாய்கிறது. இன்னும் பல பூச்சிகளை உருவாக்குகிறது.

தொலைக்காட்சி பெட்டியில் நோலா திரைப்படம் போக அதனுடன் அளிக்கை அளித்தல், பார்வையாளர்களை நடிகர்கள் தங்கள் பக்கம் இழுத்தல் மிகவும் கஷ்டமான செயற்பாடு. பார்வையாளர்கள் மிகவும் குறைவு. நடிகர்கள் மிகவும் அதிகம். எனவே பார்வையாளர்கள் மேடையில் ஏற்றப்பட்டார்கள். நடிகர்கள் நாற்காலிகளை அகற்றி மண்டபத்தில் அளிக்கை அளித்தார்கள். வந்தவர்களுக்கு மத்தளம் தட்டி பூமாலை சூடி பணமும் கொடுக்கப்பட்டது வாசலில் வைத்து. அவர்களுக்கு குளிர்பானம், பிஸ்கட் அளிக்கை நடக்கையில் ஊட்டப்பட்டது.

### கழித்தல்

கையை கட்டி நீரில் போடுகிறார்கள். நீர் கலங்குகிறது. வெளியில் நிற்பவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள். இளைஞன் தான் தண்ணீரை ஊத்தையாக்கிறான் என்று. மேடையில் ஒரு புறம் ஒரு வட்டத்தை சுழற்ற மேடையின் மறுபுறம் ஒருவன் கத்தி பதைத்து விழுந்து துடிக்கிறான். அடுத்து மேசையில் அடுத்து கதிரையுள் சுற்ற அந்த இளைஞன் மேடை விளிம்பில் தடுமாறி நடக்கின்றான். சவப் பெட்டியில் மேடையில் கிடக்கப்பட்டாலும், அவன் துடிதுடிக்கிறான். நீ சொன்னதாலே கொண்டனான். பிறகு அவன் என்னை முடிச்சுடுவான் என்று கொன்றன். பிறகு அவனிடமிருந்து தப்ப கொன்றன். கொன்று கொன்று வாழ்க்கை முழுவதும் கொல்லமுடியுமோ, என்னை விடுங்கோ. என்னை அழிக்கலாம். ஆத்மாவை அழிக்கலாம். எண்ணக்கரு அழிக்கபடலாம் என் ஆத்மா, என் எண்ணம் உனக்குள் ஒரு நாளில் வரும் என்ற வசனமும் மேடையில் மெழுகுவர்த்தியை சுற்றி கம்மி மெழுகுவர்த்தி எரிகின்றது. மெம்பி பாதுகாத்ததா, கம்பின் மீது மெழுகுவர்த்தி எரிகிறது.

### கொள்கரி

மேடையில் ஒவ்வொரு positionஇல் நடிகர்கள். தண்ணீர் இல்லை. பலி செலுத்த வேண்டும். ராசாத்தி ஊர்முழுவதும் பால் கொடுத்த பசு. இவர்களுக்கு மீசை முளைத்ததும், தலைமயிர் வளர்ந்ததும் இந்த ராசாத்தியின் பால்தனில் மட்டுமே, அதை கொல்ல வைக்கிறது. பலி கொடுக்கவேண்டும் மழைக்காக என்ற தத்துவம். மழை எப்படியப்பா இருக்கும் என்றபோது கூரையில் இருந்து ஒருவர் சலம் களிக்கிறார். மழை என்று ஊர் கூத்தாடுகிறது. சனங்களின் வாக்கெடுப்பில் ராசாத்தி வெல்கிறது. பிறகு மத்தியில் கமிட்டியில் ராசாத்தி கொல்லப்படுகின்றது. ராசாத்தி

வாயில் மண். எமது வாயில் ராசாத்தி. எல்லார் கையிலும் இராசாத்தியின் இரத்தம். ராசாத்தியை பிரிய வைக்கையில் மேடையில் தண்ணீர் பானையுடன் வந்த பெண் பானையை தண்ணீருடன் உடைக்கிறாள். வருகிறவர் வாளுடன் கூடையில் இருந்து மேடைக்குள் பாய்கின்றார். பார்வையாளர்கள் இது வேறு ஏதோ கதை என ஓட முயல்கின்றார்கள். கதவுகள் பூட்டப்பட கத்துகின்றார்கள். பாரி தேர் கொடுத்தான் முல்லைக்கு நெருச்சி செடுக்கி கொடுப்பானா?

## தலைப்பு எங்கை?

ஒரு வளர்ந்த பிள்ளை அழுகின்றது. நிற்பாட்டமுடியாமல் தவிக்கின்றார்கள். இருட்டில் கையில் விளக்குடன் ஒருவர் தீர்வு தேடுகிறார். சாஸ்திரம் முடியவில்லை. வைத்தியர் முடியவில்லை. உணவுகள் முடியவில்லை. கரப்பான் பாய்கின்றது. இதற்கிடையில் கரப்பானை கொல்ல முயற்சிக்கின்றார்கள். முடியவில்லை. ஓடுகின்றது. இறுதியில் commode இல் (மல ஆசனம்) இரசாயன மருந்து Pest control service ஆல் அடிக்கப்படுகின்றது. வீட்டுத் தலைவன் cigarette குடித்துவிட்டு போட வீடு பற்றி எரிகின்றது. என்ன கனக்க கதைச்சியள். எங்களுக்கு முன்னம் நீங்கள் ஓடுகின்றீர்கள். எல்லாரையும் சிரிக்க வைத்தது. அழுத பிள்ளையும் கரப்பானை கொல்லும் முயற்சியும் மாறி மாறி நடக்கின்றது. இறுதியில் இறந்தவர்களின் படங்களுடன் அளிக்கையாளர் அளிக்கைக்கு வந்தவர்களுடன் சேருதல்.

## அளிக்கைகளில் அழியப்பட்டவை

0 கலை ◌ அளிக்கும் -1

(பூஜ்ஜியம் கலை வட்டம்)

உலகத்தின் அழிவில் ஒருவன் மட்டும் மிஞ்ச அவன் விலங்குகளிடமிருந்து விலகி மனிதனை தேடுகிறான். இருப்பனே அவன் எதிரி. வாழவும் வேண்டும் எதிரியுடன் வாழவும் முடியாது. ஒரு துப்பாக்கி மிஞ்ச, ஒருவரை கொல்ல முயற்ச்சிக்கிறார்கள். அளிக்கைக்கு வந்தவர்களின் செருப்புகளை எடுத்து மேடையில் போட்டு ஒப்பிட்டுப் பார்க்கிறான். தேடிப்பார்க்கிறான். பொருந்தவில்லை. கைகளையும் கால்களையும் இருதயம் இழந்தவர்களின் Fashion show நடப்பதை நினைவூட்டுகிறான். நிறுத்து என்று கத்துகிறான். இது நடக்கும் போது ஓவியர்கள் அங்கு நடப்பதை மெழுகுவர்த்தி ஒளியில் சித்திரம் தீட்டுகிறார்கள்.

இறுதியில் ஒருவரை ஒருவர் கொல்ல முடியாமல் போகின்றது. வாழவும் முடியாது, இறப்பும் இல்லாமல் போகின்றது. இறுதியில் அளிக்கைக்கு வந்தவர்கள் தங்கள் தங்கள் செருப்பை தேடியது, பொருத்தமுடியாமல் தவித்தது களைத்து கண்ணீர் விளிம்பில்.

# கலாலஷ்மியின் நடிப்புத்திறன் வியப்படைய வைத்தது...

தமிழ்நிதி அருணா செல்லத்துரை

வெகுசனத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியின் ஒரு முக்கிய திருப்பு முனையாக 1981 களில் இலங்கையில் தொலைக்காட்சி சேவை தொடங்கியது. இதற்கென மேற்கு ஜேர்மனி சென்று தனியான பயிற்சி பெற்றவர்களில் நானும் ஒருவன். செய்தித் தயாரிப்புப் பயிற்சிக்காக புலமைப் பரிசில் பெற்றுச் சென்ற எனக்கு செய்தித் தயாரிப்போடு சேர்த்து நிகழ்ச்சித் தயாரிப்புக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

இக்காலத்தில் ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் என்ற பெயரில் அரச நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. கல்விச் சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்ற ஒப்புதலுடன் அரச தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டாலும் செய்திகள், விவரணங்கள், இசை நிகழச்சிகள், நாடகங்கள் போன்றவை தயாரிப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டன.

தொலைக்காட்சி ஒளிபரப்பில் நாடகங்கள் இரசனைக்குரிய நிகழ்ச்சியாக மாறத் தொடங்கின. ஏற்கனவே சிங்கள மொழியில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு சர்வதேச ரீதியிலும் பரிசில்கள் பெற்றிருந்தன. அதேபோல தனித்துவமான சிங்கள மேடை நாடகங்களும் மேடையேற்றப்பட்டும், வருடக்கணக்கில் வானொலி நாடகங்களும் ஒலிபரப்பாகி வந்தன. இதுவே சிங்கள மொழி தொலைக்காட்சி நாடகத் தயாரிப்புக்கான அடித்தளமாக அமைந்தது.

அதேபோல தமிழ்மொழி நிகழ்ச்சிகளுக்கென தனியான பிரிவு அமைக்கப் பட்டிருந்தது. அக்காலத்தில் மின்னியல் ஊடகத்துறையில் வானொலி நாடகங்கள் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தன. கூடுதலாக வானொலி நிலையத்தில் கடமை யாற்றியவர்களே தொலைக்காட்சித் துறைக்கு மாற்றப்பட்டிருந்தனர். தமிழ்மொழி தொலைகாட்சி நாடகங்களுக்கு தென்னிந்திய திரைப்படங்களும், நாடகங்களும் தமிழ்மொழி படைப்புக்களை அளவிடும் தராசாக இருந்தது என்று கூறலாம். தனியாக தமிழ்மொழிக்கான தனித்துவத்துடன் நாடகங்களை தயாரிக்க வேண்டிய தொலைக்காட்சி தமிழ்ப்பிரிவினர் அந்நிய மொழியில் இருந்து மொழி பெயர்த்து மேடையேற்றப்பட்ட நாடகத்தை, தொலைக் காட்சிக்கென நாடகமாக தயாரித்து ஒளி பரப்பு செய்து, அதனையே இலங்கைத் தமிழ் தொலைக்காட்சி நாடகத்தின் அளவு கோலாக வைத்தனர்.

அதற்குப்பின்னர் மிகவும் குறைந்த அளவிலேயே தொலைக் காட்சிக்கான தமிழில் குறுநாடகங்கள் பண்டிகை தினங்களுக்கெனத் தயாரிக்கப்பட்டன. தனியாக தொலைக்காட்சி நாடகங்கள் தயாரிப்பதற்கு பெருந்தொகைப் பணம் செலவிட திட்டங்கள் போடப்படடன. ஆனால் அரச கூட்டுத்தாபனத்தால், தமிழ்

விளம்பரங்களைப் பெற்று தயாரிப்புக்கான செலவை ஈடு செய்ய போதியளவு வருமானம் பெற முடியாத காரணத்தால் தயாரிப்புக்கான செலவைக் குறைக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது.

## கலையகப்படைப்பு :

தொலைக்காட்சி பயிற்சியை முறையாகப் பெற்றுக் கொண்டதின் காரணமாக செலவைக் குறைத்து எப்படி நாடகங்களை தயாரிக்கலாம் என்ற முயற்சியில் எனது பங்களிப்பை வழங்க முன்வந்தேன். சிங்கள மொழியில் குறு நாடகம் ஒன்றை வெளிக்களத்தில் தயாரிப்பதற்கு கிழமைக் கணக்கில் செலவழிக்கப்படுவது வழக்கம். சிங்களமொழி நாடகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் தொழில் நுட்பவியலாளர்களின் நிபந்தனையும் அக்காலத்தில் இருந்தது. அதனை ஈடு செய்யக்கூடிய அளவிற்கு விளம்பரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தைகளும் இருந்தன.

தமிழ்மொழியில் அவ்வாறு செய்ய முடியாது என்ற காரணத்தினால் அதனை மாற்றும் நோக்குடன் இரண்டரை நாட்களில் ஒளிப்பதிவு செய்து 'திருப்பங்கள்' என்ற குறு நாடகத்தை வெளிக்களத்தில் தயாரித்து செலவைக் குறைப்பதற்கான வழியை ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்டேன்.

தொலைக்காட்சி நாடகங்களின் தயாரிப்புகளுக்கு நேரடியாக ஏற்படும் காசுக் கொடுப்பனவுகளைக் குறைப்பதற்கு கலையகத்திலேயே அரங்கமைத்து நாடகங்களைத் தயாரிக்க முடியும் என்பதற்காக மூன்று அங்கங்களைக் கொண்ட நாடகத்தை தயாரிக்க பரீட்சார்த்த முயற்சியாக ஆரம்பித்தேன். இதற்கென தனியான பிரதிகள் எழுதப்படவேண்டும். கலைஞர்களால் வெளிப்படுத்தும் உணர்வுகள் ஒரே நேரத்தில் மூன்று கமெராக்களில் மூன்று கோணங்களில் எடுக்கப்படும். அந்தப் படங்களை சமகாலத்தில் படத் தொகுப்பு செய்து முழுநாடகமாக தயாரிக்க வேண்டும். இதுவே கலையக நாடகத் தயரிப்பில் உள்ள சவாலாகும்.

நெறியாள்கை, படப்பிடிப்பு கோணங்கள் போன்ற அறிவுறுத்தல்களுடன் பிரதியை எழுதவேண்டும். மேடை, வானொலி போன்ற ஊடகங்களுக்கு நாடகம் எழுதியும் நடித்தும் அதற்கான குரல் பயிற்சிகளையும் பெற்றிருந்தேன். இந்த அனுபவங்களின் மூலமும் தொலைக்காட்சி பயிற்சியை முறையாகப் பெற்ற காரணத்தாலும் அவற்றை அடிப்படையாக வைத்து கலையக நாடகத் தயாரிப்புக்கான ஆயத்தங்களைச் செய்தேன். அரங்கமைப்புக்கான வரைபடங்கள் முன் கூட்டியே தயாரிக்கப்பட்டு சிங்களமொழி மட்டும் பேசும் தொழில் நுட்பவியலாளர்களிடம் ஒப்படைத்து கலையகமும் தயார் செய்யப்பட்டது.

## நடிகர்கள் :

தொலைக்காட்சி நாடகங்களுக்கு கதாபாத்திரங்களை தெரிவு செய்யும்போது பல அடிப்படைத் தேவைகளை கவனிக்க வேண்டும், முகபாவத்தில் உணர்வுகளை வெளிப்படுத்த கண்கள் பேசவேண்டும், கன்னங்கள் அசைய வேண்டும். அவையும் கமெராவிற்கு பொருத்தமானவையாக இருக்க வேண்டும். சந்தோஷமாக இருப்பதை பற்களோடு சேர்த்து கண்களும் சிரிக்க வேண்டும். அதே நேரம் சோகத்தை வெளிப்படுத்த கண்கள் மட்டுமல்ல, முகம் முழுவதும் சோக உணர்வுகளை மிகவும் துல்லியமாக வெளிப்படுத்த வேண்டும்.

தொலைக்காட்சி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால் அக்காலத்தில் இருந்த மிகவும் பிரபலமான அனுபவம் மிக்க நடிகர்கள், வானொலி மற்றும் மேடை நாடகப் பாணியையே தொலைக்காட்சி நாடகங்களுக்கும் பின்பற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. ஒரு காட்சி ஊடகம் என்பதினால் இதற்கான நடிப்புப்பாணியையும், உணர்வுகளை குரல் மூலம் வெளிப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தது. ஒரே நேரத்தில் வசனம் பேசி உணர்வுகளை வெளிப்படுத்தி நடிக்க வேண்டும். இவை மூன்றும் ஒரே நேரத்தில் படம் பிடிக்கப்படும். நாடகத்தில் நடிப்பதற்கான நடிகர்களைத் தேடும் படலம் ஆரம்பித்தது.

## *கலாலஷ்மி :*

1990களில் சட்டத்தரணி சோ.தேவராஜா அவர்களும் தேசிய கலை இலக்கிய பேரவையின் அறிமுகமும் நண்பர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியின் ஊடாக எனக்குக் கிடைத்தன. அதற்குப் பின்னர் தேவராஜா அவர்களின் மனைவி கலாலக்ஷ்மியும் அறிமுகமானார்.

நாடகத்தில் செல்லம்மா என்ற கதாபாத்திரத்தில், இளமையாகவும் முதுமையாகவும் நடிக்க வேண்டிய நடிகை ஒருவர் தேவைப்பட்டார். மிகவும் எளிமையானவராகவும் கண்கள் தீர்க்கமானவையாகவும் இருக்க வேண்டும். உடனே எனது ஞாபகத்தில் செல்லம்மா கதாபாத்திரமாக மாறி கண் முன்னே தோன்றியவர் கலாலக்ஷ்மியாகும்.

அவருடைய வீடு தேடிச்சென்றேன். கலா அமைதியானவர். யோசித்து யோசித்து மிகவும் ஆறுதலாக பேசுவார். அவரது வார்த்தைகள் மிகவும் தெளிவாகவும் அழுத்தமாகவும் அர்த்தம் பொதிந்தவையாகவும் மெதுவாகவும் வெளிவருவதைக் கண்டு எனது கதாபாத்திரத்திற்கு இவரே பொருத்தமானவர் என்பதை உறுதி செய்து கொண்டேன்.

## *நாடகப் பயிற்சி :*

குறிப்பிட்ட நேரத்திற்கு மிகவும் ஆர்வத்துடன் நாடகப் பயிற்சிகளுக்கு வருவார். பயிற்சிகளில் சொல்லிக் கொடுப்பவற்றை முழுமையாக உள்வாங்கிக் கொள்வார். இதனால் அவர் தன்னை அந்தக் கதாபாத்திரமாக மாற்றி ஒரு முழுமையான தொலைக்காட்சி நாடக நடிகையாக வளர்த்துக் கொண்டதை கண்டு வியந்து விட்டேன். அவருடைய நடிப்புப்பாணியை பின்பற்றி பிரபலமான நடிகர்களும் தங்களை மாற்றிக் கொண்டதை படப்பிடிப்பின்போது உணர்ந்து கொண்டேன்.

29 வருடங்களுக்கு முன்னர் இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியில் நாடகம்

முதலாம் அங்கம் 01-04-1991 லும்,

இரண்டாம் அங்கம் 08-04-1991லும்

மூன்றாம் அங்கம் 15-04-1991லும்

இரவு 7.00. தொடக்கம் 7.30 வரையும் ஒளிபரப்பாகியது.

இந்த நாடகம் அடங்கிய பிரதி ‘வீடு’ என்ற தலைப்பில் நூலுருவில் 1992ம் ஆண்டு வெளிவந்தது.

இளம் வயதில் உத்தியோகத்தின் நிமித்தம் இரண்டு பிள்ளைகளுடன் கொழும்பில் வாடகை வீட்டில் தங்கியிருக்கும் குடும்பத் தலைவியாக கலா நடித்தார். அது அவருக்கு ஏற்பட்ட உண்மையான அனுபவமாகவும் இருந்தது. தங்களுடைய உத்தியோகத் தேவைகள் முடிவடைந்ததும் கணவன் கனகசபையும் மனைவி செல்லம்மாவும் யாழ்ப்பாணத்திலுள்ள தமக்குச் சொந்தமான நாற்சார வீட்டிற்குத் திரும்பி வந்து, பெரிய வீட்டுக் கடமைகளைத் தனியச் செய்வதற்கு மிகவும் கஷ்ரப்பட்டனர் என்பது, எதிர்காலத்திற்கான யதார்த்த படைப்பாகும்.

கனகசபை: வாழவேண்டிய நேரத்திலை எல்லாம், கொழும்பிலை சின்ன அறைக்குள்ளையே சீவியம் நடத்தினம்.

செல்லம்மா: அதுக்காக உத்தியோகத்தை விட்டிட்டு வர ஏலுமே...

கனகசபை: வாழவேண்டிய வயதிலை வீடில்லாமல் அலைஞ்சு திரிஞ்சம். இப்ப சாக வேண்டிய நேரத்திலை வீடு கூட்ட ஏலாமல் இருக்கிறம்.

செல்லம்மா தனது பெருமையை, ஏக்கத்தை கூறியபோது சமூகம் உத்தியோகத்திற்கு கொடுத்திருந்த முக்கியத்தவத்தை கலாவின் குரல் வெளிப்பாடு செய்த விதம் அவர் எவ்வளவு தூரம் கதாபாத்திரமாக மாறியிருந்தார் என்பது என்னைக் கவர்ந்திருந்தது.

இந்தக் காட்சியை உண்மையிலேயே கலா யாழ்ப்பாணத்தில் வந்திருந்தபோது அடிக்கடி நினைவு கூர்ந்தார் என்று அண்மையில் என்னைச் சந்தித்த தேவராஜா அவர்கள் கூறிய போது, எனக்கு கவலையாக இருந்தது. ஏனெனில் நானும் இப்போது இதனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன்.

இந்த நாடகத்தில் நடித்த எஸ்.எஸ். கணேசபிள்ளை, பிராங் புஷ்பநாயகம், கமலினி செல்வராசன் போன்றவர்களுடன் கலாவும் எம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்று நினைக்கும் போது கண்கள் கலங்குகின்றன.

கலா நடித்த ‘வீடு’ நாடகம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பானபோது ஒளிப்பதிவு செய்த இறுவட்டின் பிரதி யொன்றினை அவரின் ஞாபகமாகக் கொடுத்து, கணவர் சோ.தேவராஜா அவர்கட்கும், அவரது மகள் அபிலாஷா மகன் ஜனமகன் பேரப்பிள்ளைகளுக்கும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# செயல்வாதப் பயணம் ஒன்றின் மீட்டல்கள்

சர்வமங்களம் கைலாசபதி

கலாலக்ஷ்மி தேவராஜாவின் முதலாம் ஆண்டின் நினைவாக இவ்வரலாற்றுக்குறிப்பைப் பதிவு செய்வது ஆத்ம திருப்தியும் அவரின் நினைவுப் பகிர்வுமாக அமையும் என்ற நம்பிக்கையுடன்

1980களில் நடந்தவற்றை மறக்க முன்னர் எழுத வேண்டும் எனப் பலமுறை ஆரம்பித்தேன். நெருங்கிய சினேகிதிகள் எழுதும்படி உற்சாகம் ஊட்டிக் கொண்டிருந்தனர். சிந்திக்க ஆரம்பிக்கும் பொழுது முதலில் நினைவுக்கு வருவது 1981ம் ஆண்டு யாழ் நூல்நிலைய எரிப்புத்தான். அந்த நிகழ்வு பலரையும் மிகவும் பாதித்த ஒன்றாகும். அது மனதில் உறைந்து போன துன்பமான விசயம். ஒவ்வொரு கிழமையும் நூல்நிலையம் சென்று பிள்ளைகளும் நானும் படித்தவற்றைக் கொடுத்து விட்டுப் புதிய நூல்களை எடுத்து வருவோம். அங்கு செல்வது அன்றோடு நின்று விட்டது.

அடியும் முடியும் தேடும் போது 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் தான் நினைவில் வருகிறது. பெரும்பாலான நமது மக்களுக்கு பயங்கர அனுபவங்களைக் கொடுத்து, உலகின் பல பகுதிகளுக்கும் சிதற அடித்து விட்டது. நாங்களும் மற்றவர்களைப் போல் ஏக்கமும் குழப்பமும் அடைந்த நிலையில் ஒரு தீர்மானத்தை எடுத்தோம். கொழும்பு வீடு எரிந்த நிலையில் சில காலம் தமிழ் நாட்டில் இருக்கலாம் என்று அங்கு சென்றோம். அங்கு பாதுகாப்பாய் இருக்கும் என்ற எண்ணம் பலருக்கும் இருந்தது. அந்த சமயம் யாழ்ப்பாணம் திரும்பி வரவேண்டும் போல எண்ணம் வரவில்லை. அதற்கு முக்கிய காரணம் திருநெல்வேலியில்தான் 1983 ஆடியில் 13 சிங்கள இராணுவத்தினர் கண்ணிவெடியில் இறந்தனர். அதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் பல பொதுமக்களைச் சுட்டனர். இது நடந்தது எங்களது வீட்டுக்கு அருகாமையில். எங்களுக்கு நன்கு தெரிந்த குடும்பமும் இறந்து போனார்கள். இதனால் திரும்பி அங்கு போகத் தயக்கமாக இருந்தது. என் கணவரும் இறந்து 6 மாதங்களே ஆகியிருந்தது. அவரில்லாமல் அதே வீட்டில் போயிருக்க யோசனையாக இருந்தது. அத்துடன் எங்கள் வீடு தனிமையான இடத்தில் இருந்தது. ஆகவே பாதுகாப்பைப் பற்றியும் யோசிக்க வேண்டி இருந்தது.

வாடகைக்கு ஒரு சிறு வீடு எடுத்து சென்னையில் குடியேறினோம். பிள்ளைகளுக்கு ஒரு பள்ளிக் கூடத்தில் இடமும் எடுத்து பள்ளி செல்லத்

தொடங்கினர். அப்போது ஒரு நாட் காலை எங்கள் நண்பர் சுந்தரலிங்கம் "டாக்டர் குமாரி ஜயவர்த்தனாவும் கம்லா பாசினும் உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள் பக்கத்தில் ஒரு இடத்தில் தங்கியிருக் கிறார்கள்" என்று ஒரு முகவரியைத் தந்தார். புதிய இடத்தில் தனித்துப் போயிருந்த எனக்கு இந்த செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தந்தது. சொன்ன விலாசத்திற்கு விரைந்து சென்றேன்.

டாக்டர் குமாரி ஜயவர்த்தனாவை எனக்கு முன்னரே தெரியும். எனது மறைந்த கணவரும் குமாரியும் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சக பேராசிரியர்களாக இருந்தனர். குமாரியிடம் இருந்துதான் நான் பெண்ணிலைவாதம் பற்றி முதலில் கேள்விப்பட்டேன். புத்தகங்கள் படித்தேன். குமாரிதான் கமலா பாசின், நிகத்கானையும் அவர்களது பெண்ணிலைவாத வேலைகளைப் பற்றியும் கூறுவார். இந்த மூன்று பெண்களது அறிவும், பெண்கள் விடயத்தில் இருந்த அர்ப்பணிப்பும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. குமாரியைத் தவிர மற்றையோரை அப்போது தான் முதல் முறை பார்த்தேன். அதுவரை பெயரளவில்தான் அவர்களைப் பற்றித் தெரிந்திருந்தேன். சந்திரலேகா பரத நாட்டிய வித்தகராக இருந்து புதிய நவீன பரிசோதனை நடன நிகழ்சிகளை அரங்கேற்றி வந்தார். பெண்ணிலைவாத கோணத்தில் இருந்து நடன நாடக நிகழ்ச்சிகளை வடிவமைத்தார்.

கடற்கரைக்கு அருகில் skills என்ற கலை நாட்டிய நிலையம் தான் அந்த விலாசம். அங்கு தான் நடனத்திற்குப் பேர்பெற்ற சந்திரலேகாவின் வீடும் இருந்தது. சந்திரலேகாவை அப்போது தான் முதன் முறை சந்தித்தேன். குமாரி, கமலா பாசின், நிகத் கான், சந்திரலேகா எல்லோரும் அன்பாக வரவேற்றனர். அடுத்த 5 நாட்களும் தாங்கள் தெற்காசியப் பெண்களின் பயிற்சிப் பட்டறை நடத்தப் போவதாகவும் என்னையும் அதில் சேர்ந்து கொள்ளுமாறும் அழைத்தனர். என்னால் நம்பவே முடிய வில்லை. உடனேயே ஒத்துக் கொண்டேன். நேபால், இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான், இலங்கையில் இருந்து 20 பெண்கள் பட்டறைக்கு வந்திருந்தனர். அடுத்த 5 நாட்களும் நிறையக் கற்றுக் கொண்டேன். எதிர்காலத்தில் இந்தப் பயிற்சி எவ்வளவு உதவப் போகின்றது என்று எனக்கு அப்போ தெரிந்திருக்கவில்லை. என்னில் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணர்ந்து கொண்டேன்.

1984 தை மாதம் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து பூட்டிக் கிடந்த எங்கள் வீட்டைத் துப்பரவு செய்து வாழ ஆரம்பித்தோம். பழைய சிநேகிதிகள் மத்தியில் இருந்தோம். 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் பற்றியும் அது எப்படி அனைவரைப் பாதித்தது பற்றியும் மக்கள் சந்திக்கும் போது பேசினார்கள். அது மன ஆறுதலடைய அவர்களுக்கு உதவியிருக்க வேண்டும்.

அந்த சமயம் நிறைய ஆண் பிள்ளைகள் தெருக்களில் காணப்படாததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. வாரங்கள் செல்லத்தான் தெரிய வந்தது அவர்கள் பெற்றோருக்குத் தெரியாமல் போய் விட்டார்கள் என்று. இதுவும் தாய்மார் களால் இரகசியமாகவே சொல்லப்பட்டது. இரகசியமாக இந்த விசயங்களை வைத்திருப்பதும் பலர் இருக்கும் இடங்களில் அதிகம் பேசுவதைத் தவிர்ப்பதும் ஒரு புதிய கலாசாரம் ஆகியது. 1984 இல் நாங்கள் 5 சிநேகிதிகள் மிகவும் நெருக்கமாக இருந்தோம். அதில் இருவர் 1983இல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தவர்கள். நாங்கள் கிணற்றுத் தவளைகளாகி விடுவோமோ என்ற பயம் இருந்தது. யாழ்

வாசிகசாலையும் எரிந்து விட்டது. நாங்கள் நிறைய வாசிக்க வேண்டும், அவை பற்றி நம்மிடையே கலந்துரையாட வேண்டும் என்று பெண்கள் ஆய்வு வட்டம் என்ற குழுவை அமைத்து ஒழுங்காக ஒன்றை விட்டு ஒரு சனி எங்கள் வீட்டில் கூடினோம். ஏதாவது ஒரு நூலைப் படித்து விட்டு, பின்னர் அதனைப் பற்றி நிறைய விவாதிப்போம். எங்கள் அங்கத்தவர்கள் 5, 6 பேராக இருந்து 15 பேராக வளர்ந்தது. அதில் சிலர் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள். புத்தகங்களுக்கு அப்பால் யாரும் ஏதும் பேச விரும்பினால் அவற்றையும் விவாதிப்போம். நாங்களும் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதினோம். நாங்கள் எழுதிய கவிதைகளை சொல்லாத சேதிகள் என்ற சிறு நூலாக வெளியிட்டோம். பின்னர் ஒரு கட்டுரைத் தொகுப்பும் புத்தகமாக வெளியிட்டோம். எனக்கு ..... என்ற கவிஞரின் வரிகள் 2 வரிகள் மிகவும் பிடித்தன. “என்னுடைய சகோதரிகள் உரிமைகளுக்கு நான் போராடா விட்டால் அவள் என்றும் அடிமையாக இருப்பாள்”.

ஆவணி மாதம் 1984 இல் ஒருநாள் வல்வெட்டித்துறையைச் சுற்றி வளைத்து இராணுவம் 360 பிள்ளைகளைக் கொண்டு சென்று விட்டது என்ற அவலமான செய்தி வந்தது. எதிர் காலத்தில் வல்வெட்டித்துறைக்கு நடந்தது போல மற்றக் கிராமங்களுக்கும் நடக்கலாம் என்ற பயம் எல்லார் மனதிலும் குடிகொண்டது. எங்கள் பெண்களில் சிலர் வல்வெட்டித்துறைக்கு சென்று நடந்தவற்றை அறிந்து வந்தனர். எங்கள் பெண்கள் வட்டம் சிநேகிதிகள் இந்த விசயத்தைப் பற்றி நிறையப் பேசினோம். என்ன செய்யலாம் என்று நிறைய சிந்தித்தோம். இதற்குப் பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டால் மீண்டும் மீண்டும் சுற்றி வளைப்புகளும் கைது செய்தலும் நடைபெறும் என்பது மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிந்தது. எங்களில் நான்கு பேர் நெருங்கிய சிநேகிதிகள். அரசியல் விசயங்களில் முற்போக்குக் கருத்துக் கொண்டவர்கள். இந்த நேரத்தில் பொது மக்களாகிய நாம் கட்டாயம் எமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் – தாய்மாரின் ஓர் ஊர்வலம் வைத்து அரச அதிபருக்கு ஒரு மகஜரில் அதனை சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தோம். அதற்கு ஒரு பரந்த முன்னணி வேண்டும் என்று தெரிந்தது.

ஒரு பெரிய ஊர்வலமாக இருந்தால்தான் அதில் பயனிருக்கும் என்று எங்களுக்குத் தெரிந்தது. அத்தோடு அதனை சீக்கிரமாகவும் ஒழுங்கு செய்யவும் வேண்டும். எங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்த 5 பேருடன் வாருங்கள் ஒரு கூட்டம் போட வேண்டும் என அழைத்தோம். வல்வெட்டித்துறையில் நடந்தது எல்லாரையும் பாதித்திருந்தபடியால் பல பெண்கள் வந்திருந்தனர். இந்த மாதிரி இனியும் நடக்காமல் இருக்க என்ன செய்யலாம் என்று நன்கு கலந்தாலோசித்தோம். ஒரு குழு அமைத்தோம். நமக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தோம். ஊர்வலம் நடத்துவதற்கு மகஜரை ஜீ.ஏ யிடம் கொடுப்பதற்கு பலருடைய ஆதரவும் இருந்தது. இதனால் வெற்றி கிடைக்குமா எனப் பலர் சந்தேகத்துடன் கேட்டனர். சுற்றி வளைத்துப் பிள்ளைகளைப் பிடிப்பதை நிறுத்த வேண்டும் என்ற உறுதி எல்லாருக்கும் இருந்தது. வல்வெட்டித்துறையில் இருக்கும் தாய்மாரை அழைத்தவர சில பெண்கள் பொறுப்பெடுத்தனர். நோட்டீஸ் அடிக்கத் தீர்மானித்தோம். அதற்கு முன்னர் திகதியைத் தீர்மானித்தோம். எங்களுக்கு ஒரு பெயர் தேவைப்பட்டது. எத்தனையோ பெயர்களைப் பட்டியல் எழுதி கடைசியில் அன்னையர் முன்னணி எனப் பெயர் வைத்தோம். அந்தப் பெயருடன் நோட்டீஸ் அடிக்க ஏற்பாடுகள்

செய்தோம். கெடுபிடிகள் இருந்ததால் ஓரளவு கவனமாகவும் நிதானமாகவும் வேலை செய்தோம். நோட்டீஸ் அடிக்கக் கூட எங்களிடம் பணம் இருக்கவில்லை. ஒரு சிநேகிதி 500 ரூபாவை காணிக்கையாக மேசையில் வைத்தார். அந்தப் பணத்தில் தான் நோட்டீஸ் அடித்தோம்.

வீடு வீடாகச் சென்று தாய்மாரை ஊர்வலத்திற்கு வரும்படி அழைத்தோம். பிள்ளைகள் உள்ள தாய்மார் கட்டாயம் வருவார்கள் என்று நம்பினோம். அப்பொழுதுதான் பெண்களை வீட்டை விட்டு வெளியே கொண்டு வருவது எவ்வளவு கஷ்டமான விசயமென்று தெரிந்தது. ஒரு கலியாண வீடு செத்த வீடு என்றால் தான் வெளியே போவார்கள். கோயிலுக்குப் போவார்கள். ஊர்வலத்துக்கு அழைத்த போது சுகமில்லை, கணவன் வர விடமாட்டார் என்று பல காரணங்களைச் சொன்னார்கள். நாங்கள் "உங்கள் பிள்ளைகளைப் பிடித்துச் சென்றால் ஒருவரும் உதவ வரமாடடார்கள். பெண்கள் ஒன்று சேர்ந்தால்தான் இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும்" என்று விளங்க வைத்தோம். பல பெண்கள் உற்சாகமாக எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள். உதவவும் செய்தார்கள். ஓரளவு இரகசியமாகவே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததால் வீடு வீடாகச் சென்று அழைத்துக் கூட்டம் போட வேண்டி இருந்தது.

இன்னுமொரு விடயமும் கவனிக்கக் கூடியதாக இருந்தது. அது என்னவென்றால் பிற்போக்குச் சிந்தனையும், ஆணாதிக்கமும் அதிகம் இருந்த குடும்பத்து ஆண்கள் எங்கள் முயற்சி சரிவராது என்றும், எல்லாப் பொம்பிளைகளும் சுடுபட்டுச் சாகப் போகிறீர்கள் என்றும் பலவிதமாக எங்களைப் பின்வாங்க வைக்க முயற்சி செய்தார்கள். நாங்கள் இவர்களுடைய வெருட்டல்களுக்குப் பயப்படவில்லை. நாங்கள் போகும் பாதை சரியானதுதான் என்று தெளிவாக இருந்தோம். அதே சமயத்தில் பல ஆண்கள் எங்கள் முயற்சிக்கு ஆதரவாக இருந்ததுடன் தமது மனைவி பிள்ளைகளை ஊர்வலத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர்.

ஊர்வலத்தை யாழ் பஸ்தரிப்பு நிலையத்தக்கு அருகில் ஆரம்பித்து யாழ் அரசாங்க அதிபர் காரியாலயத்தில் முடிவடையத் திட்டம் போட்டிருந்தோம். நாங்கள் கையில் எடுத்துச் செல்லும் பதாதைகளின் வாசகங்கள். சுற்றி வளைப்பு, பிள்ளைகளைப் பிடித்துச் செல்லுதல் சம்பந்தமாகவே இருக்க வேண்டு மென்பதில் கண்காணிப்பாக இருந்தோம். பல இயக்கங்களும் இருந்ததால் அவர்களும் தங்களுடைய ஆதரவாளர்களுடன் ஊர்வலத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்பதை அவதானிப்புடன் இருந்தோம். அன்னையர் முன்னணி என்ற பதாகையையும் தயார் செய்தோம். யாரிடமும் நாம் எந்தப் பண உதவியையும் கேட்கவில்லை. நாங்களே எமக்குள்ளேயே எல்லா செலவுகளையும் பார்த்துக் கொண்டோம். நாங்கள் நன்கு இயங்கிய முதல் மூன்று வருடங்களும் எவ்வித வெளி உதவியின்றி நன்கு இயங்கி வந்தோம்.

ஊர்வலம் வைக்க வேண்டிய நாளும் வந்தது. சரியான பரபரப்பு! எல்லாம் ஒரு அசம்பாவிதமும் இன்றி நடக்க வேண்டும் என்ற படபடப்பு. விடியவே சமையல் எல்லாரும் செய்து முடித்து விட்டு திருநெல்வேலி பெண்கள் எல்லாரும் யாழ் பஸ்தரிப்பு நிலையம் சென்றோம். மெள்ள மெள்ள தொலைவில் இருந்து வந்த பஸ்வண்டிகளில் பெண்கள் வந்து இறங்கினார்கள்.

பிள்ளைகளைப் பறி கொடுத்த தாய்மாரின் சோகம் அப்படியே தெரிந்தது. எங்களைக் கண்டவுடன் அழ ஆரம்பித்து விட்டார்கள். நம்மில் சிலர் அவர்களை அழைத்துக் கொண்டு ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்திற்கு நடந்தார்கள். அடுத்த ஒரு மணிநேரம் வரை பஸ்களில் தாய்மார்கள் வந்தபடியே இருந்தார்கள். எங்களால் நம்ப முடியவில்லை. அவ்வளவு பெண்கள் வந்து இறங்கினார்கள்.

சொன்ன நேரத்திற்கு நாங்கள் ஊர்வலத்தை ஆரம்பித்தோம். அன்னையர் முன்னணி பதாகையை ஏந்தியவர்கள் முன்னால் செல்ல வல்வெட்டித்துறை அம்மாமார் முன்னால் வர மற்றையவர்கள் பின்னால் வந்தார்கள். ஆயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் நடந்தனர். வழியிலே பார்க்க வந்த பெண்களும் சேர்ந்து கொண்டனர். ஊர்வலம் கச்சேரியை ஒரு அசம்பாவிதமும் இல்லாமல் அடைந்தது. அங்கு கச்சேரி நுழைவாசல் மூடப்பட்டு இருந்தது. பெருந்திரளான பெண்கள் வருவதைக் கண்டுதான் பாதுகாப்பாகப் பூட்டி வைத்தார்களோ.? திறவுங்கள் அரசாங்க அதிபருடன் நாங்கள் பேச வேண்டும் என்று காவலாளியிடம் கூறினோம். “5 பேர் மட்டும் வாருங்கள். மற்றவர்கள் இங்கு நில்லுங்கள்.” என்றார். அவர் கேட்டைத் திறந்தது தான் எல்லோரும் உள்ளே தள்ளிக் கொண்டு போய் விட்டோம். அம்மாக்களின் அழுகை ஓலம் பயங்கரமாக இருந்தது.

அரசாங்க அதிபரின் அறைக்குள் சென்றோம். ஆயிரக் கணக்கான தாய்மார்கள் காரியாலயத்தின் உள்ளேயும் வெளியேயும் நின்றார்கள். தாய்மாரின் ஓலச் சத்தத்தில் அதிபருடன் பேச முடியவில்லை. அம்மாக்களின் அழுகைச் சத்தம் குறைய நாங்கள் சொல்ல வந்ததை சத்தமிட்டு சொல்லி “360 பிள்ளைகளை உடனே வீட்டுக்கு அனுப்ப வேண்டும். மீண்டும் கிராமங்களை சுற்றி வளைப்பதை நிறுத்த வேண்டும்” என்றோம். எங்களுக்கு அரசிடம் இருந்து ஒரு பதில் உடனேயே வேண்டும் என்று கேட்டோம். அவர் உடனே தொலைபேசியில் மந்திரியைக் கூப்பிட்டார். நிலவரத்தை அவருக்கு விளக்கினார். தாய்மார் உடனே பிள்ளைகளை விடுதலை செய்து வீட்டுக்கு அனுப்பாவிட்டால் அங்கேயே இருக்கப் போகிறார்களாம் என்றார். பள்ளி செல்லும் பிள்ளைகளைப் பிடித்து கப்பலில் பூசா சிறைக்கு அனுப்புவது போன்றவற்றை அரசு செய்யக் கூடாது என்று நாம் சொன்னோம். அதனையும் அவர் மந்திரிக்குச் சொன்னார்.

மந்திரியுடன் கொஞ்ச நேரம் பேசி விட்டு “அன்னையர் முன்னணி குழுவினருடன் பேசி இதனைத் தீர்க்க மந்திரி தயாராக இருக்கிறார். உங்களை அழைத்து வருவதற்கு ஒரு ஹெலிகொப்டர் அனுப்புவதாகவும் கூறினார்” என்றார். நாங்கள் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. இதனைப் பேசித் தீர்ப்பதற்கு ஒன்றும் இல்லை. பிடித்த பிள்ளைகளைத் திருப்பி அனுப்புங்கள். மீண்டும் இந்த மாதிரி சுற்றி வளைப்புகள் நடைபெறக் கூடாது என்று மீண்டும் வலியுறுத்தினோம். அம்மாக்களின் ஓலத்தின் மத்தியில் அதிபரும் மந்திரியும் எங்களிடம் கேள்விகள் கேட்டனர். நாங்கள் விடாப்பிடியாக நின்றோம்.

கடைசியில் மந்திரி இரு தினங்களில் பிள்ளைகளைப் பதிவு செய்து விட்டு கட்டாயமாகத் திருப்பி அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்தார். இனி மேலும் சுற்றிவளைப்புகள் நடைபெறமாட்டாது என்று உறுதியும் கூறினார். அரசாங்க அதிபருக்கு நன்றி கூறி விட்டு எல்லோரும் வெளியே சென்றோம். வல்வெட்டித்துறைத்

தாய்மாருக்கு பிள்ளைகள் வீடு திரும்பியவுடன் எமக்கு அறிவிக்கும்படி கூறினோம். முதல் கட்டம் வெற்றி பெற்றது பற்றி எங்களுக்கு மிகவும் சந்தோசம். அவர்கள் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நம்பிக்கை. தூரத்தில் இருந்து வந்த பெண்களிடம் எல்லாம் பேசி அவர்களை அனுப்பி விட்டு நாம் ஒருவர் வீட்டில் கூடி அன்று நடந்தவற்றை ஆராய்ந்தோம்.

நாங்கள் வெற்றிகரமான ஒரு முயற்சியை நடைமுறைப் படுத்திவிட்டோம் என்ற சந்தோசம் எல்லாரிடமும் இருந்தது. இரண்டு நாட்களில் சொன்னபடியே பிள்ளைகள் எல்லாம் வீடு திரும்பினர். இருபது பேரின் விசாரணை முடிந்தவுடன் அவர்களையும் அனுப்பி விடுவதாக எங்களுக்கு அதிபர் உறுதி கூறினார். அடுத்த ஒரு வாரமாக பத்திரிகைகளில் எப்படி ஒரு தாய்மார்களின் கூட்டம் ஒன்று திரண்டு தங்கள் பிள்ளைகளை விடுவித்தனர் என்று செய்திகளும் கட்டுரைகளும் வந்தன.

அடுத்த சில மாதங்களில் பல கிராமங்களில் அந்தப் பெண்களின் வேண்டுகோளுக்கு இணங்க அன்னையர் முன்னணி கிளைகள் ஆரம்பிப்பதற்காகச் சென்று வந்தோம். அப்போது கடற்கரையோரமாக அரசின் அதி உயர் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டு மீனவர்களைக் கடலுக்குச் செல்லாமல் தடுத்தது, தொடர்ந்து கடலுக்குச் செல்லாமல் மீனவர் குடும்பங்கள் பெரும் கஸ்டங்களுக்கு உள்ளாகினார்கள். மீனவர் குடும்பங்களில் தற்கொலைகள் இடம்பெற்றன. அன்னையர் முன்னணி அங்கத்தவர்கள் வீடு வீடாகச் சென்று அரிசி போன்ற உணவுப் பொருட்களைச் சேர்த்து பாதிக்கப்பட்ட கரையோரக் கிராமங்களுக்கு அனுப்பிக் கொண்டிருந்தோம்.

இதே சமயம் கால் ஊனமுற்றோரை ஜெயப்பூர் செயற்கைக் கால் போடுவதற்கு அவர்களை அனுப்பி வைக்கும் வேலைகளைச் செய்தோம். பின்னர் Norad நோர்வே நாட்டு உதவியுடன் யாழ்ப்பாணத்திலேயே ஜெயப்பூர் கால் பொருத்தும் நிலையத்தையும் நிறுவி நடத்தினோம். இதற்கு மட்டுமே நிதியுதவி பெற்றோம். நாங்கள் அந்த 3 வருடமும் அன்னையர் முன்னணியை எவ்வித வெளி உதவியில்லாமல் கொண்டு சென்றோம். எமது மூன்றாம் ஆண்டே ஜெயப்பூர் வேலையிலும் ஈடுபட்டோம்.

எமக்கு சில வெளி அழுத்தங்கள் வரத் தொடங்கின. நாங்கள் சுதந்திரமாக பெண்களின் பிரச்சினைகளுக்கு மட்டும் முகம் கொடுத்த பெண்கள் மேம்பாட்டுக்கு வேலை செய்வது சிலருக்கப் பிடிக்கவில்லை. தங்களுக்குக் கீழே நாங்கள் இயங்க வேண்டும் என்று வந்தபோது நாங்கள் இனி இயங்கப் போவதில்லை என்று தீர்மானம் எடுத்தோம். அவர்களிடம் அதனைச் சொல்லி விட்டு அன்னையர் முன்னணியை மூடி விட ஏற்பாடு செய்தோம். அங்கத்தவர்களுக்கும் அறிவித்தோம். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டனர். ஜெயப்பூர் செயற்கைக் கால் பயிற்சிப்பட்டறை மட்டும் எங்களின் ஓர் அங்கமாக இயங்கியது. யாழ்ப்பாணப் பத்திரிகையில் நாங்கள் இனிமேல் இயங்கமாட்டோம் என்பதை அறிக்கையாக வெளியிட்டோம்.

சிறிது காலத்துக்குப் பின்னர் இந்திய அமைதிகாக்கும் படையினர் வந்தனர். அதன் பின்னர் நடந்த போரின் பின்னர் இந்தியப் படையினர் சிலவேளைகளில் சந்தேகத்தின் நிமித்தம் ஆண்களைப் பிடித்துச் செல்வார்கள். பெற்றோருக்கு இந்திய இராணுவ முகாமுக்குச் செல்லத் தயக்கமும், ஆங்கிலம் பேசத் தெரியாது

என்ற பிரச்சினையும் இருந்தது. அப்போது அவர்கள் அன்னையர் முன்னணிப் பெண்கள் சிலரை உதவிக்கு அழைத்துச் செல்வார்கள். இப்படி உதவி செய்த பெண்கள் பலர். அவர்களில் இருவரை புலிகள் சுட்டனர். அவர்கள் செய்த குற்றம் இந்திய இராணுவ முகாமுக்குள் சென்றதே. இந்த செய்திகள் எங்களை மிகுந்த துன்பத்திற்குள்ளாக்கியது. இந்திய அமைதி காக்கும் படைக்கும் புலிகளுக்கும் இடையில் அகப்பட்ட பொது மக்களின் வாழ்க்கை மிகவும் அவலமானதாக மாறியது. அதனையும் தாண்டி வருவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே இருந்தது.

நான் கற்றுக்கொண்டதில் எனக்கு முக்கியமானதாகப் படுவது, எவ்வளவோ இழப்புகளுக்கும் மத்தியில் பெண்கள் நாம் சாதித்தவை பற்றிப் பெருமைப்பட வேண்டும் என்பதாகும். அத்துடன், பெண்கள் சரித்திரம் பெண்களே எழுத வேண்டும் என்பதுமாகும்.

மூன்று தலைமுறைப் பெண்களும் நான் இங்கு குறிப்பிட்ட செயல்வாதங்களில் மிகவும் உற்சாகமாகப் பங்கு பற்றினார்கள். அதில் இளம்தலைமுறையினர் சமூக விடயங்களில் பங்குபற்ற முதல் காலடி வைத்தனர். சமூகத்தில் நல்ல மாற்றங்கள் கொண்டுவர தங்களுக்கும் முக்கிய பங்கு இருப்பதை உணர்ந்து ஒரு பெரிய வளர்ச்சியை அடைந்தனர். அவர்களில் சிலர் “பூரணி” உருவாகி அதனை வழிநடத்த காரணிகளாக அமைந்தனர். வெளிநாடுகளுக்குச் சென்ற சில பெண்கள், தொடர்ந்தும் புதிய புதிய தளங்களைப் பெண்களுக்கு அமைத்துக் கொண்டு முன்னோடியாக இருக்கின்றனர்.

நடுத்தர வயதுடைய தாய்மாரில் பாதிப்பேராவது தொடர்ந்தும் சமூக சேவையிலும், ஜெயப்பூர் செயற்கைக் கால் நிறுவனத்திற்கும் பங்களிப்பு செய்தனர். மற்றவர்கள் தங்கள் முன்னைய வாழ்க்கைக்கு- நான், வீடு, என் குடும்பம்- என்ற குறுகிய வட்டத்திற்கு மீண்டும் சென்றனர்.

இளைய தலைமுறையில் நாங்கள் கொண்டு வந்த மாற்றம் திருப்தியைத் தந்தது. எங்களில் பலர் தொடர்ந்தும் பல செயல்வாதப் பயணங்களில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். பெண் உரிமைப் போராட்டங்களும் நம்பிக்கைகளும் பெண்கள் மத்தியில் வலுப்பெறுகின்றன.

women and media collective, “சொல்’ சஞ்சிகையின் முதலாம் அரையாண்டு 2012 இதழில் செவ்வி கண்டு தொகுத்து எழுதியவர் : காயத்திரி டிவாகலா

# அம்மா

மகள் அபிலாஷா

அம்மாவின் பிரிவு முதன்முறை அல்ல என்றாலும் அம்மாவின் இந்தப் பிரிவு அவாவின் தனித்துவத்தை நினைத்துப் பூரிப்படையச் செய்கின்றது.

அம்மா வலுக்கட்டாயமாக ஏற்படுத்தப்பட்ட பிரிவுகளை விட இயற்கை தந்த பிரிவு மனதை ஆற்றுகிறது.

ஒரு காதல் பிரிவு போல மனதுள் கனக்கிறது. மரணம் கற்றுத்தரும் பாடம் உறவுகளிடையே முரண்பாடுகளைக் குறைக்க, வாழ்க்கையின் தோல்விகளைச் சிறிதாக்கும் மனப்பக்குவத்தைக் கொடுக்கிறது.

அம்மாவின் உலகம் ஏனோ என்னைச் சுற்றியதாகத்தான் இருந்தது. அதனால் என் அம்மா எங்களைப் பாடசாலையில் சேர்த்த முதல் நாள், நான் சாதாரணமாகவே பாடசாலை போய் விட்டேன். ஆனால் என் அம்மா என் பிரிவு தாங்க முடியாமல் அழுதழுது வீடு வந்ததாக சொல்லுவா.

சடங்குகளிற்கு முன்னுரிமை கொடுக்காத, பெண்ணியல்வாத சிந்தனை கொண்ட அம்மா எனக்கு வலிக்கும் என நினைத்துத் தோடு குத்தவில்லை. முன்பள்ளியில் படிக்கும்போது ஏனைய மாணவர்கள் என்னைப் பொடியன் எனக் கேலி செய்ய வீட்டில் வந்து அழுது புலம்பியதால் ஒரு மாதிரியாக ஐந்து வயதில் தோடு குத்திவிட்டவா.

சமையலில் நீண்ட நேரம் ஒதுக்காத அம்மா சமையலில் வானவில்லின் நிறங்களைக் காட்டுவா. இண்டைக்கு ஐஞ்சு நிறம், மூண்டு நிறம் எண்டு சொல்லுவா.

கலைப்பட்டதாரி அவர். ஆனால் எங்களைப் பிரிந்து கண்டி சென்று கற்பிக்க விருப்பமில்லாமல் வேலையையும் விட்டிட்டு எங்களோட இருந்தவா.

பாடசாலைக் காலத்திலும் சிறுவயது முதலே அம்மா கைக்குள்ளேயே இருந்து வாழ்ந்தனாங்கள்.

அவா ஒரு அழகு. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பிற்கு அம்மா வந்து போனா. பிறகு எல்லோரும் யார் அவா உங்கட அக்காவா எண்டு கேட்பினம்.

தமிழ்ச் சங்கக் கூட்டங்களில் அக்காமார்களோடு கதைப்பதும் அவாக்கு ஒரு ஊக்கி.

அப்பா வீட்டிற்கோ, அம்மாவிற்கோ சரீர உதவிகளும் செய்ததை நாங்கள் கண்டதில்லை. அப்பாவிற்கு இது Rest house எண்டு சொல்லுவா. அதனாலோ என்னவோ எங்கட கதைகளும், அரவணைப்புகளும் முத்தங்களும் அவாவை இயக்கிக் கொண்டு இருந்தது.

தான் சிறுவயதில் வீடில்லாமல் ஒவ்வொரு அக்காமாரின் வீடுகளிலும் வளர்ந்தது எண்டு சொல்லி, அந்த நெருக்கடியான பொருளாதார யுத்த காலத்தில் கஷ்டங்களிற்கு மத்தியில் ஒரு வீடு வாங்க வேண்டும் எண்டு முழுமூச்சா நிண்டு கொழும்பில வீடு, வங்கியில கடன் வாங்கி வாங்கினவா.

எனக்கு இதயத்தில் operation எண்டதும் அம்மா வேதனைப் பட்டதை காணேல்ல. அந்த நேரம் மிக கஷ்ட காலம் எங்களிற்கு. கொழும்பு புது வாழ்க்கை. பல பேரிட்டை நிதி உதவி பெற்று இந்தியா கூட்டிப்போய் மனத்திடமாய் operation முடித்து கூட்டி வந்தவா.

என்னை ஒப்பரேஷன் தியேட்டரிற்குள்ள விட்டிட்டு, தான் நிறையச் சாப்பிட்டதாகச் சொல்லுவா. தான் திடமாக இருந்தால்தான் பிள்ளை operation முடிய வரும்போது வடிவா கவனிக்க முடியும் என்றதால் எண்டு சொல்லுவா.

தரம் 2 படிக்கும்போது இருந்தே காலை 5 மணிக்கெல்லாம் அந்த ஈரமான பஞ்சு கையால் முகத்தை வருடி அன்பாய் எழுப்பி படிக்கவிடுவா.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காகவோ அல்லது சாதாரண தர, உயர்தர பரீட்சைக்காகவோ எம்மைத் திணித்தது கிடையாது.

விடுமுறைக் காலத்தில் றாஜி அக்கா, ராசாத்தி அன்ரி ஆக்கள் வீடு வவுனியாவில் இருந்தது. எங்கள தனிய அம்மா அந்த நெருக்கடி காலத்திலயும் பாஸ் எடுத்துக் கூட்டிக்கொண்டு போவா. எங்களிற்கு அது பெரிய சுற்றுலாதான்.

சந்தை போனால் என்ன, கடைக்குப் போனால் என்ன பஸ்ஸில் ஏறும்போதும், இறங்கும் போதும் அவாவின்ட ஒரு கை என்மீது தொட்டுக்கொண்டுதான் இருக்கும்.

பால்நிலை அசமத்துவத்தை நன்கறிந்த அம்மா என்னை ஆண்பிள்ளை போலத்தான் வளர்த்தவா. ஆண்பிள்ளை, பெண்பிள்ளை என்ற பேதம் ஒரு போதும் எங்கள் வீட்டில் இருந்ததில்லை.

பதினைந்து வயதுவரை டயானா கட் என்று சொல்லப்படும் சிகை அலங்கார முறையே எனக்கு. பதினைந்தாவது வயதில் அம்மாவிடம் முடி வளக்க அனுமதி கேட்டு அழுததும் அம்மாவோ முடி வெட்டிவிட்டதும், காலி வீதியில் இருந்து வீடு வரும் வரை அழுது அழுது வந்ததும் நினைவில் வருகின்றது. அதன் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது.

தெஹிவளை வீட்டிற்கு அண்மையில் ஜயசிங்க விளையாட்டு மைதானம் இருக்கிறது. அங்கே பொதுவாக ஆண்பிள்ளைகளே கிரிக்கற் விளையாடுவார்கள். ஆனால் அம்மா என்னையும் அண்ணாவோடு அனுப்பிவிடுவார். மாலை 4 மணிக்கு போனால் 6.30 மணிவரை அங்குதான். ஆண்பிள்ளைகளோடு ஆண்பிள்ளையாய்

எட்டாம் வகுப்புவரை போய் கிரிக்கற் விளையாடியது உண்டு. என் பெயரைக் கேட்டுத்தான் சிலர் என்னைப் பெண் என அறிந்து கொண்டதும் உண்டு.

எங்களை விளையாட கூட்டிக்கொண்டு போக வீட்டிற்கு வரும் நண்பர்கள் பத்துப்பேர் இருப்பார்கள். அம்மா அவர்களையும் இருத்தி பாடங்கள் கற்பித்து விட்டு வினாக்கள், பயிற்சிகள் கொடுத்து பின்தான் நாங்கள் விளையாடச் செல்ல முடியும்.

வரலாறு, தமிழ் என பெரும்பாலான பாடங்களை அழகாய் சொல்லித்தருவா. பாட்டாய் கதையாய் என ஒவ்வொரு பாடங்களையும் இயற்றி சலிக்காமல் சொல்லித்தரும் ஆற்றல் அவாட்ட நிறைஞ்சு இருக்கு. தமிழ் இலக்கண பகுதியில் கஞ்ச பய மவன, பந்து சுகம் என பல சூத்திரங்கள் அவாவால இயற்றினது. கற்றல் எங்களிற்கு எப்பவும் கஷ்டமா இருந்தது இல்லை.

கொழும்பில் எங்கள் வீடு எப்போதும் உறவுகளாலும், நண்பர்களாலும் நிறைந்து தான் இருக்கும். அவர்களோடு அளவளாவி மகிழ்வடைவா அம்மா. எங்களிற்கு சிலவேளை கற்பிக்க முடியாத நெருக்கடி காணப்பட்டால், அதிகாலையே சமைத்து பார்சல் கட்டிக்கொண்டு வீட்டிற்கு அண்மையில் உள்ள மைதானத்திற்கோ விகாரைக்கோ கூட்டிச் சென்று அங்கு எங்களிற்கு படிப்பித்துச் சாப்பாடும் தந்த கொஞ்சநேரம் விளையாடவும் விட்டு கூட்டிக்கொண்டு வருவா.

நாங்கள் கொழும்பில் ஆரம்பத்தில் வாடகை வீடுகளில் அப்பா இல்லாமல் அக்காமார்களோடு வசித்து வந்தோம். யுத்த காலம் என்பதால் அம்புலன்ஸ் கூட சென்றால் அயல்வீடுகள் முறைத்துப் பார்க்கும்காலம் அது. அப்போது ஒரு முறை அண்ணாவை எம் வீட்டு உரிமையாளர்களின் பிள்ளைகள் விளையாட எனக் கூட்டிச் சென்று 'கொட்டி கொட்டி' என அடித்துவிட்டனர். அம்மா சிறிதும் அச்சமின்றி உரிமையாள ரோடு சண்டை பிடித்ததும் பின் வீடு மாறியதும் நினைவில், ஒரு வாடகை வீட்டில் எம்மை சில காடையர்கள் திடீரென வந்து வெருட்டிச் சென்றதும் நினைவில் இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையிலும் அம்மாவை நாம் பயந்தோ, அழுதோ நாம் கண்டதில்லை.

வன்சொல் பேசியது கண்டதில்லை நாம்.

வாசிப்பு மீது மிகுந்த விருப்பம், நடிப்பு, எழுத்து என அவாவின்ட வட்டம் பெரியது. ஆனால் அச்சாணி அம்மாவிற்கு நான்தான்.

யசோக்கா குடும்பத்தின்ர மரணம் அம்மாவின் உற்சாகத்தை பாதியாய் குறைச்சது. அம்மாவோடயே எப்பவுமே இருக்கும் எனக்கு அம்மா சற்று உடைந்ததை வெளிப்படுத்தியது என்னுடைய பதினான்காவது வயதில் யசோக்காவும் அவாவின் குடும்பத்தாரின்ரையும் மரணமும் தான்.

அம்மாவின் பிள்ளையாய் வளர்ந்த யசோக்கா அம்மாவின் உற்சாகத்தை பறித்து போனா. எப்போதும் பாடசாலையால் வரும்போது உற்சாகமாய் மகிழ்வாய் அரவணைக்கும் அம்மா கொஞ்சம் சோர்வாகினதை நாங்கள் பார்த்தம். அம்மாவை

அழுது பார்த்ததும் அப்பதான். Minor stroke உம் கூடவே வந்தது. பழைய துடிப்பு கொஞ்சமாய் குறைய அம்மாவின் தலைமுடி முழுவதுமாய் நரைத்தது.

எனினும் உயர்தரம் வரை அனைத்துப் புத்தகங்களும் தான் படித்து notes எடுத்து வைப்பா. Shorts notes உம் points உம் எடுத்து தர நான் இலகுவாக படித்ததுண்டு.

எனது வாழ்வில் ஏற்பட்ட சில சிக்கல் தன்மைகள் அவாவை முற்றாகவே முடக்கிவிட்டது. எனினும் அம்மா மீள உயிர் பெற்றது என் மகளின் வருகைதான். மீள உயிர் பெற்ற அம்மாவின் அச்சாணி இறக்கும்வரை சாதனா ஆகத்ததான் இருந்தது.

மீள யாழ்ப்பாணம் நாங்கள் குடிவந்து மிக மகிழ்ச்சியாய் கழிந்தது, நானும் அம்மாவும் கடைசியாய் இரண்டு வருடங்களும் ஒரு மகாராணி வாழ்க்கை.

சாதனாவை கற்பிப்பது, சேர்ந்து விளையாடுவது, விளையாட அழைத்துச் செல்வது, பூக்கண்டுகள் வாங்குவது அதனைப் பராமரிப்பது. ரஜினிகாந்த படம், தியேட்டர் செல்வது எனக்குத் தெரியாமல் எனக்கான உடைகளை வாங்குவது என அவாவின் உலகம் விரிந்தது.

எம்மை விட்டு செல்வதற்கு சிற்சில வாரங்கள் முன்னால் நாங்களும் பணக்காரர் ஆகிவிட்டம் அபி என்றதும், சுகமாய் கஷ்டமில்லாமல் செத்துவிடவேண்டும் அதுதான் என்ர விருப்பம் எண்டு சொன்னதும் நெஞ்சில் கனக்கிறது.

மரணிப்பது குறித்த பயம் அவாவிடம் இருந்ததுண்டு. ஆனால் கடைசியாய் கவிதாக்காவை காணும் போது என் செத்தவீட்டுக்கு வரவேணுமடி நீதான் என் பிள்ளைக்கு ஆறுதல் என்று சொன்னதும், 30கிலோ மிளகாய் வேண்டி எல்லா உறவுகளிற்கும் மோர்மிளகாய் செய்ததும் சிறுவயது முதல் இறக்கும் வரை அம்மாவின் வீட்டுச் சட்டையை உடுப்பதில்தான் எனக்கு ஒரு திருப்தி.

தீபாவளியோ, புதுவருடமோ, கிறிஸ்மஸோ, ஹஜ் நாளோ புது ஆடைகளிற்கு நாங்கள் செலவழித்தது கிடையாது. ஆனால் விதவிதமாய் அன்றைய தினங்களில் உணவு, பலகாரங்கள் சமைத்து அயல் வீடுகளிற்கும் கொடுத்து மகிழ்வடைவோம்.

ஒரு வாரத்திற்கு முன்னால் எனக்கும் சாதனாவிற்கும் நிறைய துணிவாங்கி வீட்டுச் சட்டைகள் (எனக்குத் தெரியாமல்) தைக்க கொடுத்ததும் நெஞ்சை அருட்டுகின்றது.

அம்மாவின் தலைமைத்துவத்தில் தான் எங்கள் குடும்பம் அப்பா பொதுவேலைகளில் ஈடுபட்டாலும் வீட்டிற்காய் சேமிக்க வைத்ததும் எம்மை மகிழ்வாய் வளர்த்ததும் அம்மாவின் சாதனைதான்.

# என் நினைவிருக்கும் வரை நீங்கா கலாக்கா

அன்புடன் ராஜி

கலாக்கா! கலாக்கா!! என்று கூப்பிட்டுப் பார்க்கிறேன். எத்தனை தடவைகள் கூப்பிட்டிருப்பேன். நினைக்க நினைக்க இதயம் வலிக்கிறது. நான் மட்டுமல்ல எல்லா பெறாமக்களாலும், ஏன் அவர்கள் மட்டுமல்ல, எம்மூர் இளையவர்கள் அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட ஓர் காந்தப் பெயர். கலாக்கா என்ற பெயர். எம்மூரில் ஓர் சக்திவாய்ந்த பெயராக விளங்கியது என்றால் அது மிகையாகாது. கலாக்கா என்ற உறவு என்னுள் பல மாற்றங்களை உருவாக்கி எனக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் ஊக்கத்தைக் கொடுத்து, என்னை நான் உணரவைத்தது. கலாக்கா! நீங்கள் என்றும் என்வாழ்வில் மறக்க முடியாத, மறவா உறவு.

நான் கலாக்காவைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் என்னைப் பிரமிக்க வைத்த விடையங்கள் கலாக்காவின் எளிமையும் அவரின் கொள்கைப்பற்றும்தான். அவர் தான் வாழ்ந்த காலத்தில் தன்னுடன் வாழ்ந்த சராசரிப் பெண்களைப்போல் அல்லாது புரட்சிகர சிந்தனைகளைக்கொண்ட ஓர் புதுமைப் பெண்ணாகவே வாழ்ந்தார் என்றால் அது மிகையல்ல. அவரின் இயற்கை அழகும் எளிமையான தோற்றமும் அவரை எங்கும் எப்போதும் தனித்துக்காட்டியது. அதுவே அவரின் கம்பீரமாகவும் இருந்தது.

கலாக்கா ஓர் சிறந்த நாடக நடிகையாக, எழுத்தாளராக, ஆசிரியராக, அரசியல் வாதியாக, எம்மூரின் முதலாவது பெண் பட்டதாரியாக வாழ்ந்திருக்கிறார். ஆனால் நான் அவருடன் பேசிய எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன் இத்திறமைகளைப் புகழ்ந்து கதைத்ததே இல்லை. நான் அவாவின் சில திறமைகளை அவாவின் இறுதிநிகழ்வின் போது சிலர் பேசும் போது தான் அறிந்து கொண்டேன். தம்மைத்தான் புகழும் மானிடர் வாழும் இவ்விளம்பர உலகில் தன்னைப்பற்றி அவா என்றுமே சுயவிளம்பரம் செய்ததே இல்லை. "நிறைகுடம் தளம்பாது" என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர். ஆனால் அடுத்தவர் திறமைகளைப் பாராட்டி ஊக்குவிக்கும் நல்ல மனப்பாங்கு அவரிடம் எப்பொழுதும் இருந்தது. என்வாழ்வில் ஒவ்வொரு பருவத்திலும், முக்கிய சந்தர்ப்பங்களிலும் அவாவின் பாராட்டும் ஊக்குவிப்பும் என்னை மகிழ்வித்து, என்னை அவர்பால் ஈர்த்துச்சென்றது. என்றுமே அவாவின் புத்திமதி ஆலோசனை வடிவில்தான் இருக்குமே ஒழிய திணித்தலாக இருந்ததே இல்லை. பேசும்போது கூட ஒவ்வொருவருடைய மனநிலையைக் கணித்தே பேசுவார்.

கலாக்கா எங்களுக்கெல்லாம் உறவு முறையில் சித்தியாக இருந்தாலும், அவர் எமக்கு ஓர் சகோதரியாக, நண்பியாக எம்முடன் வாழ்ந்து வந்தார். அவரின் பெறாமக்களான நம் எல்லோருக்கும் ஒரு ஆசானாக, ஆலோசகராக இருந்தார்

என்றே சொல்லலாம். ஆலோசனை கூறுபவராக மட்டுமல்லாது நாம் கூறும் கருத்துக்களுக்குச் செவிசாய்த்து அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு அவரிடம் இருந்த இன்னோர் சிறப்பு. நல்ல கருத்து யாரிடமிருந்து எப்படி வந்தாலும் ஏற்கும் மனப்பாங்கு கொண்டவராக விளங்கினார். எல்லோருடனும் அவரவர்களுக்கு ஏற்றாற் போல் பேசிப்பழகி, அவர்களின் அன்பைப்பெற்று தன்னைச்சுற்றி ஒரு பெரிய நட்புவட்டத்தை உருவாக்கியிருந்தார். அதனை அவரின் இறுதி நிகழ்வில் காணக்கூடியதாக இருந்தது.

கலாக்கா ஓர் அம்மாவாகவும் என்னை ஆச்சரியப்பட வைத்தவர். எல்லா அம்மாக்களையும் போலத்தான் அவரின் அதீத பிள்ளைகளின் மீதான பாசமும், ஆனாலும் ஏதோ ஒன்று அவாவை தனித்துக் காட்டியது. ஜனமகனுக்கும் அபிக்கும் அம்மாவாக மட்டுமல்லாது, நல்ல நண்பியாகவும் இருந்தவர். தேவண்ணாவின் அரசியல் கொள்கைகளுக்கும், வாழ்வில் அவர் பெற்ற உயர்வுகளுக்கும் இறுதிவரை பக்கபலமாக நின்ற ஓர் சிறந்த மனையாள் .

கலாக்காவின் நினைவுகளை எழுதித்தருமாறு அபி கேட்ட போது, என் எண்ணவலைகள் சிறகடித்தன. ஒன்றா இரண்டா ஆயிரம் நினைவுகள்.... எதை எழுதுவது... எதை விடுவதெனத் தெரியாது நின்று பின் தெளிந்து இதை எழுதுகிறேன். மரணமும் சிலருக்கு வரம். அந்த வரத்தை எங்கள் கலாக்காவும் பெற்றுக் கொண்டா. கலாக்கா மறைந்தாலும் என்றும் எம் நினைவுகளில் எம்கூட பயணித்துக் கொண்டுதானிருப்பார். கலாக்காவைப் பற்றி நினைவு கூர்ந்து எழுதும் இந்த நிலை வரும் என நான் கனவிலும் எண்ணியிருக்கவில்லை. எனினும் இந்த நினைவுரை எழுதக்கிடைத்த சந்தர்ப்பத்தை இட்டு பெருமையும் மனநிறைவும் அடைகிறேன்.

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

# எங்கள் அன்புக்கு அரசி கலாக்கா

அன்புடன் பெறாமகள் யாழி

கலாக்கா என்ற உறவு நமக்கு கிடைத்த உறவுகளில் மிகவும் உன்னதமான பல தனிப் பண்புகளைக் கொண்ட உறவு ஆகும். எல்லோர் மனங்களிலும் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தை ஏற்படுத்திய உறவு என்றே சொல்லவேண்டும். கலாக்கா என்ற அந்த எளிமையான உருவம் என் மன எண்ணங்களில் பதியத் தொடங்கியது, எனக்குத் தெரிந்து அது ஜனமகன் பிறந்த காலம் தான். நான் உன்னிப்பாக கவனித்து இருக்கிறேன். அவாவின் எளிய வண்ண ஆடை, கனிவான பார்வை, மிடுக்கான தோற்றம் இப்போதும் பசுமையாக இருக்கிறது. அந்த இனிய பொழுதுகளை இப்போது நினைத்தாலும் எல்லாம் மாயை தானோ என எண்ணத் தோன்றுகிறது.

காலம் வேகமாகக் கடந்தோடியது. இடைப்பட்ட காலங்களில் பல்வேறு இடப்பெயர்வுகள், உறவினர்களில் பலரும் வெளிநாடு சென்றுவிட்ட காலம் அது. அங்கு தான் ஆரம்பித்தது கலாக்கவுடனான சுவாரஸ்யமான பயணம். அதற்கு மிகவும் சௌகரியமாக அமைந்தது எங்கள் தெகிவளை “கில் ஸ்றீற்” வீடுதான். எங்கள் வீட்டில் அவாவுக்கு மிகவும் பிடித்தமான இடம் வெளிவிறாந்தையில் இடப்பக்க மூலையில் உள்ள கதிரையும் அந்த மரத்தூண்களும் தான். எப்போதும் வந்து அங்கு தான் இருப்பா. அந்த இடம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடம். அந்த தூண்களைக் கேட்டால் சொல்லும் நாம் கதைத்து சுவைத்த அந்த தருணங்களை... அருகில் நின்ற தென்னை மரமும் எங்கள் கதைகளையும் சிரிப்பையும் கேட்டு நம்பமுடியாத அளவு காய்கள் காய்த்தன என்றால் பாருங்கள்! அப்படி ஒரு இன்பமான பொழுதில் தான் கலாக்கா கதைக்கும் போது கூறினா “தான், ராஜி, ரகு மூவரும் ஒரே நட்சத்திரம் என்பதனால், மூவரிடமும் ஒரு ஒற்றுமை இருக்கிறது” என்று. அதனால் என்னவோ ரகுவும் கலாக்காவும் மனம்விட்டு நீண்டநேரம் பேசுவதைப் பார்த்து இருக்கிறேன். எனது மகன் றொனால்ட் சின்னவயதில் கதைக்கத் தொடங்கினால் விடமாட்டார். அவ்வளவு கதைகளையும் மிகவும் பொறுமையாகக் கேட்டு அவருக்கும் புத்திமதி சொல்லுவா. அவரும் அவா சொன்ன புத்திமதிகளை பொறுமையாகக் கேட்டுக் கொள்வார். மகள் அபிராவுக்கும் விளையாட்டுக் கூட்டாளி கலாக்காதான். கலாக்காவுக்கும் அவ்வளவு பொறுமை. அதனால்தான் என்னவோ அவர்களுக்கு கலா அன்ரி எண்டால் அவ்வளவு ஆசை.

இப்படியே காலம் உருண்டோடியது. நாம் அவுஸ்திரேலியா நாட்டுக்கு புறப்படும் நாளும் வந்தது. அந்த நேரத்தில் கலாக்காவும் மிகவும் கவலையுடன் காணப்பட்டா. எனக்கும் அவாவுடனான அந்த உறவையும், அந்த வீட்டின் நினைவுகளையும், விட்டு செல்வது மனவேதனையை ஏற்படுத்தியது. எனிலும் கலாக்கா எனக்கு சொன்னா,

"நீங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து வாழவேண்டும். பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டும்" எனப் புத்திமதி கூறி என்னை வழி அனுப்பி வைத்தா. அவா அவ்வப்போது கூறிய பல புத்திமதிகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவாவை நினைவூட்டுவனவாகவே அமைகின்றன.

நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் போது மகன் றொனால் சொன்னார் "கலா அன்ரியின் மரணம் யாரோ எங்கோ இருந்து கன்னத்தில் பளார் என்று அடித்துவிட்டுப் போனது போல் ஓர் உணர்வைக் கொடுக்கிறது" என்று. அவா மறைந்து ஆண்டு ஒன்றாயும் அவாவின் இழப்பை ஏற்க மனம் மறுக்கிறது. அவா எங்கோ வாழ்ந்து கொண்டிருப்பதாகவே என்மனம் மறுக்கிறது. அவா எங்கோ வாழ்ந்து கொண்டிருப் பதாகவே என்மனம் எண்ணிக்கொண்டிருக்கிறது. என்று ஒரு நாள் அவா வாழ்ந்த வீட்டிற்குச் செல்கிறேனோ, அன்று உடையும் இந்த மாயை என நினைக்க மனம் வேதனையில் வலிக்கிறது. அவாவின் வாழ்வும் ஆர்ப்பாட்டம் இல்லா அமைதியான வாழ்வு, அதே போன்று அவாவின் மரணமும் அமைதியாகவே... இதுவரை அவா வாழ்ந்த வாழ்க்கையை பறைசாற்றிச் சென்றுவிட்டது.

கலாக்கா என்ற அன்பின் திருவுருவம் அழிந்தாலும் அவாவின் அன்பும், கருணையும் கொண்ட உள்ளம் எல்லோர் மனங்களிலும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கும்.

கலாக்கா என்ற ஆளுமை மிக்க ஒரு பெண்மணி எங்கள் உறவினரில் ஒருவராக கிடைத்தமையை இட்டு நான் மிகவும் பெருமையடைகிறேன்.

கலாக்கா பற்றிய என் எண்ண அலைகளை எழுதுவதற்கு, கலாக்கா தான் என்னைத் தூண்டினா எனச் சொல்ல வேண்டும். ஏன் எனில் அவா எப்போதும் சொல்லுவா "மனதில் உள்ள பாரத்தை யாருடனாவது மனம் விட்டுப் பேசவேண்டும். அப்போது தான் மனப்பாரம் குறையும்" என்று. எனவே தான் என்மன உணர்வலைகளை இவ்வாறு பகிர கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்திற்காக தேவண்ணாவிற்கு நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். எண்ணற்ற உறவினர் மத்தியில் எனக்கு கிடைத்த இச்சந்தர்ப்பத்தினை பெருமையாக நினைத்து மனநிறைவடைகிறேன்.

# அதிபர் தலைமைத்துவமும் முகாமைத்துவமும்

சி. தவநாயகம்
அதிபர்,
யா/ சண்டிலிப்பாய் அ.மி.த.க பாடசாலை

ஒரு பாடசாலையைச் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்குச் சிறந்த முகாமைத்துவம் அவசியமாகும். முகாமைத்துவம் என்பது இயல் அளவை அதிகரிப்பதும், செய்யும் தொழிலை மேலும் சிறப்பாக ஆற்ற உதவுவதுமாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக மனிதர்களைக் குழுவாக இயக்கும் செயல்முறை முகாமைத்துவம் ஆகும். வளங்களைச் சரியாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தி உச்சப் பயனைப் பெறுவது வினைத்திறனாகும். குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் எதிர்பார்த்த நோக்கத்தை வெற்றிகரமாக அடைவது வினைத்திறனாகும். ஒரு பாடசாலையை வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் மாற்றியமைப்பதில் அதிபரின் பங்கு மிக அவசியமாகும். சிறந்த முகாமைத்துவம் காணப்படவேண்டு மாயின் நல்ல தலைமைத்துவம் அவசியமாகும். சிறந்த முகாமைத்துவமுள்ள அதிபரானவர் ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோர்களை ஊக்கப்படுத்தி, வேலைகளைப் பகிர்ந்தளித்து வளங்களைப் பராமரித்து திட்டமிட்டு நெறிப்படுத்திச் செல்வார்.

அதிபர் ஒரு நிறைவேற்று நிர்வாகி என்றவகையில் தொழிற்படுவதன் மூலம் முகாமைத்துவப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். பாடசாலையைத் திறம்பட இயக்குவதில் அதிபரின் முகாமைத்துவ வகிபாகம் அடித்தளமான விடயமாக உள்ளது.

அறிவுத் திறனுடன் பூரண ஆளுமையுடன் கூடிய சந்ததியினரை இந்நாட்டிற்கு அர்ப்பணிக்கும் பாடசாலையானது மிகவும் சிக்கல் நிறைந்த நேர்த்தியான பல்வேறுபட்ட மனித நடத்தைகளைப் பிரதிபலிக்கும் ஒரு நிறுவனமாகும். அதன் தலைவர் பொறுப்பினை வகிக்கும் அதிபரின் கடமைக் கூறுகள், வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள் எல்லையற்றவையாகும். ஆலோசனைத் தலைவராக மட்டுமன்றி ஒரு முகாமையாளராக பாடசாலையை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் நடாத் திக் செல்லும் அதிபர் சிறந்த தலைவராக இருத்தல் அவசியமாகும். எதிர்காலத் தேவைகளுக்கு உகந்தவாறு கல்வியினைத் தயார்ப்படுத்தல், பாடசாலைத் துறையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைத் தவிர்த்து சகல மாணவர்களுக்கும் சம கல்வி வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பாடசாலைத் தொகுதியை பௌதீக மற்றும் தரமேம்பாட்டுடன் அபிவிருத்தி செய்வதும் இன்றைய எதிர்பார்ப்பாகும். அதனூடாக கல்வி தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்கினை அடைவதற்கு அறிமுகப்படுத்தப்படும் புதிய கல்விக் கொள்கை

களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்நாட்டின் அதிபர்கள் பன்முக ஆளுமை கொண்டவர்களாகவும் வலுவுள்ளவர்களாகவும் எதிர் பார்க்கப்படுகிறது.

சகல மாணவர்களும் சிறந்த கற்றல் விளைவுகளை அடையவும், பாடசாலைகளை அதிக இயங்கு நிலையில் வைத்திருக்கவும் அதிபரும் அவரோடு இணைந்து ஆசிரியர் களும், மாணவர்களும், பெற்றோரும், பழைய மாணவர்களும், நலன்விரும்பிகளும் இணைந்து எதனைச் செய்ய வேண்டும்? எப்போது செய்யவேண்டும்? எவ்வாறு செய்ய வேண்டும்? என்பதனைத் தீர்மானித்து புதிய சீரமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் தலைமைத்துவமாகும்.

21ம் நூற்றாண்டு அதிபர்கள் எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடியவர்களாகத் தயார்படுத்தல்,

தற்போது பதவியிலுள்ள அதிபர்களுக்கு உதவுதல், மீள்பயிற்சி அளித்தல்,

அடுத்த தலைமுறைப் பாடசாலைத் தலைவர்களைத் தயார்ப்படுத்தல், பயிற்றுவித்தல்.

அதிபர்களது வினையாற்றுகைத் தரங்களை கணிப்பீடு செய்தல்

பாடசாலைத் தலைமைத்துவ முகாமைத்துவ தேசிய தேர்ச்சி சட்டகத்தை ஒரு கணிப்பீட்டுக் கருவியாக நோக்குதல்.

அதிபர்களுக்கு அபிவிருத்தி மற்றும் பயிற்சி வழங்கல்.

வருடாந்த தேர்ச்சி அடைவுமட்டங்களின் இலக்குகளை நிர்ணயம் செய்தல்..

வருடம் முழுவதும் தேர்ச்சி மட்டங்களைக் கணிப்பிடல்.

ஒவ்வொரு அதிபரையும் தொழில் முன்னேற்றத்திற்கு வழிகாட்டல்.

வருடாந்த சம்பள உயர்வு, ஊக்குவிப்பு நிகழ்வுகள், விருது வழங்கல் பற்றித் தீர்மானித்தல்.

பாடசாலைத் தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ தேசிய தேர்ச்சி சட்டகங்கள் நான்கு தலைமைத்துவ முகாமைத்துவ துறைகளைக் கொண்டுள்ளன.

தரமான பாடசாலை ஆளுகை.

சாதகமான பாடசாலைக் கலாசாரம்

வினைத்திறனான பாடசாலை முகாமைத்துவம்.

தரமான கற்றல் விளைவுகள்

அதிபரானவர் ஆசிரியர்களைச் சிறந்த முறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தவேண்டும். அதிபர் தலைமை தாங்குபவராக முதல் நிலை முகாமையாளராக மேற்பார்வையாளர்களாகச் செயற்பட்டு வினைத்திறனான, விளை திறனான பாடசாலைச் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அத்தோடு வளங்களை உரிய முறையில் பங்கீடு செய்து விநியோகிப்பவராக, முயற்சியாளராக, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவராக செயற்படவேண்டும். ஆசிரியர்களின்

வகிபாகங்களை அறிந்து மாணவர்களைச் சகல துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக மாற்றுவதற்கு உதவ வேண்டும்.

பாடசாலையின் முகாமையாளர் என்ற வகையில் அதிபர் தான் தலைமை ஏற்கும் நிறுவன அமைப்பு எந்த அளவைப் பெற்றிருந்தாலும் அதன் துறைகள், பல்வேறு பிரிவுகள் மூலம் கடமையாற்றியாகவேண்டும். இவ்வகையில் முகாமைத்துவத்தின் மிக முக்கியமான பாரிய கடமைகளாகப் பின்வரும் விடயங்களைக் கூறலாம்.

தலைமைத்துவம்
கொள்கை வகுப்பு
பணி இணைப்பு
மேற்பார்வை
முடிவு செய்தல்

ஒரு சிறந்த அதிபரிடம் காணப்பட வேண்டிய மிக முக்கியமான பண்புகள்

உண்மைத்தன்மையும் நம்பிக்கைத் தன்மையும்
தூர நோக்கான சிந்தனை
தொடர்பாடல் திறமைகள்
நெகிழ்ச்சித் தன்மை
குழுவாகச் சேர்ந்து இயங்குதல்
திட்டமிடல்
கலந்துரையாடல்
வாண்மை விருத்தி
நடுநிலையாளராகத் தொழிற்படுதல்
கண்காணிப்பாளர்
சிறந்த பேச்சாற்றல்
சிறந்த ஆளிடைத் தொடர்பு
சிறந்த தீர்மானம் எடுக்கும் திறன்
முரண்பாடுகளைச் சுமுகமாகத் தீர்க்கும் திறன்
வள ஒதுக்கீட்டாளர்

ஒரு மேற்பார்வையாளர் என்ற வகையில் அதிபரானவர் தம் பொறுப்பின்கீழ் நடைபெறும் கடமைகள் பற்றிய முழுமையான நுட்ப அறிவைப் பெற்று மேற்பார்வை செய்தல் வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அதனை முகாமைத்துவ உத்திகளைக் கொண்டு தீர்க்கக் கூடியவராகக் காணப்படவேண்டும். பாடசாலை திறம்பட இயங்குவதில் அதிபரின் முகாமைத்துவ வகிபாகம் என்பது அடித்தளமான விடயமாக அமைந்துள்ளது.

பாடசாலைகளில் ஏதாவது பிளவுகள் நடைபெறுகின்ற போது அதற்கான முழுப்பொறுப்புக்களும் அதிபரைச் சென்றடைகிறது. பெற்றோர்களும் அதிபரையே நம்பிப் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். எனவே அதிபர் ஒரு ஆளுமை மிக்கவராகவும், தலைமைப் பண்பு உடையவராகவும், ஒழுக்கம் உடையவராகவும் இருப்பதன்மூலமே அப்பாடசாலைகளில் உள்ள சகல ஆசிரியர்களையும் ஒன்று திரட்டி அவர்களுக்குரிய சரியான அறிவுறுத்தல்களை வழங்கி கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஒழுக்க அனுசரிப்புகளிலும் முன்னேற்றம்

காணமுடியும். அதிர்கள் பாரபட்சமின்றி ஒழுக்கத்துடன் நடந்து கொள்வது அத்தியாவசியமாகிறது. ஒரு நல்ல அதிபராகக் கடமையாற்றுவது என்பது மிகக் கடினமான ஒரு காரியமாகக் கருதப்படுகிறது.

ஒரு நல்ல அதிபர் பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அதிபருக்கும் ஆசிரியர்களுக்குமிடையே புரிந்துணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். ஆசிரியர்களின் குறைநிறைகளை ஆவணப்படுத்த வேண்டும். பணிப்பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல் வேண்டும்.

ஒரு அதிபர் சிறந்த தலைவர் மட்டுமல்ல. அவர் ஒரு சிறந்த மேற்பார்வையாளருமாவார். இவரது மேற்பார்வை ஆசிரியர்கள் தமது தொழிலைத் திறம்படச் செய்ய உதவுவதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆசிரியர், மாணவர், அதிபருக்குமிடையில் இடைவினையுறவு ஏற்படக் கூடியதாகவுமுள்ளது.

சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள், சாதி சமய, மொழி, இன பேதங்களை நீக்குவதில் அதிபர் முன்மாதிரியாகச் செயற்பட எதிர்பார்க்கப்படுகிறார். அத்தோடு நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடிப்பவராக இருத்தல் வேண்டும். பாடசாலைக்கும் வகுப்பறைக்கும் குறித்த நேரத்தில் செல்வ தனூடாக வினைத்திறனான பாடசாலைப் பெறுபேறுகளைப் பெறமுடியும்.

பாடசாலைகளில் கற்று வெளியேறும் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் கல்வியின் தரம், கற்றல் விளைவு என்பன அப் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களையும் ஆசிரியர்களைத் திறம்பட வழிநடத்தும் அதிபரையுமே சாரும். நவீன பாடசாலைத் தலைவர்கள் எனப்படும் அதிபர்கள் அறிவு வளர்ச்சி வேகத்தில் ஏற்பட்டுள்ள விரைவான தகவல் பரிமாற்றம் இடம்பெறும் சூழலில் உலக மக்களுடன் மாற்றங்களைப் பெறுவதுடன் பரந்த அறிவை அடிப்படையாகக் கொண்ட பொரு ளாதாரத்துடன் முட்டிமோதி முன்னோக்கிச் செல்வது காலத்தின் கட்டாயமாகும். பாடசாலைத் தலைவரது வகிபாகமானது புதிய பாதையில் செல்லத் தொடங்கியுள்ளதால் எதிர்காலத்தில் பாடசாலைகளில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய கல்வி சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்ப விரிவடைந்து செல்கிறது. இது பல்வேறு சவால்களை விடுக்கின்ற ஓர் களமாக மாற்றமடைந்துள்ள நிலையில் அச்சவால்களை ஏற்று பாடசாலையை முன்னெடுக்கத் தகுதியான அதிபர்கள் தேவையாகின்றனர். இதற்குத் திறன்கள் மட்டும் போதுமானதல்ல. தலைமைத்துவப் பண்புகள், ஆளுமைப் பண்புகள், கவர்ச்சியான தொடர்பாடல் திறன் என்பனவும் அவசியமாகும். ஆகவே அதிபர்கள் முகாமையாளராக மட்டுமன்றி தலைவராகவும் செயல்பட வேண்டியுள்ளது.

# சமூக மயமாக்கலும் சமுதாய மாற்றமும் : இவற்றில் பெண்களின் வகிபாகம்

செல்வி திருச்சந்திரன்

இச்சொற்பொழிவில் இரண்டு விடயங்கள் தொக்கு நிற்கின்றன. அவற்றிற்கு முதலில் நாம் ஒரு சிறு விளக்கம் கொடுக்க வேண்டும். சமூகமயமாக்கல் என்றால் என்ன என்பது ஒரு விடயம் கூட்டுப் பொதுநல அடிப்படையில் நிறுவுதல்.

சமுதாயச் சார்பு

சமுதாயத் தொடர்பு

கூட்டு வாழ்வுப் பண்பு

என்று பல வகையில் நாம் இதை விளங்கிக் கொள்ளலாம். இதை விரிவாகக் கூறுவதானால் தனிமனித நலம் பேணுதலைத் தவிர்த்து சமூகநலன் காண வேண்டும் என்ற ஒரு கொள்கையை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தை நாம் இதனுள் காண்கின்றோம்.

பெண்களின் வகிபாகம் என்பது மற்றைய விடயம். எனக்குத் தரப்பட்ட தலைப்பில் வகிபாகம் என்று தரப்பட்டிருப்பினும் இச்சொற்றொடரில் எனக்கு உடன்பாடில்லை. இச்சொற்றொடர் இப்போது பெருவழக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் 'Role' என்ற ஆங்கிலப் பதத்தின் நேரடி மொழிபெயர்ப்புப் போல இது தெரிகிறது. ஏற்கனவே நாம் பங்கு, கடமை போன்ற சொற்களைப் பிரயோகித்து வந்திருக்கின்றோம். என்னுடைய பங்கு இதுதான். இதுதான் என்னால் செய்யக்கூடிய கடமை போன்ற சொற்கள் வழக்கிலிருக்க எதற்காக வலிந்து வகிபாகம் என்பதை நாம் புதிதாக மறுபிரயோகமாகத் திணிக்க வேண்டும் என்று பேராசிரியர் சிவத்தம்பியைக் கேட்டபொழுது அவர் சிரித்துக் கொண்டு எனது மறுப்பை ஏற்றுக் கொண்டாலும் 'வகிபாகம்' என்பதில் ஒரு அழகுண்டு என்றும் வகிக்கும் பாகம் என்ற அர்த்தமும் உண்டு என்றும் கூறினார். பாகம் - என்ற சொல் ஒரு பருப்பொருளையோ அல்லது ஒரு காட்சிப் பொருளையோ குறிக்கும் என்றும் பங்கு என்பது அதன்பங்கு என்று கூறும் பொழுது செய்தவற்றில் ஒரு பங்கு என்ற அர்த்தப்படும். செய்தவற்றில் ஒரு பாகம் என்று கூறும் வழக்கு தமிழில் இல்லை என்றும் வாதாடினேன். அத்துடன் எமது வாக்குவாதம் முற்றுப்பெற்றது. ஆனாலும் இச்சொற்பொழிவில் சமூகமயமாக்கலில் பெண்களின் பங்கு என்றே நான் எனது கருத்துக்களை எடுத்தியம்ப விரும்புகின்றேன். அதாவது பெண்களின் செய்கை முறைமையில் அவர்களின் பங்கு எது, அது எப்படிப்பட்டது? அது எப்படி இருக்க வேண்டும் அவற்றில் நிறைவுண்டா? போதாமைகளுண்டா? என்பதே இச்சொற்பொழிவின் சாராம்சமாயிருக்கும்.

எந்த ஒரு ஆய்வையும் கடந்தகால அல்லது பண்டைய கால கருத்துக்களுடனோ கருத்தியல்களுடனோ தொடர்புபடுத்துதல் ஒரு தொடர்ச்சி விளக்கத்தை எமக்குத் தரும். “சாதியிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்” என்று ஔவையார் கூறிச் சென்றுள்ளார். அநேக சகாப்தங்களுக்குப் பின்பு இரு இயக்கங்கள் அக்கூற்றைச் சமூகமயமாக்க முயன்றனர். அதில் ஓரளவு வெற்றியும் கண்டனர். ஆனால் ஓரளவே யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1920களில் ஒரு இயக்கத்தைத் தோற்றுவித்து மிகுந்த அர்ப்பணிப்புடனும் கடமை உறுதியுடனும் செயற்பட்டது. சமபந்தி, சமபோசனம், பாடசாலை அனுமதி என்று பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை பல எதிர்ப்புக்களின் மத்தியில் அவ்வியக்கம் நிறைவேற்றியது.

அதே மாதிரி 60 களில் சில இளைஞர்களும் ஏனையோரும் இணைந்து காலத்திற்கேற்ப மாறுபட்ட மன உறுதியுடனும், வீராவேசத்துடனும் பல எதிர்ப்புக்களையும், சவால்களையும் சந்தித்து இடதுசாரிக் கொள்கைகளை உள்ளடக்கிய செயற்றிறன்களுடன் பல சாதிய எதிர்ப்பு நடவடிக்கைகளையும் போராட்டங்களையும் முன்னெடுத்தனர். வட இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் இயக்கமும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் முனைப்புடன் இயங்கின. இங்கு முக்கியமான விடயம் இரு இயக்கங்களும் சமூகமயமாக்கலையும் சமூக மாற்றத்தையும் வேண்டி நின்றனர் என்பதை ஏட்டுச் சுரைக்காயாக சாதி மறுப்பு நிற்கவில்லை. சொற்பொழிவுகளுடன் தலைமை உரைகளுடன் அவர்களது செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்படவில்லை. சமூகம் என்ற களத்தில் அவர்கள் இறங்கினார்கள். இங்குதான் ஒரு முக்கிய கேள்வியை எழுப்ப நினைக்கிறேன். அதற்குரிய விடையை நீங்களும் சீர்தூக்கிப் பாருங்கள். அப்படியானால் ஏன்? ஏதற்காக சாதித்துவம் இன்னும் பல கோணங்களில் தலைவிரித்தாடுகிறது. ஏதற்காக யாழ்ப்பாணத் தமிழர்கள் சாதியில் ஊறி இருக்கிறார்கள். ஊன்றியிருக்கிறார்கள் என்று ஒரு நாமகரணமும் எமக்குக் கிடைத்திருக்கிறது.

அந்த இயக்கங்களின் அர்ப்பணிப்பும் வீர தீரச் செயல்களும், சமூகச் செயற்பாடுகளும் ஏன் சாதித்துவத்தைத் தகர்க்கவில்லை? இது ஒரு பாரிய கேள்வி இதற்கு சமூகவியலாளர்கள் கூறலாம். சாதி எம் சமூகத்திலும் பண்பாட்டிலும் வேரோடி ஆழப்பதிந்து விட்டது. அதை ஒழிக்க முடியாது என்று. முன்னைய கூற்று சரியாக இருந்தாலும் ஏன் அதை ஒழிக்க முடியாது என்பதற்கு அவர்கள் கூறும் காரணம் சரியானதல்ல என்பதே எனது வாதம். அவர்கள் எடுத்த திட்டங்களும் போராட்டங்களும் போதிய அளவில் சமூக மயமாக்கப்படவில்லை. தொடர்ச்சி இருக்கவில்லை. கால எல்லைக்குள் அவை முடங்கி விட்டன. அதே போல ஒரு சிறுபான்மைக் குழுக்களே இவற்றில் ஈடுபட்டார்கள். பேரெழுச்சியாக அவை எழும்பவில்லை. பிரான்சிய, ருஷ்யப் புரட்சிகள் போல வீறு கொள்ளவில்லை. பழைமை போற்றும் வெகுஜனங்களைக் கருத்தியல் ரீதியில் மாற்றங்கொள்ளச் செய்ய முடியவில்லை. இப்படிக் கூறுவதால் நான் அன்று தோற்றம் பெற்ற இயக்கங்களைக் குறைத்து மதிப்பதாக யாரும் எண்ணக்கூடாது.

அவ்வியக்கங்களால் ஏற்பட்ட முன்னேற்றங்களையும் மாற்றங்களையும் நான் பட்டியலிட்டுக் காட்ட வேண்டிய தேவையில்லை. அவை ஒரு சமூக

அதிர்ச்சியை ஏற்படுத்தின. அவற்றினால் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றில் பூரணத்துவம் இல்லை என்று கூறுவதும் விதண்டாவாதமே. அறிவும், சமதர்மமும், அறச் சிந்தனைகளும் சமூகமயமாதலை நாம் எத்தனிக்கலாம். ஆனால் அதில் பூரணத்துவத்தைக் காண்பது என்பது எப்பொழுதும் குதிரைக் கொம்பே.

இன்னும் இரண்டு இலக்கியச் சான்றுகளை நான் இச்சொல்லின் சாராம்சத்தை விளக்க எடுத்துக் கூற விரும்புகிறேன். இலக்கியத்தில் கண்ணகியின் சிலம்பு ஒரு கற்புக் கனலின் எழுச்சி என்ற கண்ணோட்டத்திலே விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் பொதிந்திருக்கும் ஒரு அரிய பேருண்மை மறைக்கப்பட்டு விட்டது. அதற்கும் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்பதே உண்மை. அதில் பொதிந்திருப்பது நீதியின் நியாயம். கண்ணகி நீதி தேவதையின் பிரதி பிம்பம். அதன் சீற்றம் நீதியை நிலைநாட்ட அவள் எடுத்த ஒரு வீறுகொண்ட வீரதீரச் செயல். தனி மனுஷியாக அரச அவையில் புகுந்து ஒற்றைச் சிலம்பேந்தி வழக்குரைத்த ஒரு பெண்ணாகவே இளங்கோவடிகள் அவளைப் புனைய முன்வந்தார். ஆனால் இலக்கிய சமுதாய சம்பிரதாயங்களுக்கு அவர் அடிபணிந்துவிட்டார். எது அந்த சம்பிரதாய மரபு? அது பெண்ணுக்கு முக்கியமான பண்பும் தேவையும். அவளது கற்பே அதை இளங்கோவடிகளும் ஒரு நிர்ப்பந்தத்தின் பேரில் புகுத்தி இருக்கலாம். இதனால் நான் எழுப்பும் கேள்வி, மதுரை மாநகரில் கண்ணகி ஒருத்தியே கற்புடைய பெண்ணா? கணவனைக் கடவுளாகப் போற்றிப் பூஜிக்கும் பெண்களுக்குத் தமிழ் சமுதாயத்தில் குறைவே இல்லை. அப்படி ஒரு சமூக யதார்த்தம் இருக்கும்பொழுது சிலம்புள கொள்க என்று கண்ணகி ஒருத்தியே கூறுவாளா? அப்படிப் பதிவிரதைகளாக மதுரை மாநகரில் இருக்கும் பெண்களுக்கெல்லாம் இளங்கோ காவியம் படைத்திருக்க வேண்டுமே. ஆகவே கண்ணகி திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட தன் கணவன் கள்வன் அல்ல. அரசன் நீதி தவறிவிட்டான். வழுவிய அந்த அரச நீதியைக் கண்டித்துத் தன் கணவனை நிரபராதி என்று உலகுக்கு அறிவிக்கவே அவள் அரச சபைக்குச் சென்றாள். வாதாடினாள். தனிவாதத்தினால் அரசனின் பிழையை உணர்த்தினாள். அரசனும், அரச பிரமுகர்களும் மந்திரிமாரும், மக்களும் அவளது கூற்றின் உண்மையை ஏற்றுக் கொண்டனர். இது சமூக மயமாதலின் ஒரு உன்னத உதாரணம். சமூக மாற்றத்திக்குத் தேவையான சமூகமயமாதல் – இவற்றுடன் நானும் இன்னுமொரு வாதத்தையும் இணைக்க விரும்புகிறேன். எம் நாட்டுப் பேரறிஞராகிய மானிடவியலாளர் கணநாத ஒபயசேகரா கிட்டத்தட்ட பத்து வருடங்களாக ஆய்வு செய்து The Cult of the Goddess Pattini என்று ஒரு பெரிய நூலை எமக்களித்துள்ளார். அதில் கண்ணகியை ஒரு நீதிக்கு வாதாடிய ஒரு பெண் பிம்பமாகவே காண்கின்றார். சிங்கள மக்களிடம் பத்தினி தெய்யோ நீதிக்குக் கடவுளாகவே கொண்டாடப்பட்டு வணங்கப்படுகிறது என்று எடுத்துக் கூறுவது அவதானிக்கப்பட வேண்டும். நாடு கடந்து, மொழி கடந்து சமூகமயமாக்கப்பட்ட ஒரு நீதியை அடிப்படையாக வைத்துப் படைத்த பெண் பாத்திரம் கண்ணகி.

இன்னுமொரு பெண் அடிப்படைவாதச் சான்றும் உள்ளது. அது இப்பொழுது அருகிவிட்ட ஒப்பாரி பாடும் வழக்கம் – சாவீட்டில் பெண்கள் கூடி ஒப்பாரி வைக்கும் பொழுது அந்த அழுகை ஒலி பல விடயங்களை உள்ளடக்கியிருக்கும். இனசன பந்துக்கள் அன்றி அக்கம் பக்கம் அயல் ஊர்களிலிருந்து வந்தோர் என்று கூடிக்

கூக்குரலிடுதலில் அங்கு ஒரு சமூகத்தின் அலகு ஒன்றுபடுகிறது. மேலும் அந்த ஒப்பாரி வசனங்கள் பல செய்திகளைக் கூறும். இறந்தவரின் குடும்பங்கள் அவர் வாழ்ந்த வாழ்வின் நெறிமுறைகள் போன்றவற்றுடன் அவர் செய்த அக்கிரமங்களோ அன்றி அவரது குறைபாடுகளோ கூட பாடுபொருளாக அமைவதைப் பல ஒப்பாரிப் பாடல்களில் நாம் காணலாம். அங்கதச் சுவையுடன் அலங்காரமாக ஒளிவுமறைவாக மற்றவர்களுக்கு விளக்கக்கூடியதாகவும் இறந்தவரின் குடும்ப அங்கத்தவர்களையும் உள்ளடக்கி அந்த நையாண்டி தொடரும். சோகம் சமூகமயமாக்கப்படும் பொழுது அதில் பல அரிய விடயங்களும் அடங்கியிருக்கும்.

இவை யாவும் சமூகமயமாக்கலின் இலக்கியச் சான்றுகள் சில. ஆனால் இவை சமூக மாற்றத்திற்கு வித்திட்டதா என்பது கேள்விக்குறியே. கண்ணகியின் வழக்குரையும் நீதி வேண்டி அவள் நடத்திய போராட்டமும் அக்கால சமூகத்தில் அரசுக்கும் மக்கள் குழுக்களுக்கும் ஒரு விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்திருக்கும், ஏற்படுத்தியிருக்கும் என்று நாம் அனுமானிக்கலாம். தற்கால நடைமுறைச் சித்திரங்கள் எப்படி இருக்கிறது என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கிறது.

பெண் இயக்கமும், பால்நிலைச் சமத்துவ செயற்பாட்டாளர்களும் எவ்வளவு தூரம், எப்படி ஈடுபடுகிறார்கள். அச்செயல்கள் சமூக மாற்றத்திற்கு அடிகோலுகிறதா என்பதை நாம் ஒரு கள ஆய்வின் மூலமே நிறுவலாம். ஆனால் எமது சமூகப் பார்வை மூலமும் எமது அனுபவங்களை முன்வைத்தும் நாம் அவற்றின் பல பலன்களை அனுமானிக்கலாம். 80களில் தோற்றம் பெற்ற தற்காலப் பெண்ணியக்கங்கள் பாரிய மாற்றங்களை சட்டமூலமும், சமூக விழிப்புணர்ச்சி மூலமும் செய்துள்ளன என்பதை நாம் மறுக்க முடியாது. பெண் எழுத்தாளரின் பெருக்கம், பெண்களின் பொருளாதார உயர்ச்சி, கொடுமைகளைத் தட்டிக் கேட்டல், வீட்டு வன்முறையை கோட்டுக்கு இழுத்து விமோசனம் தேடல், கலை காட்சிப் பொருட்களில் ஈடுபாடு போன்றவற்றை நாம் பட்டியலிடலாம். ஆனால் பெருஞ்சமூகத்தில் இதன் விழுக்காடு யாது. பெண்கள் எல்லோருக்கும் விமோசனம் கிட்டி விட்டதா? இக்கேள்வியை நாம் திருப்பி எந்த விடயத்தில் மக்கள் அனைவருக்கும் அவரவர் குறைபாடுகள் நீக்கம் பெற்று பூரண விமோசனம் கிட்டி உள்ளது என்று ஒரு கேள்வியை எழுப்பலாம். தொழிலாளர் எல்லோருக்கும் வேலைக்கேற்ற கூலி, சம அந்தஸ்த்து போன்றவை கிட்டி விட்டதா? சில சில விடயங்களில் தற்கால நவீனத்துவ மூலமும் உலகளாவிய ரீதியில் தோற்றம் பெற்ற அபிவிருத்திகளின் மூலமும் சமூக அரசியல் இயக்கங்களின் மூலம் எம் மத்தியில் சமத்துவக் கருத்துக்கள் பரவியதன் மூலம் பலா பலன்களை நாம் பெற்றுள்ளோம். ஆனாலும் இவற்றிற்கு ஒரு மறுபக்கமும் உள்ளது. வெளி வேலைக்குச் செல்லும் பெண் உத்தியோகத்தர்கள் அதிகரித்ததனால் பாலியல் இம்சைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. பெண்கள் துணை இன்றித் தனியே பிரயாணம் செய்யும் பொழுது அவள் ஆண்களின் இச்சைக்குத் தூண்டப்படுகிறாள். பெண்களுக்குத் தனிப்பிரயாண வசதிகளோ பேருந்துகளில், புகையிரதங்களில் பெண்களுக்கென்று இடம் ஒதுக்கப்படுவதால் இக்கொடுமைகள் நீங்கலாமா? ஆண்களின் மனப்போக்கு மாறுபடுவதற்குப் பாலின சமதர்மக் கருத்தரங்குகளும், செயலமர்வுகளும் ஆண்களுக்கு நடத்தப்பட வேண்டும். இந்தச் சமூக மயமாக்கலில் பெண் இயக்கங்கள் ஈடுபட்டார்களா? ஒரு சிலர் இதைச்

செய்திருக்கிறார்கள் என்றாலும் இதற்கு ஆண்கள் மத்தியில் உடன்பாடு இருக்குமா? என்ற கேள்வியும் எழலாம். இதைவிட ஒரு முக்கிய குறைபாடாக நான் பெண் குழுக்களில் காண்பது களம் இறங்காமை. கருத்தரங்குகளிலும் செயலமர்வுகளிலும் பங்குபற்றுவோர் பெரும்பாலும் மத்தியதர வர்க்கத்தவர்களே. கீழ்வர்க்கப் பெண்கள், தோட்டத் தொழிலாளர், கூலி வேலை செய்வோர், வீட்டுப் பணிப்பெண்கள் போன்றோரை இக்கருத்தரங்குகளில் காண்பதரிது.

சமூகமயமாதலுக்கும் சமூக மாற்றங்களுக்கும் சில உதாரணங்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன். பெருந்தோட்டப் பெண்களை நான் சந்தித்த பொழுது பெரும்பாலும் அவர்களை ஒட்டிய பேசுபொருளாக இருந்தவை குறைந்த கூலியும் வேலைப்பளு போன்றவையே. அவற்றைத் தவிர்த்து வேறு பல பிரச்சினைகளும் அவர்களுக்கு இருப்பது தெரியவந்தது. முதலாவது கட்டாயக் கருக்கலைப்பு, இரண்டாவது அவர்களது தேகாரோக்கியம். ஒரு பிள்ளை இரண்டு பிள்ளைகள் உள்ள இளம் பெண்களை அவர்களது அறியாமையைப் பயன்படுத்தி போதிய விளக்கங்களைக் கூறாமல் மகப்பேற்றை நிரந்தரமாகத் தடைசெய்வதற்கு அவர்களது சம்மதமின்றி மருத்துவ சாதனங்களை உபயோகித்துத் தடைசெய்து வந்தார்கள். அரசாங்க உத்தியோகத்தர்களும் அங்கிருக்கும் சில அதிகாரிகளும் இணைந்து சில வருடங்களாக நடைபெற்று வந்தது. இதைக் கண்டறிந்த எமது நிறுவனம் இதில் ஈடுபடுவோர் சிலரையும் அரசாங்க உத்தியோகத்தோர் சிலரையும் கண்டு உரையாடி அவர்களை எமது நிறுவனத்திற்கு அழைத்து இப்படிக் கருத்தடை செய்யப்பட்ட பெண்கள் சிலரையும் அழைத்து ஒரு விழிப்புணர்ச்சி கருத்தரங்கு நடத்தினோம். இதில் நாம் கண்டறிந்த உண்மை வறுமையால் வாடும் பெண்களுக்கு இது ஒரு நிவாரணம் என்று கூறப்பட்டது. சிறு குடும்பம் வறுமையைக் குறைப்பதற்கு ஒரு வழி ஆனாலும் இந்தக் கட்டாயக் கருக்கலைப்பின் பல குறைகளை நாம் எடுத்துக் கூறினோம். இதனால் பெண்களுக்கு ஏற்பட்ட பல மருத்துவப் பிரச்சினைகளின் தொடர்ச்சி, அவர்களுக்கு இரண்டு, மூன்று குழந்தைகளைப் பெறும் ஆவல், போதிய விளக்கங்களையும் கருத்தரிப்பின் பலாபலன்களை அவர்களுக்கு எடுத்துக் கூறாமை, அவர்களது சம்மதங்களைப் பெறாமல் அவர்களை ஒரு பண்டமாக, உணர்ச்சி. ஆசை, ஆவல் அற்ற பிண்டங்களாகப் பாவித்ததை எல்லாம் வெளிக்கொணரப்பட்டன. கருத்தரங்கின் இறுதியில் அவர்களது மனமாற்றம் வெளிப்பட்டது. நாளடைவில் இச்செய்கை நிறுத்தப்பட்டது. பெண்களும் எமக்கு நன்றி கூறினார்கள்.

சமூக மாற்றத்தில் ஒரு பெரும் மாற்றமாக நான் கருதுவதைக் கீழே தருகிறேன். கொழும்பின் பிரமுகர்கள் வாழும் கொழும்பு 07 என்று வகுக்கப்பட்ட இடத்தில் ஒரு பகுதியில் ஒரு சேரியும் இருந்தது. நான் கூறும் இந்த விடயம் கிட்டத்தட்ட 35 வருடங்களுக்கு முன் நடந்தது. ஆனாலும் என் மனதில் ஆழப்பதிந்த ஒரு நினைவாக அது உள்ளது. அங்கு உடலை விற்று சம்பாத்தியம் தேடும் ஒரு சிறு பெண்கள் குழு இருப்பதாக அறிந்தோம். குமாரி ஜயவர்த்தனாவும் நானும் இந்த விடயத்தை அறிந்தபொழுது இதை எப்படி அணுகுவது, இதற்கு ஏதும் மாற்றுவழி சமைக்க முடியுமா என்று ஆலோசித்தோம். ஒரு நாளைத் தேர்ந்தெடுத்து ஒரு காலைப் பொழுதில் அவர்களைச் சந்திக்கச் சென்றோம். எங்களைக் கண்டவர்களின் முகங்களில் திகிலும் பயமும் பிரதிபலித்தன. சேறும் சகதியுமாயிருந்த அவ்விடத்தை

முழங்கால்வரை தூக்கிப்பிடித்த சேலையுடனே நடந்து சென்றேன். அவர்களது பயத்தைப் போக்கி சில வார்த்தைகளைக் கூறி ஒரு சகஜ மனப்பான்மையை உருவாக்கினோம். தமிழ் சிங்களப் பெண்களாகவிருந்தவர்கள் மத்தியில் இன உணர்வுகளோ வித்தியாசங்களோ காணப்படவில்லை. வறுமை நிலையில் இனமத வேறுபாடுகள் அடங்கி வர்க்க ஒருமைப்பாடே அங்கு நிலவியதைக் கண்கூடாகக் கண்டோம். நான் தமிழில் உரையாட குமாரி ஜயவர்த்தனா சிங்களத்தில் உரையாடினார். எங்களுடைய உரையாடலை நாம் முன்பே தீர்மானித்தபடி ஒரு கேள்வியை அவர்களிடம் கேட்டோம். இத்தொழிலிருந்து விடுபட்டு வேறு தொழிலில் இணைய அவர்களுக்கு விருப்பமா என்ற கேள்வியுடன் எம் சந்திப்பு முடிந்தது. 20 வயதிலிருந்து 25-30 வயதிற்குட்பட்ட எட்டுப் பெண்கள் கேள்விக் குறிகள் மேவிய முகங்களுடன் எங்களைப் பார்த்து எங்களது நல்லெண்ணத்தைப் புரிந்து கொண்ட மனோபாவத்துடன் விருப்பமே என்று பதிலளித்தனர். சமூகமயமாக்கலின் முதற்படி இது என்று நான் கருதுகின்றேன். அவர்களை ஒரு குறிப்பிட்ட திகதியில் எங்கள் நிறுவனத்திற்கு வந்து சந்திக்கச் சொல்லி சிரித்த முகத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் விடைபெற்றோம். அவர்களும் வந்தார்கள். பல விடயங்களைக் கலந்துரையாடினோம். அவர்களுக்கு வேலைக்குகந்த பயிற்சி அளிக்க அவர்களைப் பின்பு அழைத்து வீட்டுப் பணிப் பெண்களுக்குத் தேவையான வீட்டலுவல்களில் பயிற்சி அளித்தோம். மின்னுபகரணங்களை எப்படி உபயோகிப்பது (Grinder, Mixture, Polisher) என்பதை அவர்களுக்குப் புரிய வைத்தோம். அவர்களுக்கு Apron என்றழைக்கப்படும் மேலங்கிகளையும் வழங்கினோம். மனோரீதியில் அவர்களைக் கவரவும், உயர்த்தவும் பயனுள்ள மானிடராக அவர்கள் தங்களை உணர்ந்து கொள்ள நாம் எடுத்த உத்தி ஒன்று இது. சில புதிய உடைகளையும் கொடுத்து எங்களது தோழிகள் சிலரின் வீடுகளுக்கு அவர்களைப் பற்றிய உண்மைகளைக் கூறி பணிப்பெண்ணாக அனுப்பி வைத்தோம். இதற்கு முன் அவர்களை வைத்தியர் ஒருவரிடம் அழைத்துச் சென்று HIV போன்ற பாலியல் நோய் அவர்களை அணுகவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டோம். அவர்களைத் தெரிந்தோர் இல்லங்களுக்கு அனுப்பி வைத்ததற்கும் இவ்வேலையைத் தேர்ந்தெடுத்ததற்கும் முக்கிய காரணம் வீடுகள் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதே. அவர்களுக்கு வாழ்க்கையின் விமோசனத்திற்கு முதல்படியை அமைத்து அவர்களது முந்தைய தொழிலில் இருந்து அவர்களை விடுவித்ததும் ஒரு சிறு சமூக மாற்றம் என்று நாம் கருதலாம்.

களத்தில் இறங்க வேண்டும் என்பதற்கு இன்றும் ஒரு உதாரணம். வீட்டுப் பணி செய்யும் பெண் தொழிலாளியின் அவல நிலைமையைத் தெரிந்து கொண்ட எமது நிறுவனம் அவர்களைச் சந்தித்துச் சேகரித்த ஆய்வின் மூலம் அவர்கள் எப்படி சுரண்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்தோம். ஒரு சிறு ஆய்வில் 50 பெண்களைச் சந்தைகளிலும் கடைகளிலும் தெரு ஓரங்களிலும் சந்தித்துத் தெரிந்து கொண்டோம். அவர்கள் வேலை செய்யும் வீடுகளுக்குச் செல்வதை எஜமானிகள் விரும்பமாட்டார்கள். அப்பெண்களும் அவர்கள் முன்னிலையில் உண்மையைக் கூறமாட்டார்கள் என்பது எமக்குத் தெரிந்த விடயம். இங்கு நாம் கண்டுணர்ந்த ஒரு சுவாரஸ்யமான செய்தியையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். பெண்கள் நலம் பேணுவதையும் பெண்ணுரிமையை மதித்து நடத்துவதையும் வீட்டுப் பெண்

எஜமானிகளே மீறுவதைக் கேள்விக்கூடாகக் காணக்கூடியதாயிருந்தது. இங்கு பெண் நிலை வாதக் கோட்பாட்டை மீறிய வர்க்க பேதமே வெளிப்பட்டது. இது எமது இயக்கத்துக்கு துக்ககரமான ஒரு நிலைப்பாடு. வர்க்க பேத முதன்மையை இவ்வாய்வு எமக்கு உணர்த்தியது. இதன்பின் அரசாங்கத்திற்கும் சர்வதேச ஊழியர் நிறுவனத்திற்கும் ஒரு விண்ணப்பம் அனுப்பினோம். அவர்களது ஊதியம் வரையறுக்கப்பட வேண்டும். ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்பட வேண்டும். வேலை நேரம் கணிக்கப்பட்டு விடுமுறை கிரமமாக வழங்கப்படல் வேண்டும். அவர்கள் தங்களை நகரசபையில் பதிவு செய்ய வேண்டும் போன்ற நிபந்தனைகள் அடங்கிய அந்த விண்ணப்பத்தை அரசு அரைமனதுடன் ஏற்றுக் கொண்டு அதற்குரிய சமிக்ஞைகளைக் காட்டியது. அமுலாக்கம் பெற பல நாட்களோ வருடங்களோ செல்லலாம். ஆனாலும் எம் முயற்சியைத் தொடர்ந்து எம்முடன் உரையாடி எமது ஆய்வின் பெறுபேறுகளைப் பெற்று மேலும் சில நிறுவனங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன் வந்துள்ளன என்பது சமூகமயமாதலுக்கும் எதிர்பார்க்கும் ஒரு சமூக மாற்றத்திற்கும் உதாரணமாக இருக்கும்.

மேலே நான் கூறிய விடயங்களைப் பெண் இயக்கச் செயற்பாட்டாளர்கள் வேறு வழியில் செய்து வருகிறார்கள். ஆனாலும் சமூக மயமாதலும் அதன் பெறுபேறாக சமூக மாற்றமும் போதியளவு நாம் விரும்புமளவு ஏற்படவில்லையென்பதும் உண்மையே. கருத்தரங்குகள் செயலமர்வுகள் யாருக்குத் தேவையோ அவர்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும். பல கருத்தரங்குகளில் ஒரே பெண்களே பங்குபற்றுகிறார்கள். கருத்தரங்குகள் செயலமர்வுகள் கட்டுரை ஆக்கங்களைத் தொடர்ந்து களத்தில் இறங்க வேண்டும். ஏட்டுச்சுரைக்காயாகப் பல பெண்கள் நிலைவாதப் பிரசுரங்கள் கவிதையாகவும், கட்டுரைகளாகவும் கதைகளாகவும் பெருகிக் கொண்டே போகின்றன. அவை எவ்வளவு தூரம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன என்பதை நாம் ஆய்வு செய்யலாமா? சிலர் தங்களை அவை சிந்திக்கச் செய்கின்றன என்று கூறுவதனையும் நான் கேட்டிருக்கின்றேன். இச்சிந்தனைகள் செய்றபாட்டுக்கு இட்டுச் செல்கின்றதா என்பதே கேள்வி. ஒரு பெரும் கவிஞர் பெண் விடுதலையைப் பற்றிக் கவிதை ஆக்கம் செய்பவரின் மனைவி அவரால் வன்முறைக்குட்படுத்தப்பட்டுக் காயங்களுடன் என்னிடம் முறைப்பாடு வைத்ததும் எனக்கு நினைவிற்கு வருகிறது.

நாம் பல தூரம் செல்ல வேண்டும். பல வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். அவற்றைச் செயற்பாடாக்க வேண்டும். ஆண்களும், பெண்களுக்கு அண்ணன் தம்பிமார்களாக இருப்பவர்களும் தந்தை, மாமன், மச்சானாக இருப்பவர்களும் இம்முயற்சியில் இணைய வேண்டும் என்பதை ஆண்களும் உணர வேண்டும். களமிறக்க வேண்டும்.

# கலாக்கா

அன்புடன் தேவினி

"ஏன் தேவினி சும்மா இருந்த என்னை இவ்வளவு காலத்திற்கு பின்னர் வந்து பாசத்தை கிழறிப்போட்டு போட்டீங்கள். திரும்ப எப்போ வருவீங்கள்" இவை நாங்கள் பலவருடங்களின் பின்னர் அவரிடம் சென்று வந்த பின்னர் கலாக்கா கேட்பது என் காதுகளில் ஒலித்தவண்ணம் உள்ளன.

முப்பது வருடங்களின் பின்னர் சத்தித்தோம். நாமும் எம் பிள்ளைகளும் உங்களுடன் விடியவிடிய, விழித்து விழித்து கதைத்தோம். விழுந்து விழுந்து சிரித்தோம் மகிழ்ந்தோம். பாடசாலைப்பருவம். பல்கலைக்கழகம் நாம் செல்லும் நோக்குடன் கல்வியில் ஆர்வம் காட்டியதற்கு கலாக்காதான் முன் உதாரணம்.

தேவண்ணாவை கரம்பிடித்தால் எம்மில் பாசம் குறைந்து விடும் என்று எண்ண, மாறாக மேலும் கலகலப்பு கூடியது எம் குடும்பத்தில். எங்களுக்கு அம்மாவாக, அன்ரியாக, அக்காவாக, சினேகிதியாக அன்பையும் பாசத்தையும் கொட்டிய கலாக்கா இன்று அழகோவியமாக மாறிவிட்டதை மனம் தாங்கமுடியாத போதிலும் சகலகலாவல்லியான உங்களை எண்ணி நாம் பெருமை அடைகிறோம்.

திரும்பி வருகையில் தேவண்ணாவின் அன்பான வரவேற்பிலும் அபியின் கனிவான பேச்சிலும் உங்கள் ஒவ்வொரு பூச்செடிகளிலும் உங்களை நிச்சயம் பார்ப்போம்.

# எங்கள் கலாக்கா

அன்புடன் தர்ஷினி லெங்கேஸ்வரதாசன்

கலாக்கா! எங்கள் வாழ்வில் யாராலும் ஈடுசெய்ய முடியாத நபர்.

என்னில் பலர் கலாக்காவின் அசைவுகளை காண்கின்றனர். அதை எண்ணி என் மனம் பெருமிதம் அடைகின்றது

நான் நினைவு தெரிந்த நாளில் இருந்து எங்கள் அம்மா நித்திரை அயர்ச்சியில் (எழும்பும் போது) கூப்பிடும் முதற்பெயர் கலா… கலா… ஆபிரேஷன் முடிந்து நினைவு தெளியும் போதும் கூப்பிடும் முதற் பெயர் கலா.. கலா அவ்வளவு பாசமான சகோதரர்கள்

கலாக்கா!

பலரின் கண்களுக்கு அலங்கோலமாகத் தெரியும் காட்சியும் உங்களுக்கு, அழகாகத் தெரியும். அதை நீங்கள் ரசிப்பதைப் பார்த்து நாங்களும் எங்களின் ரசிப்புத் தன்மையை வளர்த்துக் கொண்டோம்.

கலாக்கா!

என் பிள்ளைகள் ஒரு தடவை கூட உங்களோடு சேர்ந்து இருந்து கதைத்துச் சிரிக்க கொடுத்து வைக்கவில்லை என்னும் ஏக்கம், என மனதில் என்றென்றும் இருக்கும்.

அடுத்தவரிற்கு சிறு கஷ்டமும் கொடுக்காத மரணம் நல்மனம் படைத்தவரிற்கு மட்டுமே கிடைக்கும். உங்களின் சிரிப்பும், பாசமும் என்றும் எங்கள் மனதைவிட்டு நீங்காதவைகள்.

# அம்மம்மா

அன்புடன் சாதனா

ஒரு சாமான் எடுக்க போறவா. அப்பேக்கை என்னோட கதைச்சுக் கொண்டு போனவா. என்னோடை கதைக்கிறதனால அவா என்ன சாமான் எடுக்கிறது எண்டு மறந்திடுவா. அவா என்னட்ட கேட்பா, என்ன சாமான் எடுக்க வந்தனாங்க.

எனக்கும் என்ர நண்பிக்கும் ஒரு நாள் இரவு 8.30 மணி வரைக்கும் படிப்பிச்சவா. அப்ப என்ர தாத்தா வந்து அவாவ பேசினவர். "ஏன் இவ்வளவு நேரமா படிப்பிச்சு கொண்டு இருக்கிறீங்கள். அதுவும் கோயிலில இருக்கிறீங்கள். எங்க எல்லாம் தேடினான்" என்றார்.

என்ர அம்மா கொழும்புக்கு சென்றா. அவவோட தான் நான் இருக்கிறனான். அவா என்னை வடிவா பாக்கிறவா என்ர அம்மம்மா எனக்கு கணிதம் படிப்பிக்கிறதிக்காண்டி முதலே அவா படிச்சு எனக்கு படிப்பிக்கிறவா.

எப்பயும் படிக்க வாங்கோ. படிக்க வாங்கோ எண்டு கேட்கிறவா.

சிலநேரங்களில சொல்றவா. ஒரு வேளை நாளைக்கு நான் செத்துப்போனா என்னண்டு நீங்கள் படிப்பீங்கள் எண்டு.

எனக்கு அம்மா அடிச்சா நான் அவாட்ட தான் போய் சொல்றனான். அவா சொல்றவா. அம்மா பாவம். அவா தலையிடியாலதான் அடிச்சவா. நீங்கள் நல்ல பிள்ளையாய் நடக்கவேணும்.

ஒருநாள் என்ர மாமா, மாமி, மச்சான்மார் அக்காமார் வந்தவை. அப்ப நாங்கள் எல்லாரும் ஆடினாங்கள். அப்ப அம்மம்மா வந்து ஆடினவா. எல்லோரும் சிரிச்சிட்டம். அவாவும் சிரிச்சா.

ஒருநாள் பாட்டுப்போட்டில அவா எல்லாரையும் விட எல்லாப் பாட்டையும் பாடினவா.

நானும் அம்மம்மாவும் வெளிய போனால் வரேக்க அம்மாவுக்கு தெரியாம ஐஸ்கிறீம் குடிக்கிறனாங்கள்.

ஒருநாள் எனக்கு ஐஸ்கிறீம் வாங்கிக்கொண்டு வந்தவா.

அம்மா தடிமன் எண்டு விடேல்ல என்றதால அவா அவான்ட அக்காவிக்கு குடுத்து ஒழிஞ்சு நிண்டு குடிச்சா.

அம்மம்மா இறந்ததனால நான் சரியா கவலைப் பட்டனான். ஆனால் இப்ப எனக்கு கவலையில்ல. அம்மா தான் நெடுகலும் அழுதுகொண்டு இருக்கிறா. எனக்கு நண்பர்கள் இருக்கினம். அவயளோட இருக்க கவலை யெல்லாம் போயிட்டுது.

அவா என்னை சங்கீத வகுப்பில விட்டிட்டு வெளிய இருந்து நாங்க பாடிற மாதிரி தானும் பாடிறவா. அந்த சத்தம் எங்களிற்கு வகுப்பில கேக்கிறது. நான் வீட்ட போய் அம்மாவிற்கு சொல்லிறனான். அம்மா இனி பாடக்கூடாது எண்டு சொல்லிச் சிரிக்கவா.

# பல சேவைகளில்..

கமலம்

[கமலசேகரம்]

கலா-தேவா என்ற குடும்ப பூங்காவில் இணைந்திருந்தவர்களுள்; நானுமொருவனாக இருந்திருப்பதை எண்ணும்போது மனம் நினைவுகளால் எங்கெங்கெல்லாமோ சிதறடிச்சுச் பறக்கிறது. நினத்துப் பார்க்கவே முடியாத கலாவின் தீடீர் மறைவு நினைவலைகளை, பசுமையான அக்கால நினைவுகளை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்துக் கண்கலங்க வைக்கிறது.

தேவாவின் கலை, இலக்கிய, கலச்சசார, அரசியல், மக்கள் சேவையுடன் இரண்டறக் கலந்திருந்திருந்த இணைந்திருந்த கலாவுடன் நாமும் பலதடைவைகள் பங்காற்றியுள்ளதை நினைக்கும் போதும் அவர் காட்டிய அபராத திறமையும் வழிநடத்திய தன்மையையும் அவரை அறிந்த பலரை வியக்க வைத்திருக்கிறது. அவருக்கு கணனி ஆசிரியனாக, கணனி பயிற்றுவிப்பாளனாக இருந்து அவரின் அளப்பரிய திறமையையும் கண்டு வியந்திருக்கிறேன். தானாகவே தேடி விரைவாக கற்று எனக்கே திருப்பிக் கற்பிக்கின்ற வல்லமை பெற்ற கலாவை நினைத்துப் பார்க்கிறேன்.

அக்காலத்தில் கொழும்பில் நடைபெற்ற சமூக, அரசியல், இலக்கிய, சமகால விடயங்கள் சம்பந்தமான சகலவிதமான கூட்டங்களுக்கும் கலந்துரையாடலுக்கும் தேவா கலா தம்பதியினர் அழைக்கப்பட்டிருப்பார்கள். தேவா கலந்து கொண்டாரோ இல்லையோ நிச்சயமாக கலா கலந்து கொள்ளத் தவறுவதில்லை. அத்தோடு நிற்கமாட்டார். நிகழ்வின் விடயங்களை முற்றாக உள்வாங்கி கேள்வி நேரத்தில் ஆக்கபூர்வமான கேள்விகளை கேட்பதும் நிகழ்வின் நிகழ்ச்சியாளர்; பதிலின்றி தடுமாறும் போது தான் விளங்கிக்கொண்ட விளக்கத்தை விளங்க வைப்பதில் முன்நின்றவர் கலா அவர்கள். பல நிகழ்வுகளில் சொல்லப் போனால் நிகழ்வின் பேச்சாளர்கள் கலா சபையில் இருக்கிறாரா என்று நிச்சயப்படுத்திய பின்னரே பேச ஆரம்பிப்பதை கண்டிருக்கிறோம்.

கலாவும் இதுபோன்ற கூட்டங்களில் பல விடயங்களில் பங்கேற்றிருக்கிறார் பேசியிருக்கிறார். கலா சமூக, அரசியல், சமய, சமகால நிகழ்வுகளில் கேள்விகள் எழுப்பிய முறைமையும் அதனால் எழுந்த சபையினரில் சலசலப்பும் வாக்குவாதங்களின் தொகுப்பும் எழுதுவதானால் மிகமிக நீளமானது. இப்படி நடந்தேறிய பல விடயங்களை நண்பர்கள் பலரும் அறிவார்கள்.

கலாவின் இன்னொரு பக்கத்தையும் இங்கு நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்வதோடு, விமர்சிப்பதோடு மட்டும் நின்றுவிடாது முடிந்தளவு செயற்படுத்தவும் முயன்றிருக்கிறார். உதாரணமாக பிரசித்தி பெற்ற இவர்களின் மிக நெருங்கிய நண்பரான "அழிக்கப்பட்ட அதிபரின்" மகளின் திருமண நிகழ்வில் இது நிகழ்ந்தது.

பலரும் அறிந்தது. அவர் எழுதிய கதைகளில்கூட ஒரு கதையாக இதனைத் தொகுத்துள்ளார்.

திருமண நிகழ்வில் மேடையில் நாமெல்லோரும் வரிசையாக அமர்திருக்கிறோம். மறைந்த நண்பரின் மனைவி, மணமகளின் தாயார், கலாவின் நெருங்கிய நண்பி கண்கலங்கியபடி மேடையில் நடந்து கொண்டிருக்கும் திருமண சடங்குகளைப் பார்த்தவண்ணம் எம்முடன் இருக்கிறார். குருக்கள் மணமக்களின் தாய் தந்தையை மேடைக்கு வரும்படி அழைக்கிறார். எமதருகில் அமர்ந்திருந்த மணமகளின் தாயார் விம்மி விம்மி அழுகிறார். மேடையை நோக்கி குடும்பத்தினர் படையெடுக்கின்றனர். கண்கலங்கிக் கொண்டிருந்த தாயை ஒருவரும் கவனிப்பாரில்லை. அவர் விதவையாம். திடீரென கலா எழுந்தார். நண்பி, மணமகளின் தாயாரின் கையை பிடித்து தர தரவென்று இழுத்துக் கொண்டு மேடை நோக்கி நடந்தார். நண்பியை, மணமகளின் தாயாரை மேடையில் மகளுடனே நிறுத்தினார். குருக்கள் உட்பட மேடையில் நின்ற உறவினர் அனைவரும் திகைத்தனர். கலா அவர்களுக்கு என்ன சொன்னாரோ தெரியாது. எதிர்க்க திராணியற்றிருந்தனர். ஒருவரும் ஒன்றும் பேசியதாக தெரியவில்லை. கலாவைப் பற்றி அவர்களெல்லாம் நன்கறிந்தவர்கள். தொடர்ந்து கலாவின் செயற்பாட்டின்படி அன்று சகல திருமண சடங்குகளும் விதவையான மணமகளின் தாயாரை வைத்துக் கொண்டே நடந்தது.

பேச்சளவில் நிற்காது செயலளவில் கலாவால் நடத்திக்காட்டிய சமூகத்தின் பாரம்பரியமென நடந்தேறிய அநியாயம் தகர்கப்பட்ட இந்நிகழ்வு இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. இதன்பின் இது பல குடும்ங்களில் இதனை உதாரணமாகக் கொண்டு விதவைகளென தாய்மார் புறக்கணிக்கப்படாமல் குடும்ப நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக காண்கிறோம்.

இவ்வாறு கலாவுடன் பழகிய காலங்களில் நாம் கண்ட பல நிகழ்வுகளை நினைவு கூரலாம். சமூகத்தின் பிறழ்வுகளை காலத்திற்கேற்ப சீரமைக்க வேண்டுமென்ற பேரவாவுடன் வாழ்ந்தவர். பல விடயங்களை சுட்டிக்காட்டியும் சிலவற்றை செய்து காட்டியும் வாழ்ந்தவர்.

கலாவின் கடந்த வாழ்க்கைக் காலத்தை பக்கம் பக்கமாக ஆராய நிறைய விடயங்கள் நிகழ்வுகள் உண்டென்றால் அது மிகையாகாது. அவர் இன்றும் எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றே நம்புகிறோம். நம்புவோமாக.

# சின்னத்தாய் அவள்

அன்புடன் பவானி

உறவுமுறையில் எனது சின்னத் தாய் பழக்கத்திலும் எங்களை அன்பு அக்கா கலாக்கா.

கலாக்கா என்று சொன்னாலே எங்கள் உள்ளம் இனிக்கும். முகம் மலரும். அதேபோல அவாக்கும் அக்காமாரின் பிள்ளைகள் என்றால் கொள்ளைப் பாசம். அவா தனது வயிற்றில் பிள்ளைகள் பெறமுதலே எங்கள் எல்லாருக்கும் தாயாகி விட்டா.

அழகும் அன்பும் அறிவும் ஒருங்கே பெற்ற தேவதை எங்கள் கலாக்கா. எங்களோடு சேர்ந்து வாழ்ந்த காலத்தில் உணவுக்குப் பஞ்சமாக இருந்த காலத்தில் பழஞ்சோற்றை ஊறுகாயுடன் பிசைந்து மிளகாய்ப் பொரியையும் சேர்த்து வாய் ஊற ஊற உறுட்டித்தந்து எங்கள் பசியாற்றுவா. நாங்களும் அவாவோடு சேர்ந்து மகிழ்ச்சியாக உண்போம். கவலை இருக்காது.

முந்தின காலத்தில் சின்னப் பிள்ளைகளுக்கும் உணர்வுகள், பிரச்சனைகள் இருக்கும் என்று பெரியவர்கள் நினைப்பதில்லை. எங்கட கலாக்கா தான் எங்களுக்காக அப்பவே போர்க்கொடி தூக்குவா. அதில் வெற்றியும் காணுவா. எனது முகத்தில சிறுவாட்டம் என்றால் கூட கண்டுபிடித்துவிடுவா. அவ்வளவு அக்கறை எங்களிடம். இயன்றவரை எங்கள் குறைகளை தீர்த்து வைப்பதும் அவாதான். நாங்கள் சந்தோசமாக இருக்கவேணும் என்பதுதான் அவான்ர ஒரே ஆசை. எங்களுக்கு சுத்தம், அழகுபடுத்தல் கற்றுக்கொடுத்ததும் கலாக்கா. இயற்கையை இரசிக்க காட்டிக் கொடுத்ததும் கலாக்கா. பொறுமையாக இருக்கவும் தேவையான இடத்தில் பொங்கி எழவும் காட்டித் தந்தவர். மொத்தத்தில் எனக்கு வாழ்க்கையில் முன்னுதாரணம் கலாக்கா.

எனக்கு வாழ்க்கையின் மிகவும் மறக்கமுடியாத காலம் என்றால் அது கலாக்காவும் தேவண்ணாவும் மணமுடித்து எங்கள் வீட்டில் ஒன்றாக வாழ்ந்த காலம். இனிய வசந்த காலம்.

அன்புக் கலாக்கா காலத்தால் எங்களை விட்டு மறைந்துவிட்டா. ஆனால் எங்கள் .நினைவுகளில் என்றும் பசுமையாக...

என்னைவிட்டு நினைவு அழியும் வரை கலாக்கா என்னுடன் வாழ்வா. என் நினைவுகளில் செயல்களில் நீங்களே கலாக்கா.

உங்கள் பிரிவை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் உங்கள் மகள்.

# எல்லாம் தந்த கலாக்கா

அன்புடன் றோகணா
(றோகி)

என்றும் அழியாத நினைவுகளுடன் அங்கோ ஒரு புள்ளியளவையாவது உங்களுடன் பகிர்வோம் என்னை உணர என் வயது ஏழில் இருந்து எம்வாழ்வில் தேவண்ணா, கலாக்கா என்ற ஒன்றுதான் வாழ்வில் எமக்கு கிடைத்த இன்பம், சந்தோஷம், அன்பு, எடுத்துக்காட்டு, அர்ப்பணிப்பு எல்லாமே அவர்களால் கற்றவைதான்.

கலாக்காவின் நினைவை எழுதிமுடிக்கமுடியாது. அவாவின் அன்பு யாரையும் கவராமல் இருக்க முடியாது. அவாவின் அன்பு, அழகு, கருணை, அர்ப்பணிப்புடன் வாழ்ந்த கலாக்கா இன்று எம்முடன் இல்லை.

சிறுவயதில் அப்பாவை பிரிந்த எனக்கு அப்பாவாக இருந்து அன்புகாட்டிய தேவண்ணா எனது (Role model) அவருக்கு முன்நின்று ஊக்கிவித்த கலாக்கா உங்கள் இருவருக்கும் நன்றிகள் கோடி. அவர்கள் இருவர்க்கும் அன்புடன் அக்காவாய் எமது அம்மா உதவியாக இருந்தும், அவர்கள் எமக்கு உதவியாகவும் ஒரே வீட்டில் வாழ்ந்த காலங்கள் எங்கள் இரத்தத்தில் ஒன்றாக எம்மை விட்டு பிரிக்க முடியாதவை.

அதேபோலவே தேவண்ணா கலாக்காவின் பிள்ளைகள் தம்பி (ஜனமகன்) அபி (அபிலஷா) அவர்கள் பேரப்பிள்ளைகள் மூவர் எங்கள் வீட்டுப் பிள்ளைகள்.

கலாக்கா தேவண்ணாவை என்னால் பிரித்து எழுதமுடியவில்லை மன்னிகவும் அவர்கள் காட்டிய பாதையில் தான் நாம் இன்று பயணிப்பது. கலாக்கா மூலம் நாம் முக்கியமாக கற்றவை அன்பு, பகிர்ந்து உண்பது, இரக்கம் காட்டுவது, மற்றோரை மதிப்பது, நாகரீகமாகப் பேசுவது, சுத்தம், அப்படி எம்மை நாகரிகமாக உடை உடுத்து வெளிக்கிடுவது என்றே... அடிக்கிக் கொண்டே போகலாம். எல்லாவற்றையும் கற்று தந்து நாம் அதில்பயன் பெற்றுள்ளோம். கோடி நன்றிகள் கலாக்க நன்றிகள் தேவண்ணா.

எல்லாம் எமக்கு தந்த கலாக்க இன்று எம்முடன் இல்லை. என்றோ ஒருநாள் மனிதன் மரணித்தாக வேண்டும். அங்கே கலாக்கா வேறா... உங்களை மரணம் அழைத்தாலும் நீங்கள் எம்முடன் என்றும் மனதில்தான். உங்களின் சாந்திக்காக வேண்டி உங்கள் அக்கா குடும்பம்.

# கலாக்கா, கலாக்கா..

அன்புடன் கல்யாணி இரவீந்திரன்

கலாக்கா என்ற நாமம் நம் நாவிலிருந்தும் நினைவிலிருந்தும் என்றுமே நீங்காது! நீங்கள் இவ்வுலகை விட்டு பிரிந்து ஒரு வருடமாகிவிட்டாலும், நீங்காத நினைவுகளாய் நம் உள்ளத்தில் என்றுமே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறீர்கள் கலாக்கா. உங்களை நினைக்கும் போதெல்லாம் நா தழுதழுத்து கண்ணீர் ததும்பி நிற்கிறோம் கலாக்கா.

உங்களை நாங்கள் கலாக்கா என்றழைத்தாலும் நீங்கள் நமக்கு சித்தியாக இருந்தாலும், உங்களை நம் தாயாகவும் அதற்கு மேலாகவும் நினைக்கிறோம், மதிக்கிறோம் கலாக்கா.

எமது சிறுவயதிலிருந்து நீங்கள் எம்மோடு ஒரே வீட்டில் வாழ்ந்த அந்த அற்புதமான வாழ்க்கையை என்றுமே மறக்க முடியாது மச்சி. அது நம் நினைவிலிருந்து நீங்காத ஒரு வசந்த காலம் மச்சி.

உங்கள் வசீகரம், நாகரீகம், சுத்தம், அனைவரையும் மதிக்கும் பண்பு, நாடக நடிப்பு, எழுதும் சிறப்பு... இவையெல்லாம் நாம் உங்களிடமிருந்து கற்றுக்கொண்டவை கலாக்கா. இவை என்னை மட்டுமல்ல அனைவரையும் கவர்ந்த நற்பண்புகள். நீங்கள் அன்பின் உறைவிடம். இந்த அன்பின் உறைவிடம் என்றென்றும் நம் உள்ளத்தில் நீங்கா உறைவிடமாய் வாழ்ந்துகொண்டிருக்கும்,

“பிறப்புண்டேல் இறப்புண்டு” என்பது தெரிந்திருந்தும் நம்மையெல்லாம் மீளாத்துயரில் விட்டுச்சென்ற உங்களை நினைந்து நினைந்து கண்ணீர் மல்கி நிற்கின்றோம். இருப்பினும் நம் அன்பு கலாக்காவின் ஆத்மா எந்த சிரமமுமின்றி சாந்தியடைய இறையை இறைஞ்சி நிற்கிறோம்.

ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி..

அன்பு அக்கா, பிள்ளைகள் பேரப்பிள்ளைகள்

# கனக்கிறது இதயம்

சாந்தி செல்வம்

கலாக்கா....
கனக்கின்றது இதயம்
கலங்குகின்றது விழிகள்
கனவாக மாறாதோ
எம் கலாக்காவின் மறைவு
****

கனிவாக பேசுவா
கலகலப்பாக பேசுவா
கண்டிப்பாக பேசுவா
ஏன், சண்டித்தனமாகவும் பேசுவா
*****

கன்னியர்க்கு ஒரு உதாரணமாய்
கலைக்கு ஒரு முத்தாய்
கணவர் கொள்கைக்கு ஒரு விழுதாய்
காவியம் படைத்த கலாக்கா
*****

கண்மணிபோல் இரு மணிகளை
கருத்தோடு பெற்று வளர்த்து
காத்து வந்தா கருணையுடன்
கண்ணிமையை காப்பதுபோல்
*******

காலங்கள் பின்னோக்கினால்
பெறாமக்கள் பூப்பனித நீராட்டுவிழாவில்,
முதற்சேலை எமக்குடுத்தி
அலங்கரித்தா எமையெல்லாம்
*******

கடைசிப்பயணத்தில் தன் சேலையை
தன் பெறாமக்கள் நாம் உடுத்திவிட செய்து
எம் கடனை தீர்த்தீங்களா??
எம் அன்ரி கலாக்கா.
*******

கனக்கின்றது இதயம்
கலங்குகின்றது விழிகள்
கனவாக மாறாதா
எம் கலாக்காவின் மறைவு.

# கலா – நிலவினால் நிறைகின்ற வானம்

சடாவும் ராஜியும்

கீறுப்பு மேகங்கள் மூடிக்கவிழ்வதும்
இடைக்கிடை வந்து
வெளிப்புக்காட்டி ஏங்கவிட்டு
ஏய்த்துப்போட்டு போவதும்....
பிறகு திரும்பவும்
முகில்கள் கறுத்து வந்து
மூடிக் கவிழ்ப்பதுமே
காலகாலமாய்
காலத்தின் கதையான தேசம்...
சுற்றியிருக்கும் கடலுக்குள் இறங்கி
ஏறி வருகிற காற்று
ஒரு கையில் உப்பும்
மறுகையில் தண்ணியுமாய்
அள்ளி வருகிறது
உணர்வும் குளுமையும்
ஒருங்கே பரவ
முன்னெழுந்துவரும் ஞாபகங்களுக்கு
முட்டுப் போட முடியாது
நாமும் நனைகிறோம்...
ஒரு மாலைக்காட்சியோடு தொடங்கி
ஜனமகன் என்ற மானிட நட்பின்
மனம்தொட்ட பயணத்தின் அடைவில்
வெளிப்படுகிறது ஒரு வீடு...
நீயும் தேவரும்
ஜனாவும் அபியும்
மாவையும் நாங்களும்...
வீடென்றால் வீடு அதுவல்லோ வீடு
நாங்கள் கூடுகிற இடமெல்லாம் எப்படியோ
குதூகலத்தைக் கொண்டுவந்துவிடுவாய்
வானை நிறைக்கின்ற நிலவாகவா...!
நிலவினால் நிறைகின்ற வானாகவா...!
எதுவாய் நீ இருந்தாய் என்பது
அன்றைக்கு எமக்கு தெரியவேயில்லை...
அது ஒரு அழகிய
குதூகலக் காலம்

உதடுகள் திறந்து ஓசைவர முன்னரே
மெல்லிய புன்னகையை
கண்களால் மறைக்க முடியாத புளுக்கத்தை
ஏன்... பூடகத்தைக் கூட
முகம் முளுக்க பூசிவிடுகின்ற
கவித்துவ ஆளுமை
உனக்கு மட்டுமே கைகூடியது
உன்னிடம் நாம்
கற்றுக்கொள்ளாமல் விட்டுப்போனவைபற்றி
இப்போதுதான் கவலைப்படுகிறோம்...
எது எப்படியோ
அது ஒரு
அழகிய குதூகலக் காலம்...
நாமும் பயில்நிலத்தம்பியரும்
பக்குவமாய் பலதும் இலக்கியமும் செய்தோம்
பலதுக்கு இலக்கணமும் செய்தோம்...
முகம் பார்த்துப் பேசினோம்
முகத்தையே பார்த்துப் பேசினோம்
புறமாய் எதுவும் செய்ததும் இல்லை
செய்ததாய் செய்தியும் இல்லவே இல்லை..
முகப்புத்தகங்களில் மறைந்து ஆடும்
விளையாட்டுகள் இல்லை
மறைத்து ஆடும் விளையாட்டும் இல்லை
அகத்தை முகத்தால் அளந்தோம்
அகத்தை முகத்தில் வரைந்தோம்
முகம்பார்த்துப் பேசினோம்..
முகத்தால் அகத்தை அளந்து பேசினோம்...
முகப்பு புத்தகத்தில் அகத்தை அளக்கும்
அவலங்கள் ஏதும் அப்போது இல்லை
இணையவெளிகளில் அகத்தை இறக்கும்
ஏமாளித்தனமும் இல்லை
ஏய்ப்புகளுமில்லை
ஆதலால் ஏமாற்றங்களுமில்லை.
அப்போது
சந்தை எமக்கு தேவையாயில்லை
சந்தையாய் நாமும் ஆகவுமில்லை
அவரவர் முள்ளந்தண்டில்
அவரவர் நிமிர்ந்தோம்...
பரந்த மனதாய்...
தெளிந்த மனமாய் நிறைந்த மனமாய்
வானத்திரையையும்

இன்னும் விரித்தே பார்த்தோம்...
அங்குலத்திரைகளுக்குள்
அடைபட்டுப்போகவுமில்லை
அடக்கம் பண்ணப்படவுமில்லை
முகம் பார்த்துப் பேசினோம்
முகம் பார்த்துத்தான் பேசினோம்
அகத்தை முகத்தில் வரைந்தோம்
முகத்தால் அகத்தை அளந்தோம்
முக்ததைப் பார்த்துத்தான் பேசினோம்
ஆதலினால்...
இன்னமும் வாழ்கிறோம்
மாவை சொல்வதுபோல
இன்னமும் வாழ்வோம்
நீயும் தேவரும்
ஜெனாவும் அபியும்
மாவையும் நாங்களுமாய்...
நிலவினால் நிறைகின்ற வானாக நீ
நிலவில் நனைகின்ற மனங்களாய் நாம்...

# என்னை உறைய வைத்த மரணச் செய்தி

இந்நிமிடம் நினைத்தாலும் கண்ணீர்த் துளி வீழும்.. நெஞ்சம் அடைக்கும் துக்கம், வயிற்றில் பட்டாம் பூச்சி.

உடல் சோர்ந்து, மனம் தளர்ந்து "ஐயோ" என கதற வைத்தது. இன்று நினைத்தாலும் அன்றுபோல்.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாள் இல்லை என்பதற்கு வாழ்ந்த எடுத்துக்காட்டு. அன்புநிறைந்த பேச்சு,, ஆசையான அரவணைப்பு, நாம் சிரித்தால் தானும் சிரித்து, நாம் அழுதால் தானும் அழுது பாசத்தால் அனைவரையும் கட்டியணைத்து முத்தமிடும் அரிய குணம்.

மற்றோர் வளர்ச்சி கண்டு மகிழ்வதும், வலி கண்டு துடிப்பதும் இயற்கையை இரசிப்பதும், மடமையை எதிர்ப்பதும், அவரவரை அவரவர் குறைநிறைகளோடு அப்படியே ஏற்பதும் உங்கள் அபூர்வ பண்பு..

எனக்கும் உங்களிற்குமான அந்த உறவு நினைக்க நினைக்க நிறைந்து கிடக்கிறது. உணவுப் பரிமாற்றங்கள், நடைப் பயணங்கள் உல்லாச உரையாடல்கள், சோகப் பகிர்வுகள் என எண்ணி மகிழ ஆயிரம் தருணங்கள்.

அன்புடன் நேசம்

# காலங்கள் சாவதில்லை

மகப்பேற்றுக்காக கொழும்பிலுள்ள மருத்துவமனை ஒன்றிற்கு வந்தபோது ஏறத்தாழ இரு மாதங்கள் கலா அக்காவின் வீட்டில் தங்கியிருந்தோம். அவ்வேளையில் அவர் என்னை தனது சகோதரி போலவும், எனது மகள் சுவஸ்திகாவை தனது குழந்தை போலவும் கண்ணும் கருத்துமாக கவனித்த காலங்கள் சாகாதவை. எளிதில் உணர்ச்சிவசப்படும் இயல்பும் நடப்பவை பற்றிய அதீதகற்பனையும் தனது குடும்ப முன்னேற்றத்தில் அதிக அக்கறையும் நிரம்பிய அவர் என்றென்றும் எமது நினைவுகளோடு பின்னிப்பிணைந்திருப்பார். அவர் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

திருமதி யோ.விஜயதிலகியும்

சுவஸ்திகாவும்.

# முகநூலில் முகிழ்த்தவை

தேவராஜா கலாலஷ்மி

இன்று காலை எங்கள் காதுக்கு ஒரு செய்தி...? சிறுமி கலா மாணிக்கவாசகரை கண்ட நாள் முதல் இன்று வரை எந்த விதமான சந்தோசமோ, துக்கமோ ஊரில், கண்டியில், கொழும்பில் மனம் விட்டுப் பேசி அன்புக்கு முதலிடம் கொடுத்த அருமை மகள் தான் கலாலட்சுமி. அவர் தனது அருமைப் பேத்தி சாதனா மேல் வைத்திருந்த பாசத்தின் ஆழம் அளவிட முடியாது. ஒவ்வொருவரும் தங்கள் வேலைகள், கடமைகள் காரணமாக ஈடுபட்டிருக்க குழந்தைக்கு அம்மம்மா இல்லாத இடம் வெறிச்சோடிப் போய்விடுமே' எப்படித் தாங்குவாவோ தெரியவில்லை. நான் இருக்கும் இடம் தேடி ஆட்டோவில் வந்திறங்கி கட்டியணைக்கும் அன்பு மகளே!... நீங்கள் படுக்கையில் கிடந்து மற்றவர்களுக்கு எந்த தொந்தரவும் கொடுக்காத மாதரசி! அன்பு கொண்டோர் உள்ளங்களில் "அ" கலா ஒளி விளக்கே ! செவ்வணக்கம் செலுத்துவோர் புடை சூழ... குரல் எழுப்பும் ஒலியுடன் இந்த தாயின் ஒலியும் சங்கமிக்கட்டும்!

Valliyamai Subramaniam

சத்தியமனை

தோழர் கலாலஷ்மி தேவராஜாவின் மறைவிற்கு எமது அஞ்சலியும் செவ்வணக்கமும்.

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தலைமைக்குழுத் தோழரும் சட்டத்தரணியுமான தோழர் தேவராஜாவின் அன்புத் துணைவியாரும் ஜனமகன், அபிலாஷா அகியோரின் பாசமிகு அன்னையும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் உறுப்பினருமான கலாலக்ஷ்மி தேவராஜா இன்று (28.03.2019) பண்டத்தரிப்பில் உள்ள அவரது இல்லத்தில் இயற்கை எய்தினார். அவரது திடீர் மறைவு குடும்பத்தினருக்கும் கட்சிக்கும் மக்களுக்கும் பேரிழப்பாகும். அவர் கட்சிக்கும் மக்களுக்கும் ஆற்றிய பணிகள் என்றும் எமது நினைவுகளில் இருந்து வரும். தோழர் கலாலஷ்மிக்கு கட்சி மத்திய குழு செங்கொடியினைத் தாழ்த்தி தனது ஆழ்ந்த அஞ்சலியையும் செவ் வணக்கத்தையும் தொரிவித்துக் கொள்கிறது.

இறுதி அஞ்சலி நிகழ்வு 31.03.2019 ஞாயிற் றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பண்டத்தரிப்பில் நடைபெறும்.

Kasi Senthivel

She is a writer, a communist activist, She is not only our Aunty a friend for all of us.... all her nieces & nephews.

Cannot imagine going to Sri Lanka & not being to see her

Kalaa Akka....

Cannot believe she is gone.

She left a great Legacy behind her..

She was a Pillar not only to her Family but also for everyone she knows.

Being a woman, born & raised in small town in Jaffna she broke all the barriers of an ordinary woman.

A strong contributor to the Society & a strong Voice for Women

She was a
A Loving Wife
A Mom
A Special Sister
A Teacher
An Artist
A Writer

A communist Activist
A special Aunt ...

Besides she was a humble woman with all these achievements.
She was a candidate of Western Province Councils Election in 1999.
How can we easily forget her life & her accomplishments.
A Great loss.
She left a great Legacy behind her.
Her husband Thevarajah also a good friend of her who traveled with her all the way to the end was the main reason for her remarkable Life.
The name “Kala Akka” comes in everyday conversation for decades.

Vijitha Para

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மூத்த உறுப்பினர் தோழர் சோ. தேவராஜா அவர்களின் துணைவியார் கலாலக்ஷ்மி அவர்கள் இன்று மதியம் காலமாகினார் என்ற செய்தி மிக அதிர்ச்சி தருகிறது. ‘அன்ரி’ என்று இளைய

தோழர்களால் அன்பாக விளிக்கப்பட்ட அவர் கட்சிச் செயற்பாடுகளிலும், தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்பாடுகளிலும் முழு நேரமாக உழைத்தவர். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்துனருக்கும், உறவி னர்களுக்கும், கட்சிசார் தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

Kokula Ruban

செவ்வஞ்சலிகள் தோழரே

உங்களது உறுதி, ஆற்றல், தலைமைத்துவம்... முன்னுதாரணமான வாழ்வு. பிரமிக்கச் செய்கின்றது.

Rajendran Sivanu

கலா நீயும் போய் விட்டாயா அம்மா....
அரசியல் ஆர்வம்
கணவனோடு கை கோப்பு
கலையில் ஆர்வம்
கலைஞர்களோடு கைகோப்பு
மூக்கொலிப் பேச்சு
பேச்சிலே கிண்டல்
மெல்லிய சிரிப்பு
அதன் ஆழம் நண்பர்கள் அறிவர்
மலர்ந்த முகம்
சமூகக் கொடுமை கண்டு கொதிக்கும் அகம்
தோழர்களோடு தோழமை
நண்பர்களோடு நட்பு
எப்போதும் அவர்களை வரவேற்கும் இன்முகம்
நீண்ட நாள் தோழியும் நண்பியும் தோழரும் நண்பருமான தேவராஜவின்
துணையுமான கலாலக்சுமியின் இழப்பு மலையாய் மனதை அழுத்துகிறது
1980 களில் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட உறவு இது
அவரை இழந்து வாடும் நண்பர் தேவராஜாவினதும்
அவர் பிள்ளைகளினதும்
அவரது தோழர்கள் நண்பர்களினதும்
துயரில் நானும் பங்குகொள்கிறேன்
சென்று வா அம்மா

Maunaguru Sinniah

“நீங்கதானே அவற்றை நெருங்கின நண்பர். உங்கடை நண்பருக்கு சொல்லுங்கோ” என்று எப்போதும் மனம் திறந்து கதைக்கும் கலா இன்று இல்லை என்பது நெஞ்சில்

பேரிழப்பாய்... கனடாவிலிருந்து போனால் தேவராஜா வீட்டை நிற்கலாம்... ஏதோ எங்கடை சொந்த வீடு போலை சொல்லிக் கொண்டு வருவோம்.. எங்களைக் கண்டால் சொந்த உறவாய் எங்களை உபசரித்த நாட்களையும் பழகிய காலங்களையும் மீண்டும் அசைபோட்டு பார்க்கிறோம். கடந்த கோடை விடுமுறையிலும் பண்டத்தரிப்பில் உங்கள் வீட்டில் வந்து இரண்டொரு நாட்கள் நின்றோம். மனம்விட்டுப் பலதும் பேசினீர்கள்.

உங்கள் பேத்தியின் திறமைகளையும் நுண்ணுணர்வுகளையும் சொல்லிச் சொல்லிச் சந்தோசப்பட்டீர்கள். உங்கள் பேத்தி இனி அம்மம்மாவை எங்கே தேடுவாள். அவளது பிஞ்சு மனம் எப்பிடி தாங்கும். பிள்ளைகள் அபியும் ஜனமகனும் எப்பிடி தாங்குவார்கள். தேவர் எந்தக் கவலையும் இல்லாமல் பொது வேலைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு ஓடித்திரிவதற்கு இடமளித்த அந்தப்பெருவெளியில் நீங்கள் சங்கமமாகிவிட்டீர்களோ... நாடகம், கலை கட்சித் தொண்டுகள் என்று தேவரைக் காதலித்து கைப்பிடித்த நாள் முதல் தேவருடன் இணைந்து செயற்பட்ட அந்த நாட்கள்... எல்லாவற்றையும் நினைந்து நினைந்து.... வருந்துகிறோம்.

இந்தப் பேரிழப்பின் துயரை நாங்களும் பகிர்ந்து கொள்ளுகிறோம்.

அஞ்சலிகள்.

திவ்வியராஜா குடும்பம்.

Thiviyarajah Vairamuttu

குல விளக்கு அணைந்ததே !

அன்பே சிவமெனத் தன் “வாழ்க்கையை வரித்துக் கொண்டு வாழ்ந்த” எமது பாசத்துக்குரிய கலாக்கா...
இன்று 28/03/2019 வியாழக்கிழமை இவ்வுலக வாழ்வில் இருந்து விடை பெற்று விட்டார். நம்ப முடியவில்லை.. கலாக்கா..!!

அன்பின் இருப்பிடமாய்.. எல்லோர் துன்பங்களுக்கும் ஆறுதலாக... அவரவர் மனச் சுமைகளை நீங்கள் சுமந்தது போதும் என இறைவன் உங்களை அழைத் தானோ? .

நீங்கள் விட்டுப் போன இடை வெளியை யாராலும் என்றுமே நிரப்ப முடியாது கலாக்கா..!

தேவத்தான், பிள்ளைகள் ஜனமகன், அபிலாஷா, பெயர்த்தி சாதனா மற்றும் உங்கள் பிரிவால் மனம் கலங்கி நிற்கும் சகோதர, சகோதரிகள், உறவுகள் யாவருக்கும் “விதியின் நியதியை ஏற்றுக் கொள்ளும்” மனப் பக்குவத்தை இறைவன் தான் அருள வேண்டும்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

அன்பே கலா அக்கா..
அன்பே சிவம்.
அன்பே சிவம்..
அன்பே சிவம்.!
அழுகிறோம் .. கலாக்கா !
உங்கள் வாழ்வுக்கு என்றுமே அர்த்தம் உண்டு.
போய் வாருங்கள்.

Koneswaran Manickawasagar

## உண்மைதான் தம்பி

உன் அக்கா பிரபஞ்சத்துடன் கலந்து விட்டா
நிகழ்வில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருந்துகின்றேன் தம்பி
போலி சடங்கு சம்பிரதாயங்கள் சடங்குகள் ஆடம்பரங்கள் அற்ற எளிமையான
ஜன சமுத்திரம் புடை சூழ்ந்த இறுதி ஊர்வலம் கலாவினது
தம்பி உன்அத்தானும் என் அண்ணனும் ஆன அமரர் பரமானந்த இறுதி யாத்திரை. வேலை வெட்டி அற்ற வெட்டிப்பேச்சு ஊரவர் உன் கொத்தான் தேவரை அணுகி அது பிடிப்போம் இது பிடிப்போம் அப்பிடி செய்வோம் இப்பிடி செய்வோம் என்று சொல்ல
தேவர் சொன்னார்
எனக்குத்தெரியாது
மனோகரனிட்டை கேளுங்கோ
நான் சொன்னேன்
உதொண்டும் தேவையில்லை
பூத உடல் மயானம் போய்
எரிபட வேண்டும்
அடுத்து காடாத்து பின் அஸ்தி கடலில் கொட்டி ஆத்துமம் பிரபஞ்சத்துடன் சங்கமம் ஆகுதல்
அதையும் இழந்தோம் யுத்தத்தின் பரிசாக
பாழடைந்த கிணறுகள் சந்நாசி கேணியில் அஸ்தி கொட்டல்
பல வருடங்களின் பின்
என் மனைவி தாயின் அஸ்தியை கொட்டினேன் சம்பில் கடலில் கடற் படையின் ஆதரவு +
சுடலை சாமி ஐயனாரின் எதிர்ப்புடன்
அதன் தொடர் நிகழ்வே இன்றய புதிய மயானம்
ஆண்டாண்டு கால மயானம் ஐயனாரின் ஆக்கிரமிப்பு
என் பலகால கனவொன்று
வடக்கே பன்சாலை
மேற்கே அக்போ கடற்படை முகாம்
பூங்கா போல்
இடையே எம் மயானம் பற்றைக்காடு
நெருஞ்சி முள்ளும் இராவணன் மீசையும் வடலிப்பத்தையும்
இதை கொஞ்ச காசு செலவளிச்சு புனருத்தாபனம் செய்யலாம் அல்லே
எல்லாரும் கடைசியாய் போற சமரசம் உலாவும் இடமல்லே படிச்சவன் படிக்காதவன் ஏழை பணக்காரன் பேதங்களையும் கடந்து

இஞ்சாரும் மனோகரன் சும்மா தேவையில்லாத லூசு கதை கதயாதையும் காணும் எங்களுக்கு எவ்வளவு சோலியள்
ஒரு கோயிலுக்கு ரண்டு சோத்து மடங்கள்
அங்க கீழ் சாதிக்காறன் சவை வைக்க போய் பெரும் குழப்பம்
இன்னொரு கோயிலில எழும்பின சோத்து மடம் அரைகுறையில
நூறு லச்சம் வேணுமாம்
வெளிநாட்டுக் காரரும் இப்ப காசனுப்பி களைச்சுப்போச்சினம்
உனக்கு இப்ப சுடலையே அவசரம்
இப்ப எல்லா செத்த வீடுகளிலையும் சுடலையிலயும் சோடா குடுக்கினம் அல்லே

Kandiah Manoharan Manohar

உத்தமி ஒருத்தி
நித்திய கண்மூடல்
பெண்ணியவாதி
பெண்ணுரிமைக்கு
போராடியவள் அவள்
அநீதிகளை கண்டு
சீற்றம் கொண்டவள்
உழைக்கும் மக்களுக்காக
செங்கொடி ஏந்தியவள்
அதனால் தான் போலும்
அவளின் இறுதிச் சடங்கில
அங்கே பான்ட் வாத்தியம்
இல்லாது பாதை இருபக்கமும்
செங்கொடிகள் பறந்தன
அது போலவே பாதை
எங்கும் பதாதைகள்
கண்ணீர் அஞ்சலிகள்
எங்குமே காணவில்லை
அடுத்தவர் நலனிற்காக
தன்னை அர்ப்பணித்தவள்
அதனால் தான் போலும்
அவள் மன அழுத்தம் கொண்டு
அகாலத்தில் மறைந்துவிட்டாள்
கலா நீ மரிக்கவில்லை
மானிட நேயம் உள்ளோர்
நெஞ்சில் நீ என்றும்
வாழ்ந்து கொண்டே இருப்பாய்
நீ பச்சைப் பசேல் என வளர்த்த
அந்த கண்டுகள் எல்லாம்

எனைக் கேட்குது கலாவுக்கு
என்ன நடந்தது ஆள் எங்கே
தண்ணி விடேல்லை
கண்கள் பனிக்க நான்
சொன்னேன் அவ கொஞ்சம்
றெஸ்ற் பண்ண போவிட்டா
பிறகு வருவா சுணங்கி
அவள் நான் போன வேளை
எனை உபசரித்த விதத்தை
மறக்க முடியாது தவிக்கிறேன்
நீங்க கடைச் சாப்பாடல்லே
கொண்டு போங்கோ கொஞ்ச
கோழி கறி என்று வெற்று
தயிர் டப்பியில் நீ தந்ததை
எப்படி நான் மறக்க
அத்தனை சுமையிலும்
நீ உன் வீட்டை நேர்த்தியாக
அழகாக சுத்தமாக
பராமரித்தை நான் பாராட்டினேன்
கலா your house keeping is superb
இனி எங்கு உனை நான் காண

Kandiah Manoharan Manohar

அன்பின் தேவராஜா அவர்களுக்கு

கலாவின் மறைவுச்செய்தி கேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தேன். கள்ளம் கபடம் அறியாத பெண்ணாக பல்கலைக்கழகத்தில் எனக்குத்தெரிந்தவர். உங்கள் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்த அவரின் மறைவில் நீங்கள் துவண்டு போயிருப்பீர்கள். ஆனால், காலம் உங்கள் துயரத்தை விரைவில் துடைத்திட யாசிக்கிறேன்.

Nithiyanandan Muthiah

கவலையாக இருக்கு. பல்கலைக் கழக நாட்களில் நித்திமூலம் அறிமுகமான நாடக கலைஞர்களுள் கலா மறக்க முடியாதவர். கலா மிகுந்த நற்பண்பும் மக்கள்மீது அக்கறையுமுள்ள ஆற்றல்மிகு கலைஞர். என் தோழன் தேவராஜாவுடன் வாழ்விலும் கலைபணியிலும் துணையாகத் தொடர்ந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மக்கள் கலைஞர் கலாவின் பிரிவு அவரை அறிந்த எல்லோருக்குமே கவலை தரும் சேதி. தோழன் தேவராஜாவுக்கும் பிள்ளைகளுக்கும் என் அனுதாபங்களும் அன்பும்

Jaya Palan

திருமதி. கலாலக்ஷ்மி தேவராஜா அவர்களின் மறைவு

நாடகம், சிறுகதை, அரசியல், பெண்ணியம் போன்ற பல்வேறு தளங்களில் தடம் பதித்தவர் அண்மையில் காலமான திருமதி. கலாலக்ஸ்மி தேவராஜா அவர்கள். செம்மனச்செல்வி என்ற புனை பெயரில் பூமராங், ரோசாப்பூ, மகர காவியம் என்ற சிறுகதைத் தொகுதிகளை மறுமலர்ச்சி மன்றம் வெளியிட்டு கலாவின் திறமைக்கு அழகு சேர்த்துள்ளது. சிறப்பாக வாழ்வியல், ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண்ணியப் பார்வை அவரின் கதைகளில் மிகுந்து காணப்பட்டதாக அறிமுகவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது, நாடகத்தில் ஆண்கள் பெண்களாக நடிக்கின்ற தமிழ் பாரம்பரியத்தை உடைத்தவர்களில் கலாவிற்கும் பெரும்பங்கு உண்டு. 1980ல் க.பாலேந்திராவின் நெறியாள்கையில் உருவான கார்சியா லோர்க்காவின் “ஒரு பாலை வீடு “( The House of Bernada Alba by Garcia Lorca ) நாடகத்தில் மரியா ஜோசபா வேடத்திலும், அதே ஆண்டு சங்காரம் நாடகத்தில் சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் பெண் ணாக நடித்து பலரின் பாராட்டுதல்களைப் பெற்றவர். பல் வகைத் திறமைகளைக் கொண்ட இவ் வித்தகப் பெண்மணி, யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணியும், பதில் நீதிபதியும், புதிய ஜனநாயக, மாக்ஸிச, சோஸலிசக் கட்சியின் மத்திய குழு மனித நேயச் செயற்பாட்டாளருமான தேவராஜா அவர்களின் மனைவி என்பதும், அபி, ஜனகமகன் ஆகியோரின் தாயார் என்பதும் மேலதிக தகவல். பெரும்பாலானவர்களின் வாழ்க்கை ஊருக்கு மட்டும் உபதேசம் பண்ணுவதுடன் சரி, தங்கள் சொந்த வாழ்க்கையில் வெகு சிலர் மட்டுமே அதனைக் கடைப்பிடிப்பது நடைமுறையில் நாங்கள் அறிந்த விடயம் அந்த வகையில் நண்பர் தேவராஜன் தனது திருமணத்திலும் சரி, மனைவியின் பிரிவிலும் சரி எந்த ஒரு சடங்கு, சம்பிராயங்களையும் கடைப்பிடிக்கவில்லை என்பதனை அறிந்த போது எனக்கு அவரிடம் இருந்த மதிப்பு மேலும் உயர்ந்துள்ளது.

என் மன வானில்

கொழும்பு பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடம், சட்டபீடம், கலைப்பீடம் என்பனவற்றிற்கு பொதுவான முற்றம் ஒன்று இருந்தது. தேவாவுடன் ஆன முதற் சந்திப்பும் அங்கு தான் நிகழ்ந்தது. எனது சகோதரன் எழுது வினைஞராக இருந்து கொண்டு சட்டப்படிப்பையும் மேற்கொண்டிருந்தார். பல்கலை அனுமதி கிடைத்தபோது பல்கலை முற்றத்தில் றாக்கிங் தொல்லை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மோசமான ராக்கிங் தொல்லைக்கு உள்ளாக இருந்த என்னை சட்டக்கல்லூரி 2ம் ஆண்டு மாணவர்கள் காப்பாற்றி தங்களுடன் வைத்திருந்து பண்பாடாக ராக்கிங் செய்தார்கள். அதற்கு முக்கிய காரணமும் இருந்தது. அவர்கள் எனது சகோதரனின் நண்பர்கள். அதில் ஒருவர் தான் நண்பன் தேவராஜா. அந்தக் குழுவில் இருந்த ஏறக்குறைய 7, 8 பேர் சகோதரனது நண்பர்கள் எனக்கும் பிடித்தவர்களாக இருந்தார்கள். அத்துடன் தமிழ் மொழிமீது பற்றுக்கொண்டவர்களாகவும், சிறப்பாக நாடகம், பட்டிமன்றம் போன்றவற்றில் பெரு விருப்பம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். கொழும்பு பல்கலைக் கழகம் நடாத்திய தமிழ்க் கலை விழாவில் ‘சொர்க்கத்தில் சோசலிசம்’ எனும் நகைச்சுவை நாடகத்தை தயாரித்து அளித்தார்கள். இந்த நாடகத்தில் தேவராஜா, சிவலோகநாதன் (அண்ணர்) காலஞ்சென்ற சட்டத்தரணி மஹேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் முக்கிய பாத்திரம் ஏற்று

நடித்தனர். தமிழ் மொழிப்பற்று, கலைவிழா போன்றவற்றில் அதி தீவிர நாட்டம் காரணமாக பரீட்சையில் கோட்டை விட்டோரும் இந்தக் குறூப்பில் இருந்தனர். அதன் பின்னர் தேவாவின் வளர்ச்சியை தூர இருந்தே பார்த்ததாலும், புலம்பெயர்ந்து சென்றதாலும் நெருங்கிய தொடர்பு வைக்க முடியவில்லை. கடந்த சில வருடங்களுக்கு முன்னால் புதிய ஜனநாயக மாக்ஸிச, சோஸலிசக் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் ரொறொன்ரோவில் உள்ள முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களைச் சந்திக்க விரும்புகின்றார் என்ற அறிவித்தலை நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டு, அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. என்னைச் சந்தித்தது அண்ணாவையும் சேர்ந்து சந்தித்தது போன்று இருந்ததாகக் கூறி புளாங்கிதம் அடைந்தார்.

நேற்று அவர் வீட்டிற்கு ஆறுதல் கூறலாம் எனக் கவலையுடன் சென்ற எனக்கு அந்தக் குடும்பத்தினர் நடந்து கொண்ட முறையிலிருந்து புதிய பாலபாடத்தையும் படித்துக் கொண்டேன். மிக இயல்பாகவும், இயற்கையின் நியதியை நன்றாகப் புரிந்து கொண்டு எங்களுடன் மிக மகிழ்ச்சியாகப் பேசியதும் பிரமிப்பாக இருந்தது.

போதாதற்கு பல்கலைக்கழகத்தில் என்னுடன் 3 வருடங் கள் பயணித்த பன்முக ஆளுமை கொண்ட நண்பன், பேராசிரியர், முன்னாள் யாழ். பல்கலைக்கழக உப வேந்தருமான நா. சண்முகலிங்கன் மற்றும் மனைவியும் அங்கிருந்தது எனக்கு அளவில்லா மகிழ்ச்சியை அளித்தது. ராக்கிங்கில் அவருக்கு கொடுக்கப்பட்ட தண்டனை பாடச் சொல்வது. விரிவுரையாளர்கள் வருவதற்கு முன்னர் சில நேரங்கள் பாடல் ஒலிக்கும். இன்று வரை எனது காதில் ஒலிக்கும் 2 பாடல்கள் “ஏரியிலே ஒரு காஷ்மீர் ரோஜா” என்ற பாடலையும் அவர் இயற்றிய ‘சந்தன மேடை எம் இதயத்திலே’ என்ற எம்.ஏ.குலசீலநாதன், எஸ்.கே. பரராஜ சிங்கம் பாடிய பாடலையும் சுதி சுத்தமாகப் பாடுவார். சங்கீதபூசணம் என் பத்மலிங்கம் பாடிய ‘வானத்து வண்ண தாரகையாய்’ என்ற அற்புதமான பாடலையும் இயற்றியவர் சண்முகலிங்கன் அவர்களே. பழைய நினைவுகளை இசை மீட்டியதும், தேவாவின் விருப்பத்தை ஏற்று ஒரு மெல்லிசைப் பாடலின் சில வரிகளை வெகு அழகாகப் பாடினார்.

Sega Siva

கலாலட்சுமி- தேவராஜா

கலா, என்மீது மிகுந்த அன்பையும், தேடலையும் கொண்டிருந்தவர். இக்கணம் வரை அவரது பிரிவு, வேதனையைத் தருகிறது. ஆற்ற வழி தெரியவில்லை. இக்கட்டுரை கனடாவில் வெளிவரும் “தாய்வீடு” பத்திரிகையில் இம்மாதம் வந்தது

Raveendran Nadesan

Kanagaravi Kanagarathnam

ரவீந்திரன் சேர் அறிமுகம் செய்து வைத்த கலா.... அக்கா! ஐ.பி.சி.யின் தொடக்ககால (1997) இலங்கைக்கான செய்தி ஆசிரியர்! நான், நிமலராஜன், ரட்ணாகாத்தலிங்கம், ஐ.

நடேசன், சுபதயாளன் ஆகியோர் குறிப்பிட்ட நிறு வனத்தின் ஆரம்பகால பிராந்தியச் செய்தியாளர்கள். நாங்கள் அனைவரும் கலாக்காவிற்கு செய்திகளை தொலைநகல்வில் அனுப்புவோம் கலாக்கா அவற்றை மீளவும் சரிபார்த்து லண்டனுக்கு அனுப்புவா! இதன்காரணமாக நான் நாள் தோறும் அவவுடன் உரையாடுவேன். அன்பாகவும் மென்மை யாகவும் உரையாடும் அவவின் நல்லகருத்துக்கள் என் நெஞ்சத்தில் இன்றும் நினைவில் உள்ளது. உயர்வு தாழ்வற்று மனிதர் வாழ்வதற்கு கலை இலக்கியத்தின் ஊடாக உழைப்பது பற்றியும், நாடகம் மக்களோடு உரையாட நல்லதொரு ஊடகம் என்பதில் அவவுக்கு இருந்த ஈடுபாடு பற்றியும் கூடக் கதைத்தவை மீண்டும் நெஞ்சை அசைத்து வெளி வருகிறது. சேர் நீங்கள் அறிமுகம் செய்து வைத்த கலாக் காவைப்பற்றி தெரியாத பல விடயங்களை எழுத்துருவில் படையலிட்டுள்ளீர்கள்! இன்னும் கனக்க எழுதவேண்டும் போலுள்ள எண்ணத்துடன்..... நட்புடன்- கனகரவி

## Kanagaravi Kanagarathnam

இதய அஞ்சலி

எமது நாடக உறவு ,கலா லட்சுமி தேவராஜாவின் மறைவு பெரும் அதிர்ச்சியாக உள்ளது. அரங்கத்துறையிலும் ,தேசிய கலை இலக்கியப் பேரவை மூலம் அரசியலிலும் பல தசாப்த காலமாக பணியாற்றியவர். அவருடைய இழப்பு ஈடு செய்ய முடியாதது..

40 ஆண்டுகளுக்கு முன்னர் 1979 காலப்பகுதியில் அவரை முதல் சந்தித்து எமது அரங்கப் பயணத்தில் இணைத்தேன். அப்போது அவருக்கு திருமணமாகவில்லை. அவரது பெயர் கலாலட்சுமி மாணிக்கவாசர். அக்காலத்தில் தமிழ்ப் பெண்கள் நாடகங்களில் நடிக்க முன்வருவது மிக மிகக் குறைவு. நான் நெறிப்படுத்திய கார்சியா லோர்க்காவின் “ஒரு பாலை வீடு “ ( The House of Bernada Alba by Garcia Lorca ) நாடகத் தில் முக்கிய பாத்திரத்தில் மிக சிறப்பாக நடித்தார். 23-02-1980 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் அவரது இந்த முதல் மேடையேற்றம் நிகழ்ந்தது. அப்போது ,அவர் ஒரு இளம் பெண்ணாக இருந்த போதும் 80 வயது நிரம்பிய ஒரு பெண்ணாக நடிக்க நான் அழைத்த போது மனமுவந்து முன்வந்து மிக அழகாக நடித்தார்.முற்றிலும் பெண்களே நடித்த இந்த நாடகத்தில் முதலில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் நடிப்பில் அவர்களது மண்ட பத்தில் 31-03-1979 இல். சரியாக 40 வருடங்களுக்குமுன்னர் மேடையேறியிருந்தது.. நான் இந்த நாடகத்தை கொழும்பு, பேரதெனிய போன்ற இடங்களுக்குக் கொண்டு செல்ல விரும்பியபோது முன்னர் நடித்த சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் பலரும் மறுத்து விட்ட நிலையில் தான் கலாலட்சுமியை இந்த பாத்திரத்தில் நடிக்க கேட்டேன். அப்போது என்னுடைய பல நாடகங்களில் நடித்த ஆனந்தராணி ராஜரத்தினம் (பாலேந்திரா) ,மற்றும் மெர்சி ஞானப்பிரகாசம், காயத்திரி நடராஜா ஆகியோரையும் இந்த நாடகத்தில் இணைத்தேன். இந்த நாடகத்தில் இவர் நடித்த பாத்திரம் மிகச் சிக்கலானதும், நடிப்பதற்கு சவாலான பாத்திரமும் ஆகும். புத்தி மாறாட்டம் உள்ள பாத்திரமாக வெளித்தெரிந்தாலும், அவரது குரல் ,அடக்கு முறைக்கு எதிரான குரலாக மிகக் கவித்துவதுடன் ஓங்கி ஒலிக்கும்.

மிக கொடுமையான மகள் பெர்னாடாவினால், பின் அறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும், முதுமையால் புத்தி மாறாட்டம் அடைந்த தாயின் பாத்திரம் அது. அர்த்தமற்றவை போல வெளித்தெரியும் அவருடைய பேச்சுக்களிலும் கத்தல்களிலும் பூடகமாக நாடகாசிரியரின் பல செய்திகள் கவித்துவமாக பொதிந்திருக்கும். அவற்றை நன்றாகப் புரிந்து கலா நடித்திருந்தார். 1982க்கு பின்னர் நான் நாட்டில் இல்லாத படியால் அவருடன் தொடர்ந்து செயலாற்ற முடியாமல் போனது. .

எனது நீண்ட கால நண்பரும் அவரது கணவருமான கலை இலக்கிய, அரசியல் செயற்பாட்டாளர் சட்டத்தரணி திரு தேவராஜா அவர்களுடன், இப்பொழுதும் நல்லுறவைப் பேணி வருகிறேன். இலங்கை செல்லும் போதெல்லாம் சந்திப்பது வழமை .2013இல் நாம் லண்டனில் இருந்து தாயகம் சென்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு நாடகவிழாவை நடத்த விரும்பிய போது அதனை சாத்தியப் படுத்தியதில் அவருக்குப் பெரும் பங்குண்டு. கலாலட்சுமி அவரது கலை இலக்கிய அரசியல் நடவடிக்கைகளில் எல்லாம் பங்கு கொண்டு செயலாற்றியவர்.

.கனத்த இதயத்துடன் தான் இந்தப் பதிவை எழுத முடிகிறது. திரு தேவராஜா குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்கிறேன்.

Kanagaratnam Balendra

Koneswaran Manickawasagar

கலா அக்கா..!
28/03/2019 28/04/2019...!
எனதன்பு கலாக்கா..!
நீண்ட நெடிய தங்களின் பேரன்பின் பிரிவால் உயிர் கலங்கி நிற்கிறது அன்புடை உலகம்.
எனது கலாக்காவுக்காகவும் அருமையிலும் அருமையான தேவத்தான்,
பிள்ளைகள் என அனைவருக்குமான எனது வேண்டுதல்கள்..நிச்சயமாக
இறையின் கருணைக்குள் ஏற்கப்படும்.
கலா அக்கா..!
உங்கள் அன்புக்கு கட்டுப்பட்ட அனைத்து உறவுகள், நண்பர்கள் , ஊர் மக்கள், கலைஞர்கள்,அரசியலாளர்களென..அனைவரது " நலம் விசாரிப்புகள்" இன்னும் உலகெங்கிலும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.
இங்கு..பிரான்சில்..வேலையிலிருந்தாலும் கண்ணுக்குள்ளே கண்ணீராக கலாக்கா
நீங்கள் அடிக்கடி " வந்த" வண்ணமே இருக்கிறீர்கள்.
கலா அக்கா !
உங்கள் இளமைக் காலத்தோடு ஊரில் தொடங்கியது.."ஒரு" காலம் !.
அது ஒரு "மறு மலர்ச்சிக் காலம்" .
இரசிகப் பெருமக்கள் எல்லோரும் "கலா இரசிகப் பெருமக்கள்" ஆன காலம்..
அது ஒரு பொற்காலம்.
அது ஒரு "கலாக் காலம்!"

கலாக்கா.! உங்களை வழியனுப்ப வந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும்,
வரமுடியாது.. தொலைபேசி நேரலையில் கண்டு மனம் நெகிழ்ந்தரற்றிய அனைத்து தொலை தூர நண்பர்கள், உறவினர்களுக்கும்...
இறுதியாக உங்களை உரிமையோடு சுமந்த தோழர்களுக்கும்,
உங்களோடு அன்பை, மன உணர்வுகளை கடைசி வரை பகிர்ந்து கொண்ட அனைத்து உறவுகளுக்கும் எமது சகோதர சகோதரிகள், தேவத்தான்...அவர் தம் சகோதர சகோதரிகள் மற்றும் பிள்ளைகள் பெயரால்...
எமது பேரன்பைப் பகிர்ந்து கொள்கிறோம்.
கலாஅக்கா..!
உங்கள் வாழ்வில் அன்பும் அமைதியும் நிறைந்திருந்தது போல்.. மற்றெல்லோர் வாழ்விலும் அன்பும் அமைதியும் என்றும் நிலவுவதாக!
அன்பே சிவம்.
அன்பே கலாக்கா...!!
உங்கள் நினைவுகளோடு....
உங்கள் அன்புத் தம்பிகள்.. கேதீஸ்..கோணேஸ்.!!

## Koneswaran Manickawasaga

இன்று (28-3-19 வியாழன்) பின்னேரம் அதிர்ச்சியும் வேதனை மிக்கதுமான ஒரு செய்தி: 'கலாக்கா இறந்து போனார்' என்பது அது. கௌரிபரா அதை எனக்குச் சொன்னார். தேவராஜாவின் அன்பு மனைவி கலாக்கா. தேவராஜா, புதிய ஜனநாயகக் கட்சியிலும் தேசிய கலை இலக்கியப் பேரவையிலும் வேறு பல அமைப்புகளிலும் இணைந்து அரசியல், கலை, இலக்கிய பணிகளில் மும் முரமாக ஈடுபட்டவர். இவைகளுக்கு அப்பால் எனக்கும் அவ்விணையர்களுக்கும் இடையிலான உறவு ஆத்மார்த்த மானது. 1977ஆம் ஆண்டு தேவராஜாவுடன் உறவு கிடைக் கிறது. 1979ஆம் ஆண்டில் கலாக்காவுடன் சிநேகம் கொள் கிறேன். அப்போதே தேவராஜாவும் கலாக்காவும் காதலிக்கிறார்கள் என்பது என் எண்ணம். அந்தக் காதல்தான் கலாக்காவை நாடக அரங்கப் பக்கம் திருப்பியது. குழந்தையின் 'உறவுகள்', மஹாகவியின் 'கோடை' ஆகிய நாடகங்களில் அவர் நடித்ததாக ஞாபகம். மௌனகுருவின் 'சங்காரம்' பாலேந்திரா நெறியாள்கை செய்த 'ஒரு பாலை வீடு' ஆகிய நாடகங்களில் அவர் நடித்திருக்கிறார். கலாக்காவுடன் எனது முதல் உரை சிநேகபூர்வமானது அல்ல. மௌனகுரு நெறியாள்கை செய்த 'அபசுரம்' நாடகத்தில் தேவராஜா, 'பொதுவர்' பாத்திரம் ஏற்று நடித்திருந்தார். அது பற்றி 'புதுசு'வில் குறிப்பு எழுதும்போது 'மிகைப்பட நடித்துவிட்டார்' என்கின்ற மாதிரி ஒரு வரி வந்து விட்டது. அப்போது கலாக்கா தேவராஜாவைக் கலியாணம் செய்யவில்லை. ஆயினும் வெகுண்டெழுந்து "உங்களுக்கு நாடகம் பற்றி என்ன தெரியும்... அபத்த நாடகத்துக்கு இப்பிடித்தான் நடிக்க வேணும்..." என்றெல்லாம் என்னைக் கடுமையாகத் திட்டினார்.

கலாக்கா இப்படியெல்லாம் திட்டக்கூடியவரா என்று பிற்காலங்களில் வியந்திருக்கிறேன். அதுவும் பத்து வருடங்களுக்குப் பிறகு; கொழும்பில் வசிக்கத் (1992 - 1996) தொடங்கியபோது! அப்போது 'சொந்தத் தம்பி' என்கிற மாதிரியான நெருங்கிய உறவு அவருடன் எனக்கு ஏற்பட்டது. கிழமையில் இரண்டு, மூன்றுநாள்

பின்னேரங்களில் அவரிடம் பால்த்தேனீர் வாங்கிக் குடித்தேன். இறைச்சிக்கறியுடன் சோறு சமைத்த நாட்களில் போனால் கலாக்கா வில்லங்கப்படுத்தி தந்து, அதை உண்ணாமல் நான் வந்ததில்லை.

அப்பாவின் 'கல்வெட்டு'வைப் (அந்தியேட்டி நினைவுமலர்) பார்த்து வியந்தும் வேதனைப்பட்டும் போனார். "இவர்தான் உங்கன்ரை அப்பா எண்டு தெரிஞ்சிருந்தால் நான் எப்பவோ வந்து பாத்திருப்பனே..." என்று அழுகைக்குக் கிட்ட வந்தார். பண்டத்தரிப்பு மகளீர் கல்லூரியில் அப்பாவின் மிகுந்த பிரியத்துக்குரிய மாணவி, கலாக்கா. (1995) தங்களுடைய பிள்ளைகளுக்கு விளையாடக் கிடைத்த 'வீடியோ கேம்'ஐ "ரவி உங்கன்ரை பிள்ளைகளும் கொஞ்ச நாள் விளையாடிபோட்டுத் தரட்டும் கொண்டுபோங்கோ" என்று தந்தவர்தான் கலாக்கா. அந்த நாட்களில் அதன் பெறுமதியை அந்த நாட்களில் இலங்கையில் இருந்தோர் மாத்திரமே உணர்வர்.

நான் இலங்கையை விட்டு வெளியேறுகிறபோது அதை இரண்டு குடும்பத்தினருக்கு மாத்திரமே சொன்னேன். சிவத்தம்பி சேர் குடும்பம் ஒன்று. மற்றையது தேவராஜா குடும்பம். "என்ன ரவி இப்பிடி அதிர்ச்சியாத் தாறியளே" என்று கலங்கிவிட்டார் கலாக்கா. அவரிடம்தான் 'சூட்கேஸ்' வாங்கி வந்தேன். தனது மடித்துவைத்த சீலைகளைக் கட்டிலில் எடுத்து வைத்துவிட்டு சூட்கேஸை என்னிடம் நீட்டினார். அப்போது அவரது வெள்ளைக்கை நடுங்கியது. 2003 இல் இலங்கை செல்கிறேன். கலாக்காவிடம் போகாமல் விடுவேனா? அப்போது நான் பார்த்த அதே அழகி, அதே சிரிப்பு, அதே மகிழ்வு, அதே அன்பு 2003இலும்! நிறைய பேசினோம். ஒரு வேதனை சொன்னார்:

"பிள்ளைகள் ஒருத்தரையும் காதலிக்கினமில்லை... நீங்கள் ஒருக்காச் சொல்லுங்கோ ரவி". ஆணும் பெண்ணுமாக பிள்ளைகள் வெட்கப்பட்டனர். அந்த வெட்கமும் கலாக்காபோல கொள்ளை அழகு! கலாக்கா, நீங்கள் போயிட்டீங்களா? நம்ப முடி யேல்லை. நீங்கள் போகும் இடத்திலும் அதே புன்னகையையும் அதே வெளிச்சத்தையும் பரப்புவீர்கள், எனக்குத் தெரியும். கைகூப்பி உங்களுக்கு வணக்கம் சொல்கிறேன், போய் வாருங்கள் கலாக்கா, அதே மிளிர்வுடன்!

Iravi Arunasalam

பெண் விடுதலை என்பது வெறும் பேச்சல்ல! பெண் விடுதலைச் சிந்தனையாளரும், இடதுசாரிச் செயற்பாட்டாளரும், எழுத்தாளரும், நாடக நடிகரும் நெறியாளருமான தோழர் கலாலக்ஷ்மி தேவராஜா அவர்களின் புகழுடலை ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் இணைந்து சுமந்தனர். அதில் அவருடைய மகளும் ஒருவர்.

Theva Saba Thanujan

# மடலாய் விரிந்தவை

மௌன அஞ்சலி

கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினரான திருமதி தேவராசா கலாலெட்சுமி அவர்களின் மறைவை நினைவூட்டி 05.05.2019 ஆட்சிக்குழுக் கூட்டத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்தித்தோம். அன்னாரின் இழப்பால் துயருறும் தங்கள் குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

க.க. உதயகுமார்
பொதுச்செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

அன்புத் தோழர் தேவர் அவர்களுக்கு

தங்கள் மனைவி கலா மரணமடைந்த செய்தி கேட்டு மிகுந்த துயரம் அடைந்தேன். தங்களுக்கும் மன அமைதி கிடைக்கவேண்டும் எனக் கடவுளை வேண்டுகின்றேன்.

எனது மனைவியும் 08.04.2018 அன்று இறந்த செய்தி தங்களுக்கும் தெரியும் என நம்புகின்றேன்.

பிரிவு, இழப்பு, துயரம் என்பன எனக்கும் புரிகின்றது. இவை எல்லாம் மனித வாழ்வின் அம்சங்கள் என்ற உண்மையை உணர்ந்து மனதைத் திடப்படுத்திக் கொள்கின்றேன்.

மனைவிக்குப் பின்பு எமக்கு எவரும் இல்லை என்பதை வாழ்வில் கண்டுகொண்டேன்.

நீங்களும் மன உறுதியுடன் மகளின் ஆதரவுடன் வாழமுடியும் என எதிர்பார்க்கின்றேன்.

நலமுடன் வாழ வேண்டுகின்றேன்.

நான் இருதய By Pass சத்திர சிகிச்சை செய்துள்ளமையால் பிரயாணங்களை விரும்புவதில்லை. அதனால் வரமுடியவில்லை. மன்னிக்கவும்

அன்புடன்

ஆ. பொன்னையா,
வவுனியா

தித்திக்கும் அம்மா
காயாமல் நனையாமல்
காத்த தெய்வம்
கலாலக்ஷ்மி அம்மா;
காலங்கள் தோறும்
குடும்பத் தலைவியாய்
கரையேற்றிய அம்மா;
தாயாகித் தவமாகி
தலையாய அறிவாகித்
தாங்கிய அம்மா;
தேவராஜா துணையோடு
ஜனமகன் அபிலாஷாவுடன்
தித்தித்த அம்மா!
முத்தமிழை மூச்சினிலே முடிசூட்டிய அம்மா,
முக்காலமும் உணர்ந்த மேதாவி அம்மா,
அத்தனை படைப்பினையும் நெறியாளும் அம்மா,
அரசடியில் ஆளுகின்ற அன்புத் தெய்வம் அம்மா!

கே. எஸ். சிவஞானராஜா

அதிர்ச்சியும் சோகமும் கொண்டது

கலா எனும் சுருக்கப் பெயரால் உறவினர்கள், ஊர் மக்கள், நண்பர்கள், தோழர்கள் அனைவராலும் அன்புடனும் பண்புடனும் அழைக்கப்பட்டு வந்தவர். கலாலக்ஷ்மி தேவராஜா கடந்த 29.03.2019 அன்று அவர் காலமாகிவிட்டார் எனும் துயரச் செய்தி கேட்டதும் அதிர்ச்சியும் வேதனையும் சோகமும் எம் அனைவரையும் ஆட்கொண்டது. அவரது இழப்பு குடும்பத்தினருக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகிய அதே வேளை எமது கட்சிக் குடும்பத்தில் பெண் உறுப்பினர் ஒருவரது இழப்பாகியும் கொண்டது.

கலா தனது பல்கலைக்கழகக் காலத்தில் பயணிக்க ஆரம்பித்த மாக்சிச லெனினிசப் பாதையில். கட்சிப் பணியில் இளம் சட்டத்தரணியாகச் செயற்பட்டு வந்த தோழர் தேவராஜாவைக் காதலித்துக் கரம்பிடித்து குடும்பமாகிக் கொண்டார். ஜனமகன், அபிலாஷா ஆகிய இரு குழந்தைகளுக்குத் தாயாகிய அதே வேளை தனது கணவருடன் இணைந்து அரசியல் கலை இலக்கியத் தளங்களில் செயற்பட்டும் வந்தார். அவ்வாறு செயற்பட்டு வந்தமையானது அரசியலில் அடிப்படைத் தெளிவையும் கலை இலக்கியத்தில் மாற்றுப் போக்கினையும் எளிமையுடன் மேற்கொண்டிருந்தார். அவர் யாழ்ப்பாணத்திலும் பின்பு கொழும்பிலும் தனது அரசியல் கலை இலக்கியப் பங்களிப்பை உறுதியாக வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தகைய செயற்பாடுகளும் பங்களிப்புகளும் எமது கட்சிக்குப் பலம்சேர்த்து நின்றன. இந்நிலையில் அவரது இழப்பு சோகம் தருவதாகும். இருப்பினும் துக்கத்தைப்

பலமாக மாற்றி அவரது அரசியல் செயற்பாடுகளின் நினைவுகளோடு முன்நோக்கிச் செல்வோம்.

சி. கா. செந்திவேல்
பொதுச்செயலாளர்,
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி

மென்மையான மலர்

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சியும் கலை இலக்கிய பேரவையும் அன்று தொடக்கப்பட்ட காலத்திலிருந்து மக்களுக்காக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் சோ. தேவராஜா சட்டத்தரணி தோழரின் மனைவி கலாலக்ஷ்மி அவர்கள் திடீர் என்று காலமாகிவிட்டார். அவர் ஒரு சிறந்த பொதுவுடமை போராளி. அவர் கட்சியோடும் கலை இலக்கியப் பேரவையோடும் நீண்ட காலமாக கட்சி, தேசிய கலை இலக்கியப் பேரவை வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர். கதை, கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவற்றை தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் விடியலை நோக்கி எழுதினார். நாடகங்களிலும் தன் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். கலாவை நான் யாழ்ப்பாணத்தில் கடக்கும் கூட்டம் மகாநாடு மேதின ஊர்வலம் போன்றவையில் தான் முதலில் சந்தித்தேன். பிறகு யுத்தம் காரணமாக 1995ல் நாங்கள் கொழும்பு போய் சிலகாலம் இருந்தோம். அப்பொழுதுதான் கலாவின் முழுமையான தோழமை எங்களுக்கு கிடைத்தது. செந்தில் தோழர் குடும்பம் தம்பையா தோழர் குடும்பம் தேவர் தோழர் குடும்பம் நாங்கள் எல்லோரும் அங்கு இருந்ததும் கட்சி வேலை கலா இயங்கியபோதும் ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தோம். அடிக்கடி சந்திக்கும் வேளை ஈடுபட்டுக்கொண்டுதான் இருந்தோம். அடிக்கடி சந்திக்கும் வேளை கிடைக்கும் உரையாடுவோம். நாங்கள் குரலை உயர்த்திப் பேசினால் கலா மெதுவாகத்தான் பேசுவார். அவர் மன உறுதி படைத்தவராக இருந்தாலும் பேச்சில் மென்மை இருக்கும். அவர் பல்கலைக்கழகப்பட்டதாரி ஆசிரியை இருந்தாலும் தன் குடும்பம் பிள்ளைகளின் கோச்சிய கட்சி கலை இலக்கிய நோக்கிலும ஆசிரியைப் பணியையும் விட்டுவிட்டு பொது சேவையில் ஈடுபட்டார். அவர் பிறந்த ஊரிலும் தன் அயல் மக்களுக்காக மறுமலர்ச்சி மன்றத்தோடு ஒன்றிணைந்து அவர்கள் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டார். மனிதன் பிறந்தான் இறந்தான் என்றில்லாமல் இருக்கும் காலத்தில் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எங்களால் செய்வதுதான் மனிதநேயம். தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்பவன் தான் முழுமனிதர் ஆகிறார் என்பதை கலா எடுத்துக்காட்டிருக்கிறார். தோழர் சுப்பிரமணியம் தோழர் ஆரம்பித்துவத்த கம்யூனிஸ்ட் கட்சியில் நாங்கள் பல குடும்பங்கள் இன்றும் கூட்டுக் குடும்பங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் வாழுவோம். கலா இறக்கப்படவில்லை. விதைக்கப்பட்டுள்ளார். அவருடைய நாமம் எங்கள் மனதில் எங்களுக்கு நீங்காத ஒரு மென்மையான மலர் என்றும் செம்மலராக எங்கள் மனதில் இருப்பார். அவர் குடும்பத்துக்கும் என் குடும்பம் சார்பாக அஞ்சலி உரித்தாகுக.

அன்பின் நவரத்தினம் சந்திரா
புதிய ஜனநாயக கட்சியின் தோழர்

எமது அன்புக்குரிய திரு தேவராஜா அவர்களுக்கு

அவர்களின் குடும்பத்தினருக்கு

இழக்கமுடியாத எமது இல்லத்தரசியை இழந்துவிட்டோம். இதை யாராலும் ஈடு செய்யமுடியாது. இழப்பு இழப்புத்தான். பெரிய இடைவெளி. இழந்த ஒருவருக்குத்தான் தனது வாழ்க்கைத் துணையை இழந்ததன் ஆழத்தை உணரமுடியும். யானும் இழந்தவன் எனும் நிலமையில் தங்கள் உணர்வை மதிக்கிறேன். காலக்கிரமத்தில் இத்துன்பியலுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலைமைக்கு எம்மைத் தயார்ப்படுத்த வேண்டிய நிலமையில் உள்ளோம்.

தங்களுக்கு ஆறுதல் கூற என்னிடம் வார்த்தைகள் இல்லை. பலருடனும் ஈடுபாடாக வழிகாட்டி நிற்பவர். என்னைப் பொறுத்தவரை யான் ஓர் அரச ஊழியனாகச் செயற்பட்டவன். என்ன எழுதுவது எனத் தெரியாத என்னை உற்சாகமூட்டி (2003ல்) எழுத எனது முதல்நூல் வெளியாகியது. இதுவரை 25க்கு மேற்பட்ட நூல் வெளியீடுகள் 18 ஆண்டுகளில் நடைபெற்றுவிட்டன என்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

இனிமேலும், சோர்வடையாமல் ஈடுபாட்டுடன் நேரத்தை முகாமை செய்து தங்கள் பணிகளைத் தொடர இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன். கடந்த மூன்று மாத காலமாக எனது உடல்நலம் சற்றுக்குறைவாகியது. சலக்கடப்பு, சலத்தில் தொற்று எனது சுகவீனத்தால், கால் எரிவு- நடமாட்டம் குறைவாகிவிட்டது. இப்போ ஓரளவு ஆறுதல். இதனால் என்னால் நேரில் வரமுடியாது உள்ளது. மன்னிக்கவும். வணக்கம்.

உண்மையுள்ள<br>
கா. வைத்தீஸ்வரன்<br>
தெகிவளை

காலங்கள் சாவதில்லை

மகப்பேற்றுக்காக கொழும்பிலுள்ள மருத்துவமனை ஒன்றிற்கு வந்தபோது ஏறத்தாழ இரு மாதங்கள் கலா அக்காவின் வீட்டில் தங்கியிருந்தோம். அவ்வேளையில் அவர் என்னை தனது சகோதரி போலவும், எனது மகள் சுவஸ்திகாவை தனது குழந்தை போலவும் கண்ணும் கருத்துமாக கவனித்த காலங்கள் சாகாதவை. எளிதில் உணர்ச்சிவசப்படும் இயல்பும் நடப்பவை பற்றிய அதீதகற்பனையும் தனது குடும்ப முன்னேற்றத்தில் அதிக அக்கறையும் நிரம்பிய அவர் என்றென்றும் எமது நினைவுகளோடு பின்னிப்பிணைந்திருப்பார். அவர் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

திருமதி யோ.விஜயதிலகியும்

சுவஸ்திகாவும்.

# ஒரு மலரின் பயணமிது

பிரம்மனின் படைப்பிலே புதுக்கவிதை போலான,
பிறவியாம் மானுடம் மாண்பினில் மிளிர்ந்து,
மாதராக இருப்பது அதனிலும் இனியது.
மாணிக்க வாசகரின் இளைய மகளாக,
மாதா தங்கம்மா பெற்ற செல்வமாக,
மண்ணுலகில் கலா லட்சுமி நாமத்தில்,
மனிதரில் மாணிக்கம் தேவராசனின் மனைவியாக,
மக்கள் செல்வங்கள் ஜனமகனை அபிலாஷாவை,
பெற்றெடுத்த பூரிப்பில் வாழ்க்கையில் நிறைவுற்று,
பெருமையாகப் பிள்ளைகளின் வம்சங்கள் தழைத்திட,
நல்லதொரு குடும்பம் இல்வாழ்வில் சொர்க்கமாக,
நாள்தோறும் ஆனந்தம் நாலுபேர்கள் போற்றிட
வாழ்ந்த வாழ்வு நிறைவானதோ? வசந்தங்கள்
வலுவிழக்க விதி செய்த சதியோ?
இறைவனின் கணக்கு தப்பிதமானதே!, காலனின்
இருளாட்சி குறைவயதில் அகால மரணத்தில்,
செவியுற்ற அனைவரும் சோகத்தில் ஆழ்ந்திட,
சொல்லி ஆற்ற வழியில்லை ஐயகோ!,
தேறியே ஆகவேண்டும் எஞ்சிய வாழ்விற்காக,
தேவன் அண்ணாவே! துன்பமது தாங்கிட,
தெய்வத்தை வேண்டுபவன் தெய்வ திலீபன்
அன்பு மலரின் பயணத்திற்கு அனுதாப அஞ்சலிகள்!
அமுதமென தமிழ்மொழியில் கவிமாலை தொடுக்கின்றேன்!

தெ. திலீபன்
(முன்னாள் ஆசிரியர்,
இன்னாள் விவசாயி)
மகேஸ்வரி ஆசிரியை தலைமகன்

# அனுதாபக் குறிப்பேடு

1. மானுடம் பயனுற வாழ்ந்தவர் கலாலக்ஷ்மி தேவராஜா. 1970பதுகளின் பிற்பகுதி முதல் அவவை நன்கறியும் பேறு எனக்கு கிட்டியது, சகல நற்பண்புகளும் இயல்பாக அவரிடம் குடியிருந்தது. குடும்பப் பொறுப்பினை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டதோடு, சமூகசேவைகளிலும், எழுத்துத்துறையிலும் நாடகத்துறையிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றி வந்தவர். அன்னவரது பண்பும் பயன்தந்து நின்ற வாழ்வும் நாமிருக்கும் வரை நெஞ்சுவிட்டகலாது. இது வெறும் வார்த்தையல்ல, சத்தியம்.

குழந்தை ம. சண்முகலிங்கம்

2. இவரை பல இடங்களில் கண்டிருக்கிறேன். இவரது நாடக பங்களிப்புகளை கேள்விப்பட்டிருக்கிறேன். தேவராஜா சேர் இரவுகளில் வீதிகளில் ஆடிப்பாடி வீடு வந்து சேர்ந்தாலும் வீட்டு அலுவல்கள் எல்லாம் முடிந்திருக்கும். தேவராஜா சேர் சுதந்திரமான பங்களிப்பு இவரது மரணத்தின் பின்னர் குறையாது கூடியிருத்தலே இவவுக்கு செய்யும் ஆத்மசாந்தி என்று நான் சேர் இடம் வேண்டுகிறேன்.

க. ரதிதரன்

3. யான் நேரடியாக அவருடன் அறிமுகம் கொள்ளாவிடினும் அவருடைய எழுத்துக்கள் மூலம் அவருடைய சிந்தனைப் போக்கினை அறிந்துள்ளேன். முற்போக்கான கருத்துக்களுடனும், மூட நம்பிக்கை களுக்கு எதிரான பெண்ணியச் சிந்தனைகளுடன் வாழ்ந்துள்ளார். அவரது நினைவுகளும். எழுத்தும் என்றும் நிலைத்திருக்கும்.

மு. இராசநாயகம்

4. கலாவை நீண்டகாலமாக எனக்குத் தெரியும். மேதின ஊர்வலங்களில் அவர் பங்கு கொண்டு உற்சாகமாக செயற்பட்டார். வெள்ளவத்தையில் எமது கட்சியின் ஏற்பாட்டில் வலி வடக்கில் காணி விடிவிக்க கோரி இரண்டு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. அதில் பங்குகொண்ட கலா ஒப்பாரி வதைத்தது எனக்கு ஞாபகம்.

ஞ. சிறிமனோகரன்
குரும்பசிட்டி

5. உலகமே எண்ணற்ற நற்பண்புக் கரங்களால் உம்மை இறுகத் தழுவி அணைத்து நிற்கையில் உறுதுணை மனையாள் அகல்வு உம்மை தனிமைப் படுத்தி விடுவது எங்கனம்.

சி. கனகசிங்கம்
சட்டத்தரணி
தொல்புரம்

6. கலா நாடக அரங்கக் கல்லூரி மூலம் 1979ம் ஆண்டில் இருந்து எனக்கு அறிமுகமானவர். தேவாவும் எனது சக நடிகர். நல்ல நண்பர். கோடை நாடகத்தில்

பெண்கள் நடிப்பதற்கு தயங்கி நின்ற காலத்தில் துணிச்சலுடன் மேடையில் தோன்றிய முற்போக்கு சிந்தனையுள்ள பட்டதாரிப் பெண்மணி. மௌன குருவின் சங்காரம், வடமோடி நாடகத்தில் நான் இனபேத அரக்கன், கலா சமுதாயம். கலாவின் அற்புதமான ஆற்றுகை வெளிப்பாடு. வீ. எம். குகராஜாவின் “கதை இது தானா” வீடியோ திரைப்படத்தில் என்னுடன் கலா கதாநாயகி அற்புத மான கலைத்துறைக்கு ஆற்றுகையோடு பங்களிப்புச் செய்தவர். அவரின் இழப்பு தமிழ் கலை உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு. அன்னாரின் இழப்பால் கவலையுறும் கணவர் தேவராஜா மற்றும் பிள்ளைகள் உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

கலாபூஷணம் ச. உருத்திரதாசன்
நாடகக் கலைஞர்

7. எங்கள் அன்புக்குரிய சோ. தேவராஜா சேர் அவர்களின் ஊக்கமாய் உயிராய் திகழ்ந்த கலாக்காவின் இழப்புக்கு ஈடு இல்லை என்பதை யாவரும் அறிவர். எனினும் இயற்கை உலகின் மருமத்தை உணர்ந்து ஆறுதல் கூறுவதுடன் அக்காவின் ஆன்மா வின் இளைப்பாற்றிற்காகவும் வேண்டி நிற்கின்றேன்.

யோ. யோண்சன் ராஜ்குமார்
பிரதி இயக்குநர், திருமறைக்கலாமன்றம்

8. தேசிய கலை இலக்கியப் பேரவை என்ற மகுடத்தின் கீழ் நின்று சமூகத்திற்காக அல்லும் பகலும் தங்கள் வாழ்வை கரைத்துக் கொண்டிருக்கும் எம் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய சோ. தேவராஜா அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் ஏற்பட்டுள்ள இந்த இழப்பை எண்ணி துயருறுகின்றோம். உங்கள் துயரில் உங்களோடு இணைந்து நின்று ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கி. செல்மா எமில்

9. மாபெருங்கலைஞர் சோ. தேவராஜா சேர் அவர்களின் அன்பு மனையாள் காலமாகிவிட்டா. இழப்பு எப்போதும் நேரலாம். ஆனாலும் கலைஞனின் துணையை காலதேவனே ஏன் இவ்வளவு நேரத்தோடு எடுத்தாய். மாபெரும் கலைஞர் கூட்டம் ஒன்றுகூடி உன் துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறுகின்றோம். ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை வேண்டுகின்றோம்,

பி. யூல்ஸ் சேவியர்
கலாபூசணம்

10. உலகம் ஒரு நாடகமேடை. அந்த மேடையில் ஆடவந்த கலாலட்சுமி ஆட்டத்தை ஆடிமுடிக்காமல் இடை நடுவில் விட்டுச் சென்றுவிட்டார். ஆடி அடங்கும் வாழ்க்கை அடங்கிவிட்டது. பல புதுமையான கனவுகளைக் கண்டு அவ்வாறு வாழ எண்ணம் கொண்டவர் அவர். எண்ணங்களை ஈடேற்றாது சென்றுவிட்டமை எம் சமுதாயத்துக்கும் அவரின் குடும்பத்திற்கும் பேரிழப்பு. இந்த இழப்பை ஈடு செய்ய அவரின் புதிய கருத்துக்களை எடுத்தாளும் சமுதாயம் உருவாகவேண்டும். உருவாகும்.

வே. சண்முகலிங்கம்
அயலவன்

11. கிராமத்தின் நலன் காக்க வேண்டும் என்று பல்வேறு சமூகப்பணியாற்றிவருபவரும் நல்லதோர் சமதர்மச் சிந்தனை கொண்டவரான சட்டத்தரணி தேவராஜா அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி தேவராஜா அம்மா அவர்களின் மறைவு இந்த சமூகத்தின் பெரிய இழப்பாகும். அவரின் பிரிவால் துயருறும் திரு தேவராஜா மற்றும் அவரின் ஆசிரியப் புதல்வி மற்றும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகட்கும் உறவினர்கள் நண்பர்கட்கும் எமது பாடசாலைச் சமூகம் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்துகொள்கின்றோம்.

அதிபர்
யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாலயம்

12. மனிதப் பண்பும் சமுதாய நேர்நோக்கும் இரக்கமுள்ள சுபாவமும் ஒருங்கே அமைந்த உயர்ந்த குணம் உள்ள ஆளுமை மிக்க உள்ளம் படைத்தவர் என்று என்னுடன் அன்பும் உரிமையும் கொண்ட தொடர்பாடல் உடையவர். நிறைந்த செயற்பாட் டாளர். மெல்லிய சிரிப்பு கூரிய பார்வையும் மலர்ந்த முகமும் கொண்ட அன்புச் சகோதரி

உங்கடை பாலன்
திருநெல்வேலி

13. மனித நேயம் மனிதப் பண்பும் கொண்ட திருமதி தேவராஜா கலாலக்ஷ்மி அவர்களுக்கு மக்கள் களரி சார்பில் அம்மாவின் மறைவு இந்த சமூகத்தின் பெரிய இழப்பீடு. மக்கள் களரியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை பகிர்ந்து கொள்கின்றோம்.

ம. மு. அஜந்தன்

14. மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற தூய மனத்துடன் களத்தில் அஞ்சாநெஞ்சோடு சேவை ஆற்றிய திருமதி சோ. தேவராஜாவின் மனைவி கலாலக்ஷ்மி என்றும் மக்கள் உள்ளங்களில் நிலைத் திருப்பார். அவரது திடீர் மறைவு எல்லார் உள்ளங் களையும் நெக்குருகவைத்துள்ளது. என் செய்வோம். விதி எனக்கருதி எம் உள்ளங்களைத் தேற்றுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. என்வீட்டுக்கு விருந்தாளியாக அறுபதாவது திருமணவிழாவுக்கு கலாவை அழைக்க எண்ணி இருந்தேன். காலன் அதற்கிடையில் கவர்ந்துவிட்டான். நான் செய்த பாவம். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப் போமாக. பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித் துக்கொள்கின்றேன்.

திரு & திருமதி ஆனந்தக்குமாரசாமி
கரவெட்டி

15. எனது நீண்ட நாள் நண்பனும், அவரினதும் அவரின் மறைந்த இல்லத்தரசியினதும் ரசிகனும் ஆகியநான் திருமதி தேவராசா அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அன்னாரின் ஆத்மா சாந்தியனைய எனது பிரார்த்தனைகள்.

கனக. கேசவன்
சட்டத்தரணி
நல்லூர்

16. எமது உறவினரும், எமது ஊரின் (காலையடி பனிப்புலம், கலட்டி) நன்கு அறியப்பட்ட இடதுசாரி கொள்கையில் கூடிய பற்றுக் கொண்டவருமான தே. கலாலட்சுமியின் திடீர் இழப்பு மிகவும் மனவேதனை தந்துநிற்கிறது. நாடக இலக்கியம், கதை இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு உள்ளவராக திருமதி கலா அவர்கள் திகழ்ந்தார்கள். நான் அறிந்தவரை இவர்கள்தான் கணவன் மனைவி இருவரும் இடது சாரி கொள்கை உடையவர்களாக இருந்துள்ளார்கள். நான் மாணவனாக இருந்தபோது தேவராசா கலா அக்கா அவர்கள் (காதலர்கள்) கொழும்பு வந்து என்னையும் அனது அக்கா, தம்பி எல்லோரையும் கூட்டிக்கொண்டு Rive man arming திரைப்படத்தை காண்பித்தார்கள். இது இப்பவும் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. இவரின் பிரிவால் துயருறும் இவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

இப்படிக்கு
எஸ். மணிவண்ணன்
திருகோணமலை

17. எதுக்களாலும் எடுத்த மொழியாலும் உன் கள்ளங் கபடமற்ற குழந்தை முகத்தை வர்ணிக்க முடியாது.

க. லோகநாதன்
கொக்குவில் மேற்கு
கொக்குவில்

18. எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து எங்களையும் எனது மகனையும் வழிநடத்திய எனது மகன் பிரசாந் அன்ரி என்று அன்பாய் அழைக்கும் எங்கள் அன்ரியின் மரணச் செய்திகேட்டு துக்கம் அடைந்தேன். எங்கள் குடும்பத்தின் அனுதாபங்கள்.

எஸ். நகுலராஜா
புகையிரத வீதி
சாவகச்சேரி

19. “நெருநல் உளனொருவன் இன்றில்லை” என்றார் வள்ளுவர். வாழ்வின் பொருள் உணர்ந்து நிறைவாக வாழ்ந்து நிலையில்லாத உலகில் அனைவரது உள்ளங் களிலும் நல்ல நினைவுகளையும் விட்டுச் சென்றுள்ளார். அவரது ஆன்மா சாந்தியடைவதாக

ந. குகபரன்
சித்தங்கேணி

20. எமது வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் சட்ட ஆலோசகராக கடமையாற்றும் திரு தேவராஜா அவர்களின் துணைவியாரின் மறைவிற் காக பிரதேச சபை சார்பாக அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்காக ஆழ்ந்த இரங்கல் களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றோம்.

ந. கணேந்திரன்
பொறுப்பதிகாரி
வலிதென்மேற்கு பிரதேச சபை
உப அலுவலகம், பண்டத்தரிப்பு

21. எமது இலக்கியப் பொக்கிஷம் ஒன்று மறைந்துவிட்டது. இருக்கும் போது எமக்கு அவரின் பெருமைகள் தெரியவில்லை. இப்போதுதான் அவரைப் பற்றிய முழு அரிய பெருமைக்குரிய விடயங்களை அறிந்திருக்கிறோம். அவர் இருக்கும் காலத்திய எமது இளம் சமூகத்திற்கு தேவையான பல இலக்கியம் சார்ந்த பயிற்சிகளை மேற்கொண்டிருக்க முடிந்திருக்கும். தேவராஜா சேர் எப்போதும் பகிழ்ச்சியான மனிதர். இனியும் அவர் அவ்வாறே தனது துணைவியின் ஆசியுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து இலக்கிய வட் டத்தில் பல பணிகளை ஆற்றவேண்டும் என உளமார வேண்டுகிறேன்.

சாருஜா மயூரன்
சட்டத்தரணி
தொல்புரம்

22. தேவராஜா சட்டத்தரணி ஐயா அவர்களின் சமூக்கத்தின் மீதான பார்வை, வெகுஜனப் போராட்டம் என்பனவற்றிற்கு உற்ற துணையாக இருந்து அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் கூடவே பயணித்திருந்தார். அம்மணியின் மறைவு ஈடு செய்யமுடியாத ஒன்றாகும்.

ஷர்மிளா ஜெகதீஸ்வரன்
சட்டத்தரணி
நீர்வேலி

23. அன்பின் தேவா துணை இழந்து வாழும் தங்களுக்கு மன உறுதியும் ஆண்டவன் தர பிரார்த்திப்பதோடு மனைவி ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறேன்.

(ஒப்பம்)

24. சக சட்டத்தரணியும் எழுத்தாளரும் எனது தந்தையின் நண்பரான சோ. தேவராஜாவின் துணைவியின் மரணத்தை இட்டு அவரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

க. அபிமன்யு
சட்டத்தரணி
யாழ்ப்பாணம்

25. புதிய ஜனநாயக (மா. லெ) கட்சியின் மூத்த தோழரும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் முன்னணி தோழரும் கொழும்பில் உருவாக்கப்பட்ட சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் அமைப்பாக்க உறுப்பினர்களில் ஒருவருமான தோழர் கலாலக்ஷ்மியின் இழப்பு கட்சிக்கும், பேரவைக்கும் ஒரு பேரிழப்பாகும். அதற்கும் மேலாக தோழர் தேவராஜா விற்கும் அவர் கட்சி அரசியலிலும் கலை இலக்கியப் பண்பாட்டு தளத்திலும் ஒரு முன்னணி போராளியாக இயங்கவும் பக்கத்துணையாக நின்றவர். தோழரின் பிரிவு அவரது இரு பிள்ளைகளுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களும் தோழருக்கு புரட்சிகர செவ் அஞ்சலிகளும்.

இரா. ரஞ்சன்,(AAL)
பு.ஜ. மா.லெ. க. கொழும்பு

26. சட்டத்தரணி தேவராசா அவர்களின் மனைவி அமரர் கலாலக்ஷ்மி தேவராஜா அவர்களின் இழப்பு நாடக உலகிற்கே பேரிழப்பாகும். அவர் நாடக

அரங்கக் கல்லூரியில் சிறந்த நடிகையாக போற்றப்பட்டவர். பல நாடகங்களில் நடித்துள்ளார். அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவரின் குடும்பத் தாருக்கு அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன்.

க. சந்திரசேகரன்
செயலாளர்
கைகொடுக்கும் நண்பர்கள்

27. 1996ஆம் ஆண்டில் இருந்து எனக்கு அறிமுகமாகி கலா அக்கா என்றும் எங்கள் அன்புக்குரியவர் கொழும்புவில் அவர் இருக்கும் போது இராணுவக் கெடுபிடிக் காலத்தில் என்னையும் இராஜியையும் பாதுகாப்பாக கொழும்பின் பல பகுதிகளுக்கும் கூட்டிச் செல்பவர். கொழும்பு வவுனியா என என்றும் எங்களுடன் நெருங்கிய தொடர்புடன் உரிமையுடனும் பழகுபவர். என்றும் எங்கள் அன்புக்குரிய அக்கா கலா அக்கா உங்கள் மரணச் செய்தி என்னை அதிரவைத்தது. அதுபோன்று எங்கள் குடும்பத்தையும். அக்கா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி

மூர்த்தி
இராஜி
கி பி

28. கலாக்கா!

கலாக்கா! எப்படி ஆரம்பிப்பது. எப்படி முடிப்பது என்று தெரியாமல் தவிக்கவிட்டு விட்டு... நீங்கள் இறைவன் பாதத்தில் சரணாகதி அடைந்துசென்று விட்டீர்கள்.

உங்கள் பாசத்துக்கு முன்பு நாம் எல்லோருமே ஒரே தம்பிகள் சகோதரிகள், பிள்ளைகள்.. உங்கள் பர்வையின் முன்... போலிகள் ஒழிந்தன. உங்கள் அன்புக்கு அனைத்துமே சரணாகதியே அடைந்தன. ஓயாது... என்றுமே எங்கள் காதுகளில் ஒலித்துக்கொண்டு மகிழ்வையே... மனநிறைவையே எங்களுக்கு தந்தது உங்கள் வாஞ்சைக் குரல்.

உலகம் பற்றிய உங்கள் பார்வையானது நோகாது மென்மையாக வெட்கப்படத் தக்க வகையில், சமூகத்தை நீங்கள் கூர்ந்து கவனித்து எழுதிய இரு கதைகள் மீண்டும்.. மீண்டும் எங்களை மீள வாசிப்புக்குள்ளாக்கும்.

அன்பை விதைத்து அன்பை அறுவடையாக்கி விடைபெற்றுவிட்டீர்கள் கலாக்க.

உங்கள் இருப்பு என்றுமே எங்களுடனேயே இருக்கும். சிறுவயதிலிருந்தே கலகம் செய்து உள்ளேயும், வெளியேயும் போராடி... எங்கள் மனங்களை ஆக்கிரமித்துவிட்டுச் சென்றுவிட்டீர்கள்.

போய்வாருங்கள் கலாக்கா!

அன்புடன்

தம்பி,
மா. கோணேஸ்வரன்

29. 1999ம் ஆண்டு எனக்குக் கிடைத்த புதிய உறவு கலாக்கா. அப்போது எனக்கு அது பெரிதும் ஆறுதலாக இருந்தது. கொழும்பில் இருந்து தனிமையில் கவலையில் இருந்தபோது என்னையும் சகோதரியாக ஏற்று ஒருசில நாட்கள் நாங்கள் இருவரும் எவ்விதமான ஒளிவு மறைவுமின்றி எமது கஷ்டங்கள், துன்பங்களைப் பகிர்ந்தோம். இறுதியில் எவையுமே நிஜமில்லை என்று எங்கள் மனதை நாமே சமாதானப்படுத்திகொண்டு பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வாங்கோ கேமா எங்கையாவது போவோம் என்று பாக், பீச் என்று போய் அனுபவித்த காலங்கள் இன்றும் எனக்கு இன்பமாகத்தான் இருக்கிறது. இவ்வளவு வேகமாக நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்வீர்கள் எனக் கனவிலும் நினைக்க வில்லை. உங்களின் பிரிவுச் செய்தி கேட்டு என்மனம் ஏற்கமறுத்தது. இத்தகவல் பொய்யாக இருக்கக் கூடாதாவென நினைத்தேன். அது நிஜமாகவே நடந்துவிட்டது. கலாக்கா உங்களை என்வாழ்வில் மறக்கமுடியாது. உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

ர. கேமா

30. உங்கள் அம்மாவின் திடீர் மறைவை எண்ணி கலங்கித் தவிக்கும் அங்கிள், மகள், மகனுக்கு எமது இதய பூர்வமான ஆறுதலைக் கூறுவதுடன், அம்மாவின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புடன்

முருகையன், சிவானந்தன்
குடுப்பத்தினர்

31. பல அவதாரங்களைக் கொண்டவர் அம்மா கலாலக்ஷ்மி அவர்கள். எழுத்தாளராக, நாடக நடிகையாக, தன்னுடைய திறனை அனைவருக்கும் வெளிக்காட்டியவர். தன்னுடைய கணவர் தேவராஜா அவர்களின் அரங்கப் பயணத்துக்கு பெரிதும் பக்கபலமாக இருந்தவர். இவரால் தான் நான் அரங்கத் துறையில் சுதந்திரமாக விருப்பத்துடன் பணியாற்றுவதாக அடிக்கடி கூறிக் கொள்ளுவார். அம்மா கலாலக்ஷ்மி அவர்களின் மறைவு கலை உலகில் மாபெரும் இழப்பாகும் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்கள்.

வ. றொபின்
புன்னாலைக்கட்டுவன்

32. தொடக்கம் அரசியல் அறிமுகம் அரசியல் எங்கிருந்தோம் எப்படி உறவானோம் எதற்காக அறிமுகமானேன் என்பதெல்லாம் நிசவாழ்க்கையில் நாம் அனைவரும் மக்களுக்காய் இணைந்தவர்கள் அவர்களுக்கே சேவை செய்ய இணைந்தவர்கள். அதனால் என்னவோ இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாய் உள்ளோம். உங்கள் நாடகம் கலை என்பதன் மூலம் உங்கள் கணவன் பிள்ளைகள் குடும்பமாய் கைகொடுத்தோம் அக்கா நீங்கள் எம்மிடையில் இருந்து பிரிந் தாலும் தங்களின் கடந்தகால நினைவுகள் எங்களிடத்தில் உள்ளது. தங்களின் கணவர் எங்கள் உடன் கொள்கைப்பற்றுடன் இருக்கின்றார் நீங்கள் நம்பிக்கையுடன் விடை

பெறுங்கள். நாங்கள் தொடருவோம் அடுத்தவருக்காய் எமது அரசியல் பாதையில் பிறப்பு என்று ஒன்று இருக்கும் எனில் மரணம் ஒன்றும் உள்ளது. நாம் வாழும் காலத்தில் எப்படி எல்லாம் வாழ்ந்தோம் என்பதுதான் மக்களிடம் இருக்கும் கேள்வி விடையாக இருக்கும். அந்தவகையில் நீங்களும் முன்னுதாரணமாக கடந்த காலங்களில் இருந்துள்ளீர்கள். தங்களின் பிரிவால் துயரம் அடைந்துள்ள கணவர் பிள்ளைகள் பேரப் பிள்ளைகள் உறவினர்களுக்கு எமது ஆறுதல்களைத் தெரிவிக்கின்றேன்.

க. கதிர்காமநாதன்
செல்வம்
புத்தூரர்

33. காலஞ்சென்ற தேவராஜா கலாலக்ஷ்மி அவர்கள் குடும்ப வாழ்வில் ஒரு முன் உதாரணமாகவும் நல்ல மனைவியாகவும் தாயாகவும் வாழ்ந்துள்ளீர்கள். தங் களின் பிரிவால் துயருறும் குடும்ப உறுப்பினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நித்தத

34. பிறப்பும் இறப்பும் இணைக்குழந்தைகள். தொடக்கமும் முடிவும் ஒரே புள்ளியில் தான். எனவே எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளுவோம்.

அ. சீவரத்தினம்
ஆனைக்கோட்டை

35. நீங்கள் இந்து மகளிர் கல்லூரி மாணவியாக ஓட்டமடம் வீதியால் செல்வதை பார்த்து உள்ளேன். நீங்கள் என் பெருமதிக்கும் பேரன்புக்கும் உரிய தோழர் தேவராசா வின் மனைவியென்றறிந்த பின் உங்களைப் பார்க்கவேண்டு மென்று நினைத்திருப்பேன். கொடிய மரணம் இன்று இப்படி பொறுக்கமுடியாத வழியில் வந்ததே. எப்படிப் பொறுப்பது? இப்படியா பார்ப்பது.

எஸ். கே. கணேசவேல்
ஓட்டுமடம்

36. சோ. தேவராசா கலா இருவரையும் இளமைக் காலத்திலிருந்து தோழமையுடன் பழகி, பின்னர் அவர்களது இனிய திருமணத்திலும் கலந்து கொண்ட நான். இன்று கலாவின் இறுதி நிகழ்வில் மிகுந்த துக்கத்துடன் கலந்துகொண்டேன். இவர்கள் இருவரும் வாழ்வில் இணைந்து, சமூகத்தின் மேம்பாட்டுக்கா அரும் பணியாற்றியமை எம்மவர்களால் மறக்க முடியாது.

கே. சுப்பையா
மட்டுவில்

37. வாழ்க்கையில் மிக முக்கியமானது காலம். இந்த முக்கியமான காலத்தை பலதுறைகளில் பயனுள்ளதாக பயன்படுத்திக்கொள்ளாமையின் மகத்தான பாடத்தை நாடகத்துறை, கல்விப்புலம், அரசியல் சமூக களம் என்று துறைகளின் ஊடாக எடுத்துக் காட்டியவரான தங்களுக்கு நிச்சியமாகவே வாழ்வின் இனிமை போலவே மகிமையையும் தெரிந்தமை சமூகம் கூறுகின்றது.

சாமிநாதன் விமல்

38. அன்புத் தோழர் தேவராஜாவின் மனைவியின் இழப்பு எனக்கும் எனது ஊர் பொது மக்களுக்கும் தோழர்களுக்கும் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. என்பதில் மீண்டும் மனம் குமுறுகிறது.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறையைப் பிரார்த்திக்கிறேன்.

மாணிக்கம் கணேஷ்
நிச்சாமம், சங்கானை

39. எதிர்பாராவண்ணம் இறையடி சேர்ந்த திருமதி கலாலட்சுமி தேவராசா அவர்கள் எங்கள் சமூகம் பயன் பெற வாழ்ந்துகாட்டிய உத்தமியாவார். அவரின் ஆத்மா இறையடியில் அமைதிபெற வேண்டித் தொழுகின்றோம்,

சைவப்புலவர் க. செல்லத்துரை
சுன்னாகம்

40. தோழர் தேவராசா அவர்களுடைய அன்பு மனைவி கலாலட்சுமி அவர்கள் இலக்கிய உலகிற்கு ஆற்றிய தொண்டினால் இன்றும் எங்களோடு வாழ்கிறார்... அவரின் எழுத்துக்களும். நாடக நெறியாள்கையும், அவரின் சிந்தனைகளும் எழுத்துக்களினூடாக என்றும் எங்களோடும், மண்ணோடும் மக்களோடும் வாழ்கிறார். அவரின் திடீர் இழப்பு- எந்த விதமான பாதிப்புக்களையும் உங்களுக்கு ஏற்படுத்தாதவாறு எல்லாம் வல்ல ஆண்டவன் உங்களுக்கு உதவுவார். அன்னாரின் ஆத்மா அமைதியடைய வேண்டும் என்றும் பிரார்த் திக்கிறேன்.

துரைராசா இளங்குமரன்
விரிவுரையாளர் (யா. தே.க. கல்லூரி)
வரணி

41. தங்களின் இழப்பு குறித்து மனம் வருந்துகிறேன். இழப்பு என்பது எல்லோருக்கும்தான். பொதுவானது. தங்களுக்கு என் அன்பான ஆறுதல் உண்டாகட்டும்.

ச.கந்தராசா
கல்வயல்
சாவகச்சேரி

42. தேவராஜா சேர்- தேவர் மாமா என அறியப்பட்ட தோழரது குடும்பத்தின் கலை, இலக்கிய, சமூக செயற்பாடுகள் இளவயதிலிருந்தே எம்மை ஈர்த்தன. அது குடும்ப உறவாக சமூக உறவாகப் பிரவாகம் பெற்றது. இனம் புரியா உணர்வுகளுடன் இணைந்து பயணிக்கும் இவ்வேளையில் தோழரின் இழப்பு எதிர்பார்க்காதது. ஏற்றுக்கொள்ள மனம் மறுக்கிறது. அஞ்சலிக்கின்றேன். நினைவுகள் தொடரட்டும். பணிகள் தொடரட்டும்,

அ. விஜயநாதன் (பாபு)
ஆசிரியர்

43. இந்த அம்மையார் இன்னும் சிலகாலம் வாழ்ந்திருந்தால் சிறந்த வெளிப்பாடுகள் பலவற்றை தமிழ் சமூகம் பெற்றிருக்கும் என்பது திண்ணம். முதிர்ச்சியால் பெறப்படும் அடைவே மகத்தானதாக இருக்கமுடியும்.

அ. விஜயகிருஷ்ணன்
ஐயனார் கோயிலடி,மல்லாகம் தெற்கு

44. அன்னார் சிறிது காலமாக எம்மோடு பழகி இருந்தாரும் அவரின் அன்பும், பாசமும், பழகும் விதமும் போற்றத்தக்கது. மேலும் அன்னாரின் இழப்பினால் துயர் அடைந்த அவரது குடும்பத்தினருக்கு எமது நிறுவனம் சார்பாக எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்

ஸ்ரீலங்கா சுமித்திரையோ
கைகொடுக்கும் நண்பர்கள்
யாழ் மாவட்டம்

45. அன்பு தேவர்மாமா கலா அக்காவுடன் பழைய உறவுகள் மீட்டி பார்க்கும் போது எமது வாழ்க்கை வரலாறுகள் எவ்வளவு ஆறுதலாக இருக்கும். கலா அக்கா எவ்வளவு பாசமாக பழகினாவோ அவ் உறவுகள் நீடிக்க வேண்டும்.

சூடாமணி மகள் மாலா

46. தோழர் தேவராசா அண்ணனின் தேசப் பணிக்கு உரமூட்டிய எங்கள் தோழர் கலா அக்கா உங்கள் பிரிவு எமக்கு பேரிடியாக செவிகள் கிழித்து நுழைந்தது. சமூகவிடுதலையை நீங்கள் நேசித்தீர்கள் காலங்காலமாகவே உங்கள் காலத்தை கனதியுடன் சுமந்தீர்கள். பெண் விடுதலைப் பணியைப் பேணிக் காத்தீர்கள் இன்னும் இன்னும் சொல்லச் சொல்ல உங்கள் சேவை தொடரும். கலா அக்கா காலாதி காலம்வரை உங்கள் பெயர் கண்ணியமாக வாழ்ந்திருக்கும். நீங்கள் மறையவில்லை விடுதலைத்தாகம் உள்ள எல்லோரது உள்ளத்திலும் ஒளிச் சுடராக நீங்கள் பிரகாசிப்பீர். உங்கள் ஆத்மா இறையடியுடன் சேர்ந்திட வேண்டி நிற்கிறோம். ஓம்சாந்தி, சாந்தி, ஓம் சாந்தி

இவ்வண்ணம்

இ. அன்பரசன்

47. சேர்ந்து பயணித்த துணையின் இழப்பும் அதன் வலியும் தாங்கமுடியாத ஒன்று. நியதியின் செயலைக் கண்டிக்கவோ எதிர்த்துப் போராடிடவோ முடியாத கையறுநிலை. எல்லாம்வல்ல இறைவனின் திருவிளை யாடலை ஏற்பதைத் தவிர வேறில்லை. நண்பர் தேவராசா அவர்களின் ஆத்ம்பத்துக்கு ஆண்டவன் துணைநிற்பானாக

ஆசை இராசையா
நல்லூர்.

48. தேவரண்ணரின் அன்புத் துணைவியார் கலா அக்காவை இறுதியாக 14.10.2018 அன்றைய 'பனைமரக்காடு' திரைப்பட முதல் சிறப்புக்காட்சியில் சந்தித்திருந்தேன். அதிகம் பழக்க மில்லாவிட்டாலும் அவரது கலைச்சேவை பற்றிக் கேள்விப் பட்டிருந்தேன். அவரது சேவையை நாம் பெறமுன்பே அவர் நம்மைப் பிரிந்தது துரதிர்ஸ்டம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக

கேசவராசன்
சுதுமலை
மானிப்பாய்

49. கலாக்கவாவின் ஆன்மா சாந்திக்கு எமது குடும்ப சார்பில் நான் பிரார்த்திக்கிறேன்.

உங்கள் பாதையை நாம் தொடருவோம்.

வாழ்க வழமுடன்.

நன்றி

சற்குணநாதன்
ரொறன்ரோ
கனடா

50. கண்ணுக்குள் நிற்கும் உன் உருவம்
இனியும் காணக்கிடைக்குமோ கலாவே
உமதிழப்பு உமது உறவுகளுக்கு மட்டுமன்றி
உலகிற்கே நட்பு உலகிற்கே பேரிழப்பு
உமது ஆத்மா நிச்சயம் எம்மை சுற்றியே
உமது உறவுகள் நட்புகளை சுற்றியே
வலம் வந்துகொண்டிருக்கும்
உமதாத்மா சாந்தி பெற நட்புக்கள்
குடும்பங்கள் சார்பாக வேண்டுகிறேன்

க. கமலசேகரம்

51. தேவராசாவின் அன்புத்துணைவியாரின் மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றேன்

வே. விஜயரத்தினம்
சட்டத்தரணி
கோண்டாவில்

52. அன்பின் தோழர் தேவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எதிர்பார்த்திராத பேரிழப்பு. அவர்களுக்கு ஆறுதலும், அமரருக்கு அஞ்சலியும்!

ஐ. சாந்தன்

53. கலாக்காவின் திடீர் இழப்பினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதேவேளையில் எமது கிராமத்தின் முதல் பெண் பட்டதாரியும், எழுத்தாளர், நாடக கலைஞராகவும் தன் பன்முகங்களை வெளிப்படுத்தி எமது கிராமத்திற் பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஆ. நற்குணேஸ்வரன்

54. இது. நியதி

இ. தயாபரன்

55. திருமதி தேவராசா கலாலட்சுமியின் இறப்பை என்னால் நம்ப முடியவில்லை. பெயருக்கேற்ற கலைகளில் ஈடுபாடு கொண்டவர். நாடகம் நடிப்பதில் ஆற்றல் கொண்டவர். பாத்திரத்திற்கேற்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாங்கு நயக்கத்

தக்கது. அவரின் கவிதை புனையும் ஆற்றலும் குறிப்படத்தக்கது. எல்லாவற்றிற்கும் மேலாக அன்புள்ளம் கொண்ட ஒரு சிறந்த பெண்மனி. அவரின் எளிமையான இயல்பு வாழ்க்கை எல்லோரையும் ஈர்க்கும் தகையது. மற்றவரின் துன்பத்தை தன் துன்பம் போன்ற ஒத்துணர்வு கொண்ட ஒரு உளநல வளவாளராக வாழ்ந்தவர். தேவராஜனும் கலாலசுமியும் அன்றிலும் பெடையும் போன்று இருமையில் ஒருமையாக வாழ்க்கையை ஆனந்தித்தவர்கள். அமரரின் இறப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்று. அவரின் ஆத்மா பேரின்பம் துய்க்கும் தன்மையில் சிவத்துடன் கலந்துவிட்டது.

நாச்சியார். செ
சுளிபுரம் கிழக்கு

53. "கலா அக்காவின் வாழ்வுக்கும் பணிக்கும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். வேதாகமம் கூறுவது போன்று நல்லதொரு போராட்டத்தைப் போராடி, தனது நம்பிக்கையை காத்துக் கொண்டு தனது ஓட்டத்தை முடித்துக்கொண்டார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்கள் உரித்தாகட்டும்.

பேராசிரியர் கி. நோ. சுரேந்திரன்
(சின்னத்தம்பி மாஸ்டர் குடும்பம்)

54. கலா அக்கா என்னால் என்றும் மறக்க முடியாது. என்னை முதல்முதல் தென்பகுதி கூட்டிச் சென்று பல இடங்களை காட்டி பல கதைகள் சொல்லி வழிப்படுத்திய அவர் சென்று விட்டார். எமது குடும்பம் என்றும் மறக்க வில்லை. இவரின் இழப்பு ஈடுசெய்யமுடியாத இழப்பு. எமது குடும்பத்தின் சார்பாக அனுதாபங்கள்.

க. மேஜெயா
சூடாமணி குடும்பம்

55. மனித வாழ்வின் அதிசயம் நல்லவர்களின் நட்பு. அந்த வகையில் நீங்களும் ஓர் அதிசயம்.

கணபதிப்பிள்ளை நிசாகரன்

56. நல்ல மனிதனின் வாழ்க்கைத் துணையாகவும், வழி காட்டியாகவும் இருந்த தாயார் உலகை விட்டு சென்ற போதும் அவருடைய நினைவுகள், அன்பு நிறைந்த செயல்கள், சிரித்த முகம் தேவராசா எனும் நல்ல மனிதனை இனிவரும் காலம் நல்லமுறையில் வழிநடத்திச் செல்லவேண்டும் என்னும் அவரின் உற்ற துணை நிழலாய் அவரைத் தொடர வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன்.

ஸ்ரீலேக்கா பேரின்பகுமார்

57. பல்கலை துறைசார் விற்பனராக இம் மண்ணில் வாழ்ந்து ஐயாவின் நல்ல துணைவியாக இருந்து ஏழ்மை நிலை மக்களின் மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்த அம்மா விரைவாக சென்றநேரம் இடைவெளியை நிரப்ப யார் உண்டோ?

பா. குணராசா

58. பல்துறை ஆற்றல் மிக்க ஒளிவிளக்காகத் திகழ்ந்தவரின் சமூகப்பணி தொடரவேண்டும்.

சு. சிவநேசராசா

59. எனது அப்பாவின் நீண்டகால நெருங்கிய நண்பரான தேவராஜா ஐயாவின் மனைவியாரின் திடீர் மரணத்தால் ஏற்பட்ட இறப்பானது ஈடு செய்யப்பட முடியாத ஒன்றாகும். அவரிற்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு வாழ்க் கைப் பயணத்தில் எதுவும் சீக்கிரம் அல்ல மனிதராய் பிறப்பவர் என்றாவது ஒருநாள் இவ் உலகை விட்டு நீங்கிச் செல்லவேண்டும் என்பது தவிர்க்க முடியாது.

வீரகத்திப்பிள்ளை கௌதமன்

60. ஒரு குடும்பத்தில் பெண் என்றவள் தெய்வத்திற்கு சமமானவள். அவள் இல்லாவிட்டால் அந்த குடும்பத்தில் இருக்கும் அவளது உறவுகளுக்கு எந்தவித பாதுகாப்பும் ஆறுதலும் இல்லாமல் போய்விடும். அதே போன்று இந்த குடும்பத்தில் இப்பெண்ணான கலா அக்கா இல்லாத இழப்பு பெரும் இழப்பானது.

ஜே. லதா

61. கலா. காலாவின் மறைவுச் செய்தி நம்ப முடியவில்லை. செய்தி கேட்டு இதயம் துணுக்குற்றது. இயற்கை தன் விளையாட்டை காட்டிவிட்டது.

கலா ஒரு காவியம். எத்தனை அத்தியாயங்கள். ஒவ்வொரு அத்தியாயமும் ஒவ்வொரு அனுபவங்கள். எடுத்துக்காட்டுகள். ஒரு தோழரின் மனைவியாய் – இலக்கியச் சுவைஞராய் – விமர்சகராய் ஒரு குடும்பத்தின் தலைவியாய், பாசமுள்ள தாய், தோழரின் செயற்பாட்டுக்கு எதிரிகள் வெள்ளைப் புடைவை கட்டுவாய் என எச்சரித்தபோதும் கலங்காது கணவனின் செயற்பாட்டிற்கு உறுதியான தோழியாய் – வீராங்கனையாய் என் குடும்ப உறவாய் பொஸ்கோ அண்ணாபொஸ்கோ மாமி என அழைத்து உதவிவந்ததை – எமது குடும்பம் கொழும்பில் வாழ்ந்த போது பல வழிகளிலும் உதவியதை மறக்க முடியாது. நினைவுகள் நெஞ்சில் நிழலாடு கின்றது. அவரது மறைவு குடும்பத்திற்கு மாத்திரமல்ல. உறவுகள் நண்பர்கள் சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு. எவ்வாறு ஆறுதல் கொள்வோம்.

பொஸ்கோ

62. பாலசுப்பிரமணியம் சாட்சாதீஸ்வரியின் இணைபிரியாத தோழி. அமரர் தேவராசா கலாலட்சுமி இழந்து

பா, சாட்சாதீஸ்வரி

63. எனது மதிப்புக்குரிய சட்ட மாணவனும் சட்டத்தரணியும் பிரபல எழுத்தாளருமான சோ. தேவராசாவின் பாசமிகு மனைவியுமாகிய கலாலட்சுமியின் இழப்பு ஈடு செய்ய இயலாதது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றேன்.

சி. தர்மநாயகம்
ஓய்வு பெற்ற நீதிபதி

64. அன்பரே தேவராஜா அண்ணரே பிள்ளைகளே!

"புன்னகை என்றும் மாறவில்லை

அன்னையின் அன்பு குறையவில்லை

என்றும் மானுடத்தின் விடுதலைதாகம்

என்று தணிவோம் அவர் இழப்பின் சோகம்

கந்தையா ஸ்ரீகணேசன்
யாழ். பல்கலைக்கழகம்,
ஆங்கிலமொழித்துறை
166, சுதுமலை வடக்கு மானிப்பாய்

65. திருமதி தேவராஜா அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்கள்.

சொ. சிவபாலன்

66. எமது கட்சியின் நீண்டகால உறுப்பினரும் கட்சிக் குடும்பத்தில் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்தவருமான தோழர் கலாலக்ஷ்மிக்கு கட்சியின் மத்தியகுழு சார்பில் அஞ்சலியையும் செவ்வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சி. கா. செந்திவேல்
பொதுச் செயலாளர்
புதிய ஜனநாயக மா. லெ. கட்சி

67. மலையக மக்களின் விடுதலைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் 30 வருடங்களுக்கு மேலாக புதிய ஜனநாயக மாக்சிச கட்சி உழைத்து வருகிறது. மக்களின் மேம்பாட்டுக்கும் விடுதலைக்கும் நாம் உழைப்பதற்கும் போராடுவதற்கும் கட்சியின் தலைமைத் தோழர் சோ. தேவராஜாவின் பங்களிப்பு அளப்பரியது. தோழர் தேவராஜாவின் துணைவியார் கலாக்காவின் இழப்பு மலையகத் தோழர்களுக்கும் மக்களுக்கும் துன்பத்தைத் தருகிறது. அவரது இழப்பால் வாடும் நாம் அனைவரும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

மலையக மக்கள் சார்பாக எங்கள்
புரட்சிகர அஞ்சலி
இராகலை பன்னீர்

72. அஞ்சலி

க. சடாச்சரம்
மானிப்பாய் வீதி
உடுவில்

73. தோழர் ஒருவர் வாழ்க்கைத் துணையாய் அமைவதன் பலத்தை உணர்த்தியவர் கலா ஆண்டி. தே. க. இ. பேரவை கொழும்புக்கிளையில் அவரருகில் அமர்ந்திருந்த நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். நல்ல ஒரு முன்மாதிரியை இழந்திருக் கிறோம். இந்த இடைவெளி மிகப் பெரியது. தேவராஜா அங்கிளுக்கும், ஜனா அண்ணன், அபி அக்கா உங்கள் அனைவருக்கும் எம் ஆறுதல்கள்.

லுணுகலை ஸ்ரீ

74. மிகவும் அடக்குமுறை நிறைந்த சூழ்நிலைகளில் உயிராபத்து இருந்த நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு இடம்பெயர்ந்து எங்கோ ஒரு ஓரத்தில் ஒதுங்கி விடாமல் பேரினவாதத்திற்கும் அடக்குமுறை அரசிற்கும் சமூக அடக்கு முறையாளர்களுக்கும் எதிராக கருத்துரைப்பதற்கு மேலாக களப்பணியாற்றிய தோழர் கலாலக்ஷ்மியின் மறைவு ஈடுசெய்ய முடியாதது. அவரின் வாழ்க்கை சமூக

மாற்றத்திற்கான செயற்பாட்டாளர்களுக்கு குறிப்பாக பெண் செயற்பாட்டாளர்களுக்கு ஆதர்சமாகும்.

அவருக்கு புரட்சிகர அஞ்சலி.

இ. தம்பையா
152/1/3
ஹல்விஸ்டோப் வீதி
கொழும்பு -12

75. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

சிவானி வசந்தசேனன்
மானிப்பாய்

76. சோமசுந்தரம் தேவராஜா அண்ணருடைய மனைவி கலாஇலச்சுமியின் திடீர் மறைவு எல்லோரையும் ஆழ்ந்த கவலைக்கு இட்டுச் சென்றது. இவருடைய மறைவினால் அண்ணர் தேவராசாவிற்கு ஒரு கை உடைந்தது போல இழப்பு ஏற்பட்டுள்ளது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவதுடன் அவர்கள் இரு பிள்ளைகளும், பேரப்பிள்ளையும் அண்ணரும் கவலையை மறந்து இறைவனை பின்பற்றி ஈடேறும் வண்ணம் வேண்டி விடை பெறுகின்றேன்.

ச. தவகுணராசசிங்கம் சட்டத்தரணி
சுழிபுரம் கிழக்கு
சுழிபுரம்
கால்நடை உத்தியோகத்தர்,
விரிவுரையாளர்
இலங்கை விலங்கு பரிபாலனக்
கல்லூரி
குண்டகசாலை

77. ஒரு மனிதன் பிறக்கின்றான். இறக்கின்றான். அந்த பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலமே அவனது வாழ்க்கைக் காலமாகும். என்கடன் பணிசெய்து வாழ்வதே' என்ற அடிப்படையில் தனது வாழ்க்கைக் காலம் முழுவதும் கலைப்பணியும் சமூகப்பணியும் ஆற்றி வாழ்ந்த கலாலக்ஷ்மி அவர்களிற்கு மரணம் ஒரு முடிவல்ல.

ச. பாலசிங்கம்
மருதநகர்
கிளிநொச்சி

பிறப்பு என்பது ஒன்று உண்டென்றால் நிச்சயம் இறப்பும் நிச்சயமானது. தேவராஜா கலாலக்ஷ்மி அம்மா ஒரு சிறந்த நடிகரும், எழுத்தாளரும், நெறியாழ்கையாளராகவும், ஆசிரியராகவும், தலைசிறந்த குடும்பத் தலைவியாகவும், சிறந்த அன்னையாகவும் பல கதைகள் எழுதி பல படைப்புகள் படைத்து எம் இனிய உலகிற்கு பல பொக்கிசங்களை வழங்கி இன்று விண்ணுலகம் சென்றீர்கள். எமது நிலையம் சார்பாக கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

தா. கிருஷ்ணகுமார்
இளங்கதிர் சனசமூகநிலையம்

79. வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள இயலாத மிகப்பெரிய துன்பம் மரணம் ஆகும்.

மரணத்தின் துன்பத்தை யாராலும் ஏற்றுக்கொள்ள இயலாது.

எல்லோருமே இதனால் வாடிப்போகிறோம்.

ஆனால் தூரத்திலே தெரிகிற ஒரு பிரகாசத் போல ஒரு சத்தியம் நம்மை நோக்கி இருக்கிறது. அந்தப் பிரகாசத்தை நோக்கிப் பார்க்கிறபோது மிகப்பெரிய தொரு ஆறுதல், சமாதானம் ஏற்படுகிறது.

மரணத்துக்குப் பின்பும் ஒரு நல்ல வாழ்வு நித்திய காலத்துக்கும் இருக்கிறதென்பதே மிகப்பெரும் ஆறுதல். அதை நோக்கி ஆறுதல் பெறுவோம்.

ந. தம்பிமுத்து

80.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்

பெருமை உடைத்து இவ்வுலகு”

சிறப்பை உலகுக்குத் தந்த சமூக சிற்பியின் பெருமை சொல்ல முடியாதது அந்த சிற்பி இன்று இம்மண்ணில் இல்லை என்ற பெருமையை இம்மண் இழந்துள்ளது. பிரிவால் வருந்துகின்றோம்.

சமூக மேம்பாட்டு இணையம்
வலிமேற்கு தொல்புரம்
சுழிபுரம்

81. தோழர் கலாலக்ஷ்மியின் பிரிவால் நொந்து இருக்கும் பிள்ளைகள், கணவர் தேவராசா அவர்களுக்கு எமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சீ.குணநாயகம்
பலாலி வீதி
உரும்பிராய் மேற்கு

82. “மரணம் மனிதனை வெல்லும்” என்ற ஒரு கூற்றினை எவராலும் வென்று விடமுடியாது என்று கூறிவிடமுடியாது. “சங்காரம்” நாடகத்தின் போதிருந்து தெரிவான கலாவும் அவரது கணவனும் நீண்ட காலமாக தெரிந்தவராக இருந்தேன். இருந்தும் அவரது நீர்த்தொட்டியில் வீழ்ந்து– அகாலச் சாவு மனதை வருடி நெருடிக் கொண்டிருக்கின்றது. நீண்ட காலத்திற்கு கலா கலாவாகவே வாழ்ந்து கொள்ளும் பணியில் பொறித்து வாழ்வை முடித்துக் கொண்டாலும்– மறையாத மறைந்தும் மறையாதவராக எல்லா அடிமட்ட வாழ் மக்கள் மனங்களிலும் வாழ்வார். அவர் புகழ் நிலை நிற்கும். அவர் பணியை போற்றி என்றும் நினைவிற் கொள்வோமாக–

83. மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணியின் முக்கியமான செயற்பாட்டாளர்களில் ஒருவராகிய சட்டத்தரணி தேவராஜா அவர்களின் பாரியார் தேவராஜா கலாலக்ஷ்மி அவர்களின் இழப்பினால் ஆறாத்துயரடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத் தினருக்கு

மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி சார்பாக எமது ஆழ்ந்த அநுதாபங்களையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சூ. தர்சன்
தொண்டைமனாறு
மக்கள் மேம்பாட்டு ஐக்கிய முன்னணி
வடமாராட்சி

84. அஞ்சலி

என். இராசலிங்கம்
சித்தங்கேணி

85. பொதுச்சிந்தனையோடு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண் டிருப்பவர்களை இழப்பது சமூக இழப்பாகும். சமூக இழப்பென்பது பொதுப் பரப்பில் ஆழமான பாதிப்பை- தாக்கத்தை ஏற்படுத்துவது. தோழர் கலாலக்ஷ்மி தேவராசா தனது சமூகச் செயற்பாடுகளை அரசியல், இலக்கியம், பெண் விடுதலை, நாடகக் கலை என்ற பன்முகத் தளங்களில் ஆற்றி வந்தவர். தான், தனது குடும்பம் என்ற உட் சுருங்கிய சிந்தனை வட்டத்துக்கு வெளியே தன்னை சமூகத்தை நோக்கி வெளி விரித்து 40 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவந்த நல்லாளுமை. இது தமிழ்ச்சூழலின் பொதுக் குணவியப்புக்கு மாறானது. ஆனால் இதுவே சரியான திசையும் வழியுமாகும். இதனைச் சாத்தியப்படுத்தி துணிச்சலோடும் உறுதியோடும் வாழ்வது மிகக் கடினமானது. தெரிந்த சிந்தனையுடையரே இந்த உறுதிப் பாட்டோடு முன்னோக்கிப் பயணிக்கமுடியும்.

தோழர் கலாலக்ஷ்மி தேவராஜா அவர்கள் இந்த வழியில் பயணித்து தன்னைச் சமூக வெளியில் கலத்தவர். சமூகத்தின் இயங்கு நிலைக்குத் தன்னை நீராகவும் உரமாகவும் இட்டவர். அவருக்கு என் மதிப்பார்ந்த அஞ்சலிகள்.

கருணாகரன்
கிளிநொச்சி

86. பெண் எழுத்தாளரும், நாடக நெறியாளரும், சமூகச் செயற்பாட்டாளருமான திருமதி கலா. தேவராஜா அவர்களின் இழப்பு தொடர்பாக எனது ஆழ்ந்த மனவேதனையையும் அஞ்சலியையும் அவரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

க. சிவகரன்
தே. க. இ. பேரவை

87. தலைவியின் சிந்தனைகள், கொள்கைகள் நீடித்து வாழும்.

க. வேல்தஞ்சன்
தே. க. இ. பேரவை,
சமூகவிஞ்ஞான படிப்பு வட்டம்

88. திருமதி தேவராசா கலாலக்சுமி அவர்கள் ஒரு கலை சார்ந்த துறைக்கு குறிப்பாக இலக்கியத் துறைக்கும் பெரும் பங்காற்றியுள்ளார். இல்லறத்தில் இருந்து கொண்டும் இப் பணியை செய்தமை ஒரு பெரிய சாதனை என்றுதான் சொல்லவேண்டும். இவரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி தமிழ்

இலக்கியத்துறைக்கு பெரிய இழப்பாகும். இவரது பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கலாபூசணம் ஆ. கனகரத்தினம்
சுழிபுரம்

89. திருமதி சோ. தேவராசனின் துணைவியாரின் பிரிவுத் துயரில் நாமும் பங்கேற்கின்றோம். அன்பு செய்வதில் சிறந்த சமூக செயற்பாட்டாளர். அவரின் வாழ்வின் உந்து சக்தியான தன்துணையை இழந்தது மிகவும் வேதனை தருகின்றது.

த. ஸ்ரீவாசன்
ஜனசக்தி சனசமூக நிலையம்
மயிலணி வடக்கு
சுன்னாகம்

90. எனது மனப்பூர்வமான அஞ்சலிகளை தேவராஜா அய்யாவிற்கும் குடும்பத்திற்கும் தெரிவித் துக்கொள்கின்றேன்.

இறையாசி நிறைக!

அருட்திரு ம. யூட் சுதர்சன்
திரு எஸ். இரட்ணவேல்
அருட்திரு எ. கே. சுரேந்திரன்

91. எனது நண்பர் திரு தேவராஜாவின் துணைவியின் மறைவை அறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தேன். எங்கள் குடும்பம் சார்பாக எங்களுடைய துயரத்தை பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

இப்படிக்கு

தம்பு தேவராஜா
நில அளவையாளர்

92. மறைந்த கலாலட்சுமி தேவராஜா எங்கள் கிராமத்தின் ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்தவர். இவரது எளிமையான குணமும் புன்னகையும் எல்லோரையும் என்றும் கவரக்கூடியது. இவரது மறைவு எமது கிராமத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

இங்கனம்,
ம. செந்தில்நாதன்
இல. 291/20, வடகரை வீதி,
திருகோணமலை
(மேற்பார்வைப் பொ.சு. ப கந்தளாய்-ஓய்வு)

93. Late Mrs. Kalaledchumy Thevarajah is well known as an effect and local worker. Her social work from her village to Colombo. She had a god's gift. That's her "smile". Her untimely death. It a great lost to her kalaiyady Village.

May her soul rest in Peace.

M.Sithamparanathan,
Ritered Principal
Justice of the Peace
College Lane, Vaddukkodai

94. மறைந்த தேவராஜா கலாலட்சுமி அவர்களின் எங்களின் மறைவை ஆத்மா சாந்தி அடைய வேண்டுகிறோம்.

உரும்பிராய் காந்திஜி
ரமணன்.

95. உயர்ந்த இலட்சியத்தோடு மக்கள் செயற்பாட்டாளராக இயங்கிய தோழியர் தேவராசா கலாலட்சுமி அவர்களுக்கு செவ்வஞ்சலிகள். 1980ம் ஆண்டு முதல் முதலில் யாழ் பல்கலைக்கழகத்தில் சந்தித்தது முதல் அவரது உறுதி யான மாக்சிய நிலைப்பாட்டை கண்டு வியந்துள்ளேன். பெண்களது தலைமைத்துவத்தை வேண்டி நிற்கும் இவ் வேளையில் தோழியரது இழப்பு ஈடு செய்ய முடியாததாகும். அவரது கொள்கை செயற்பாடுகளை மேலும் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்வதே அவருக்கான உண்மையான அஞ்சலியாகும்.

எஸ். இராஜேந்திரன்
பீடாதிபதி ஓய்வுநிலை
மட்டக்களப்பு தேசிய கல்விக்கல்லூரி

96. எமது அனைத்து மனங்களிலும் இறந்த பின்பும் வாழ்ந்து கொண்டிருக்க போகும் அமரர் கலாலக்ஷ்மி அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

எஸ். சிறிதரன்
உவர்மலை,
திருகோணமலை

97. அமரர் கலாலக்ஷ்மி அவர்கள் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பதினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆர். கணேசலிங்கம்

98. அஞ்சலி

தயாளபோகினி

99. அஞ்சலி

கே. உமாசுதசர்மா
பாடசாலை வீதி, கோண்டாவில்

100. அஞ்சரி

நிர்வாகி
ஆர். இரதீஸ்வரன் (ஜேம்ஸ்)
பொஸ்தா விஷன்
64/2, பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்

100.1 மறைந்த கலாலட்சுமி தேவராசா மறைவு ஓர் உன்னதமான உயர்ந்த இலட்சியத்திற்காக வாழ்ந்த ஒரு இலட்சிவாதி. எனக்கு 2006 இல் கொழும்பில் சந்தித்தோம். விளையாட்டில் சிறுவர்களைப்போல் விளையாடும் மனம் படைத்தவர் அவர் இவ்வுலகைவிட்டு தற்காலிகமாக பிரிந்தாலும் அவரின் ஆத்துமாவுக்கு அழிவு இல்லை. அவரின் குடும்பத்தை இறைவன் ஆறுதல்படுத்தி அவரின் இடை

வெளிகளை நிரப்ப வல்லவராக இருக்கிறார். தேவர் மாமாவின் குடும்பத்திற்கு எமது குடும்பம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஆர். செல்வநாயகம், ராதா, ஜேம்ஸ்
இ. செல்வநாயகம்

101. மறைந்த கலாலட்சுமி அவர்களின் மறைவு (எமது கலாச்சார உத்தியோகத்தர்) அவரது குடும்பத்திற்கு பேரிழப்பாகும். எனவே அவரின் ஆத்மா சாந்தியடைய ஆண்வர் அருள் என்றும் கிடைப்பதாக.

இப்படிக்கு தங்கள் துயரில் பங்குகொள்ளும்

வெடியரசன்கலாமன்றம், காரைநகர்
தி. பிரபாகரன், த. மகாலிங்கம்

102. மறைந்த திருமதி கலாலட்சுமி தேவராஜா அவர்களின் இழப்பு நிரப்பப்படமுடியாத ஒன்றாகும். அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறேன். அவரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி நிர்மலா ஸ்ரீபவன்
கைகொடுக்கும் நண்பர்கள்

103. மறைந்த திருமதி கலாலட்சுமி தேவராஜா அவர்களின் இழப்பு எம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. நானும் எனது குடும்பத்தினருக் மிகுந்த கவலையடைவதுடன் அவரின் ஆன்மா இளைப்பாற்றுவிக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Rest in Peace

S.G. Baskaran
Coritas Hudec
Jaffna

104. மறைந்த திருமதி கலாலட்சுமி அவர்கள் 1968ல் இருந்து 1972வரை ஒன்றாக கல்விகற்ற மிக நம்பிக்கையான சக மாணவர்களாக கல்வி கற்றவர். அவர் எப்பொழுதும் சிரித்த முகத்துடன் அன்பாக எங்களுடன் பழகுவார். அவரின் இழப்பு எனக்கு பெரும் துயரத்தை கொடுக்கின்றது. அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றேன்.

வி.குகலிங்கம்

105. வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த ஜீவன்

மா. சசாங்கள்

106. அஞ்சலி

எம். சோமசுந்தரம்
'மதுராபுரி'
வட்டு மேற்கு
வட்டுக்கோட்டை

107. கருணை என்பது அம்மா. அந்த அம்மா திருமதி கலா தேவராசா அவர்கள். அவரது ஆன்மா இறை ஆசியில் சாந்தி பெறட்டும்.

எஸ். ஆர். அரியராசா

108. சிறுபிள்ளை கலா என் அயல்வீடு, முன்வீடு அவரின் பேரன் பேத்தி. நான் திருமலை இடப்பெயர்வு 1968இல். மீண்டும் பல வருடங்களின் பின் கொழும்பு தெஹிவளை, கல்கிசை வீட்டில் தேவர்+கலா குடும்பத்துடன் ஜனமகன் அபியுடன் . பின் வடலியடைப்பு வீடு. அற்புத கணவன் மனைவி. அன்புடன் பழகினேன் அவர்களுடன். அடுத்தவர் நலனுக்காக செங்கொடி ஏந்தி வாழ்ந்த சோடி. பக்கம் பக்கமாக எழுதலாம் அவர்களைப்பற்றி. இது இடமல்ல அதற்கு. கலா அகாலத்தில் மறைந்தாலும் மனிதநேயம் உள்ளவர்களால் பல்லாண்டு அவர் நினைவு கூரப்பட்டுக் கொண்டே இருப்பார்.

போய் வா கலா.
இஃது
உனை நேசித்த அன்பன்

கந்தையா மனோகரன்.

109. துயர் பகிர்கிறோம்.

அன்புடன்

கே. சயந்தன் (சட்டத்தரணி)

110. ஆழ்ந்த அனுதாபங்கள்.

M.A. Sumanthiram M.P

111. கலாலக்ஷ்மி தேவராஜா என்பவர் கலைதோழி. எங்கள் பண்பாட்டின் கலைச்செல்வி. தேவாவின் உயிர்ச்செல்வியின் இழப்பு ஜீரணிக்கமுடியாதுள்ளது. சமூக மேம்பாட்டுக்கான கலை அனுபவமான நின் வாழ்வின் மேன்மைகளை காத்திருப்போம்!

பேராசிரியர் என். சண்முகலிங்கன்&
கௌரி சண்முகலிங்கன்
கந்தன் அருள்
அம்பலவாணர் பாதை
திருநெல்வேலி

112. அண்ணர் சிவலோகநாதனின் பல்கலைக்கழக நண்பரும், எனது மதிப்பார்ந்த நண்பருமான தேவராஜாவின் துணைவியார். நாடக உலகில் மிகப்பெரிய பங்கு வகித்தவர். நல்ல மனிதர்களின் பெரும் நட்புக்கும், அன்புக்கும் பெரு மதிப்புக்கும் உள்ளானவர். அவரின் பிரிவு மிகப்பெரிய இழப்பு. அவரின் சாதனைகள் அவரை வாழவைக்கும்.

அன்பின்

செகா. சிவா

113. எனது மதிப்புக்குரிய அன்பர் தேவராசா கலாலக்ஷ்மி அவர்களின் திடீர் மரண செய்தியை கேட்டு நான் மிகவும் கவலையடைகிறேன். அவரின் இழப்பு

அவரின் குடும்பத்துக்கு பெரிய இழப்பாக உள்ளது. எனவே அவரின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

க. நாகராசா
கிராம சேவகர்
கலைவாணி வடலியடைப்பு

114. எனது மதிப்புக்குரிய தேவராசா ஐயா அவர்களின் மனைவியின் பிரிவால் கவலையடைகின்றேன். அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வை இராசலிங்கம்
நொத்தாரிஸ் லிகிதர்
எ. எம். திருவாதவூரன், சுன்னாகம்

114. காலையடி மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்து காட்டிவரும் மதிப்புக்குரிய தேவராஜா அவர்கள் துணைவியார் காலமாகிய செய்தி சகல மக்களுக்கும் பெரும் துயரைக் கொடுத்திருப்பதையாவரும் அறிவார்கள். அவர்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

க. இரத்தினேஸ்வரன்
ஓய்வுநிலை அதிபர்
பண்ணாகம் வடக்கு
அ.மி.த. க. பாடசாலை

116. திரு தேவராஜாவிற்கும் பிள்ளைகள் உறவுகளிற்கும்

எனது நண்பர்களின் சகோதரியும் எனக்கு உடன்பிறவாத சகோதரியுமாகிய கலா அக்காவின் திடீர் அகால மறைவைக் கேள்விப்பட்டு அதிர்ச்சியும், மனவேதனையும் அடைந்தேன். அமரத்துவம் அடைந்த அக்காவிற்கு அஞ்சலிகளைத் தெரிவித்து அவரின் ஆன்மா இறைவனடி சேரவேண்டும் என அனைவருடன் சேர்ந்து இச்சிறியேனாகிய நானும் பிரார்த்தனை செய்கின்றேன். அக்காவுடைய கணவர், பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்து வணங்கு கின்றேன்.

ஓம் சிவாயநம.

இங்ஙனம்

பணிவாக,
தெ. திலீபன்

117. திரு. தேவராஜா சட்டத்தரணிக்கும் பிள்ளைகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். தாமதமாய் வந்ததற்கு எனது மன்னிப்பு கோருகின்றேன். இங்குவந்தபின்தான் அமரர் ஒரு எழுத்தாளர் என்பதை அறிந்தேன். இவரின் இழப்பு ஒரு மாபெரும் இழப்பு. அவரின் ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனை.

ச. இளங்கோவன்
திருமதி ச. இளங்கோவன்
சட்டத்தரணி

118. கண்ணீர் காணிக்கை

அன்பு நண்பி கலாவின் இறுதி நிகழ்வுக்கு வரமுடியாததனை இட்டு மிகவும் மனம் வருந்துகின்றேன். அவவின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீமகா காளி அம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்

உ. பூமணி
வடலியடைப்பு

119. கண்ணீர் காணிக்கை

எனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய தேவராஜா சட்டத்தரணி அவரின் துணைவியார் இறைபதம் அடைந்தார். கேள்வியுற்றவுடன் மிகவும் கவலையடைந்தேன். இருப்பினும் அவரது இறுது நிகழ்வில் பங்கேற்காமை மிகுந்த வருத்தம் எனக்கு பிந்தி தகவல் கிடைத்தது. எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

T.கிருபாகரன்
காலிமாவட்ட பதிவாளர்

120. கண்ணீர் காணிக்கை.

நீண்டகால நண்பனான தேவாவின், துணைவி பிரிவு சொல்லணாத் துன்பத்தை தந்துள்ளது. ஆத்மா சாந்திக்காக அவன் தாள் பணிகின்றேன்.

அன்புடன்

மா. சிவபாதம்

121. கலா அக்காவுடனான நினைவு மீட்டல்கள் என்பது என்றும் பசுமையானது. அவரது இழப்பின் வலிகள் ஆற்றுப்படுத்தப்பட முடியாதது. மனதின் எங்கோ ஓர் மூலையில் எப்போதும் ஒரு நெருடலுடன் நிலைத்திருக்கும்

நடராஜா காண்டீபன்
பன்னாலை, தெல்லிப்பழை.

122. கண்ணீர்க் காணிக்கை

எங்களின் தலைவன் தேவராஜா சேர் அவர்களின் அன்புத் துணைவியின் மறைவால் துயருறும் குடும்பத்தினர் துயரில் இருந்து மீள எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்

123. எமது மதிப்பிற்குரிய தேவராஜா அவர்களின் துணைவியின் மறைவிற்கு மனம் வருந்துகின்றோம். இவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்

எஸ். திருமாறன்
ரி. திலீபன்
ஏ. தர்மகுலசிங்கம்
கே. இராஜகோபால்

124. அனுநாபம்

நா. சிவசிதம்பரலிங்கம்
ஓய்வு அதிபர் முத்தர்வளவு,
குப்பிளான், ஏழாலை

125. எங்களுடைய அன்புக்குரியவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை சமர்ப்பிக்கிறோம்.

த. கணநாதன்
க. பிரேமாவதி

126. எமது மதிப்பிற்கும் அன்பிற்கும் பெருமைக்கும் உரிய தேவராஜா சேர் அவர்களின் துணைவியார் அவர்களின் மறைவினையொட்டி எமது கண்ணீர் காணிக்கைகளை செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

கே. சாந்தகுமார்
திருமதி வை. சாந்தகுமார்.

127. எமது உறவினரும் அன்புக்குரியவருமான உயர்திரு தேவராஜா ஐயா அவர்களுடைய பாரியார் திருமதி கலாலட்சுமி தேவராஜா அவர்களுடைய பாரியார் திருமதி கலாலட்சுமி தேவராசா அவர்களுடைய மறைவு குறித்து நான் எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் துயரத்தினையும் வெளிப்படுத்துவதோடு அவருடைய புனிதமான ஆத்மா சாந்திபெற வேண்டுமெனவும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

செ. சிவசுப்பிரமணியம்
ஆசுகவி

128. எமது அன்பிற்கும் பெருமதிப்புக்கும் உரிய அமரர் திருமதி கலாலக்சுமி தேவராஜா அவர்கள் சிறந்த எழுத்தாளர், கலாலயம் கொண்டவர், சிறந்த சற்பண்புக்கள் இரக்க சுபாவம், உடனடியாக பிறருக்கு உதவி செய்யும் பண்புகள், இன்னும் மன ஆறுதல் அளிக்கும் வார்த்தைகள் கூறி புண்பட்ட மனதிற்கு ஆறுதல் அளிக்கும் குணம் கொண்ட குணவதியை அவரது குடும்பம் இழந்து தவிக்கின்றது. அவரது உதவியை நாடிய பலரும் கவலையுடன் வாடுகின்றனர். அவரது சேவை மக்களுக்கு காணும் என்று இறைவன் தீர்வு கொண்டு அவரை அழைத்துக் கொண்டார். அவரது துயரில் எமது குடும்பமும் இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதில் மன ஆறுதல் அடைகின்றேன்.

திரு திருமதி சுகந்தி கிறோர்
குடும்பத்தினர்.

129. கலாக்கா! அன்பும் பண்பும் இரக்கமும் நிறைந்த எங்கள் கலாக்கா. நாகரீகம், பாசத்தின் இருப்பிடம் நீங்கள். எம்மை யெல்லாம் கண்ணீரில் ஆழ்த்தி விட்டு சென்றதேனோ?

பிறப்பொன்று இருந்தால் மரணம் நிச்சயம் என்பது தெரிந்திருந்தும், உங்கள் திடீர் மரணம் எம்மை வாட்டுவதேனோ?

இதுதான் பாசமா? உங்கள் பாசவேர் எல்லோர் மனதிலும் ஊன்றி, நம்மை ஆட்டம் காண வைக்கிறதே கலாக்கா. இருப்பினும், நீங்கள் அமைதியாக உறங்கவும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

கலி மச்சி.

130. அனுதாபம்

ஜெயதாசன் பவாந்தினி சூட்டி
சூடாமணி குடும்பம்

131. என் அன்பின் கலாக்கா!!!

உங்கள் பிரிவால் நாம் அனைவரும் வாடும் இவ்வேளையிலும், உங்கள் அனைத்து செயற்பாடுகளை நினைக்கும்போது உங்கள் இறப்பிலும் மகிழ்வே. என்னில் ரசிக்கும், பெருமைப்படும் அனைத்தும் உங்களால் கிடைத்தவை, கற்றனவே. சிறுபிள்ளையாக 8 வயதில் இருந்து இன்று 49 வயது, என் வாழ்வு முழுதும் நீங்களும் தேவரண்ணாவுமே எனது 'முன்மாதிரி' நீங்கள் அழைக்கும் பலபெயர்கள் (றோகணா, றோகி மச்சி, எடியே..) மிகவும் அருமை நீங்கள் என்னை வாழ்த்தி உச்சிமோர்ந்து என் புதிய வாழ்க்கையை வாழ முதல் அடி எடுத்து கொடுத்து அனுப்பினார்கள், சொல்லிக்கொள்ள, எழுதி கொள்ள இவ் காகித இதழ் போதாது. என்றும் எம் மன வாழ்வில் அழியா இடம் கொண்ட நீங்கள் அமைதியாக தூங்கிக் கொள்ளுங்கள். ஓம் சாந்தி... சாந்தி

அன்புடன் றோகணா (றோகி)

132. சடா&ராஜி

எப்போதும்
நீர் வார்த்துக் கழுவிய
தெளிந்த முகத்தவளே
போய் வா...!

போர்க்குணத்தை
புன்னகையோடு சேர்த்து
பரிமாறும் பக்குவத்தை
கையோடு கொண்டுதிரியும் வசியத் தோழியே
போய் வா...!
ஊர் வாழ்வு ஏற
உன் வீட்டுவாழ்வே வளம் சேர்க்குமென
வாழ்ந்து காட்டியவளே
நீ போய் வா...!

உன் வார்த்தைகளும் வாழ்வும்
தூவிய விதைகள்
முளைவிட்டுக்கொண்டே இருக்கும்..

கால காலத்திற்கும்
நீ எடுத்துச் செல்லப்படுவாய்-
கலா அக்கா...
நீ போய் வா

சடாவும் ராஜியும்
ராஜி சடா

133. கண்ணீர் காணிக்கை

மறைந்த தோழர் கலாலட்சுமி தேவராசா பெண் சமூகத்தின் விடுதலைக்காகவும் தொழிலாளி வர்க்க விடுதலைக்காகவும் இளமை தொடக்கம் பாடுபட்ட போராளி ஆகும்.

இவரது மறைவு தொழிலாளி வர்க்கத்திற்கு பேரிழப்பாகும்.

க. நடராசா
197, அபூபக்கர் வீதி
யாழ்ப்பாணம்

இறைபதம் அடைந்த கலா அக்காவின் ஆத்மா சாந்தியடைய நான் இறைவனைப் பிரார்த்திக் கின்றேன். நான் உங்களை உங்கள் இறுதிச் சடங்கிலேயே சந்தித்தேன். அன்றே நான் உங்களின் குணம், உங்களின் காதல் கதைகள், உங்கள் திறமைகள், எழுத்தாற்றல், பெண்களுக்காக பாடுபட்டதுடன் முற்போக்கு சிந்தனையாக நடந்த ஒரு மாபெரும் பெண்மணியாக எனது மனதில் பதிந்து விட்டீர்கள்.. உங்களைப் பின்பற்றி உங்களைப்போலவே நானும் வாழவேண்டும் என்று அந்த தருணத்தில் நான் எண்ணினேன். அந்த வேளை நீங்கள் இறைவனிடம் சென்றுவிட்டீர்கள் என்று உணர்ந்த போது என் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது.

அ .ஹிரித்யா
வவுனியா
செம்முக ஆற்றுகைக்குழு

135. கலாக்காவைப்பிரிந்து மனமுருகி நிற்கும் தேவராஜா ஐயா மற்ற குடும்ப உறுப்பினர் அனைவருடனும் நானும் இணைந்து அந்தத் துன்பத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பிற்கு இறைவனுக்கு முதற்கண் நன்றி செலுத்துகின்றேன்.

கலாக்காவை தனிப்பட்டமுறையில் தெரிந்திருக்கா விட்டா லும் சிவகடாச்சம்பிள்ளை மாவை வரோதயனின் (மரு மகன்) அண்ணர் மூலம் தேவராஜா அவர்களுடன் தொடர் பினை ஏற்படுத்திக்கொண் டேன். அந்த வகையில் எனது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதில் மனநிறைவடைகின்றேன்.

பா. இரமணாகரன்
சன்னிதி வீதி
இடைக்காடு
அச்சுவேலி

136. கலா அன்ரியின் துயரம் ஆறமுடியவில்லை. கலா அன்ரியின் பசுமையான முகமும் அன்பான கதையும் ஆறாதுயரம் இவர்களின் கண்ணீர் அஞ்சலிக்கு காணிக்கை ஆக்குறோம். கலா அன்ரியின் பசுமை கதையும் பசுமையாக நடையும் எனது கண்ணுக்குள் துடித்துக் கொண்டு இருக்கிறது. கலா அன்ரி எழுதும் போது எழுதிக்கொண்டு இருக்கலாம். இத்துடன் எனது சிறிய துளியை காணிக்கை ஆக்குகின்றேன்

ஆர். சசிகலா
சண்டிலிப்பாய் மத்தி
சண்டிலிப்பாய்

137. கலாவை நான் முதன்முறை கண்டபோது கையில் ஜனமகனுடன் நின்றார். அப்போது அவர் அதிகம் பேசியதில்லை. புன்முறுவலோடு வரவேற்று உபசரித்தார். அதன்பின் நீண்ட இடைவெளி கடந்து கொழும்பில் ஒரு பொது நிகழ்ச்சி முடிவில் "என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டுத் தன்னை நினைவூட்டினார். அதன்பின்பு பல சந்திப்புக்கள் வீட்டிலும் பொது இடங்களிலும் நடந்தன. அவரிடம் எல்லாவற்றையும் அறியவும் கேள்விக்குட்படுத்தவும் தயங்காமல் தனது எண்ணங்களைக் கூறவும் இருந்த ஆற்றல் வியப்பூட்டியது.

"எந்தையும் தாயும்' நாடகத்தில் அவர் ஒரு இளம் மனைவியாக நடித்ததைக் கண்டபோதுதான் அவரிடம் மறைந்திருந்த ஆற்றல்கள் மெல்லமெல்ல விளங்கின, அவருடைய எழுத்தாற்றலைத் தாயகத்தில் அவர் கதைகளை எழுதிய பின்னரே அறிந்தேன். அவர் எவ்வளவு எழுதினார் என்பதை இன்றுதான் அறிந்தேன். இன்னமும் நான் அறியாத ஆற்றல்கள் அவருடைய தன்னடக்கம் மூடியிருந்தது. !குடும்பம் மட்டுமன்றி அன்புக்குரிய எவருக்காகவும் எவ்வளவு சிரமத்தையும் ஏற்பார் என்பதை முக்கியமாக நண்பர் மாவையின் நோயின் போது பலரும் அறிந்தோம். இந்த அக்கறை எல்லாருக்கும் இயலுவதல்ல.

அவருடைய இழப்பை அவருடன் பழகிய எவரும் கனமாக உணர்வதற்கு அவரையறியாமலே புலனாகும். இந்த அக்கறையே வலிய காரணமென்பேன்.

அந்த நினைவுகளே அவருக்குரிய அஞ்சலிகள்.

சி. சிவசேகரம்
2, றைன்லன்ட் பிளேஸ்,
கொழும்பு 3

138. மறைந்த உள்ளம் மறக்கமுடியாது திக்கும் அன்புக்குரிய அண்ணர் தேவராஜா அவர்கள் ஆறுதல் அடைய இறைவன் துணைநிற்க.

என்றும் வாழும் சிந்தனைகள் எழுத்துக்களாக வடிவம் கண்டுள்ளது. காவியங்களாக.

இறைவன் அமைதியான ஆழ்வளிக்க பிரார்த்திப் போமாக.

அன்புடன் தம்பி

பார்த்தசாரதி விஜயகுமார்
(செட்டியார்)

139. கலா அம்மாவைப் பிரிந்து நிற்கின்ற உறவுகளுக்கு மத்தியில் துயர் பகிர்ந்துகொள்கின்றேன். அவரை அதிக தடவைகள் கண்டதில்லை. ஆனால் காணும் நேரமெல்லாம் புன்முறுவல் தான் அவரது முகத்தில் கண்டிருக்கின்றேன். எவ்வேளையும் நூலகத்தில் ஏதோ ஒன்றை வாசித்துக்கொண்டே அதைப் பற்றிய அவரது சிந்தனையை கண்டுள்ளேன். நாடகங்களை எழுதிவிட்டு அதில் உள்ள விடயங்களையும் கூறுவது மாத்திரமல்ல அதன் முக்கியத்துவத்தையும் கூறி எம்மையும் புதுமைப் படைப்புக்களைப் படைக்க வேண்டும் என வழிகாட்டும் உள்ளம் அவரது உடல் மட்டும் தான் அவரை விட்டு நீங்கியது. அவரது உயிர்

அவரது படைப்புக்களால் என்றுமே நிலைத்திருக்கும். ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப் போமாக.

அன்புடன்

இ. டிலாஜினி

140. எங்கள் அன்புக் கலா அக்கா!

உறவுமுறையால் சிறியதாய். ஆனால் எல்லா உறவும் உங்களிடமே நான் கண்டேன். அம்மா, அக்கா, நண்பி... இப்படி எத்தனையோ. நீங்கள் தந்த அன்பையும் அரவணைப்பையும் யாரிடம் பெறப் போகிறேன்? நீங்கள் எங்கள் உறவின் ஆணிவேர். நீங்கள் பல கிளைகளை தாங்கி நின்றீர்கள். தாயே உங்கள் பிரிவு எங்கள் எல்லோருக்கும் பேரிழப்பு. எப்படி ஈடு செய்யப் போகிறோம்? உங்கள் திறமைகளையும் கருணையையும் எங்களிடம் தந்து விடுங்கள். அன்பு ஒன்றே வற்றாத ஊற்று. உங்கள் வாரிசாக நான் உருவாக வேண்டும். பலனை எதிர்பாராமல் எல்லோருக்கும் வழங்க (அன்பையும், அரவணைப்பையும்) என்னுடனும் மற்றவர்களிடமும் துணை நில்லுங்கள். உங்கள் பிரிவால் துயருறும் அத்தனை உள்ளங்களும் ஆறுதல் பெற இறைவனை வேண்டுகிறேன்.

நீங்கள் என் உள்ளத்தில் என்றும் வாழ்வீர்கள். அன்புக் கலாக்கா. I Love you so... much.

நன்றி

பவானி

141. அன்பின் கலா அத்தை,

அன்பு, அடக்கம், அறிவு, அழகு, ஆளுமை அனைதும் நிறைந்த ஒரு பெண்மணியாக உங்களைக் கண்டேன். நிறைந்த ஒரு பெண்மணியாக உங்களைக் காண உங்கள் புன்னகை சிந்துகின்ற ஆழ்ந்த அமைதியான அன்பு நிறைந்த முகம் என் மனதில் மறக்க முடியாத ஒரு விம்பமாக பதிந்து இட்டது. உங்கள் ஆத்மா உங்கள் குடும்பத்தினரிற்கு என்றும் உறுதுணை இருந்து அவர்களை வழிநடத்தும் என்று நம்புகிறேன். உங்கள் பிரிவால் துயருறும் அனைத்து உள்ளங்களைமும் இறைவன் காத்தருள்வார்.

அன்புடன்,

பிறேமலா உதயகாந்தன்
ஆசிரியர், யா/ யாழ் மத்திய கல்லுரி

142. எனது அன்புத் தங்கை கலா,

சென்ற 25.03.2019ல் கலா எங்கள் வீட்டில் வந்து 3மணி நேரம் என்னுடன் கதைத்துச் சென்றா. 28.03.2019ல் கலா இறந்து விட்டா என்று மகள் பிரான்சிலிருந்து மதியம் 2.30 மணிபோல் தகவல் சொன்னா. என்னால் நம்ப முடியவில்லை. எங்கள் குடும்பத்திற்கு பேரிடி விழுந்தது. முதலில் லண்டனில் சின்னக்கா. அடுத்து கலா, நம்ப முடியவில்லை.

"ஆடி அடங்கும் வாழ்க்கையடா

ஆறடி நிலமே சொந்தமடா"
என்றதற்கு இணங்க எல்லாமே நடந்தேறிவிட்டது.

ஆடம்பரமும் பகட்டும் முடிவில் மனிதனின் அகந்தையை குறைத்துவிடுகிறது. ஆனால் எளிமை அந்த மனிதனின் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கிறது. தன் வெற்றிகளைப் பற்றிய கர்வம், பெருமை இல்லாமல் இருப்பதே அடக்கம். இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து இருப்பதே கலாவின் பண்புகள். கலாவின் ஆத்மா தன் கணவர்க்கும், பிள்ளைகட்கும் என்றும் ஆசி கூறிக்கொண்டே இருக்கும்.

ஓம் சாந்தி சாந்தி

இங்கனம்
உங்கள்
சந்தானக்கா

143. கலாவுடனான எனது நட்பு என்றும் மறக்கமுடியாது. இருவருக்கும் எந்த ஒளிவு மறைவு மில்லாமல் எல்லாவிதமான வீட்டு நாட்டு நடப்புக்கள் எல்லாம் பேசிக் கொள்வோம். அவரின் மறைவு என்றும் மறக்கமுடியாது. அவரது அன்பும், ஆசியும் என்றும் குடும்பத்திற்கு அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

லலிதா ஷிவானந்தன்

144. அனுதாபம்

ஷர்மினி ஷிவானந்தன்

145. அனுதாபம்

ஹம்சத்வனி கிருஸ்ணராஜா

146. Rest in peace

Yohakumar

146.1.
நாம் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை.
நடக்கும் என நினைப்பதுவும் நடப்பதில்லை.
நடக்காது என நினைப்பது சிலவேளைகளில் நடந்துவிடுகிறது.
கலாலக்ஷ்மி தாயின் இழப்பும் இவ்வகையினதே.
பாடுகளின் இந்நாட்களில் ஆத்மசாந்தி கிடைக்கட்டும்.

R.Kala
(உடுவிலூர் கலா)
S.Thamilini

147. தேவர் மாமா, கலா இருவரையும் 1976ம் ஆண்டு மேதினத்தில் முதல்முறையாக சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. நாங்கள் உண்மையிலேயே நல்ல நெருக்கமாக பழகினோம். செந்தில் அண்ணா குடும்பத்தோடு தேவர்மாமா கலா, இருவரும் வரும்பொழுது நானும் நல்லா பழகும்வாய்ப்பு ஏற்பட்டது. தோழர்களோடு கூடி பல நிகழ்ச்சிகள் செய்துள்ளோம். எப்போது தேவர் மாமாவின் பாராட்டுகளை பெற்றுக் கொள்வேன். இன்றும் கலாவை நினைக்க நின்றார். அவவின் ஒவ்வொரு உரையாடலையும் நினைத்துப் பார்க்கின்றேன். மானிடத்தின் வாழ்க்கை மகத்தானது

அவர் எனது மகத்துவத்தை நிறைவாக வாழ்ந்து சென்றுள்ளார். அவவின் நினைவுகள் என்று எம்மை நிறைவுக்குள்ளாக்கும்.

ஈஸ்வரி தர்மலிங்கம்
ஓய்வு ஆசிரியர்
கலைமகள் வீதி, தையிட்டி
க. தர்மலிங்கம்

148. எங்கள் வாழ்வில் முக்கிய பங்கெடுத்த தம்பதியர். என் கணவருடன் மிக நெருங்கிய தொடர்பிலிருந்த நம்பிக்கைக்கும் பாத்திரமான தம்பதியர்.

கலாவின் இனிய புன்சிரிப்பு முகம் என்றும் மனதில் நிற்கும்.

திறமைசாலி, பழகுவதற்கு இனியவர். அதிகம் பேசும் பழக்கமில்லை என்றாலும் மனதில் ஆழமாக பதிந்தவர்.

இவர் ஆத்மா சாந்தியடைய வேண்டும்.

Jajanthi Vinodan

149. எனதும், எனது குடும்பத்தினரினதும் ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்து அவவின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

S. P. Jesuthasan
சில்லாலை வடக்கு

150. திருமதி கலாலக்ஷ்மி தேவராஜா. அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்தோடு அவர் எப்போதும் எல்லோரிடமும் மனம் கோணாமல் அன்பாகவும் பண்பாகவும் பழகிக்கொள்வார். எனவே அவருடைய இழப்பானது திடீரென நடைபெற்ற படியால் யாரையும் இதனை தாங்கிக் கொள்ள முடி யாத நிலையில் உள்ளார்கள். அவர் ஓரளவுக்காவது தங்களது மனதை ஆற்றி உள்ளார்கள். அவர் ஓரளவுக்காவது தங்களது மனதை ஆற்றி சேவையில் ஈடுபடும் போது ஓரளவுக்கு ஆறுதலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு மீண்டும் அவரது இழப்புக்கு இறைவனைப் பிரார்த்தித்து நிற்கிறேன்.

Mrs. M. Thavaluxmy

151. திருமதி கலா தேவராஜா அவர்களின் அகால மரணத்தையிட்டு மிகுந்த சோதனையடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ந. சிவராஜா
தெகிவளை

152. திருமதி கலாலக்ஷ்மி தேவராசா அவர்களின் மரணச் செய்தியை அறிந்து மிகுந்த வேதனையடைந்தேன். அவர் என்னுடன் யாழ். பல்கலைக் கழகத்தில் ஒரே காலத்தில் கல்வி கற்ற காலத்தில் இருந்து நாடகத் துறையில் மிகுந்த ஆர்வமுடையவர். தொடர்ந்து தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு பல சிறுகதைகளை சமூகத்திற்கு வங்கியவர். இவரின் இழப்பு அவரின் குடும்பத்தினருக்கு மாத்திரமல்ல. தமிழ் சமுதாயத்திற்கும் பேரிழப்பாகும். பிறப்பு ஒன்று நிகழும்போது இறப்பும் இயற்கையே

என எண்ணி ஆறுதலடைவோமாக.

"அன்னாரின்" ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்

நண்பி
Resaduln, வடலியடைப்பு

153. திடீரென வந்த செய்தி கலா அக்கா இறந்து விட்டாவாம் என்று ஜீரணிக்கமுடியவில்லை. ஒரு கணம் நிஜமான என்று நேற்று பார்த்தமுகம் இன்று இல்லை. அவரின் தேடல்கள் ஒவ்வொன்றையும் ஆராயும் தன்மை குறிகிய காலத்தில் அறிந்து கொண்டேன். அவரது இழப்பு ஒரு துயரமான ஒரு நிகழ்வு, இருப்பினும் விதி என்ற ஒன்றை நாம் அனைவரும் ஏற்றிக் கொள்ளத்தான் வேண்டும். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புடன்

ந. மஞ்சு

154. திருமதி தேவராஜா அவர்களின் மறைவு எண்டு மிக வேதனையைத் தருகின்றது. சமூக வளர்ச்சியில் மிக அக்கறை உடையவரான எனது நண்பரின் அன்புமிகு மனைவியான இவர் நண்பர் தேவராஜா வின் சமூக அரசியல் வாழ்வில் பெரும் பங்களிப்பும் உதவியும் செய்துவந்துள்ளார். அன்னாரின் மறைவு எனக்கு மிக வருத்தமாக உள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திக்கு வேண்டிக்கொள்கின்றேன்.

எஸ். பரமராஜா
இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி
யாழ்ப்பாணம்

155. நண்பர் தேவராசாவின் மனைவியின் இழப்பு இன்றுதான் அறிந்தேன். எனது நண்பரின் துயரத்தில் பங்குபற்றுவதோடு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக் கின்றேன்.

வி. குகதாஸ்
இணுவில் மேற்கு
சுன்னாகம்

156. தேவராசா அவர்களின் அன்பு மனைவியின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம். இவரின் இழப்பு பத்திரிகை உலகத்தின் ஓர் அலகு நீங்கிவிட்டதாக வருந்துகின்றோம்.

வி. பஞ்சலிங்கம்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

157. திருமதி கலா தேவராஜா அவர்களது மறைவையிட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஜெயபாலசிங்கம் குடும்பத்தினர்
70/20, அரசடி வீதி
யாழ்ப்பாணம்

158. கலாவின் பிரிவுச் செய்தி பேரதிர்ச்சியாக வந்தது. என்னை ஒரு சகோதரன் என அழைத்து, அன்னியோனியமாக உரையாடுவார். சமூகத்தில் உண்மையான அக்கறை கொண்டிருந்ததால், பேச நிறைய இருந்தது. கை கொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் நோக்கங்களில் ஈடுபாடு காட்டி, பங்குகொண்டவர். நினைவும் பேச்சும் ஒன்றாகக் கொண்ட நேர்மையினால், பழகுவதற்கு இனியவர். அவர் எங்கள் உள்ளங்களில் என்றும் வாழ்வார்.

மாவை நித்தியானந்தன்

159. நான் அன்ரி என ஆசையாக அழைக்கின்ற எனது தேவராஜா ஐயாவினுடைய மனைவியின் மரணச் செய்தி கேட்டு மிகவும் மனவேதனை அடைந்தேன். மிகவும் ஒரு அன்பானவர் அவரின் ஆன்மா சாந்திக்காக நான் பிரார்த்திக்கிறேன்.

டர்மிதன் பகீரதி
வடலியடைப்பு
பண்டத்தரிப்பு

160. “கலாக்கா” தேவராஜா அங்கிளின் மனைவி. துடிப்பான அன்ரி. நாடக ஆர்வலர். மறைவுச் செய்தி நம்பமுடியவில்லை. எனது (நான் நடித்த) உறவு நாடகத்தை பார்த்துவிட்டு என்னில் (எனது பாத்திரத்தில்) கடுங்கோபங்கொண்டு மேடையில் வந்து கூறிச் சென்றவர். அவரின் மறைவு ஏற்கமுடியாத ஒன்று.

ந. தவசோதிநாதன்
வங்கியடி
இணுவில் கிழக்கு, இணுவில்

161.

வழக்குரைஞரும் இலக்கியவாதியுமான திருவாளர் சோ. தேவராஜாவின் மனைவியின் பிரிவை கேட்டு நானும் எனது மனைவியும் மிகவும் துயருறுகின்றோம். அவரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சி. வாமதேவன்
அண்ணமார் கோயிலடி,
இணுவில் கிழக்கு இணுவில்

162. ஆழ்ந்த அனுதாபங்கள்

நா. அரியபுத்திரன்
09,மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

163. எனது சகபாடி, பள்ளிக்காலத்தில் அந்நியோன்னிய மாகப் பழகியதுடன் சிறந்த அறிவுரையாளராகவும் திகழ்ந்து வழிகாட்டியவர். எளிமையான பேச்சுடன், நல்ல நண்பியாகவும் நல்வழிகாட்டியவர். இவரது எண்ணக்கருத்துகள் யாவும் அவரது சிறுகதைத் தொகுதிகள் மூலம் எடுத்தியம்பியுள்ளார். பிரிவால் துயருறும் தேவண்ணாவிற்கு மன ஆறுதல் கூறுவ துடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக் கின்றேன்.

மணிமாஸ்ரர்,
காலையடி, பண்டத்தரிப்பு

164. ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண் அமைவது திண்ணம். அவ்வகையில் தாயாய், தாரமாய், சேயாய் மலர்வது உறுதி திருமதி தேவராசா அவ்வகையில் முன்னிலை வகித்தது திரு. தேவராசா அவர்களின் தன்னலமற்ற வாழ்க்கை சேவையால் நாம் அறியலாம். மனிதராய்ப் பிறந்தால் மாழ்வது உறுதி" எங்கள் ஊர்த் தெய்வமாக வாழ்ந்த உத்தமி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

இவ்வண்ணம்

பொ. அம்பிகைபாகன்

165. என் அன்புக்குரிய சகோதரியின் இழப்பு அறிந்து எனது மனம் மிகவும் வருந்த வேண்டியிருந்தது .சகோதரியின் ஆத்மா சாந்தியடைய கோணேசப் பெருமானிடம் வேண்டுகின்றேன்.

நன்றி வணக்கம்

கனகசபை சுப்பிரமணியம்
31/2, கண்ணகைபுரம்,
உவர்மலை, திருகோணமலை.

166. கலா அன்ரியின் மறைவுச் செய்தி கேட்டு நாம் மிகவும் கவலையுற்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இப்படிக்கு
திருமதி ஈஸ்வரன் யசோதா
சுவீஸ்

167. எமது இன்ப துன்பங்கள் எல்லாவற்றிலும் பங்கு கொண்டவர்கள் உங்கள் நிழலில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தோம். உங்கள் இழப்பு எமக்கு ஓர் தாயை, சிநேகிதியை இழந்த மாதிரி உள்ளோம். நீங்கள் என்றும் மேன்மையானவரே. ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டுகிறோம்.

இப்படிக்கு
திருமதி J. மாவை வரோதயன்

168. திரு தேவராசா அவர்கட்கு,

மிகவும் துயரமான நிகழ்வில் நானும் பங்கு கொள்கின்றேன். தங்கள் மனைவியின் ஆன்மா சாந்தியனைய பிரார்த்திக் கின்றேன்.

தாங்களும் எனது சகோதரரும் கொண்ட அன்பை மறக்க முடியாது. எனது சகோதரரின் இறுதிச் சடங்கில் இந்தியாவில் இருந்து திருகோணமலை வரை செய்த பாரிய உதவிகளை நானும் எனது உறவினர் களும் மிக நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

மீண்டும் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
எஸ். சிவபாதசுந்தரம்

169. கலாவின் மறைவு கேட்டு அதிர்ச்சியாக இருந்தாலும் அன்னாரது இறுதிச்

சடங்கில் கலந்து கொள்ளமுடியாமைக்கு வருந்துகின்றேன். எல்லாம் இறைவனின் நியதி.

எஸ். பாலேஸ்வரன்

170. அன்னையாய் அக்கையாய்
அன்ரியாய் தோழராய்
என்னையும் தன்மகன்னென
எண்ணும் தெய்வங்கள்
எல்லாயும் ஆன
கலா அன்ரி,
எந்நாளும் எம் நினைவில்
நீ வாழ்வாய்

ச. சுதாகரன்

171. பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
கலகல என்றுபேசி
எம்மை கலகலப்பாக்கும்
கலா- உன் மறைவு
நம்பமுடியவில்லையே
நட்புக்கு இலக்கணமான
நல்ல நண்பியே
உன் பிரிவைத் தாங்கமுடியவில்லையே

திருமதி ஞானாம்பிகை மகேஸ்வரன்
பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்

172. எங்கள் ஆழ்ந்த அனுதாபங்கள்

என்றும்
சி. அன்ரன் பாலசிங்கம்

173. எமது கண்ணியவான் திரு தேவராஜா ஐயாவின் பாரியாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

மாறாத கவலையுடன்
து. சரவணபவன்
ச. செல்வரதி

174. திருமதி தேவராஜா அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

திரு.ஜெ. பிரதீபன்
திருமதி பி. சிந்துஜா
தெகிவளை

174.1. அனுதாபம்

ச. வல்லிபுரம்
சிவானந்தர் வீதி
மாதகல்

175. எமது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய திரு தேவராஜா ஐயா அவர்களின்

பாரியாரின் ஆத்மசாந்திக்கான இதயபூர்வ மாக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் மறவாத
துரைராசா சிவநேசன்
வட்டு வடக்கு
சித்தன்கேணி

176. முகத்தில் சிரிப்புடனும், அகத்தில் அன்புடனும் எனக்கு துணையாக இருந்த அருமை சகோதரி "கலா தேவராஜா" அவர்களின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திகின்றோம்.

என்றும் அன்புடன்
திருமதி சாளற் தர்மானந்தன்
178. ஈவா ஞானப்பொன்ராஜா
அரசடி வீதி,
பண்டத்தரிப்பு

177. சிரித்த முகத்துடன் அன்பாக எமை அரவணைத்தத கலா அக்கா நீங்கள் ஆண்டவரின் திருப்பாதத்தில் ஆனந்தமாக இருப்பீர்கள் என விசுவாசித்து மீண்டும் உயிர்த்தெழும் நாளில் முகமுகமாய் தரிசிக்க என் பிரார்த்தனை.

அன்பின் உடன் பிறவா சகோதரி

ஈவா.

178. ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

வசந்தி. பத்மநாதன், சண்டிலிப்பாய்

179. தேவர் மாமாவின் மனைவி என்று அறிமுகமாகி பழக சந்தர்ப்பம் கிடைத்த போது அதிகமாக பழகியது இல்லை எனினும் பழகிய அந்த நாட்களில் கலா அன்ரியின் கலகலப்பான வார்த்தைகளும், அணுகுமுறையும் மறக்க முடியாத நினைவுகள் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மறவாத நினைவுடன்

பாஸ்கரன். கலைச்செல்வி
ஒட்டறுத்தகுளம்
மல்லாவி

180. அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

தி. உருத்திரன்
செட்டிகுறிச்சி
பண்டத்தரிப்பு.

181. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

த. கில்மன்
காளிகோவிலடி, தாவடி தெற்கு,
கொக்குவில்.

182. ஒரு சமூகப் போராளியின் மரணம் என்றும் வீண்போவதில்லை. அவரின் நினைவு எம் நெஞ்சில் நிறைந்திருக்கும்.

சி. கண்ணன்
மாணாந்தானை
வல்வெட்டித்துறை

183. அனுதாபம்

மதுரநாயகம் றஜிந்தன்
றஜிந்தன் கசிதா
ற. ஷங்கர்சன்
ற. தன்யஸ்ரீ
ஏழாலை மத்தி
ஏழாலை

184. 28.9.2019ம் ஆண்டு இறைபதம் அடைந்த திருமதி கலாலக்ஷ்மி தேவராஜா அவர்களின் ஆத்மசாந்தி வேண்டி சிவனடி தொழுகின்றேன்.

இப்படிக்கு
நா, இராஜராஜேஸ்வரி

185. உலகில் இறைவனுக்கு அடுத்தபடியாக அன்னையே நம் கண்கண்ட தெய்வம். அப்படியானவரின் இழப்பை ஈடுசெய்யமுடியாது. காலம்தான் மனக் காயங்களை ஆற்றவல்லது. ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி

சி. திவாகரன்
அதிபர், யா/ சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம்
ஓடக்கரை வீதி
சங்கானை

186. It was very shock ain devastating to hear the demise of aunt on the 28th of march 2019 I knew ror about 25.-30 years. She was more than an aunt but agood friend and well wisher. we pray for the almigty to bless her with peace and her soul rest in peace.

S.Karikalan
825/ 5, Bwemenolre
Col-15

187. கலாலட்சுமி தேவராஜா அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு பல வேதனை அடைந்தேன். மிகச்சிறந்த ஆளுமை உள்ள ஒருவர் அது மட்டும் அல்லாது பல சிறுகதைகள் எழுதியும் உள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்

சண்முகலிங்கம் சஜீவன்
பிரதேச சபை உறுப்பினர்
வலிகாமம் வடக்கு
பன்னாலை, தெல்லிப்பளை.

188. கலா தேவராஜா எதிர்பாராத விதமாகத் திடீரெனக் காலமான செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் கவலையும் அடைந்தேன். இலக்கிய ஆர்வம் சமூக ஆர்வம் கொண்ட ஒருவரது அடாத்துக்களை எதிர்த்த போராளியாகவும் அவரை நாம் அதிலிருந்தும் எல்லாவற்றுக்கும் மேலான, மானிட மேம்பாட்டை விழைந்த நம் சிறந்த மனிதாபிமானியாக அவர் செயற்பட்டார். அவரது மறைவு எம்மையெல்லாம் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது.

சி. தில்லைநாதன்

189. எனது அண்ணியின் தங்கையாக கண்டு, தேவரின் துணைவியாக வாழ்ந்து வந்ததை சந்தோசமாக கண்டு ஆனந்தம் கொண்டிருந்த வேளையில் எம்மை விட்டுச் சென்றாலும் உன் நினைவு நம்மைவிட்டு அகலாது.

செல்வத்துரை சந்திரகாசன்

சிட்னி, அவுஸ்ரேலியா

190. கலா அக்கா தேவரண்ணை எங்களுக்கு உங்களை நினைக்கும் நேரம் எல்லாம் கவலையாக உள்ளது. அக்கா நீங்கள் மறுபிறவி ஒன்று இருந்தால் எனக்கு ஒரு அக்காவாக மறு உருவம் எடுக்கவேண்டும் அக்கா உங்களை நினைக்காத நாளே இல்லை. உங்கள் ஆத்மசாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்


இப்படிக்கு
ஜெயா நடேசலிங்கம்

191. எங்கள் கலாக்காவின் மறைவு எங்கள் குடும்பத்திற்கு ஓர் பேரிழப்பு. கலா அக்கா தான் என்னை முதல்முதலாக தன்னுடன் மலைப்பிரதேசம் சுற்றுலாவிற்கு தனது சகோதரர்களின் பிள்ளைகளுடன் என்னையும் கூட்டிச்சென்று அன்புடனும் பாசத்துடனும் என்னைப் பராமரித்தா. அத்துடன் என்னை முதல்முதலாக சிகை அலங்காரம் செய்யும் கடைக்குக் கூட்டிச்சென்று தலைமுடி அலங்காரம் செய்து முத்ததிற்கு விலை கூடின கிறீம் வாங்கித் தந்த அந்த நாட்கள் நினைக்கும் பொழுது அவரின் இறப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாங்கள் என்றென்றும் அவரின் குடும்பத்திற்கு உறுதுணையாக இருப்போம். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பxமாக.

இப்படிக்கு

உங்கள் சிவாஜினி பாலசிங்கம்













மாணவியாய் கல்வி கற்ற மேசைக்கு அருகில்



துணைவர், மகன் மற்றும் பெறாமக்களூடன்



சிறுவயதில் பறாளாய் முருக மூர்த்தி ஆலய கேணிக்கருகில் உறவினருடன்



தந்தையுடனும் தனது சகோதரர்களுடனும்



தாயுடனும் தனது சகோதரிகளுடனும்



க.பொ.த சாதாரண தரத்தில் சக மாணவிகளுடன்



க.பொ.த உயர்தரத்தில் தனியார் வகுப்பு மாணவிகளுடன்



ஆசிரியர் ஆனபோது – 1988



திருமணப்பதிவு நடைபெற்ற பின்னர் – 1981



புத்தளம் இந்துக்கல்லூரியின் வரவேற்பில்



பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டபோது – 1987 ( கண்டி )



" பொறுத்தது போதும் " மேடையேற்றத்தின்பின் நயினாதீவிலிருந்து படகில்



துணைவருடன்



ஜனாதிபதி வேட்பாளராக பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் வந்து இறங்கிய முன்னாள் பிரதமர் மாண்புமிகு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை வரவேற்கும் போது – 1988



புதிய இடதுசாரி முன்னணியின் மேல்மாகாண வேட்பாளராக போட்டியிட்டவேளை ரூபவாகினி தொலைக்காட்சி பேட்டியில் – 1997



நாராய் நாராய் நாடகப்பயணத்தினை மேற்கொண்ட குழுவில் நாடக அரங்கக் கல்லூரி சார்பில்



இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியில்
ஒளிபரப்பான நாடகத்தில்



கலைஞர் அரசையாவுடன் தெகிவளையில்



அ.தாசீசியஸ் நெறியாள்கையில்தமிழகத்தில் குழந்தை ம . சண்முகலிங்கத்தின் “ எந்தையும் தாயும் ” நாடக நிறைவில்



அருணா செல்லத்துரையின் “ வீடு ” தொலைக்காட்சி நாடகத்தில்



தமிழகத்தில் மகாகவியின் “ புதியதொரு வீடு ” நாடகத்தில்



நாடக அரங்க கல்லூரியின் தயாரிப்பில் பேராசிரியர் சி.மௌனகுருவின் "சங்காரம்" நாடகத்தில் சமுதாயமாக




கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அரசையாவின் நெறியாள்கையில் "எந்தையும் தாயும்" நாடகத்தில்





குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "உறவுகள்" நாடகத்தில் தேவராஜாவின் தாயாராக . கௌரி வரதராஜப்பெருமாள். சிசு .நாகேந்திராவுடன்



குரும்பசிட்டி நடராஜாவின் "மேலும் கீழும்" தாளலய நாடகத்தில் புலவர் கா.வேல்முருகன் ஆசிரியருடனும் தேவராஜாவுடனும்



சர்வதேச மகளீர்தினத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சோ.தேவராஜாவின் தாலியம் நாடகத்தில்





அவைக்காற்று கலைக் கழகத்தின் க.பாலேந்திராவின் நெறியாள்கையில் “ ஒரு பாலை வீடு ” நாடகத்தில்



நாராய் நாராய் நாடகப் பயணத்தில் பங்குகொண்ட இந்திய , இலண்டன் , இலங்கை நாடக கலைஞர்கள்



மகனின் திருமண நிறைவில் தனது உறவுகளோடு




பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகளுடன்



சகோதரிகளுடன்




"செம்மனச் செல்வி" என்ற புனைபெயரில் எழுதிய மூன்று சிறுகதை நூல்களின் வெளியீட்டு நிகழ்விற்க்கான பதாகை



கனடாவில் இடம்பெற்ற அஞ்சலிக்கூட்டம்

ஒரு முன்னோடி ஆளுமை
என்கிற வகையில் அவரை
புரிந்து கொள்ளாதவர்களால்
தனிமைப்படுத்தப்படும்
கடும் விமரிசனங்களை
முகங் கொண்ட போதிலும்
சமூக மாற்றத்தின் அவசியம் கருதி
சமூக ஊடாட்டத்தில் தளர்ச்சி
ஏற்பட இடமளிக்காதவர் கலாலக்ஷ்மி!

ந. இரவீந்திரன்

மானுடம் பயனுற வாழ்ந்தவர் கலாலக்ஷ்மி தேவராஜா. 1970பதுகளின் பிற்பகுதி முதல் அவவை நன்கறியும் பேறு எனக்கு கிட்டியது, சகல நற்பண்புகளும் இயல்பாக அவரிடம் குடியிருந்தது. குடும்பப் பொறுப்பினை முற்றுமுழுதாக ஏற்றுக் கொண்டதோடு, சமூகசேவைகளிலும், எழுத்துத்துறையிலும் நாடகத்துறையிலும் ஈடுபட்டு அரும்பணியாற்றி வந்தவர். அன்னவரது பண்பும் பயன்தந்து நின்ற வாழ்வும் நாமிருக்கும் வரை நெஞ்சுவிட்டகலாது.

இது வெறும் வார்த்தையல்ல, சத்தியம்.

**குழந்தை ம. சண்முகலிங்கம்**

கலாவின் வாழ்வும் சிந்தனையும் தமிழ்ச் சூழலில் மாற்றுக் கருத்து நிலை கொண்டதாக இருந்து வந்தது. சமூக முரண்பாடுகளைக் கூர்ந்து அவதானிப்பவராகவும் அவற்றின் சமூக அரசியல் பின்புலங்களைக் கண்டறிபவராகவும் இருந்து வந்தார். அதன்மூலம், உழைக்கும் மக்களின் குறிப்பாக உழைக்கும் பெண்கள் அனுபவிக்கும் வாழ்வியல் துன்ப துயரங்களைக் கண்டு கொண்டதுடன் மக்கள் சார்புநிலை எடுத்து நிற்பதில் உறுதியானவராகவும் இருந்துவந்தார். குறிப்பாகப் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் வாழவேண்டும் என இருந்துவரும் பழைமைவாதப் பெண்ணடிமைத்தனப் போக்கினை வன்மையாக நிராகரித்தும் எதிர்த்தும் வந்தார். அதன் காரணமாகப் பெண்கள் இரண்டாம் தர நிலையில் வைத்து ஆணாதிக்கத்தாலும் சமூக நடைமுறைகளாலும் நடாத்தப்படும் நிலை தகர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி வந்ததில் அவர் தெளிவான பெண்விடுதலைச் சிந்தனையைக் கொண்டிருந்தார்.

**சி. கா. செந்திவேல்**

நாட்டின் அசாதாரன சூழ்நிலை பெண்கள் பாதிப்பு அதிகம். ஒரு பெண் என்பவள் பெண்ணாக இருக்க வேண்டும். அவள் தன் பெண் தன்மையை பேணியவாறு அவரவருக்குரிய சகல கௌரவங்களோடும் இருக்க வேண்டும்.
பெண்ணை அடிமையாய், உரிமையாய், கீழ்ப்பட்டவளாய் செய்யும் சமூக அமைப்பை நாம் உடைக்க வேண்டும் என்று வீதிப் போராட்டங்களிலும் இறங்கினார்.
பெண் விடுதலை, தேசிய விடுதலை, சாதியவிடுதலை போன்ற விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவான மனநிலையைக் கொண்டவராகத் திகழ்ந்தார்.

**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி**

பொய்மை, பசப்பு, பாசாங்கு நிறைந்த தோழமையை அடியோடு வெறுத்தவர்.
தான் நம்பும் மனிதர்களிடம் இதனை துளியளவும் விரும்பமாட்டார்.
அத்தருணங்களில் கோபப்படுவார்... ஏசுவார்... கதைக்காமல் விடுவார்...
மீண்டும் அடுத்த கணம் இதனைச் சுட்டிக்காட்டி தனது ஏமாற்றத்தை,
எதிர்ப்பை தெளிவாக, கச்சிதமாக, இறுக்கமாக, வெளிப்படுத்துபவர்.

**தெ.மதுசூதனன்**